

THE
CATALYST
தமிழில்

# பொருளடக்கம்:


## அத்யாயம்: சத்குருவைத் தேடினேன் 7

அவர் வந்தார் 11

அமில சோதனை: 12

மௌன இடைவெளி: 14

குருவைக் கண்டு பிடித்தேன் 15

## அத்யாயம்: உடன்படிக்கை 17

மாயையின் வலை 17

புது வாழ்க்கையின் தொடக்கம் 17

கட்டுப்படாத மனம் 19

என் குரு--எனது நிரந்தரத் துணை 21

அமைதியும் உண்மையும் 22

நம்பிக்கையும் சந்தேகமும் 24

## அத்யாயம்:அமரத்துவத்தின் நுழைவாயில் 30

மௌனப் பரிமாற்றம் 30

## அத்யாயம்: விடுதலை என்றால் என்னவென்று 37

சமநிலை 37

காரணத்தை ஏற்படுத்தினார் 38

அற்புதங்கள் 44

மனமெனும் ஏணி 49

# பொருளடக்கம்:

| | |
|---|---|
| உடல் கடந்த அனுபவங்கள் | 54 |
| தெய்வங்கள் உள்ளனரா? | 55 |
| பயம் ஒரு தடை: | 58 |
| ஸ்ரீ கிருஷ்ணன் : | 62 |
| நேசம் | 64 |
| மூச்சின் ரகசியம் | 65 |
| தீக்ஷை | 65 |
| கூடலும் பிரிவும் | 66 |
| ராம ஐயங்கார் | 68 |
| ஒரு புதிய அனுபவம் | 71 |
| கலெய்டஸ்கோப்: | 72 |
| ஆழ்பிரக்ஞைக்குள் எட்டிப் பார்த்தேன் | 74 |
| ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே! | 76 |
| எண்ணங்களும் எண்ணமின்மையும்: | 78 |
| ஆறு சக்கரங்கள் | 79 |
| உள்மூலத்தின் வெளிப்பாடு | 79 |
| நறுமணத் தென்றல் | 81 |
| ஆழ்நிலை உறக்கம் | 82 |
| ஸ்ரீராமன் | 83 |
| உண்மை முதல்முறை கதவைத் தட்டியபோது | 87 |

# பொருளடக்கம்:


| | |
|---|---|
| அவருடைய பூங்கொத்து | 90 |
| எதனோடும் தொடர்பில்லாமல் தனித்த நான் | 92 |
| பேரின்பத்துள் கரைதல் | 93 |
| ஒவ்வொன்றையும் அவர் ஊடுருவிப் பார்த்தார் | 95 |
| ப்ரம்ம வித்தை | 97 |
| இயேசு கிருஸ்து | 102 |
| இரண்டாவது அழைப்பு | 109 |
| **அத்யாயம்: தெய்வப்பணி** | 122 |
| நித்தி- ஓர்அவதாரம் | 122 |
| பிறந்தது ஆனந்த்ஜோதி | 135 |
| தெய்வப்பணியில் என் பங்கு | 138 |
| ஆண்டாளும் பெரியாழ்வாரும் | 145 |
| தொலைந்த குறட்பாக்களின் மீட்சி | 147 |
| வானோர் இறங்கிப் பேசிய புனித நிகழ்வுகள் | 150 |
| ஆனந்தத்தில் கரைந்தேன் | 154 |
| மாயை என்ற திரை | 155 |
| நம் துன்பங்களை அவர் அனுபவித்தார் | 161 |
| அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறார் | 164 |
| இறந்தவரை உயிர்ப்பித்தார் | 174 |
| அவருடைய விளையாட்டை அவரே அறிவார் | 175 |
| **அத்யாயம்: உன் அரசு மலரட்டும்.** | 185 |

# The Catalyst (தமிழில்)

**தமிழாக்கம்**

ஷோபனா ரவி

ஜானகிராமன் N

**யாருடைய பெருமைக்கும் கருணைக்குமான சான்று**

**எங்கள் இதயங்களில் பெருநிதியாகப் பொதிந்து கிடக்கிறதோ**

**அவருக்கு, எங்கள் அன்புக்குரிய குருநாதர் *டாக்டருக்கு***

**இந்நூலைக் காணிக்கையாகப் படைக்கிறோம்.**

**வெளியீடு**

**நித்யமல்லி**,
1,முதல் பிரதானத் தெரு,
ராஜீவ் நகர்,
பெருங்குடி, சென்னை-600096

**ஆசிரியர் குறிப்பு**

இப்புத்தகம் டாக்டர் என்ற தனிப்பெரும் நிகழ்வைப் பற்றியது. அவர் 06-01-1939 அன்று இப்பூவுலகில் அவதரித்தார். அவர் 03-07-1995 அன்று இவ்வுலகை நீத்தார் என்று சொல்லப்படுகிறது. ஜீவனும் உயிர்த்தெழுதலும் இவரே தாம் என்பதை இவ்வுலகு இன்னும் அறியவில்லை.

1987ஆம் ஆண்டு டாக்டர் அருளால் இப்புத்தகத்தை எழுதத் தொடங்கினேன். முதல் பாகத்தை 1995ஆம் ஆண்டு எழுதி முடித்தேன். இப்புத்தகத்தின் இரண்டாம் பாகம் 1996ஆம் ஆண்டு எழுதி முடிக்கப்பட்டுப் பிரசுரிக்கப்படும். டாக்டரைப் பற்றியும் அவருடைய துன்பங்களைப் பற்றியும் 'தொடர் நிகழ்காலத்தில்' நான் எழுதுவது ஏன் என்பதை அப்புத்தகம் விளக்கும்.

இப்புத்தகம், நிகழப்போகும் முழுமையான புரட்சிக்குக் கட்டியம் கூறுகிறது.

**—ஷோபனா ரவி**

"என் பாதை இறைவனை நோக்கிச் செல்கிறது. நம்பிக்கையுடன் என்னோடு வாருங்கள். உங்களையும் அழைத்துச் செல்கிறேன்"

**--- டாக்டர்**

# சத்குருவைத் தேடினேன்.

“நீ ஏன் எழுதத் தொடங்கக்கூடாது?” மீண்டும் அவர் என்னைக் கேட்டார். மறுக்க எண்ணி நிமிர்ந்தேன்; ஆனால் அவர் பார்வையைச் சந்தித்ததும் வார்த்தை தடுமாறி மௌனமானேன். அவர் பாத கமலங்களில் என்னால் இயன்றதைச் சமர்ப்பிக்கும் பொருட்டு ஃபீனிக்ஸ் பறவையைப் போல் என் சாம்பலிலிருந்து நான் மீண்டும் உயிர்த்தெழுகிறேன் – எழுதத் தொடங்குகிறேன்.

இந்தக் கரிய, எளிய மனிதர் என் வாழ்வில் புகுந்து உண்மையையும் நிலைவளர்ச்சியையும், வினைப்பயனையும், மறுபிறப்பையும் பற்றி விளக்கும் வரை என் நீண்ட வாழ்க்கைப் பயணம் சலிப்புத் தட்டுவதாகத்தான் இருந்தது. கானல் நீர் மெய்யான பொய்கையானதைப் போல் இருந்தது அவர் வருகை. அவர் கூறியவை யாவும் எனக்கு முற்றிலும் புதியவை அல்ல என்றாலும் அவர் சொற்கள் என்னுள் விளைவித்த மாற்றம் புதிது. இதோ, தான் பேசுவதை அறிந்து பேசும் மனிதர்! அறிந்ததை மட்டும் பேசும் மனிதர்! எந்த ஒலியும், எந்தச்சொல்லும் என்னை எப்போதும் பாதித்திராத வகையில் அவருடைய மௌனம் என்னை பாதித்தது. என்னுடைய இருபத்தேழு வருட வாழ்வில், முதன்முறையாக என் உயிர் இன்னொருவரிடம் பணிந்து அடைக்கலமாயிற்று. என் மனம், தன் போக்கை நிறுத்தவில்லைதான். ஆயினும் என் இதயம் தன் உறைவிடத்தைக் கண்டு கொண்டது.

சத்குரு என்ற தலைப்பில் நிறைய சொல்லப் பட்டிருக்கிறது. இருந்தாலும் சொல்லப்படாதவையே அதிகம் என்று நான் கருதுகிறேன். இந்தப் பொருள் பற்றி நான் அறிந்தவற்றையெல்லாம் வெளிப்படுத்துவது வெளிப்படுத்துவது விதிகளை மீறுவதாகும். இருப்பினும் இவ்வுலக

மேன்மைக்கான விலைமதிப்பற்ற அவ்வுண்மைகளை முற்றிலுமாக மௌனத்தில் புதைத்துவிடவும் முடியாது. ஆகவே என்னுடைய ஆன்மிகப் பயணத்தையும், என் பெருமதிப்புக்குரிய குருநாதரையும், குருவுக்கும் சீடருக்கும் இடையில் ஏற்படும் நுணுக்கமான பகிர்வுகளையும், நான் அறிந்த விதத்தில் **உண்மை**யையும் பற்றிய இந்த ஆய்வுரையை எழுத ஆரம்பிக்கிறேன். இதில் நீட்டலும் குறைத்தலும் இன்றித் தேவையானதை மட்டுமே பேச குருவருளை நாடுகின்றேன்.

ஆன்மா என்பது தூய பிரக்ஞை; பரிசுத்தமான சாட்சி. பஞ்ச பூதங்களும் இந்தத் தூய பிரக்ஞையைச் சூழ்ந்து, குணங்களாலான அகங்காரத்தை உருவாக்கி, ஆன்மாவைச் சிறைப்படுத்துகின்றன. பஞ்ச பூதங்களால் உருவான அகங்காரம் தொடர்ந்து இருப்பதற்கான சக்தியை ஆன்மாவிலிருந்து பெற்றாலும், ஆன்மா அதிலிருந்து முற்றிலும் தொடர்பற்றதாகவே இருக்கிறது.

இப்படித் தோன்றும் அகங்காரம், கணக்கிடுவதற்கரிய காலம் தொடரும் தன் நீண்ட பயணத்தில், எங்கோ, எப்படியோ, புலன் சார்ந்த அனுபவங்களில் முழுமையில்லை என்பதை உணர்ந்து சலிப்படைகிறது. சலிப்பால் விரிசல் கண்டு நொறுங்கும் அகங்காரத்துக்கு பரிசுத்த சாட்சியான ஆன்மாவைச் சிறை வைத்திருப்பது கடினமாகிறது. அப்போது ஓர் உள்ளுந்துதலால் குறைவற்ற முழுமையை அந்த அஹங்காரம் தேடத் தொடங்குகிறது. மேகமாக அந்த முழுமையை மறைத்திருப்பது தானே தான் என்பது அப்போது அதற்குத் தெரியாது. காலம் செல்லச் செல்ல, குறைபாடுகளின் பிடி இறுக இறுகத் தேடுதல் தீவிரமடைகிறது.வழிபுரியாமல் தோல்வியுற்ற நிலையில் அகங்காரம் வேதனை வசப்பட்டுத் தன்னை யாரேனும் மீட்பாரோ என்று கூவிக் .

கதறுகிறது. பிடிக்கு அகப்படாமல் நழுவும் முழுமையைத் தேடும் நிரந்தர முயற்சியாகிறது வாழ்க்கை. ஏக்கம் என்ற ஒரே ஸ்வரம் கொண்ட இசையாகித் தன் பயணத்தை அகங்காரம் தொடர்கிறது. அதன் கூக்குரல் கேட்டு இந்தத் தருணத்தில் கருணைமிகுந்த **முழுமை** தோன்றி முழுமையையும் அமரத்துவத்தையும் போதிக்கும் சத்குருவாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

நான் விரக்தி எனும் கொடிய சுழலில் சிக்கித் திக்குமுக்காடிக் கொண்டிருந்த நேரத்தில் அவர் வந்தார். நெடுங்குளிர்காலத்திற்குப் பின் வரும் வாசமிகு வசந்தம்போல் இருந்தது அவர் வருகை. என்னையே நிர்வகிக்க இயலாத நிலையில் இருந்த நான் என்னை முழுமையாக ஒப்புவிக்க ஒரு குருநாதனைத் தேடிக் கொண்டிருக்கையில் அவர் வந்தார். என்னை நான் அறியாத காரணத்தால் என்னையே வழி நடத்திக் கொள்ள எனக்குத் தெரியவில்லை. எதையும் ஆராய்ந்து பார்க்கும் பழக்கம் கொண்டிருந்த என் மனம், ' சரி', 'தவறு' எனும் தர்க்கச் சுழலில் சிக்கிக் குழப்பத்துக்குள்ளாயிற்று. சிந்தனையின் போக்கில் எந்தவழி சென்றாலும், அதற்குமேல் போகமுடியாதபடி ஓரிடத்தில் வழி மூடிக் கொண்டது. ஒருநிலைக்கு மேல் மனம் நகரவும் மறுத்தது. தர்க்க சாத்திரமும், பகுத்தறிவு வாதமும் என் மட்டில் தோற்றன. வேத, வேதாந்த வித்தகர்களின் அனுபவம் சார்ந்த அனுமானங்களும், தீர்ப்புகளும் என் பரிதவிப்பை அதிகமாக்கினவேயன்றி குறைக்கவில்லை. கவிதை மட்டுமே எனக்கு ஆறுதலானது. கவிதைத் தேவி என் அருகமர்ந்து என் புலம்பல்களைப் பொறுமையாகக் கேட்டிருந்தாள். அவளும்கூட கேட்க மட்டுமே செய்தாள்.

'எங்கேனும் ஒரு கடவுள் இருக்க மாட்டானா?'* என்று ஏங்கினேன். என் குடும்பத்தில் நடந்த ஒரு துயரச் சம்பவம் என்னை அவநம்பிக்கையின் விளிம்பிற்குக் கொண்டு தள்ளியது. மரணத்தை நேருக்கு நேர் சந்தித்தபோது பூமி என்ற ஆதாரமே என் காலடியிலிருந்து நழுவத் தொடங்கியது. இனியும் புதை மணலில் வீடு கட்டுவதா?

நேருக்கு நேர் சந்தித்தபோது பூமி என்ற ஆதாரமே என் காலடியிலிருந்து நழுவத் தொடங்கியது. இனியும் புதை மணலில் வீடு கட்டுவதா? சலித்துக் கொள்வதற்கு எந்தக் காரணமும் இல்லாத வகையில் என் வாழ்க்கை அமைந்திருந்தும், 'இதுவன்று', 'இதுவன்று' என்று என் உள்ளம் கூவலாயிற்று. வாழ்வெனும் புதிரை அவிழ்க்க முற்படாமல் மக்கள் எப்படி அன்றாட வாழ்க்கையை நடத்துகிறார்கள்? என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒவ்வொன்றிடமும், ஒவ்வொருவரிடமும் நான் பொறுமையற்று நின்றேன். யார் இந்த நோயாளியின் பிணியைக் கணிப்பவர்? யாரே என் நோயை உணர்ந்தவர்?

வந்தார் மருத்துவர்! மாயையை நான் இனம் கண்டிருந்தபோதிலும், அதன் பிடியிலிருந்து மெதுவாக என்னை விடுவித்துக் கொள்ளத் தொடங்கியிருந்த போதிலும், என் கலி தீர்க்க வந்த அந்தப் பேரொளியைப் புரிந்து கொள்ளும் தெளிவு எனக்கிருக்கவில்லை. என்னைக் காக்க வந்த **முழுமை**, தன் நேர்த்தியால் மாயையுடனும் இயைந்து நின்ற விதம் எனக்குப் புரியவில்லை. என் இதயம், 'சரி' என்றது. என் மனம், 'எச்சரிக்கை!' என்றது.

என் மனமும் ஏற்றுக் கொண்ட பிறகே, டாக்டர் (ஆம்! அப்படித்தான் நான் அவரை அழைத்தேன்-தொழில் ரீதியாகவும் அவர் ஒரு மருத்துவர்தான்) தியானத்தில் முதல் பயிற்சியை எனக்கு போதித்தார். அதுவரையில் பொறுத்தே இருந்தார்.

அகங்காரம் ஆன்மாவை முற்றிலுமாக மறைத்திருக்கும் போது, அது எதை மதிக்கிறது,எதற்கு முக்கியத்துவம் தருகிறது என்பதெல்லாம் இவ்வுலக வழக்கப்படிதான் அமையும். ஆனால் அகங்காரம் மாயையில் உழலப் பிடிக்காமல் தப்பி வர முயல்கையில் உலக வழக்கிலிருக்கும் சட்டச் சம்பிரதாயங்களை மறுத்து, தவறு என்று நிறுவ முற்படுகிறது. இந்த நிலையிலேதான் உண்மையைத் தேடும் மாணவன் வாதம் செய்து வேறுபாடுகளில் சிக்கிக் கொள்கிறான்.

வேறுபாடுகளில் சிக்கிக் கொள்கிறான். யாரோடும் ஒத்துப் போகவும் முடிவதில்லை; அதை வெளிப்படுத்தாமல் இருக்கவும் முடிவதில்லை. உள்ளூக்கமில்லாத சாதாரண மனிதனின் கோட்பாடுகளைப் பரிகசிக்கிறான். தனது பிரத்தியேக அளவையைக் கொண்டே ஒவ்வொன்றையும் தீர்மானிக்கிறான். ஒவ்வொன்றுக்கும் தீர்ப்பளிக்கிறான். அறியாமை கூடப் பரம்பொருளின் கண்ணாமூச்சி விளையாட்டே என்றும், மாயையும் கூடப் பரம்பொருளின் ஒரு வெளிப்பாடே என்றும் உணர்ந்து அதிசயித்து அனுபவிக்கும் நிலையைப் பெற அவனுக்கு இன்னும் நேரம் வரவில்லை.

இப்படித்தான் நானும் டாக்டரை முதன் முதலில் சந்தித்த போது இருந்தேன். என் சிந்தனையில் நானே நம்பிக்கை இழந்திருந்த போதிலும், வேறொரு ஊன்றுகோலும் கிடைக்காத காரணத்தால் என் சிந்திக்கும் திறனைச் சார்ந்திருந்தேன். டாக்டரைப் பற்றி எனக்கு முதன் முதலில் சொன்னவர் முரளி என்ற என் நண்பர். டாக்டர் மனோவசிய சாத்திரம் அறிந்தவர் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். நான் டாக்டரைச் சந்தித்து, என் குடும்பத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தின் பின்னணியைத் தெரிந்துகொள்ள முயலலாம் என்று முரளி யோசனை கூறினார். நானும் ஒப்புக்கொண்டேன்.

**அவர் வந்தார்**

அது ஒரு முதிராத மாலை வேளை. என் அலுவலக அறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன்; சோதிடம் பற்றியது என எண்ணுகிறேன். அப்போது வாயிலில் நிழலாடியது. நிமிர்ந்தேன் - முரளி யாரோ ஒருவரை, என் பார்வைக்கப்பாலிருந்த நபரை, உள்ளே தம்முடன் வருமாறு அழைத்துக் கொண்டிருந்தார். முரளியின் செயலிலிருந்து அந்த நபர் உள்ளே வரத் தயங்கியது புரிந்தது. ஆனால் முரளி அவரை வலுக்கட்டாயமாக உள்ளே அழைத்து வந்து பிரகாசமாகச் சிரித்தபடி எனக்கு டாக்டரை அறிமுகப்படுத்தினார். இயேசு பிரான் உள்ளே நுழைந்த போது பிலாத்து அமர மாட்டாமல் தன் இருக்கையினின்றும் எழுந்து நின்றது போல் நானும் என் இருக்கையிலிருந்து என்னை அறியாமல் எழுந்து நின்றேன்.

எனக்கு டாக்டரை அறிமுகப்படுத்தினார். இயேசு பிரான் உள்ளே நுழைந்த போது பிலாத்து அமர மாட்டாமல் தன் இருக்கையினின்றும் எழுந்து நின்றது போல் நானும் என் இருக்கையிலிருந்து என்னை அறியாமல் எழுந்து நின்றேன்.

நாங்கள் இருக்கைகளில் அமர்ந்த பிறகு, என் குடும்பத்தில் அப்போது நிகழ்ந்திருந்த சம்பவங்களைக் கூறலானேன். எனக்கு நெருக்கமான என் ஒன்றுவிட்ட சகோதரன் தன் வாழ்வை முடித்துக் கொண்ட போது காரணம் புரியாமல் நான் நிலை குலைந்து விட்டதை அவரிடம் கூறினேன். அந்த மர்மமான செயலுக்கு டாக்டர் விளக்கம் தர இயலுமா என்று கேட்டேன். கண்களை மூடியபடி டாக்டர், 'இயலும்' என்று தலையசைத்தார். "உங்கள் சகோதரனுடைய பொருள் ஏதேனும் ஒன்றை என்னிடம் கொடுங்கள், நான் முயல்கிறேன்", என்றார். 'ஒவ்வொருவரும் பல பிறவிகள் எடுப்பது உண்மையா?', என்று நான் கேட்டேன். "ஆம் உண்மையே!", என்றார் ஆணித்தரமாக. நான் இன்னும் கேள்விகள் கேட்க அவர் எல்லாவற்றுக்கும் கண்களை மூடியபடியே பதிலளித்தார். இந்த மனிதர் என்னிடம் சகஜமாகப் பேசத் தயங்குகிறார் என்று நினைத்தேன். அவர் புறப்படுவதற்கு இருக்கையை விட்டு எழுந்த போது, போகிறாரே என்று இருந்தது. அவர் சென்றுவிட்டார்.

என் சகோதரனுடைய பொருளொன்றை டாக்டரிடம் கொடுக்க நினைத்தேன். ஆனால் என் குடும்பத்தார் அதை விரும்பமாட்டார்கள் என்பதால் அந்த எண்ணத்தைக் கைவிட்டேன்.

**அமில சோதனை:**

மாயை எவ்வளவுதான் அழகாக இருந்தாலும், சீராகத் தோன்றினாலும், அனுபவிக்க எத்தனை ஸ்வாரஸ்யமாகவும், இனிமையாகவும் இருந்தாலும், ஒருவன் விடுதலை பெறவேண்டுமானால் அது கணுக்கணுவாக வெட்டிச் சாய்க்கப்படத்தான் வேண்டும். குரு, தம் சீடனை மாயையின் பிடியிலிருந்து தயக்கமின்றி, முறையாக, சில சமயங்களில் மெதுவாகவும், சில சமயங்களில் ஒரே வீச்சிலும் விடுவிக்கிறார். தாயானவள் எப்படித் தன் சேயின்

சீடனை மாயையின் பிடியிலிருந்து தயக்கமின்றி, முறையாக, சில சமயங்களில் மெதுவாகவும், சில சமயங்களில் ஒரே வீச்சிலும் விடுவிக்கிறார். தாயானவள் எப்படித் தன் சேயின் கைகளிலிருக்கும் ஆபத்தான கருவியை எடுக்க வேறு ஏதேனும் ஒரு பொருளைத் தந்து கவனத்தைத் திருப்புகிறாளோ, அவ்வாறே குருவும் செய்கிறார். சீடன் ஒவ்வொரு படியைக் கடக்கும் போதும் குரு கூடவே நடந்து வருகிறார். சீடன், மேல் பூச்சு இல்லாத உண்மையின் பரிமாணங்களைப் புரிந்து கொள்ளும் பக்குவம் பெறும்வரை அவன்கூடவே குரு

துணைவருகிறார். ஒரு மாயச் சூழலிலிருந்து அதிக ஆபத்தில்லாத, அதிக வினைப்பயன் விளையாத மற்றொரு மாயச் சூழலுக்கு அவனது கவனத்தைத் திருப்புகிறார். தம் சீடனின் நேற்றைய, இன்றைய, நாளைய வாழ்க்கைகளின் ஒவ்வொரு சிறு விவரத்தையும் பயன்படுத்தி வெகு நேர்த்தியாக குரு இதைச் செய்கிறார். அவனுடைய பல வாழ்க்கைகளின் விருப்பு, வெறுப்புகளை இழையிழையாகச் சேர்த்துப் பின்னி நேர்த்தியாக முடிந்து வைக்கிறார். விளைவு? வாழ்க்கையின் கோட்பாடுகளைச் சிந்தித்து இந்த முடிச்சுகளை விடுவிப்பதே அவனது முழுநேர அலுவலாகிறது. சீடன் இனிமேல் குறிக்கோளின்றி அங்குமிங்கும் அலைய வேண்டியதில்லை. அவன் வாழ்வின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒவ்வொன்றையும் குரு திட்டமிடுகிறார். உண்மையினின்றும் பிறழ்ந்து செல்லும் சாலைகள் அடைக்கப்பட்டு நேர்ப்பாதைகளே அவனுக்காகத் திறந்திருக்கின்றன. அவனது வாழ்வில் நிகழும் ஒவ்வொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிக்கும் குருநாதரே முழுப்பொறுப்பு. இனி அவன் செய்ய வேண்டுவதெல்லாம் அவர் தலைமையை ஏற்றுக் கொண்டு அவர் சொற்படி நடப்பது மட்டுமே. எது நேர்ந்த போதும் அவனால் அப்படி இருக்க முடியுமா என்பதே அமில சோதனை.

குருவும் **முழுமை**யும் ஒன்றே. **முழுமை** என்பது ஒரு சீடனுக்கு ஓர் எண்ணம் அல்லது கற்பனை நிலை மட்டுமே. இதுவும் அவன் வளர்ச்சிக்கேற்ப மாறக்கூடியது. எது சிறந்ததாக ஒரு நிலையில் தோன்றுகிறதோ அதுவே வேறொரு கண்ணோட்டத்தில் சிறப்புக்குரியதாகத் தோன்றுவதில்லை. எது ஒருநிலையில் சரியென்றும், பொருத்தமென்றும் காணப்படுகிறதோ, அதுவே வேறொரு கண்ணோட்டத்தில் சிதைக்கப்பட்ட உண்மையாகத் தெரிகிறது. முழுமை எதனோடும் போட்டியிடுவதில்லை. ஒப்புமையை வென்ற நிலையே முழுமை. முழுமையின்மையால் முழுமையைப் புரிந்து கொள்ள முடியாது

**மௌன இடைவெளி:**

என் அலுவலகத்தில் டாக்டருக்கு சில நண்பர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர் எனக்கும் நண்பர்; விடாது புகைபிடிப்பவரும் கூட. புகைப்பழக்கத்திலிருந்து விடுபட அவருக்கு வசியமுறை மூலம் சிகிச்சை செய்யலாம் என்று டாக்டர் கூறியதாகக் கேள்வியுற்றேன். சந்தித்த நாளிலிருந்து டாக்டர் என் நினைவை ஆக்ரமித்துக் கொண்டிருந்தார். அவரை மேலும் அறிந்து கொள்ள நான் ஆவல் கொண்டிருந்த போதிலும் அதுகுறித்து எதுவும் செய்ய என்னால் இயலவில்லை. ஓரிரு சந்தர்ப்பங்களில் ஏதாவது ஒரு சாக்கை வைத்துக் கொண்டு அவர்முன் சென்ற போதும், அவர் புன்னகைத்துத் தலையசைத்தாரே தவிர என்னுடன் உரையாட ஆர்வம் காட்டவில்லை. நானாகப் பேச்சைத் தொடங்கவும் எனக்குத் துணிவில்லை. அவருடன் பேச எனக்கிருந்த ஆர்வம் அவர் அறிந்ததே என்பதை என்னால் உணர முடிந்தது. அதனாலேயே சற்று கூச்சமடைந்தேன்.

டாக்டர் கையாண்ட மனோவசிய முறை பற்றியும், அது எங்ஙனம் பயன்பட்டது என்பது பற்றியும் என் நண்பர் அவ்வப்போது கூறுவார். அவர் புகைத்த சிகரெட்டுகளின் எண்ணிக்கைக் கணிசமாகக் குறைந்தது.

அவர் புகைத்த சிகரெட்டுகளின் எண்ணிக்கைக் கணிசமாகக் குறைந்தது.

ஒரு நாள் நான் இந்த நண்பரைச் சந்தித்த போது அவரோடு மற்றொருவர் இருந்தார். அந்தப் புதியவர் இத்தகைய மனோவசிய சிகிச்சையை ஆதரிக்கவில்லை. அதனைத் தொடர்ந்து எழுந்த விவாதத்தில், "வேறொருவர் கட்டுப்பாட்டில் மனத்தையும் ஆழ்பிரக்ஞையையும் ஒப்படைப்பது சரியில்லை" என்று நான் ஆணித்தரமாகக் கருத்துத் தெரிவித்தேன். ஆயினும் இந்த விஷயத்தில் டாக்டரிடம் சிகிச்சை பெற்றுவந்த என் நண்பர் எங்களோடு ஒத்துப் போகவில்லை. அவர் சிரித்தவாறு, "டாக்டர் மிக நல்ல மனிதர்" என்றுகூறி எங்கள் கூற்றை நிராகரித்தார்.

**குருவைக் கண்டு பிடித்தேன்**:

அதன்பிறகு சிலகாலம் குறிப்பிடும்படியாக எதுவும் நிகழவில்லை. என் மனச்சலனமும் குறைந்த பாடில்லை. அச்சமயம் எனது இன்னொரு சக ஊழியர் என் நெருங்கிய நண்பரானார். ஆன்மிகம் குறித்த எங்கள் கருத்துக்களை நாங்கள் பரிமாறிக் கொள்வோம்.

அவரும் டாக்டரைச் சந்தித்திருந்தார். டாக்டரைச் சந்தித்த முதல் சந்தர்ப்பத்திலேயே, "நீங்கள்தானே என் குரு?" என்று ஏனோ கேட்டும் இருந்தார். அவருடைய கேள்விக்கும் டாக்டரின் பதில் மௌனமே.சில மாதங்கள் கழிந்தபின், இந்த நண்பர், டாக்டர் தன்னைச் சீடராக ஏற்க முடிவு செய்து விட்டதாக என்னிடம் தெரிவித்தார். நண்பர், ஷீரடி பாபாவின் பக்தர். பாபா, சூட்சும நிலையில் டாக்டரிடம் என் நண்பருக்காக சிபாரிசு செய்திருந்தார்.

'எனக்கும் டாக்டர் தான் குருவோ?' நான் யோசித்தேன். 'அதை எப்படித் தெரிந்து கொள்வது?'

முரளியும், அந்த நண்பரும், நானும் அன்று ஒன்றாக அமர்ந்திருந்தோம். 'இன்று தெரிந்துகொண்டு விடலாமா?', என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டோம். ''நாம் மூவருமாகச் சேர்ந்து 'டெலிபதி' மூலம் அவரை அழைப்போம். நம் குருவாக அவர் இருந்தால் நமக்கு பதில் தர வேண்டும் இல்லையா?" என்று பேசிக் கொண்டோம். ஆனால் எங்களுக்கு டெலிபதி பற்றி ஒன்றும் அதிகமாகத் தெரியாது என்பது வேறு விஷயம்! நாங்கள் மூவரும் சுமார் ஐந்து நிமிடங்கள் அமர்ந்து மனக்கண்முன் அவரை நிறுத்தி அவரை வருமாறு அழைத்தோம். அதன் பிறகு மதிய உணவிற்காக நான் கீழே இறங்கிச் சென்று விட்டேன்.

அரைமணி நேரம் கழித்து நான் மீண்டும் நண்பரின் அறைக்கு வந்தபோது டாக்டர் அங்கிருந்தார். பரவசம் அக்கணத்தை முழுமையாக்கியது. நான் ஸ்தம்பித்து நின்றேன். அவரைக் கண்டுகொண்ட நிம்மதி, நலிந்த என் மனத்தை இதமாக நனைத்துக் குளிர்வித்தது.

முடிந்தது என் தேடல் !எத்தனைப் பிறவிகளாய்க் காத்திருந்தேனோ? அன்று முட்களாய்த் தைத்திருந்த ஏக்கமும், ஏமாற்றமும் இன்று காற்றோடு சேர்ந்து மகிழ்ச்சியில் திளைத்துப் பாடும் பூக்காடாயின. கனவில் நடப்பது போல் அவரை நோக்கிச் சென்றேன். எதிர்ப்பக்கம் பார்த்து அமர்ந்திருந்த அவரை நான் சென்றடைந்த போது, யாவும் அடங்கிய நிலையில் என் மௌனத்தை மட்டுமே அவருக்குக் காணிக்கையாக்க முடிந்தது.

"நீங்கள் என்னை அழைத்த போது நான் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தேன்", என்று மெதுவாகக் கூறினார். "உங்களுக்கு இப்போது என்னை அழைக்கத் தெரிந்து விட்டது; ஆனால் இதைத் தேவையில்லாமல் செய்யாதீர்கள்" என்றார்.

# உடன்படிக்கை.

**மாயையின் வலை:**

அதன் பிறகு அவ்வப்போது அவரைச் சந்தித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் நான் ஒரு பொருளாதாரப் பிரச்சினைக்கு உள்ளாகியிருந்தேன். டாக்டர் எனக்கு தியானத்தில் ஆரம்பப் பயிற்சியைக் கற்றுத்தர ஒரு நாள்குறித்திருந்தார். அதே தினத்தில் ஒரு பெரிய பொருளாதாரப் பின்னடைவை நான் சந்திக்க நேர்ந்தது. அதன் பாதிப்பிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு டாக்டரைச் சந்தித்து, அவர் குறித்திருந்த அந்நாளில் தியானப் பயிற்சியை ஏற்க எனக்குப் போதிய மனோதிடம் இல்லை. பொய்மை தன் பிடியினின்றும் ஒருவன் தப்ப முயலும் பொழுது, அது எப்படி அவனை விலக விடாமல் தன் வலைக்குள் இழுத்துக் கொள்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். தொலை பேசி மூலம் அவருக்கு என் நிலையைத் தெரிவிக்க வசதியிருந்தும் நான் அவரைத் தொடர்பு கொள்ளவில்லை. அவரைக் காண வரும் நிலையில் நான் இல்லை என்று அறிவிக்கவில்லை. எனது குருவை அன்று நான் காக்கவைத்து விட்டேன். அவரை நான் அடுத்த முறை சந்தித்தபோது, என்னுடைய ஊக்கமின்மையையும், பொறுப்பின்மையையும் லேசாகச் சாடிவிட்டு மீண்டும் தியானப் பயிற்சியைப் பற்றிப் பேசினார். வேறொரு நாளையும் நேரத்தையும் முடிவு செய்தார். இந்த முறை நான் தவறவில்லை.

**புது வாழ்க்கையின் தொடக்கம்**

அவர் என் முன் மேஜைக்கு அப்பால் அமர்ந்திருந்தார். அவரது தோற்றம் மென்மையும் நளினமுமாகத் துலங்கியது. அவரது முகம் செதுக்கிய சிற்பமாக அமைந்திருந்தது. அன்று, என்றுமில்லாதபடி கருமையாகத் தோற்றமளித்தார். “உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்?” என்று கேட்டார்.

மிக மிகக் கருமையாகத் தோற்றமளித்தார். “உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்?” என்று கேட்டார்.

“நான் உண்மையை அறிய வேண்டும்" உடைந்த குரலில் மனம் உருக பதிலளித்தேன். “சித்திகளைப் பெறுவதில் எனக்கு நாட்டமில்லை. நான் அறியவேண்டுவதெல்லாம் சத்தியம் மட்டுமே" என்றேன். நான் அதுகாறும் அறிந்தவை உண்மையல்ல என்றும், உண்மையை அவரிடம் நான் அறியவேண்டும் என்றும் உள்ளுணர்வால் உணர்ந்திருந்தேன். “அப்படியானால் பல சோதனைகளை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்குமே, பரவாயில்லையா?” என்றார். “பரவாயில்லை" என்று தலையசைத்தேன். சோதனைகள் கடுமையானவை என்பதை அப்போது நான் உணரவில்லை. அவர் ஒரு காகிதத்தை எடுத்து, எப்படிச் 'சுடர் தியானம்' செய்வது என்று வரைபடத்துடன் கற்றுத் தந்தார். மறு நாள் நான் தியானத்தைத் தொடங்க இருந்தேன்.

அந்த அறையில் வெளிச்சம் குறைவாக இருந்தது. டாக்டர் என் முன்னால் சிறிய தொன்மையான மரப் பலகை ஒன்றின் மேல் அமர்ந்திருந்தார். தழையத் தழையக் கச்சம் வைத்து வெள்ளை வேட்டியணிந்திருந்தார். திறந்த மார்பும், தோள்களில் முப்புரி நூலுமாய், நீண்ட தலைமுடியை வாரி உச்சியில் முடிந்தவராய்த் தோற்றமளித்தார். அமைதி கலையாதவராய் அவர் என்னை நோக்க, நான் அமர்ந்த நிலையில் அவரை நோக்கிக் குனிந்தேன். அவரும் முன்னோக்கிக் குனிந்து, என் முதுகுத் தண்டு தொடங்கும் இடத்தைத் தொட்டார். நான் சிலிர்த்தேன். மேலும் இருவர் எங்களுடன் இருந்தனர். ஆனால் அவர்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை. பேச்சின் உதவியின்றியே டாக்டரும் நானும் ஒருவருக் கொருவர் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ள முடிந்தது.

டாக்டர் என்னை எழுந்திருக்குமாறு பணிக்க, செய்யப்பட வேண்டிய பணி முடிந்தது என்று உணர்ந்தேன். எழுந்து அறையை விட்டு வெளி வந்தேன். அங்கே மற்றோர் அறையில், எதிரும் புதிருமாக இரு வரிசைகளில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட மிக அழகிய பெண்கள் வாழையிலையில் பரிமாறப்பட்டிருந்த உணவை உண்ணத் தயாராய்த் தரையில் அமர்ந்திருந்தார்கள். அவ்வறையை நான் கடக்கையில் அனைவரும் திரும்பி என்னை நோக்கினர். நான் மேலும் நடந்து , ஒரு திறந்த வெளியை அடைந்தேன். அங்கே படிக்கட்டு ஒன்று இருந்தது; நிறையப் படிகள். படிகளில் ஏறிக் கைப்பிடிச்சுவருடன் கூடிய சதுரமான மொட்டை மாடியை அடைந்தேன். அங்கே நட்ட நடுவில் ஒரு மரப்பலகை, மாக்கோலம் போட்டு வைக்கப் பட்டிருந்தது. விரிந்து பரந்த அமைதியான நீலவானம் மேலே கூரை போல் கவிந்திருந்தது. தொடுவானைக் கிழித்து மின்னிக் கொண்டிருந்த தங்கச் சூரியன், மேகங்களை வெவ்வேறு காவி நிறக் கலவைகளால் வண்ணம் செய்து கொண்டிருந்தான். ஒரு கணம் நிதானித்துப் பின்புறம் நோக்கினேன். கீழே, தொலைவில் டாக்டர் அக்கறையோடும், மீண்டும் உறுதி தரும் பாவத்தோடும் என்னைப் பார்த்தபடி நின்றிருந்தார். ஒருகணம் அவர் கண்களைச் சந்தித்தேன். பின்னர் திரும்பி தியானம் செய்வதற்காக மரப்பலகையின் மீது அமர்ந்தேன்.... விழித்துக் கொண்டேன். ஆம்! அது ஒரு கனவு. என் சூட்சும உடலின் ஓர் அனுபவமாகவும் இருக்கலாம். அப்போது விடியற்காலை மணி ஐந்து. உடன் எழுந்து முகம் கழுவி தியானம் செய்ய அமர்ந்தேன். அன்று நான் ஒரு புது வாழ்க்கையைத் தொடங்கினேன். அந்தக் கனவும் அதை ஆமோதிப்பதாக எனக்குப் பட்டது

**கட்டுப்படாத மனம்:**

புது வாழ்க்கை தொடங்கியது; எனினும், என் பழைய மனத்தையும் என்னுடன் நான் சுமக்க வேண்டியிருந்தது. டாக்டரை என் மனம் ஏற்றுக் கொண்டாலும் என் அடக்கமற்ற மனம் டாக்டரைப் பற்றிய ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் எப்போதும் ஆராய்வதும், உறுதி செய்து கொள்வதுமாக இருந்தது. டாக்டரும் நானும் அடிக்கடி சென்று சிற்றுண்டி அருந்தும் ஓர் உணவகம், டாக்டருடன் எனக்கு ஏற்பட்ட சில அனுபவங்களின் நிலைக்களம் ஆனது. ஒருநாள் நாங்கள் சிற்றுண்டி முடித்த பின்னர் டாக்டர் எழுந்து கை கழுவச் சென்றார். குளிர்ந்த குடிநீர் வைக்கப்பட்டிருந்த இடத்தில் அவர் நின்றிருந்தபோது, ஓர் உந்துதலால் நான் அவரை மனத்தால் அழைத்து எனக்கும் சிறிது நீர் கொண்டு வருமாறு மானசீகமாய்ச் சொன்னேன். குருவை நடத்தும் முறையில்லையே இது! ஆனால் என் இனிய குருவானவர் உடனே கீழ்ப்படிந்தவராய் நீரை ஒரு தம்ளரில் நிரப்பி என்னிடம் வந்து, என்னை நேருக்கு நேர் பார்க்காமல், சிரித்தபடி என் முன்னால் வைத்தார். என்னாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அதேசமயம் அவரை வேலை வாங்கிவிட்ட காரணத்தால் என்னை எனக்குப் பிடிக்கவும் இல்லை.

அதே உணவகத்தில் வேறொரு தினம் அவரிடம் மதம் சம்பந்தமான தெளிவற்ற ஒரு கேள்வியைக் கேட்டேன். அதைக் கேட்கும் போதே என் கட்டுப்பாடற்ற மனம் தறிகெட்டு ஓடியது. 'இவருக்கு இந்தக் கேள்விக்கு பதில் தெரியாது. ஆனாலும் தனக்குத் தெரியும் என்று காட்டிக் கொள்ள ஏதேனும் ஒரு பதிலைக் கூறப் போகிறார்' என்று நினைத்துக் கொண்டேன்.

மனத்தையும் என்னுடன் நான் சுமக்க வேண்டியிருந்தது. டாக்டரை என் மனம் ஏற்றுக் கொண்டாலும் என் அடக்கமற்ற மனம் டாக்டரைப் பற்றிய ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் எப்போதும் ஆராய்வதும், உறுதி செய்து கொள்வதுமாக இருந்தது. டாக்டரும் நானும் அடிக்கடி சென்று சிற்றுண்டி அருந்தும் ஓர் உணவகம், டாக்டருடன் எனக்கு ஏற்பட்ட சில அனுபவங்களின் நிலைக்களம் ஆனது. ஒருநாள் நாங்கள் சிற்றுண்டி முடித்த பின்னர் டாக்டர் எழுந்து கை கழுவச் சென்றார். குளிர்ந்த குடிநீர் வைக்கப்பட்டிருந்த இடத்தில் அவர் நின்றிருந்தபோது, ஓர் உந்துதலால் நான் அவரை மனத்தால் அழைத்து எனக்கும் சிறிது நீர் கொண்டு வருமாறு மானசீகமாய்ச் சொன்னேன். குருவை நடத்தும் முறையில்லையே இது! ஆனால் என் இனிய குருவானவர் உடனே கீழ்ப்படிந்தவராய் நீரை ஒரு தம்ளரில் நிரப்பி என்னிடம் வந்து, என்னை நேருக்கு நேர் பார்க்காமல், சிரித்தபடி என் முன்னால் வைத்தார். என்னாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அதேசமயம் அவரை வேலை வாங்கிவிட்ட காரணத்தால் என்னை எனக்குப் பிடிக்கவும் இல்லை.

அதே உணவகத்தில் வேறொரு தினம் அவரிடம் மதம் சம்பந்தமான தெளிவற்ற ஒரு கேள்வியைக் கேட்டேன். அதைக் கேட்கும் போதே என் கட்டுப்பாடற்ற மனம் தறிகெட்டு ஓடியது. 'இவருக்கு இந்தக் கேள்விக்கு பதில் தெரியாது. ஆனாலும் தனக்குத் தெரியும் என்று காட்டிக் கொள்ள ஏதேனும் ஒரு பதிலைக் கூறப் போகிறார்' என்று நினைத்துக் கொண்டேன்.

உடன் தெறித்தது அவரது பதில். அவர் பார்வை என்னுள் ஈட்டியாய்ப் பாய, "எனக்குத் தெரிந்தால் மட்டுமே தெரியும் என்பேன்; தெரியாவிட்டால், தெரியாது என்பேன்" என்று பதிலளித்தார். நான் உறைந்து போனேன். 'பூமி இரண்டாய்ப் பிளந்து அக்கணமே என்னை விழுங்காதா', என்று பதை பதைத்தேன். இருப்பதற்கே வெட்கினேன். ஆனால் டாக்டர் தன் முகபாவத்தில் கடுமையை மாற்றிக் கொண்டு என்னை மீண்டும் ஒரு நிலைக்குக் கொண்டு வந்தார்.

விழுங்காதா', என்று பதை பதைத்தேன். இருப்பதற்கே வெட்கினேன். ஆனால் டாக்டர் தன் முகபாவத்தில் கடுமையை மாற்றிக் கொண்டு என்னை மீண்டும் ஒரு நிலைக்குக் கொண்டு வந்தார்.

வேறொரு சமயம், டாக்டரும் நானும் கேன்டீனில் தேநீர் அருந்திக் கொண்டிருக்கையில், அங்கே இரு நபர்களுக்கிடையில் திடுமென ஒரு கைகலப்பு ஏற்பட, அவர்களிடையே எந்நேரத்திலும் ஒரு பெரிய மூர்க்கத்தனமான சண்டை நேரிடும்போல் ஆயிற்று. அவர்களுடைய கோப தாபம் மேலும் மோசமடைய, டாக்டர் தேனீர் அருந்திக் கொண்டே அவர்களை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார். நான் அவரை ஆவலுடன் நோக்கிக் கொண்டிருந்தேன். டாக்டர் அவர்களை தீர்க்கமாகப் பார்க்கவும், அக்கணமே அவர்கள் இருவரும் உடனடியாக அமைதியுற்றுக் குரல்களின் வேகம் தணிந்து, இருவரும் விடை பெற்றுச் செல்ல ஆவலுற்றவர் போல் ஆயினர்.

**என் குரு--எனது நிரந்தரத் துணை:**

விடியற் காலையில் எழுந்து தியானப் பயிற்சி செய்வது எனக்கு ஒரு வழக்கமாகிவிட்டது. நான் தூங்கி விழித்த அந்தக் கணம் தொடங்கி மீண்டும் இரவு உறங்கும் வரை என் குருநாதர் கூடவே இருப்பதை நான் உணர்ந்தேன். சில நேரங்களில் ஒரு மௌன சாட்சியாகவும், சில நேரங்களில் என் நடவடிக்கைகளையே தன் பிடியில் வைத்திருக்கும் ஒரு நிரந்தரத் துணையாகவும் அவர் விளங்கினார். வெவ்வேறு பரிமாணங்களிலும் சிறிது சிறிதாக மலரத் தொடங்கினேன். அவை நானே இதுவரை அறிந்திராத பரிமாணங்களாய் இருந்தன. அவர் என்னுடன் இருக்கிறார் என்ற உணர்வு எனது ஆன்மிக நிலையை எனக்குப் புரியவைத்தது. இந்த ஆன்மிக நிலைக்குத் தகுந்தாற் போல் என் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளக் கற்கலானேன். ஆழ்மனத்தின் சாரத்துக்கும் என் குறிக்கோளுக்கும் ஒவ்வும் வகையில் என்னை மாற்றியது அவருடைய துணை.

**அமைதியும் உண்மையும்** :

சிறுவயதில் நான் பெரும்பாலும் சிந்தனையில் ஆழ்ந்தவளாகவே இருந்தேன். திருமணத்திற்குப் பிறகு, பலவகைப் பட்டவர்களோடு கலந்து பழக வேண்டிய தேவை ஏற்பட்ட போது, எதிலும் என் கருத்தை நிறுவும் பொருட்டு வாதம் செய்யும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டேன்.

ஒரு நாள் என் அறையில், என் நண்பர்களும் சக ஊழியர்களுமாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். டாக்டரும் அன்று அங்கிருந்தார். பேச்சின் நடுவில், நண்பர் ஒருவர், ”இவ்வுலகில் எவருமே குற்றமற்றவராக இருக்கமுடியாது" என்றார். டாக்டரின் முன்னிலையில் இவ்வாறு கூறப்பட்டதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அச்சமயம் நான் 'பரிபூரணத்தைப்’ புரிந்து கொண்டிருந்த விதம் வேறாயிருந்த போதிலும், அப்போதும் எனக்கு டாக்டரும் 'பரிபூரண’மும் ஒன்றாகத்தான் பட்டது. 'குற்றமற்ற நிலை'யை அப்போது, ‘மனிதனை மையமாகக் கொண்ட சமூகத்தின் கோட்பாடுகளோடு இயைந்த மிகச் சரியான பண்பு’ என்றே நினைத்திருந்தேன். என் நண்பருடைய கூற்றை நான் ஏற்க மறுத்தேன். இவ்வுலகிலும் 'perfect' ஆக இருக்க இயலும் என்று வாதிட்டேன். அவர் தம் கருத்திலிருந்து மாற மறுக்க, எங்கள் வாதம் வலுத்தது. நாங்கள் ஒருவரை மற்றவர் மறுத்து, மாறி மாறித் தர்க்கம் செய்யலானோம்.

இந்தச் சூடான விவாதத்தின் போக்கில் நான் என் நடுநிலையிலிருந்து விலகி அமைதியிழந்தேன். சண்டையிடுவது போல் பேசத் தொடங்கினேன். இந்த வாய்ச் சண்டைக்கு டாக்டர் மௌனமான சாட்சியானார்.

என் போக்கைக் குறித்த அவரது விருப்பமின்மையை அவ்வப்போது நான் உணர்ந்தாலும், சர்ச்சையில் நான் கொண்டிருந்த ஈடுபாடும், என் கருத்தை நிறுவுவதில் எனக்கிருந்த பிடிவாதமும் என்னை முழுமையாக ஆட்கொண்டன. இத்தருணத்தில் மேலும் சிலர் அறையினுள் வர, என் நண்பரின் கவனம் திசை மாறியது. வாதம் நின்றது. டாக்டரும் சடாரென்று எழுந்து விடைபெற்று வெளியேறினார். டாக்டரை நான் மூன்று தினங்களுக்குப் பின்னரே சந்தித்தேன். "அன்று நீங்கள் ஏன் அப்படிப் பேசிவிட்டீர்கள்? மூன்று நாட்களாக நான் தியானமே செய்ய முடியவில்லை" என்றார்.

நான் அதிர்ந்து போனேன். அப்படியா? நான் அவருடைய அமைதியைக் குலைத்து விட்டேனா? அன்று டாக்டர் மௌனமாக இருந்தது என் நினைவுக்கு வந்தது. என்னால் நேர்ந்த அந்த ஸ்ருதி பேதத்தை எண்ணி மனம் வருந்தினேன். அவருடைய அமைதியைக் குலைத்து விட்டேன் என்பதால் வெட்கிப்போய் வேதனைக்குள்ளானேன்.

அன்று மாலை தனியாய் என் வீட்டு மொட்டை மாடியில் இருண்ட வானத்தின் கீழ் அமர்ந்திருந்தேன். 'எனக்கு என்ன ஆயிற்று? அன்று நான் ஏன் அப்படிப் பேசினேன்?' நான் பேசியது அனைத்தும் அணிவகுத்து வந்து என்னை ஏளனம் செய்தன. டாக்டரின் வார்த்தைகள் என் காதில் ஒலித்தது. அவரோடு பேதம் கொள்வதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதை முதன் முறையாக உணர்ந்தேன். என் விருப்பத்திற்கேற்பவே அதுவரை நான் நடந்து கொண்டிருந்தேன். ஆனால் இனி என் குருநாதரின் விருப்பத்திற்கு மாறாக என்னால் நடந்து கொள்ள முடியாது என்ற உண்மை எனக்கு விளங்கியது..

என் ஆழ்மனத்தின் சாரத்துக்கும் என் குறிக்கோளுக்கும் ஒவ்வும் வகையில் என்னை மாற்றியது அவருடைய துணை.

**நம்பிக்கையும் சந்தேகமும்:**

இச்சமயம், ஆன்மிகத்துக்குப் பெயர் பெற்ற திருவண்ணாமலைக்குச் செல்ல நேர்ந்தது. அந்த இடத்தின் மகிமையைப் பற்றியும், அங்குள்ள மஹான்களைப் பற்றியும் டாக்டர் மிக உயர்வாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். அங்கு வசித்து வந்த இரண்டு ஆன்மிகப் பெரியாரைச் சந்திக்குமாறு டாக்டர் குறிப்பாகக் கூறியிருந்தார். திருவண்ணாமலையைச் சென்றடைந்ததும் ஒரு மாட்டு வண்டியை அமர்த்திக் கொண்டு அவர்களைச் சென்று சந்தித்தேன். அந்நகரிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் டாக்டர் குறிப்பிட்டிருந்தவர்களில் இரண்டாமவர் வசித்து வந்தார். அவரது குடில் மிக அழகிய சூழலில் அமைந்திருந்தது. அவர் மிகவும் பணிவும் ,உற்சாகமும் கூடிய நபராகக் காணப்பட்டார். நான் கொண்டு சென்றிருந்த பழங்களை அவருக்கு அளித்தேன். அவரே எங்களுக்குத் தேனீர் தயாரித்தார். அப்பழங்களையும் அரிந்து என்னை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். அங்கிருந்த வேறு இருவரிடம் அவர் தமிழ் சித்தர் இலக்கியங்களிலிருந்து நிறைய மேற்கோள் காட்டிப் பேசிக் கொண்டிருந்தார். கடைசியில் என்னிடம், "எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

“சென்னையிலிருந்து”, என்றேன்.

“தங்களுக்கு என்னைப்பற்றி எப்படித் தெரியும்?”, என்று கேட்டார்.

“டாக்டர் நித்யானந்தம் என்னை இங்கே அனுப்பினார். அவர் உங்களைப்பற்றி என்னிடம் கூறியிருக்கிறார்", என்றேன்.

தெரியும்?”, என்று கேட்டார்.

மறுகணம் அவர் முகம் மாறியது. "உங்களுக்கு அவரை எப்படித் தெரியும்?", என்று கேட்டார்.

"அவர் என் குரு" என்றேன்.

"அவர் உங்கள் குருவா?" என்று கோபத்துடன் திருப்பிக் கேட்டார். "அவரே தனக்கு ஒரு வழிகாட்டியைத் தேடிக் கொண்டிருக்கும் போது அவர் எப்படி உங்களை வழி நடத்திச் செல்ல இயலும்? அவர் தனக்கு வழி காட்டுமாறு என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அது பற்றி நான் தீர்மானிக்கும் முன்னர் அவரே ஒரு தேதியைத் தேர்ந்தெடுத்துப் பங்குனி உத்திரத்தன்று என்னிடம் உபதேசம் பெறத் தீர்மானித்திருப்பதாக எனக்குக் கடிதமும் எழுதியிருக்கிறார். அவரே எல்லாவற்றையும் தீர்மானிக்க முடியாது. யாருக்கு எப்போது நான் உபதேசம் செய்வது என்பதை நானல்லவா தீர்மானிக்க வேண்டும். அவர் உங்கள் குரு என்று கூறுகிறீர்கள் !"

காட்சி இப்படி மாறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. 'டாக்டர், இது உண்மையா?' என்று எனக்குள் பதறினேன். ஒரு சம்பவம் என் மனத்தில் பளிச்சிட்டது. டாக்டர் ஒரு நாள், பங்குனி உத்திரத்தைப் பற்றியும், என் எதிரிலிருந்த இந்த மனிதருக்கு ஏதோ கடிதம் எழுதியது குறித்தும் கூறியது நினைவுக்கு வந்தது. 'இரண்டும் இரண்டும் நான்கா? நான் ஏமாற்றப் பட்டேனா? டாக்டர் எனக்கு குருவே இல்லையா?' பயமும் வலியும் என் இதயத்தை இறுக்க, எனக்குக் கண்ணீர் பொங்கியது. ஆனால், எனக்குப் புதிதாகக் கிடைத்திருந்த அமைதிக்கும், சுலபமான மனநிலைக்கும் டாக்டர் தானே காரணம்! என் சுதந்திர தாகத்தைத் தணிக்க முற்பட்டவர் டாக்டர் மட்டுமே. அதில் எனக்குச் சந்தேகம் இருக்கவில்லை. எதிரிலிருந்த சன்யாசி என் பதிலுக்காகக் காத்திருந்தார்.

இந்தத் தாக்குதலிலிருந்து முழுமையாக விடுபட்டிருக்காவிட்டாலும், என் மனத்தின் ஆழத்தில் விடை அரும்பியது.

"நான் அவரை என் குருவாகக் கருதிவிட்டேன். எனக்குக் கிடைக்க வேண்டியது எதுவோ அது அவர் மூலமாகவே கிடைக்கும்" என்று மெல்லிய குரலில் பதிலளித்தேன்.

அந்தச் சன்யாசி சிறிது நேரம் மௌனமாக இருந்தார். என் கருத்தை ஏற்றுக்

கொண்டவராகவே தோன்றினார்.

"நீ அப்படி நினைத்தால் சரி" என்றார். மேலும் ஏதேதோ பேசலானார். என்ன பேசினார் என்பது இப்போது நினைவில்லை. சிறிது நேரத்தில் அவரிடம் விடைபெற்றுத் திரும்பினேன். திரும்பும் வழி முழுவதும் சமநிலை குலைந்தே இருந்தேன். உறுதியான முறையில் அந்தச் சன்யாசிக்கு நான் பதிலளித்திருந்தேன் என்றாலும் சந்தேகம் என்னுள் முளை விட்டுத்தான் இருந்தது. கூடவே அமைதியின்மையும், குழப்பமும், வேதனையும் சேர்ந்து கொண்டன.

டாக்டரைச் சந்திக்க இன்னும் மூன்று நாட்கள் ஆகுமே? சந்தேகத்தில் சிக்கிய என் மனம் விளக்கம் நாடிற்று. நிலை குலைந்த இதயம் உறுதி மொழி வேண்டிற்று. டாக்டரை மறுபடியும் சந்திக்க மூன்று நாட்கள் இருந்த நிலையில், எனக்குச் சிந்திக்க நேரம் இருந்தது. நான் சேகரித்து வைத்திருந்த விஷயங்களையெல்லாம் அலசிப் புரட்டி ஒரு முடிவுக்கு வர என் மனம் முயன்றது. ஆனால் பயன் ஏதுமில்லை. இரவின் நிச்சலனத்திலும் திடுக்கிட்டு எழுந்து கொண்டேன். நான் தவறான பாதையில் நடத்தப்படுகிறேனோ என்று குழம்பலானேன்.

அழுதேன். டாக்டர் போலியானவர் என்று மட்டும் என்னால் நினைக்க முடியவில்லை. அதே நேரத்தில் திருவண்ணாமலை சன்யாசி பேசியவற்றை மறுக்கவும் முடியவில்லை. "சொல்லுங்கள் டாக்டர், சொல்லுங்கள்", என்று என் கற்பனையில் அவரை உலுக்கினேன். 'நான் என்ன செய்யட்டும்?' என்று கதறினேன். நிசப்தத்தில் அவர் பதில் உதித்தது. "நீ இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தாய். என்னிடம் நம்பிக்கை கொண்டு என்னைத் தொடர்ந்து வா. உன்னை வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்கிறேன்'.

நான் டாக்டரை மறுமுறை சந்தித்த சமயம் எனது தவிப்பு மறைந்து மீண்டும் அமைதி திரும்பியிருந்தது. திருவண்ணாமலை சன்யாசி நடந்து கொண்ட விதம் குறித்து டாக்டரிடம் விவரிக்கும் மன உறுதி எனக்கிருக்கவில்லை. ஆனால் அதுபற்றி மற்றொரு சீடரிடம் நான் கூற, அவர் வேறொரு சீடரிடம் சொல்ல, டாக்டரிடம் நம்பிக்கை இழந்து அச்சீடர் விலகிச் சென்று விட்டார். இறைவனின் வழிமுறைகளைப் புரிந்து கொள்வது கடினமே. எது ஒருவரை பலப்படுத்துகிறதோ, அதுவே வேறொருவரை பலவீனப்படுத்துகிறது.

'நம்பிக்கை', ஆன்மிக பலத்திற்கு ஓர் உரைகல்லாகும். எது ஒருவருக்கு தரப்பட வேண்டியதோ, அது கணநேரத் தாமதமுமின்றித் தரப்படும் என்பதை 'நம்பினோர்' அறிவர். அதனாலேயே அவர்கள் எதையும் தரச் சொல்லிக் கேட்பதும் இல்லை; ஏன் தரவில்லை என்று வினவுவதும் இல்லை. குருவானவர் தன் சீடன் எவற்றுக்குத் தன்னை அருகதையாக்கிக் கொள்ளவில்லையோ அவற்றைத் தருவதில்லை. அதேபோல், எதற்கெல்லாம் தன்னை அருகதையாக்கிக் கொண்டிருக்கிறானோ, அது, செல்வமாயிருந்தாலும், அறிவாயிருந்தாலும், ஞானமாயிருந்தாலும், தன்னை உணர்ந்து கொள்ளும் நிலையாயிருந்தாலும், எத்தகைய சக்தியாயிருந்தாலும்,

முக்தியாகவே இருந்தாலும் கூட அதை அவனுக்குத் தராது நிறுத்தி வைத்துக் கொள்வதில்லை. குருவே எச்சூழ்நிலைக்கும் தலைமையேற்கிறார். அவர் எதனாலும், எவராலும் அடக்கியாளப் படுவதில்லை. ஏனெனில், எதுவும், எவரும் அவருள் ஓர் அங்கமே. ஓர் அங்கம், முழுமையைக் காட்டிலும் பெரியதாயிருக்க இயலாது. ஓர் உயிர் உண்மையால் பக்குவம் பெறத்தலைப்படும் நிலையில், குருவானவர் அங்குத் தோன்றிப் பொறுப்பேற்கிறார். இவ்வாறாக குரு, சீடன் என்ற தொடர்பு நிறுவப்பட்டு, கடந்த காலத்தின் சுமையிலிருந்தும், எதிர்காலத்தைப் பற்றிய பொறுப்பிலிருந்தும் சீடன் விடுவிக்கப்படுகிறான்.

இங்கு எனக்கு மனித உடலமைப்பில் காணப்படும் ஒரு விசித்திரம் நினைவுக்கு வருகிறது. கை,கால் போன்ற உடலின் ஓர் அங்கம், அப்பகுதியிலிருந்து துண்டிக்கப் பட்டிருப்பினும் கூட, அதனால் பாதிக்கப் பட்ட மனிதன், சிறிது காலம், துண்டிக்கப் பட்ட அப்பகுதி தன்னுடலில் இருப்பது போலவே உணர்ந்து அவ்வப்போது அப்பகுதியில் அரிப்பு ஏற்படுவது போல் உணர்ந்து உழல்வான்.

அதுபோல், ஒரு சீடன் கடந்த கால, எதிர்காலச் சுமைகளினின்றும் விடுபட்டிருப்பினும் கூடச் சிறிது காலத்திற்கு, அழிக்கப்பட்டுவிட்ட கடந்த காலச் சுமைகளை இருப்பதாக நினைத்துக்கொண்டு சுமப்பதிலோ அல்லது, முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்ட எதிர்காலத்தைச் சீர்செய்யும் முனைப்பிலோ சிரமத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருப்பான். மனம் எதையும் ஒழுங்குபடுத்துவதற்குப் பழக்கப்பட்டது. மனம் தன் போக்கை ஒழுங்கு படுத்தி நிபந்தனையற்ற சரணாகதிக்குப் பழகிக்கொள்ள சிறிது அவகாசம் தேவைப்படுகிறது

அகங்காரத்தில் இருந்து விடுபடுவது இறையில் கரையும் போது தான். தம் தனித்துவத்திற்கு முக்கியத்துவம் ஏதும் இல்லை என்பதையும், இறைவனின் பாரபட்சமற்ற கருணையையும், ஒருசேர உணர்ந்தனுபவிக்கும் அந்தத் தருணமே, இறையருளில் நாட்டம் கொண்டோர் வாழ்வில் மிக உயர்வான தருணம்; இறைவனின் கருணையை அனுபவித்தால் தான் அது என்ன என்பது புரியும். இறைவனது ரகசியங்கள், பகுத்தறியக் கூடிய ஆனால், விஸ்வாசமிக்கவருடைய கண்களுக்கே புலப்படும். 'நம்பிக்கை' என்பது உண்மையின் கைவிளக்கு என்றால், 'சந்தேகம்' என்பது தீமையின் மாய வலை. நம்பிக்கை, கட்டித்தருகிறது; சந்தேகம் தகர்த்துவிடுகிறது; நம்பிக்கை ஒன்று சேர்க்கிறது; அவநம்பிக்கை பிரித்துவைக்கிறது; நம்பிக்கை தீர்வைத் தருகிறது; அவநம்பிக்கை எதிர்த்து நிற்கிறது. நம்பிக்கை உணர்வைச் சார்ந்தது; அவநம்பிக்கை புத்தியைச் சார்ந்தது. அவநம்பிக்கையில், உணர்வானது புத்தியால் நசுக்கப்படுகிறது; ஆனால் நம்பிக்கையில், புத்தி தானாகவே உணர்வுக்கு உதவ முற்படுகிறது.

# அமரத்துவத்தின் நுழைவாயில்.

**மௌனப் பரிமாற்றம்** :

டாக்டரோடு நான் கழித்த நேரம் பெரும்பாலும் மௌனத்திலேயே செலவழிந்தது. நாங்கள், மூன்று அல்லது நான்கு பேர் கொண்ட ஒரு குழுவாகக் கூடுவதுண்டு. மற்றவர்கள் அவருடன் பேச்சில் ஈடுபட்டிருக்க, அடிக்கடி நான் த்யான நிலைக்கு உந்தப் பட்டிருந்தேன். எனது உணர்ச்சிகளும் மனமும் சிறிது சிறிதாக ஒடுக்கமுற, நான் கொஞ்சம் கொஞ்சமாக என்னை மறந்த நிலைக்கு இழுக்கப் பட்டேன். உணர்வு திரும்புகையில் எனது நிலை அலைகளற்ற கடல்போல அமைதியுடனும், ஸ்படிகம் போல் தெளிவாகவும் விளங்கியது; தளர்வூட்டும் இகலோகக் கவலைகள் அழிக்கப்பட்டும், எல்லா முரண்பாடுகளும் சீர் செய்யப்பட்டும், எனது அகம், மற்றொன்றால் தொடப்படாத தூய்மையில் ஒற்றையாக மிளிர்ந்தது. எனது கவனம் ஏதேனும் ஒரு சூழ்நிலை மாறுபாட்டால் ஈர்க்கப்படாதவரையில் நான் கட்டறுபட்டு யாவற்றிலிருந்தும் தனித்து, விட்டு விடுதலையாகி, எங்கோ மிதந்து கொண்டிருப்பது போன்று உணர்ந்திருந்தேன். சில சமயங்களில், டாக்டரும் நானும் மட்டுமே இருந்த நேரங்களில், சம்பாஷணையே ஒரு கடினமான செயலாக இருந்தது. அளந்து பேசும் மனிதரான அவர், எப்போதும் எளிய வார்த்தைகளையே பேசினார். அவர் தந்த விளக்கங்கள் பாண்டித்யம் நிறைந்தவையாகவோ, புலமை தொனிப்பவையாகவோ இருக்கவில்லை; அவை எப்போதும் நேரடியாகவும், ஏதாவது விஷயம் சம்பந்தப்பட்டும் இருந்தன. அவர் சில சமயங்களில், சில கேள்விகளுக்கு வாய்மொழியால் பதிலளிப்பதைத் தள்ளிப் போடுவதைக் கண்டிருக்கிறேன்.

அத்தகைய கேள்விகளை அவர் பொருள் பொதிந்த, ஆழ்ந்த மௌனத்தால் எதிர்கொண்டார். அவரது மௌனத்தின் உட்பொருளை என்னால் புரிந்துகொள்ள முடிந்தாலும், உள்ளே மௌனத் தடாகத்தில் அரும்பும் அவர் குரலை அலட்சியம் செய்து, வாய்மொழியாக பதில் வேண்டுமென்று நான் பிடிவாதமாகக் கோரிய சமயங்களும் உண்டு. அந்நேரங்களில் அவர் எழுந்து சென்று விடுவார். அல்லது ஒப்புக்காக, நம்பவே முடியாத ஒரு பதிலைச் சொல்லிவைப்பார்.

அப்படி சம்பந்தா சம்பந்தமில்லாத பதில்களைச் சிலமுறை பிடிவாதமாகக் கோரிப்பெற்ற பிறகு, அத்தகைய கேள்விகளை உள்ளே கேட்டு, உள்ளேயே பதில்களைப் பெறும் பாடத்தை நான் கற்றேன். என்னுள்ளே மௌனத் தடாகத்தில் மலர்ந்த அவரது பதில்கள் மேன்மையாகவும், பிரபஞ்சத்தின் மாறாத கோட்பாடுகளைத் தழுவியும் இருந்தன. அத்தகைய பதில்களின் வெளிச்சத்தில் நான் அவரைத் துல்லியமாக கவனித்து வந்திருக்கிறேன். அப்படி கவனிக்கும்போது அவரது அணுகு முறையின் தனித்தன்மையைக் கண்டு வியந்திருக்கிறேன். எல்லாவற்றையும் விஞ்சி ஓங்கி உயர்ந்து நிற்கிறாரே, எப்பேர்ப்பட்ட மனிதர் இவர்! இதோ, தம் சமகாலத்தவரோடு வைத்துப் பார்த்தால் மிகவும் முற்போக்கானவர்; காலத்தை வென்றவர் – அதிலும் மிகப்பழமையானவர்! பொய்மையால் நிறுவப்பட்ட அமைப்புகளின் எதிர்ப்புகளைத் தீரத்துடன் தாங்கிக் கொண்டும், தெளிவற்றோரின் இழுபறியால் தடுமாறாமலும், இதோ, உண்மை விளக்கத்தின் உச்சியை எட்ட முனைந்து விட்ட அமைதியான ஒரு மேதை! வாழ்க என் சத்குரு! சமாதானம் அவருக்கு உரித்தாகுக!

இந்த இயைபில்தான் என் ஆன்மிகம் மலர்ந்தது என்பதையும், நான் இருக்கும் ரகசியம் புலப்பட்டது என்பதையும் புரிந்து கொண்டேன். நான் இனி விவாதத்தில் ஈடுபட மாட்டேன். விண்மீன்கள் மின்னத் தொடங்கி, வானம் ஆழ்ந்த கருமை பூணும் வரை நான் அங்கே வெகுநேரம் அமர்ந்திருந்தேன். என்னோடு நான் உடன்பாட்டுக்கு வந்த பின்னரே எனக்கு அமைதி திரும்பியது. உண்மையின் விளைவே அமைதி என்பதை உணர்ந்தேன்.

அப்போதிலிருந்து அமைதியே எனக்கு உரைகல்லாயிற்று. நான் அமைதியற்றிருந்தால், நான் சத்தியத்தின் பாதையிலிருந்து விலகியிருந்தேன் என்று பொருள். என்னை அமைதியிழக்கச் செய்த எந்த ஒரு செயலையும் நான் தவிர்த்தேன். பல நேரங்களில் என்னுடன் பழக நேரிட்டவர்களால் நான் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுத் , தவறாக விமர்சிக்கப்பட்ட போது, அத்தகைய வேறுபாடுகளை ஏற்றுகொள்ளப் பழகிக் கொண்டேன். மற்றவர்களை என் கருத்துக்கு உடன்படுமாறு வற்புறுத்தக் கூடாது என்பதையும் கற்றுக் கொண்டேன். எவ்வளவுக்கெவ்வளவு நான் பிறரால் கணிக்கப்பட்டேனோ, அவ்வளவுக் கவ்வளவு மனம் செய்யக்கூடிய தவறுகளை நான் உணர்ந்தேன்.

மனம் என்பது, தனக்குத் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எதையும் கணிக்கும் கணிப்பொறி போன்றது. ஒரு மனம் போல் இன்னொரு மனம் நினைக்காது, நினைக்க இயலாது. ஆகவே, ஒன்றைப் பற்றி ஒருவன் சரி யென்று சொல்ல, மற்றொருவன் அதைத் தவறென்று தள்ளுவான்.மேலான ஒரு மனமானது (அது கொண்டுள்ள தகவல்களின் தரத்தின் பொருட்டு, அது மேலான, அல்லது கீழான மனமாகிறது), கீழான ஒரு மனம் ஏன் ஒரு குறிப்பிட்ட வகையில் தீர்மானிக்கிறது என்பதையும், எந்தத் தகவலின்மையால்

அப்படிச் செய்கிறது என்பதையும், எப்படிச் சிந்திக்க அது பழக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியும். ஆனாலும் அக்கீழ்மையான மனம் உயர்வதற்குத் தேவையான தகவல்களை அதற்குள் உடனடியாகச் செலுத்தவும் இயலாது. ஏனெனில், ஒரு விதமாகப் பழக்கப்பட்டுள்ள அக்கீழான மனம், அதன் பழக்கங்களுக்கு ஆதாரமான கோட்பாடுகளே சில சமயம் கேள்விக்குள்ளாகும் சூழ்நிலை நேரிட்டால் குழப்பத்தில் செய்வதறியாது ஸ்தம்பிக்கக் கூடும்.

தியானப் பயிற்சி தொடங்கியதிலிருந்து, என் மனம் பூண்டிருந்த சில பழைய கொள்கைகளை, 'இனி நடைமுறைக்கு லாயக்கற்றது' என்று சட்டை உரிப்பதுபோல் ஒவ்வொன்றாக உதறி வரலானேன். பொய்மை ஏடு ஏடாக என்னைவிட்டு உதிர்ந்தது. என் உள்ளே புதியதொரு வானம் ஒவ்வொரு முறை விரிந்த போதும், என் குருநாதர் விடிவெள்ளியாய் அங்கு எனக்காகக் காத்திருந்தார்.

திரும்பிப் பார்க்கையில் அவரது செயல்முறையைக் கண்டு வியப்பில் ஸ்தம்பித்துப் போகிறேன். முதலில் கடும் சோதனைகள் மூலம் அவர் தரப்போவதை ஏற்றுகொள்ளும் மனநிலையை எனக்கு அளித்து, அதன் பின்னர் ஒன்றன் பின் ஒன்றாக வெவ்வேறு கோணத்தில், உண்மையின் தரிசனத்தைப் பரிசாகத் தரலானார். வெகுநேர்த்தியாகவும், அக்கறையுடனும் மாயையின் பிடியிருந்து என்னைப் பெருமளவு வெளிக்கொணர்ந்தார்.

அவர் அவ்வப்போது, மனிதனை மின் விளக்குக்கும், உண்மையை மின்சாரத்திற்கும் ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. தனது திறனுக்கேற்ப ஒரு மின்சார விளக்கு எப்படி வெளிச்சத்தைத் தருகிறதோ, அதுபோல் மனிதனும் தன் முதிர்ச்சிக்குத் தக்கப்படியே உண்மையை வெளிப் படுத்துகிறான். உண்மையை அதன் முழுமையில் அறிந்து உணர்வதற்குத் தடையாயிருப்பது, தான்

இயங்கும் முறையே என்று மனம் அறியும் போதும், உண்மையின் இயல்பும், வெளிப்பாடும் சுதந்திரமே ஆகையால் எந்தச் சட்ட திட்டமும் உண்மையைக் கட்டுப் படுத்த முடியாது என்பதை மனம் ஏற்கும் போதும், மனத்துக்குத் தன் வரம்புகள் உணர்த்தப்பட்டு அது பணிவில் ஒடுங்கும் போதும் மட்டுமே உண்மை உதயமாகிறது. மனத்தின் மதிப்பீடு உண்மையின் பிராந்தியத்தில் செல்லுபடியாகாது; ஆனாலும், உண்மையின் நுழைவாயிலைச் சென்றடையும் பயணத்தை அம்மதிப்பீட்டின் மூலமே நடத்தவேண்டியுள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மையே!

காலம் செல்லச் செல்ல டாக்டரிடம் நான் மேன்மேலும் ஈடுபாடு கொள்ளலானேன். என் வாழ்க்கையின் ஆதாரமாகவே அவர் விளங்கினார். எல்லாத் தளைகளிலிருந்தும் என்னை நான் விடுவித்துக் கொள்ளப் போராடிக் கொண்டிருக்கையில் இப்புதிய ஒட்டுதலின் விளைவு என்னவாயிருக்கும் என்று நான் வியந்தேன். டாக்டரிடம் கேட்டேன்.

“டாக்டர், பந்தம் என்பது மாயைதானே?” ஆம் என்பதாக அவர் தலையசைத்தார்.

“ஒருவர் தன்னையறிவதற்கு, அது களையப்பட வேண்டுமன்றோ?” அவர் மீண்டும் தலையசைத்தார்.

“அப்படியானால் எனக்கு உங்கள் மீதுள்ள ஈடுபாடும் ஒரு பந்தம் தானா?” என்று கேட்டேன்.

“இல்லை, இது பந்தமில்லை" என்று கூறினார்.

குறிப்பில்லாத உண்மையைக் கண்டறிவது கடினம் என்பதால் உண்மையை விரும்பித் தேடும் ஜீவன்களுக்காக குரு வடிவெடுக்கிறார். அவரது பௌதிக வடிவின் மூலம், உள்ளுறையும் உண்மை,

புலன்களால் நுகரக்கூடியதாகத், திடமாக வெளிப்படுகிறது. பார்க்கப் போனால், உண்மை ஒவ்வோர் ஆன்மாவுமே. ஆனால் அதைச் சூழ்ந்துள்ள அகங்காரம் உண்மை பளிச்செனப் பிரகாசிப்பதைத் தடுக்கிறது. மாயையால் சூழப்படாத ஆன்மாக்கள் வெகு சிலவே. மாயை சூழாத ஆன்மாக்களால் கட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால் உண்மை எதையும் கட்டுப்படுத்தாது. விடுவிக்கவே செய்யும்.

நான் பிறப்பால் ஹிந்துவாக இருந்தும் நான் வளர்ந்த சூழ்நிலை, அந்த விதமாக அதிகம் இல்லை . எந்த ஒரு பரலோக உருவகத்துக்கும் நான் ஆட்படுத்தப்படவில்லை. மேலும் எந்த ஒரு மதத்தின் பாலும் எனக்குத் தனிப்பட்ட ஈர்ப்பும் இருக்கவில்லை. இயற்கையாகவே தத்துவ விசாரம் கொண்ட என் கணவர் ரவி, உலக ஞானிகளின் கருத்துக்களை எனக்கு அறிமுகப் படுத்தியிருந்தார். என் மனத்தில் தேவையற்று ஒட்டிக்கொண்டிருந்த குழப்பங்களைக் களையெடுத்து, அதன் மூலம் இறைநாட்டத்தின் வாயிலுக்கு என்னைத் துரிதமாகக் கொண்டு சேர்த்திருந்தார். அங்கிருந்து டாக்டர் பொறுப்பேற்றார்.

ஆன்மிக நாட்டம் கொண்ட மற்ற எல்லாரையும் போலவே நானும் உள்ளே தேடத் தொடங்கிய போது என்னுடைய தற்போதைய நாமரூபத்துக்கு முன்னும், அதைக் கடந்தும் என்ன இருக்கிறது என்று அறிய ஆவலுற்றேன். ஒரு பரிசுத்த உணர்வு மட்டுமேயாக தியானத்திலிருந்து நான் வெளியே வந்த போது இன்னார் என்ற முத்திரையின்றி, பெயரிட முடியாதபடி விளங்கினேன். அப்படிப் பட்ட நிலையைப் பற்றி பின்னர் நினைத்துப் பார்க்கையில் இந்தத் தூய உணர்வு நிலை, இந்த 'நான்' அழிவற்றது என்றும், அதுவே இறைவனின் விருப்பத்திற்கேற்ப எண்ணற்ற பெயர்களையும், வடிவங்களையும் எடுக்கிறது என்றும் அறிந்தேன். முன்னதை

அழித்துக் கொண்டும், அடுத்ததை உருவாக்கிக் கொண்டும் தன்னிச்சையாக இயங்குவது போல் தோற்றமளித்துச் செயல்படும் ஒவ்வொரு நாம ரூபத்துக்கும், இந்த களங்கமற்ற 'நான்' ஒரு சாஸ்வதமான தொடர்சாட்சியாக விளங்குகிறது.

வினைப்பயனின் சங்கிலித் தொடர்ச்சியால் நாமரூபங்கள் மாறிமாறி, ஒன்று மற்றொன்றைத் தொடர, உள்ளே சாட்சியாக விளங்கும் இந்தத் தூய பிரக்ஞை, தொடர்ச்சியான மாயப் பதிவுகளால் மறைக்கப்படுகிறது. ஆழ்ந்த அமைதியில் இத்தகைய மேலெழுந்தவாரியான பதிவுகள் மறைந்து, 'அகம்', அடுத்தது என்பதே இல்லாத

முழுச்சுதந்திரத்தில் ஒளிவீசிப் பிரகாசிக்கிறது. தூய்மை குன்றித் தனிப்பட்டு, சூழ்நிலையோடு உறவு கொண்டு இருந்தே பழகிவிட்ட **'நான்'** , லேசான, சூழ்நிலையிலிருந்து விலகிய **தூய 'நான்'** ஆகக் கற்றேன். இதுவே அமரத்துவத்தின் நுழைவாயிலை எனக்குத் திறந்து விட்டது. 'நான்' இருந்தேன், இருக்கிறேன், இருப்பேன் என்பதை உணர்ந்துகொண்டேன்.

## விடுதலை என்றால் என்னவென்று....

**சமநிலை:**

உண்மையைத் தேடும் பொருட்டு சகஜமான வாழ்க்கையை முற்றிலும் துறந்து ஒதுங்கி விடுவதை டாக்டர் ஒரு போதும் ஆதரித்ததில்லை. குடும்பத்தில் இருந்தபடியே தன்னையறிய ஒருவன் முற்படும் போது ,அவனுடைய வாழ்க்கை, காட்டில் தனிமையில் வசிக்கும் ஒரு துறவியின் வாழ்க்கையைக் காட்டிலும் சோதனை மிக்கதாகவும், அதனாலேயே அவனை பலப்படுத்துவதாகவும் இருக்கும் என்று அவர் கூறுவார். பிரச்சினைகளை எதிர் கொண்டு வரவேற்க வேண்டும் என்பார். திரும்பிப் பார்க்கும் போது, எனக்கு வந்த ஒவ்வொரு பிரச்சினையும், அது போன்ற பிறபிரச்சினைகள் என்னை பாதிக்காத வண்ணம் எனக்கு சக்தியைத் தந்தே சென்றது. முன்னைக் காட்டிலும் திடம் பெற்றவளாகவே நான் ஒவ்வொரு பிரச்சினையிலிருந்தும் வெளிவந்தேன். நான் வழிநடத்தப்படுகிறேன் என்ற நம்பிக்கையே இத்தகைய மனோதிடத்தை எனக்குத் தந்தது.

நான் எதைப் பற்றியேனும் புகார் செய்தால் டாக்டரிடமிருந்து கனிவான பதில் கிடைக்காது. அப்படிப்பட்ட சமயங்களில் டாக்டர் என்னை முழுவதுமாகப் புறக்கணிப்பார், அல்லது நிலைமையைச் சமாளிக்க முடியாமல் தடுமாறும் என் இயலாமை குறித்துக் கொஞ்சம் கடுமையாகவே ஏதாவது சொல்வார். எனக்கு லோகாயதமான பிரச்சினை ஏதேனும் வரவிருப்பதை நான் அறிய நேரிட்டாலும், பிரச்சினையைச் சரிக்கட்ட எந்தச் செயலையும்

செய்ய அவர் என்னை அனுமதித்ததில்லை. 'நடப்பது நடக்கட்டும்' என்று சும்மா இருக்க என்னைப் பழக்கினார். பிரச்சினைகளின் கடுமையான விளைவுகளையும் நான் சமநிலை மாறாமல் சந்திக்கப் பயிற்றுவிக்கப்பட்டேன். 'சொர்க்கத்தின் வேட்டை நாய்'(The Hound Of Heaven என்ற ஆங்கிலக் கவிதையில் Francis Thompson இறைவனை இப்படி அழைத்துத் தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார்) என் மனத்தில் எந்த மூலை முடுக்கிலாவது உடைமைகளை ஒளித்து வைத்திருந்தேனா என்று மோப்பம் பார்த்து என்னிடமிருந்தவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டது.

**காரணத்தை ஏற்படுத்தினார் :**

என் ஆன்மிகத் தேடலின் ஆரம்ப நிலையில், எனக்கு நெருங்கிய கூட்டாளியாக இருந்த என் நண்பன் ஒருவன், திடுமென என்னிடமிருந்து விலகியிருக்கத் தீர்மானித்து, டாக்டர் முன்னிலையில் அதை அறிவிக்கவும் செய்தான். அந்த நிலையில் அது எனக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. என் ஆன்மிக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய நண்பனாக அப்போது அவன் மட்டுமே இருந்தான். அதனால் அந்த நட்பு மறுக்கப் பட்டபோது நான் எதையோ இழந்தது போலானேன். டாக்டர் என்னோடு இருந்தார். ஆனால் உலகத்துக்கு எட்டா உயரத்தில் அவர் இருந்ததால் என் தனிமைக்கு விடைகாண அவர் அருகே செல்ல இயலும் என்று நான் கற்பனை கூடச் செய்யவில்லை. என் நண்பன் தன் முடிவை மாற்றிக் கொள்வானா என்று ஓரிரு நாட்கள் காத்திருந்தேன். ஆனால் அவன் என்னிடமிருந்து விலகியே இருந்தான்.

இந்த விஷயத்தில் தலையிட்டு நிலைமையைச் சரிசெய்வார் என்று எண்ணி நான் டாக்டரை அணுகினேன்.

“டாக்டர், என் நண்பன் நேற்றிலிருந்து என்னிடம் பேச மறுக்கிறான்" என்றேன். ஒரு சிறு குழந்தை தன் அன்னையிடம், தன் சகோதரனைப் பற்றிக் குறை கூறுவதுபோல் எனக்குத் தோன்றியது, நான் பேசியவிதம். “அதனால் என்ன?” என்று கேட்டார் டாக்டர். அவருக்கு என் நிலைமை வேடிக்கையாக இருந்ததுபோல் எனக்குத் தோன்றியது.

“ஆமாம்! அதனால் என்ன?” சூழ்நிலையை மாற்ற விரும்புவதற்கு பதிலாக, அதைப் பற்றிக் குறைபடுவதற்கு பதிலாக, அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை அந்த ஒரே கணத்தில் நான் பெற்றேன்.

சில நிமிடங்களில் என் அறைக்குள் வந்து டாக்டரை வணங்கி, எங்கள் முன் அமர்ந்தான் என் நண்பன். அமைதியான உறுதி என்னை ஆட்கொண்டது. நான் அவனிடம் பேசலானேன்:

"நண்பா, உன் நட்பை நான் பெரிதும் மதிக்கிறேன். ஆன்மிகப் பாதையில் சேர்ந்து நடக்க, உண்மையான, புரிந்து கொள்ளக் கூடிய நண்பன் கிடைப்பது கடினம் என்பதால், நான் உன் நட்பை இழக்க விரும்பவில்லை. ஆனால் நாம் பிரிவது உன் விருப்பம் என்றால் நான் அதற்குக் கட்டுப்படத் தயார். தனியாக நடப்பது இன்னும் கடினம்தான். ஆனால் அதற்கும் நான் தயார். எப்படியாவது இந்தப் பயணத்தைத் தொடர்வேன்" என்றேன்.

என் நண்பன் டாக்டரைப் பார்த்தான். டாக்டர் தலையசைத்துப் ” பேசேம்பா!” என்றார்.

“நீங்கள் சொன்னால் சரி டாக்டர்" என்று பணிவாக அவன் பதிலளித்தான்.

மறுகணம் அவன் என் பழைய நண்பனானான். 'நேற்று இவனுக்கு என்ன ஆயிற்று?' என்று நான் வியக்க, டாக்டர் என் பக்கம் திரும்பி, “நான்தான் அப்படிச் செய்தேன்" என்றார் கண்கள் மின்ன.

டாக்டர் விளைவுகளை ஏற்படுத்தினார். கூரிய வளைவுகளும், குறுக்கு நெடுக்கான திருப்பங்களையும் கொண்டிருந்த தம் சீடர்களின் வாழ்க்கைப் பாதையில், அவர்களை மிகுந்த எச்சரிக்கையாகவும் நேர்த்தியுடனும் வழிநடத்தி, வழியில் வாய்பிளந்துக் காத்திருந்த கோர விதியின் வசமிருந்து அவர்களை மீட்டுத் திசைதிருப்ப அவர் காரணங்களை ஏற்படுத்தினார். சீடர்களில் பெரும்பாலானோருக்குத் தாங்கள் எவற்றிலிருந்தெல்லாம் தப்பினோம், எவ்வாறு காப்பாற்றப் பட்டோம் என்று கூடத் தெரியாது. ஏனெனில், என் பிரபுவும் குருவுமாகிய 'மனிதனின் மகன்',அவர்களுக்கு பதிலாகத் தானே அத்துன்பங்களை அனுபவித்துத் தான் பட்ட கஷ்டங்களையும் தன் கருணையினால் மௌனத்தில் புதைத்தார்.

ஒரு நாள் டாக்டர், எங்கள் நண்பர் ஒருவரை ஸ்தூல சரீரத்திலிருந்து சூட்சும நிலைக்குக் கொண்டு சென்று, அவரை 'கோவா' எனும் ஊருக்கு அனுப்பினார். புனித சேவியரின் உடல் அங்கு பாதுகாக்கப் பட்டு வருகிறது. அவரது ஆவியோடு என் நண்பர் சூட்சும நிலையில் தொடர்பு கொண்டார். பிறகு புனித சேவியர், என் நண்பரின் உடலுக்குள் இறங்கிப் பேசுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டார். அந்த நிகழ்ச்சிக்கு நான் சற்று தாமதமாகச் சென்றேன். அந்த அறைக்குள் நான் நுழைந்த போது புனித சேவியர் விடைபெற்றுக் கொண்டிருந்தார்.

ஆனால், போகும் முன்பு அவர் ஒரு டயரியின் பக்கமொன்றில் தம் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கையொப்பமிட்டுச் சென்றார்.

அது எனக்கு ஒரு புதிய அனுபவம். அதை நான் முழுதும் ரசித்தேன் என்று கூற இயலாது. எனக்குப் பரிச்சயமில்லாத ஒன்றைப் பற்றிப் பயப்படாதிருக்க என்னால் இயலவில்லை. 'மீடியமாகச்' செயல்பட்ட அந்த நபர், நான் நன்கு அறிந்தவர். புனித சேவியர் அவரது உடலில் இறங்கிப் பேசிக் கொண்டிருந்த போது, அவரது குணாதிசயத்திலும், தோற்றத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டேன். சேவியரின் ஆவி என் நண்பரை விட்டு விலகிய உடன் அவர் சற்றுக் களைப்பாகக் காணப்பட்டார். உடனே டாக்டர் ஒரு தம்ளரில் குடிநீரை எடுத்துவரச் செய்து, அதைத் தம் உள்ளங்கையால் மூடி, அதில் சக்தியூட்டி நண்பருக்குக் கொடுத்தார். அந்நீரை அருந்தியவுடன் நண்பர் சோர்வு நீங்கியவரானார். புனித சேவியரின் கையெழுத்திடப்பட்ட டயரியை நாங்கள் சிறிது காலம் பத்திரப்படுத்தி வைத்திருந்தோம். அதே டயரியில் மற்றொரு சமயம், டாக்டரின் கையொப்பத்தையும் நாங்கள் பெற்றிருந்தோம். அது ஒரு சுவையான சம்பவம்.

ஒரு நாள், நாங்கள் உண்மையை அறிவது எப்போது என்று கூறுமாறு, டாக்டரை, நானும் என் நண்பனும் விளையாட்டுத் தனமாக நச்சரித்துக் கொண்டிருந்தோம். 'அன்றைய தினமே?' 'ஒரு வாரத்தில்?', 'ஒரு மாதத்தில்?' அல்லது ஒரு வேளை 'ஒரு வருடத்தில்?'..... நாங்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைத்த விதத்தைக் கண்டு டாக்டர் ஒரு செல்லமான தந்தையைப் போல் சிரித்துக் கொண்டிருந்தார். நாங்கள் அடங்காத விளையாட்டுப் பிள்ளைகளானோம். எம்மை நாங்கள் அறிந்து கொள்ளப் போகும் தேதியை,

ஒரு தாளில் குறித்துக் கையொப்பம் இட்டுத் தருமாறு டாக்டரை வற்புறுத்தினோம். என் நண்பன், உடன் ஒரு டயரியை எடுத்து ஒரு பக்கத்தைத் திறந்து டாக்டர் முன் வைத்தான்.

"இன்றிலிருந்து ஒரு வருடம் டாக்டர்!" உணர்ச்சி வசப்பட்டுக் கேட்டதில் என் ஸ்ருதி சற்று ஏறியது. "இன்று என்ன தேதி?"என்று டாக்டர், அதே விளையாட்டுத் தொனியில் கேட்க, நாங்கள் தேதியைச் சொன்னோம். டாக்டர் அன்றைய தேதியையும் மாதத்தையும் குறிப்பிட்டு வருடத்தை மட்டும் அடுத்ததாக மாற்றி எழுதிக் கையொப்பமிட்டார். அந்தக் கையெழுத்தைப் பார்த்து, அதற்கும் அவர் பெயருக்கும் எந்த சம்பந்தமுமில்லையே என்று வியந்தேன்.

"நீங்களே ஒப்புக் கொண்டு விட்டீர்கள்" என்று நாங்கள் சிரிக்க, என் நண்பன் அந்த டயரியைத் தன் இரும்பு அலமாரியில் வைத்துப் பூட்டினான். வாரங்களும், மாதங்களும் ஓட, கிட்டத் தட்ட ஒரு வருடமோ, அல்லது அதற்குச் சற்றுமேலோ கூட ஆகியிருக்கலாம். அப்போது டாக்டர் கையெழுத்துப் போட்டுத் தந்த நிகழ்ச்சி எங்கள் நினைவுக்கு வந்தது.

"டாக்டர், நீங்கள் கையெழுத்துப் போட்டுத் தந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகியிருக்க வேண்டும்" என்று நான் கூற, என் நண்பன் அந்த டயரியை எடுப்பதற்காக எழுந்தான். டாக்டர் புன்னகைத்தவாரே கண்களை மூடிக் கொண்டார். என் நண்பன் பீரோவைத் திறந்தான். டயரி அவனுக்குக் கிடைக்கவில்லை. இன்னொருவரை விட்டுத் தேடச் சொன்னான். அவராலும் அதைக் கண்டெடுக்க இயலவில்லை. நான் டாக்டரைப் பார்த்தேன். அவர் புன்னகையும் மாறவில்லை, கண்களும் திறக்கவில்லை. அந்த டயரி மாயமாக மறைந்து போயிருந்தது. "இந்தத் தேதிக்குள் உண்மை தெரியும் என்றீர்களே?" என்று டாக்டரை மடக்க நினைத்த நாங்கள்

சாட்சியம் தொலைந்ததால் ஏமாற்றமடைந்தோம். “எந்த சாட்சியத்தையும் விட்டுவைக்க மாட்டேன்" என்று டாக்டர் அடிக்கடி சொல்வார் என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

உண்மையை அறிவதற்கு பேரம் செய்ய முடியாது என்பதை நான் புரிந்து கொள்ள எனக்கு வெகுகாலமாயிற்று. கோரிக்கைகளும், விருப்பங்களும் அகங்காரத்தை பலப்படுத்தவே செய்யும். அது உண்மையை அறிய விழையும் கோரிக்கையானாலும் சரி, அல்லது அதனோடு ஒன்றிக் கலந்துவிடும் விருப்பமாயினும் சரி. ஆயினும், அவையே அந்த அகங்காரத்தின் இறுதிக் கோரிக்கையாகவும், விருப்பமாகவும் இருக்கும். ஏனெனில், அதன் பின் அந்தக் கோரிக்கையும் அடங்கி அகங்காரம், பணிவிலும், முழுச்சரணாகதியிலும் அமைந்து விடும். எல்லாம் செலவழிந்த களைப்பில், அகங்காரம், சமநிலையில் ஒடுங்கும். அந்த அடக்கத்தில் ஆத்மாவின் பிரகாசம் முழுமையாவும் தெளிவாகவும் வெளிப்படும்.

டாக்டர் தம் சீடர்களை அவரவர் வாசனைகளுக்கேற்பவும் மனோபாவங்களுக் கேற்பவும் விருப்பங்களுக்கேற்பவும், இம்மாய உலகில் இங்குமங்கும் கொஞ்சகாலம் ஓட விடுவார். இப்படியாக அவர்கள் அல்லாடித் தங்கள் வாசனைகளும், விருப்பங்களும் செலவழிந்து போன நிலையில், தடுமாற்றமற்ற ஒரு நடுநிலையை அவர்களாகவே எய்துவார்கள். இனிமேல் மாயையின் பளபளப்பும் அது விடுக்கும் அழைப்பும் அவர்களை மயக்காது.

ஆனால் அவர், இந்தச் ‘செலவு ஒழிந்த நிலையில்’ நிலைத்தே இருக்கவும் விடமாட்டார். ஒரு சிறிய இனிய ஓய்வுக்குப் பிறகு, அத்தகைய சீடர்களை மறுபடியும் சுறுசுறுப்பான வெளிவாழ்க்கையில் ஈடுபடுத்துவார். இப்போது மீண்டும் அவர்கள் செயலாற்றக் கற்றாக வேண்டும்.

ஆனால் இப்போது அவர்கள் சொந்த விருப்பத்தினால் அல்லாமல், அவசியம் மட்டுமே கருதிச் செயல்பட வேண்டும். தன் கடமையை நிறைவேற்றுவதற்காக மட்டுமே செயல்புரிந்து பின் மீள வேண்டும். செயலைக் கடந்த காலத்துக்கோ, எதிர்காலத்துக்கோ சம்பந்தப்படுத்தாமல், நிகழ்காலத் தேவைகளுக்கேற்பச் செய்ய வேண்டும். ஒரு பார்வையாளனைப் போல் தன்னைத் தானே எப்போதும் கவனித்தபடி செயலாற்ற வேண்டும். நாங்கள் சோதனைகளையும் துன்பங்களையும் சந்திக்கும் போதெல்லாம், 'சாட்சியாயிருங்கள்' என்று டாக்டர் கூறுவார்.

**அற்புதங்கள் :**

ஆரம்ப நாட்களில் டாக்டருடன் இருக்கும் பேறு பெற்ற எங்களில் சிலர், அவருடன் இருக்கையில், அவ்வப்போது திடீரென்று எங்களைச் சூழ்ந்துகொள்ளும் நறுமணத்தை மறக்க இயலாது. டாக்டரைக் குறித்த பிறவற்றைப் போலவே, இந்த நறுமணத்தையும் விவரிக்க இயலாது. இந்த மணம், எனக்குத் தெரிந்த எந்தப் பூவுடையதும் இல்லை. இப் பூவுலகின் எந்த மணமும் அதற்கு ஈடாகாது.

டாக்டர் அற்புதங்களை, வெகு அபூர்வமாகத்தான் வெளிப்படையாக நிகழ்த்தியிருக்கிறார். ஒரு நாள், என்னை ஒரு தம்ளரில் நீர் எடுத்துவரச் செய்து, தம்ளரைக் கையால் மூடியபடி எங்களுடன் பேசிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து, டாக்டர் தம்ளரை என்னிடம் தந்து அதனுள் இளம்பச்சை நிறத்தில், முட்டை வடிவில் இருந்த கல்லை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார்.

அதற்கு முன் தம்ளரில் அந்தக் கல் இல்லை. நான் ஆச்சரியமுற்றேன். கல்லை வெளியில் எடுத்தேன். அக்கல் விதையற்ற ஒரு பெரிய திராட்சை போல் காட்சியளித்தது. அதனுள் தேன் நிற வரிகள் ஓடியிருக்கக் கண்டேன்.

“இது என்ன டாக்டர்?” என்றேன்.

“வைத்துக் கொள்ளுங்கள்" என்றார். அதன்பிறகு நான் அவரைச் சந்தித்த போதெல்லாம் அதை அவரிடம் தந்து, சிறிதுநேரம் கழித்துத் திரும்பப் பெற்றுக் கொள்வேன். அதை அவர் திரும்பத் தருகையில் அக்கல் சூடாக இருக்கும். “ஏன் இவ்வளவு சூடாக இருக்கிறது டாக்டர்?” என்று ஒருமுறை கேட்டபோது, “பிராணசக்தி செலுத்தப்படும் போது சூடாகி விடுகிறது" என்றார். அக்கல்லை நான் என் கையில் சிறிதுநேரம் வைத்திருந்து, அதற்குள் செலுத்தப்பட்ட பிராணசக்தியை நான் கிரஹித்துக் கொள்வதாகக் கற்பனை செய்வேன்.

" நான் எதை வேண்டினாலும், இந்தக்கல் எனக்குத் தருமா டாக்டர்?” என்றேன்.

டாக்டர் புன்னகைத்தவாறே, “கேட்டுப்பாருங்கள்" என்றார்.

“பேதைப்பெண்ணே, நீ அந்தக் கல்லிடம் எதைக் கேட்டாலும், நான் தானே அதைக் கொடுக்கப் போகிறேன்" என்று அப்போது நினைத்திருப்பார் போலும்.

அன்றொரு நாள் மாலை டாக்டர் எங்களைச் சந்திப்பதாக இருந்தது. நானும் என் நண்பனும் டாக்டருக்காகக் காத்துக் கொண்டிருக்கையில் எங்கள் பேச்சு, டாக்டர் சிறிது காலமாகச் செய்துவந்த அற்புதங்களைப் பற்றியதாயிருந்தது. அதற்கு முந்தைய நாள் தான்,

.

டாக்டர் ஒரு சீடருக்குத் தர வேண்டி, ஒரு தடிமனான துளசி மாலையை வரவழைத்துத் தந்திருந்தார். அதை எண்ணியபடி, “ஏனோ, நான் இந்த சித்து வேலைகளை விரும்புவதில்லை" என்றேன். ஏன் என்று அவன் வினவ, “நமக்குத் தருவதற்காக அவர் இவற்றை வரவழைத்துத்தான் தரவேண்டுமா? இப்படி விநோதமாக இவற்றைச் செய்வதை அவர் நிறுத்த வேண்டும் என நான் நினைக்கிறேன். அவர் என் எண்ணங்களை அப்படியே அறிந்து கொள்ளக் கூடியவரல்லவா? இந்த எண்ணத்தையும் அவர் அறியட்டும். அவர் இப்படியெல்லாம் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. இனிமேல் இதையெல்லாம் செய்யாமலிருக்கட்டுமே" என்றேன்.

டாக்டர் அன்று எங்களைச் சந்திக்க வரவில்லை. மறுநாள் வந்தார்.

“நீங்கள் ஏன் நேற்றுமாலை வரவில்லை?” என்று வினவினேன்.

“நான் சும்மாத்தான் இருந்தேன். ஆனால் வரவேண்டாம் என்று முடிவு செய்தேன்" என்றார்.

“ஏன் டாக்டர்?”

“இங்கே சூழ்நிலை சரியில்லை" என்றவாறே என்னை நேராக ஒருகணம் உற்று நோக்கினார். ஈட்டி போன்ற அந்த ஒரு பார்வையிலேயே, முதல்நாள் நான் பேசியது, என் வளர்ச்சிக்கு மீறிய அதிகப் பிரசங்கம் என்று சுட்டிக்காட்டினார். அது என் நாவை அடக்கியது. அவரது சித்து விளையாடல்களும் தொடர்ந்தன.

மாயையானது, உண்மையைக் காண விடாமல் மறைக்கும் திரை. தெளிவு பெற்றோரின் முயற்சியால் மாயை எனும் திரை, இங்கும் அங்கும் கிழியும்போது, உண்மையின் ஒளி ......

அக்கிழிசல்களின் ஊடே இங்கும் அங்குமாக மின்னுகிறது. இப்படித் திரைகிழியும் போது, புதுமையும், நிர்வாகத்திறனும் மிக்க மாயை, தன் இழைகளால், எண்ணிறந்த வண்ணங்களில் அந்தக் கிழிசலைச் சுற்றிலும் அதன் வடிவுக்குத் தகுந்த வகையில் மிக நேர்த்தியான, கண்ணைக் கவரும் வேலைப்பாடுகளை உடனுக்குடன் நெய்து அது கிழிசல் என்றே தெரியாமல் செய்துவிடுகிறது. அந்தக் கிழிசலே அழகிய வேலைப்பாடாகி, வெளியான உண்மை ஒளி, அந்தத்திரையின் ஒரு பகுதியே போல் தோன்றத் தொடங்குகிறது. மாயையிலிருந்து வேறுபட்ட உண்மையின் பரிமாணம் மறைக்கப்பட்டு, உண்மையும் மாயையும் வேறில்லை போலொரு தோற்றம் தரப்பட்டு விடுகிறது. இங்கும் அங்குமாக மின்னும் ஒளி, திரைக்கே அலங்காரமாகி விடுகிறது.

உண்மை தனிப்பட்டது. மாயையின் திரை ஒவ்வொரு முறை கிழிக்கப்படும் போதும் அந்தத் தனியொரு உண்மையே அக்கிழிசலின் வழியாக ஒளிர்கிறது. ஆயினும், ஒவ்வொரு முறையும் மாயை வெவ்வேறு வகைகளில் வெவ்வேறு வண்ணக் கோலங்களால் கிழிசல்களைச் சுற்றிச்சுற்றிக் கரைநெய்கிறது. அதனால் கிழிசலின் ஒளிமையம் முக்கியமற்றும், முதல் நோக்கில் புலப்படாதபடி, ஒரு பொருட்டில்லாமலும் போகிறது. ஆன்மாவைச் சிறைப்படுத்தியிருக்கும் தெளிவில்லாத அகமானது, இத்தகைய வண்ணக் கோலங்களாலேயே ஈர்க்கப்படுகிறது. இவ்வாறாக, மாயை தன்மேல், மேலும் மேலும் வண்ணப் பொய்களை நெய்து, தன் வலையில் சிக்கியவர்களுக்குத் தீராத பொழுது போக்கைத் தந்தபடி அரசாட்சி செய்கிறது. உண்மையைச் சுற்றி ஒரு மதத்தை நெய்து, மதங்களுக்கிடையில் வேறுபாடுகளை நெய்து, அந்த வேறுபாடுகளைப் பளிச்சிடும் வண்ணங்கள் கொண்டு, எடுத்துக் காட்டவும் செய்கிறது. பாவம்

மனிதன்! இந்த வண்ணக் கலவையிலிருந்து தன் கண்ணை எடுக்க முடியாமல் மாட்டிக்கொள்கிறான். மீண்டும் அவன் ஒளியை தரிசிக்க வேண்டுமானால், வேறொரு முறை திரை கிழிக்கப்பட்டு, மாயை அதைச் சுற்றி கோலம் நெய்வதற்கு முன்னர்தான் அது சாத்தியம்.

மாயை இலக்கணத்தில்தான் பெருக்கம் கொள்கிறது. ஆனால், உண்மையோ, இலக்கணத்தை உருவாக்கவும், உடைக்கவும் வல்லது. ஒவ்வொரு முறை இலக்கணம் உருவாகும் போதும் , உடைபடும் போதும், மாயை பிறக்கவும், அற்றுப் போகவும் செய்கிறது. யாவற்றையும் போல, மாயையும் கூட உண்மையின் தோன்றலே. யாவற்றையும் போலவே மாயையும் உண்மையில்தான் கரைந்து போகிறது.

குரு உண்மையேதான். அதனால் தான், அவரால் மாயையை உருவாக்கவும், அற்று வீழச் செய்யவும் இயலும். மாயை தோற்றுவிக்கும் இலக்கணத்தின் நடுவிலும் அவர் தன்னிச்சையாகவே இயங்குகிறார். மாயை தோற்றுவித்த இலக்கணத்தின் அமைப்புக்குள் அவர் வேறோர் இலக்கணத்தை உருவாக்கி, அதன் மூலம் மாயையின் இயக்கத்தையே குழப்பி, மாயையின் நம்பகத்தன்மையை முறியடிக்கிறார். குருவின் இத்தகைய செயல்களை அற்புதங்கள் என்று அழைக்கிறோம். அற்புதங்களை டாக்டர் இரண்டு வகைகளில் நிகழ்த்துவதை நான் கண்டிருக்கிறேன். சில நேரங்களில் பிறர் அறியா வண்ணம், சிலநேரங்களில், வெளிப்படையாக. யாரும் அறியாவண்னம் அவர் செய்த அற்புதங்கள், சிலரைத் தாங்கமுடியாத நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்காக. அவர் வெளிப்படையாகச்

செய்த அற்புதங்கள் இயற்கையின் சட்ட திட்டங்களைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது இறையருள் என்று நிரூபிப்பதற்காக.

என்னைப் பொருத்தவரை அவருடைய பிறசெயல்களைக் காட்டிலும் மிக அற்புதமானது அவரது பொறுமையே. அவர் சந்திக்க நேர்ந்த மிகக்கடுமையான சோதனைகளின் போதும் தம் அட்டியில்லாத ஆற்றலை வெளிக் காட்டிக் கொள்ளாத அந்த நேர்த்தியை என்னென்பது? ஒரே பார்வையில் மனிதரின் மனநிலையை மாற்றக் கூடியவர்; கேட்ட மாத்திரத்தில் மழையைக்கூட பெய்விப்பார். பஞ்ச பூதங்களையும் தேவைக்கு மிகாமல் திறமையாக இயக்கி, பாரபட்சமின்றி, எதற்கும் பயப்படாமல், ஆண்,பெண் என்ற வேறுபாடு இல்லாமல்,அவரவர் தேவையை, அவரவர் தகுதிக்கு ஏற்றபடி பூர்த்தி செய்வார். டாக்டர் என்ற குரு பிரமிப்பை ஏற்படுத்துகிறார். டாக்டர் என்ற மனிதரோ ஆராத அன்புக்குரியவர்.

**மனமெனும் ஏணி :**

கர்நாடக மாநிலத்தில் கோலார் மாவட்டத்திலுள்ள குறடுமலை என்ற சிறிய கிராமத்துக்கு எங்களை டாக்டர் அழைத்துச் சென்றார். ஸ்ரீராம பிரானின் குழந்தைகளான லவ-குசர்களின் பெயருடைய இரு குன்றுகளுக்கருகில் அந்தக் கிராமம் அமைந்துள்ளது. முன்னர் வால்மீகி மகரிஷியின் ஆஸ்ரமம் அமைந்திருந்த இடம் அது என்றும் நம்பப்படுகிறது. குறடுமலை செல்லும் வழியில் முருகப் பெருமானின் பக்தர் ஒருவரையும், ஹிந்துமத ஸ்தாபனத்தின் தலைமை மடாதிபதி ஒருவரையும் என இரண்டு ஆன்மிகவாதிகளைச் சந்தித்தோம். மரியாதை நிமித்தம் அவர்கள் முன்பு நாங்கள் கிடந்து வணங்க, டாக்டர் இருகை கூப்பி மரியாதை செலுத்தினார். இவரைப்போல் இருக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். ஒரு குறிக்கோளுடன், சுலபமாக வழக்கங்களை மீறும் அவருடைய சுபாவம் என்னை ஈர்த்தது.

குறுடுமலை வெகுசிறிய கிராமம். மலையடிவாரத்தில் மிகத்தொன்மையான விநாயகர் கோயில் ஒன்று அமைந்துள்ளது. அகஸ்திய முனியால் நிறுவப்பட்டது என்று கூறப்படும், ஒரே சாளக்கிராமக் கல்லிலான மிகப் பெரிய விநாயகர் சிலை அக்கோயிலின் கர்ப்பக்கிரஹத்தை அலங்கரிக்கிறது. அர்ச்சகரோடு நாங்கள் ஐவராகக் கோயிலுக்குள் சென்றோம். கர்ப்பக்கிரஹத்திலும் அதைச் சுற்றியும் ஆழ்ந்த அமைதி நிலவியது. அந்த அமைதியில் ஒரு தொன்மையை நான் உணர்ந்தேன். யுகயுகமாக அந்த அமைதியை யாரும் குலைக்கவில்லை போலும். ஒரு பிடிவாதமான மேகம் போல் அமைதி அந்த இடத்தில் கவிந்திருந்தது. உருவ வழிபாட்டை நான் பழக்கிக் கொள்ளவில்லையாதலால், அந்த விக்ரஹத்தின் பிரம்மாண்டத்தில் சிறிதாகிப் போன நான் செய்வதறியாது நின்றேன். “சிறிதுநேரம் தியானம் செய்யலாம்" என்றார் டாக்டர். திரும்ப வருவதாகக் கூறி அர்ச்சகர் எங்களை அங்கேயே விட்டு வெளியே சென்றார். டாக்டர் என்னை தியானம் செய்யச் சொல்ல, ’இந்த விக்கிரஹத்தின் முன் நான் ஏன் தியானம் செய்யவேண்டும்?’ என்று வியந்தேன். உடனே, ‘இல்லையில்லை, இது சரிப்படாது! டாக்டர் சொன்னதைச் செய்' என்று எனக்கு நானே கட்டளையிட்டுக் கொண்டேன். கண்களை இறுக மூடிக்கொண்டு, டாக்டர் சொல்லித் தந்திருந்த 'சுடர் தியானத்தை' வேகமாகச் செய்து முடித்தேன். ‘அடுத்தது என்ன?’ என்றெண்ணியவாறு கண்களைச் சிறிது திறந்து மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தேன். அவர்கள் இன்னமும் தியானத்தில் இருந்தார்கள். டாக்டர் ஆழ்ந்த கருமை நிறத்தினராய் அமைதியே உருவாக தியானத்தில் வீற்றிருந்தார். நான் மீண்டும் கண்களை மூடிக் கொண்டேன்.

'பிரார்த்திக்கட்டுமா?’ என்று நினைத்தேன். ஓர் உறவினரின் நலம் குறித்து வேண்டிக் கொண்டேன்.

பின்னர், டாக்டர் தம் சொந்த ஊரான கோலாரில் உள்ள ஒரு கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அது, சிவபெருமானின் கோவில். அதற்கருகே ஓரிடத்தில் நிறுவப்பட்டிருந்த மஹாவிஷ்ணுவின் மார்பளவுச் சிலை ஒன்றையும் காண்பித்தார். தாம் கண்ட ஒரு கனவின் விளைவாக அதே இடத்திலிருந்து அந்தச் சிலையைக் கண்டெடுத்ததாகக் கூறினார். அதை அங்கு நிறுவ ஏற்பாடு செய்ததாகவும் சொன்னார்.

அன்றிரவே நாங்கள் சென்னை திரும்பினோம். எனக்கு வீடு வந்து சேர்ந்தது ஒருவிதத்தில் 'அப்பாடா' என்றிருந்தது. 'அதிகம் அறிமுகமில்லாத மனிதர்களுடன் வீட்டை விட்டு வெளியே சென்றது சரியில்லையோ' என்ற எண்ணம் என்னை ஒரு மூலையில் அரித்துக் கொண்டிருந்தது.

மனம் ஓர் ஏணி. அதன் உதவி கொண்டு ஏறி உயரே செல்லலாம். இறங்கிக் கீழே செல்லலாம். இந்த மனம் தான், முன்னொரு முறை அமைதியின்மையின் விளிம்பிற்கு என்னை விரட்டிச் சென்று குருவின் அருளுக்காக என்னை ஏங்க வைத்தது. அதே மனம் தான் 'அவ்வளவாகப் பழக்கமில்லாதவர்களுடன் வெளியே சென்றது தவறு' என்று இப்போது இடித்துரைத்தது. என்னையறியாமல் ஏணியில் கீழே இறங்கி விட்டேன். கீழ் இறங்கியதால் என் பார்வையும் குறுகிவிட்டது. என் சமூகத்தின் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து பழகிவிட்ட என்னை, அறிவாற்றலின் மேல்படிகளுக்குப் போக விடாமல், அந்தப் பழைய கோட்பாடுகள் கட்டிப் போட முயன்றன. மேலே மேலே ஏறிச் செல்ல நான் ஒரு பக்கம் விழைந்தாலும், யாருக்கெல்லாம் நான் இதுகாறும் இருந்த நிலையில் என் உறவு முக்கியமாக இருந்ததோ, அவர்களுடைய வாழ்வில் என் மாற்றம் உண்டாக்கக் கூடிய வெறுமையை எண்ணி அயர்ந்தேன்.

ஒரு பக்கம் வாழ்க்கையே சலிப்பாகவும், அதன் விளைவுகள் ஸ்வாரஸ்யமற்றும் இருந்தாலும், மறு பக்கம் யாருக்கு நான் முக்கியமாக இருந்தேனோ அவர்களைக் காயப்படுத்த விரும்பவில்லை.

'அவர்களும் என் கூட வருவார்களா?' என நினைத்தேன். படிப்படியாக அனைவரும் மேலே ஏறிச் சென்று, தொடுவானம் விரிவடைவதை அனுபவிக்கலாம். ஆனால் அது அப்படி இருப்பதற்கில்லை. இறைவன் வெவ்வேறு தன்மைகளும், வெவ்வேறு விருப்பங்களும், வெவ்வேறு ஆர்வங்களும் உள்ளவர்களை ஒன்றாகச் சேர்க்கிறான். அறிந்தவற்றைத் துறந்து, அறியாததைக் காணும் பொருட்டு அடியெடுத்து வைக்க எல்லாரும் சம்மதிப்பதில்லை. ஒருவர் பொன்னை நினைப்பார். மற்றவர் இவ்வுலகின் சுகபோகங்ளையும், அதன் ரம்மியத்தையும் விரும்புவார். மூன்றாமவர் நம் விருப்பங்கள் செலவழிந்து போனதை உணராமல் தம்மை எது கவர்ந்ததோ, அதில் கருத்தைச் செலுத்துமாறு நம்மையும் கீழே இழுப்பார். கருத்தை அதில் செலுத்துவது போலக் கொஞ்சநேரம் வேண்டுமானால் நடிக்கலாம். தொடர்ந்து நடிக்க முயற்சி தேவை. அந்த நிலையில் நான் அப்போது இல்லை. நீரில் மூழ்கும் தறுவாயில் காற்றுக்காகத் திணறுவதைப் போல் நான் திணறிக் கொண்டிருந்தேன். நான் இருக்க வேண்டுமென்றால் மேலே செல்லவேண்டும்.

மனத்தின் படிகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தேனில்லையா? ஒரு படி என் தனிப்பட்ட நியாய விதிகளுடன் பொருந்தியதாக இருந்தது. அடுத்த படியோ என் தனிப்பட்ட நியாயவிதிகளுக்கு மாறாக இருப்பினும், டாக்டரின் நிர்ணயத்திற்கு ஒப்ப நடப்பதாக இருந்தது.

முதலில் கூறிய நிலையிலிருந்து இந்த அடுத்த நிலைக்கு உயர, என் மனத்தை மாற்றிச் சரிசெய்து கொள்ள வேண்டியிருந்தது. அது ஒரு நாளில் நிகழவில்லை. டாக்டர் அழைத்துச் சென்றதால், நான் டாக்டருடனும், என் நண்பர்களுடனும் குறடுமலைக்குச் சென்றேன். அங்கே சென்ற பிறகு, என் பழைய வழக்கப்படி, 'நான் சென்றது சரியில்லையோ' என்று என் பழைய நியாய விதிகளில் சிக்கிக் கொண்டு தடுமாறினேன். டாக்டர் அழைத்ததும் சென்றது உண்மையை மட்டுமே நாடிய எனக்குள்ளிருந்த மாணவியின் வெளிப்பாடு. பிறகு, 'செய்தது சரிதானா?' என்று உள்ளே வாதம் செய்து கொண்டிருந்தது, என்னுள் அப்படியே சிந்தித்துப் பழகிப் போயிருந்த சமூக விலங்கின் வெளிப்பாடு. அன்று முழுவதுமே இந்த இரு மனநிலைகளும் மாறி மாறி என்னை ஆட்கொண்டதால் நான் அமைதியிழந்து இருந்தேன்.

விடுமுறை நாளன்று வீடு தங்கவில்லையே என்ற குற்ற உணர்வுடன் நான் வீடு திரும்பினேன். மனத்தளவிலும், உடலளவிலும் நான் மிகவும் சோர்வுற்றிருந்ததால் வழக்கத்தைவிட முன்பாகவே தூங்கச் சென்றேன்.

மறுநாள் நான் டாக்டரைச் சந்தித்தபோது, முன் தினம் அவர் எனக்கு தீட்சை தரத் திட்டமிட்டிருந்ததாகவும், பிறகு மனம் மாறியதாகவும் பேச்சுவாக்கில் குறிப்பிட்டார். உண்மைதான். நான்தான் அதை ஏற்கும் நிலையில் இல்லாது குழம்பிப் போயிருந்தேனே என்று நினைத்துக் கொண்டேன். என் குருவை நான் காணும்வரை எனக்கிருந்த சொற்ப அனுபவங்களின் அடிப்படையில் எனக்கு நானே வகுத்துக் கொண்டிருந்த 'நடத்தை விதிகளை' நான் பின்பற்றி வந்தேன். இந்த நடத்தை விதிகளுக்கு நான் கற்பித்துக் கொண்டிருந்த அதிதேவதையை மனசாட்சியென்று அழைத்தேன்.

இந்த விதிகளிலிருந்து நான் பிறழ்கையில் மனசாட்சி என்னை இடித்துரைக்கும். நான் விடுதலைக்காக அவஸ்தை பட்டபோது, என்னுடைய இதே 'நடத்தை விதி' தான், 'குருவைப் பெற வேண்டி இதயம் கசியக் கதறினால் அவர் வருவார்' என்று கூறியது. அவர் வந்தார். அவர் வந்த பின்னர் என் பழைய நடத்தை விதிகளிலிருந்தும் அவற்றுக்குச் சாட்சியான மனத்திடமிருந்தும் என்னை விடுவித்துக் கொள்ள நான் கஷ்டப்பட வேண்டியிருந்தது; ஏனெனில், டாக்டர் எனக்கு நிர்ணயித்தவைகளும், என் பழைய கொள்கைகளும் சில நேரங்களில் முரண்பட்டன.

ஆழ்ந்த யோசனைக்கு பிறகு என் நடத்தைக் கோட்பாட்டில் மேலுமொரு விதியை அறிமுகப்படுத்தினேன். அந்த விதி, மற்ற எல்லாத் தீர்ப்புகளையும் மிஞ்சும் அதிகாரம் டாக்டருக்கு உண்டு என்பதை அங்கீரித்தது.

**உடல் கடந்த அனுபவங்கள்**:

டாக்டரைச் சந்திப்பதற்கு சிறிது காலம் முன்னர் என் கனவில் இருவர் தோன்றினர். ஒருவர் முதியவர்-மற்றவர் டாக்டராக இருந்திருக்கலாம். டாக்டர்தான் என்று ஆணித்தரமாகக் கூற இயலாது. ஏனெனில், அத்துணைத் தெளிவாக என்னால் அக்கனவை நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை. அவ்விருவரும் என்னை என் உடலிலிருந்து வெளிக்கொணர்ந்து தலைக்கு மேல் சில அடி உயரத்திலிருந்து கீழே கிடக்கும் என் உடலையும், படுத்திருந்த என் கணவரையும், குழந்தைகளையும் காணச் செய்தனர். சற்றே முயன்று, அவ்வறையின் கூரையை என்னால் எட்ட முடிந்தது. அதன்பிறகு என்ன நடந்தது என்பது என் நினைவில் இல்லை.

டாக்டரிடம் நான் வந்து ஒழுங்காக தியானம் செய்யத் தொடங்கியதிலிருந்து இத்தகைய உடல் கடந்த அனுபவங்கள் அடிக்கடி நேரிட்டன. என் கனவுகளில் நான் என் ஸ்தூல உடலிலிருந்து வெளிப்பட்டு, என் விருப்பப்படி பல இடங்களுக்குச் செல்ல முடிந்தது. சில சமயங்களில், ஆண்களும், பெண்களுமாய், அறிஞர் பலர் இறைவன் பெயரால் குழுமியிருக்க, அங்கே நானும் இருக்கக் கண்டேன். அந்த ஆடவரும், பெண்டிரும் கனவில் எனக்குப் பழக்கமானவர்களே. ஆயினும், நனவில் நான் அறிந்திராதவர்கள். பெரும்பாலான சமயங்களில் டாக்டரும் என்னுடன் இருந்தார்.

**தெய்வங்கள் உள்ளனரா?**

பள்ளிப் பருவத்தில் நான் நல்ல மதிப்பெண்களைப் பெற்று வந்தபோதிலும், என் முழு ஈடுபாட்டையும் நான் கல்வியில் செலுத்தினேனில்லை. ஆனால் என் ஆன்மிக முயற்சியில் நான் ஒரு முழுநேர மாணவியாகவே இருந்தேன். அதனால் வாழ்க்கை எனக்குத் தந்திருந்த வேறு சில வேலைகளையும் பொறுப்புகளையும் வளர்ந்த ஒரு நபரைப் போல் அல்லாமல் கல்வியிலேயே முழு நாட்டம் செலுத்திக் கொண்டிருந்த ஒரு மாணவியைப் போலத்தான் நிறைவேற்றி வந்தேன். சற்று நேரம் கிடைத்தாலும், வேறு எதையும் செய்ய நாட்டமின்றி, அமர்ந்து தியானம் செய்யவே விரும்பினேன். பொதுவாக மாலை வேளைகளில் எனக்கு வேலை இருந்தது. அப்படி வேலை இல்லாத மாலை வேளையில் இருட்டாகிக் கொண்டிருக்கும் வானத்தின் கீழமர்ந்து என்னுள்ளே பார்க்கத் தொடங்குவேன். முறைப்படி நான் தியானம் செய்யத் தொடங்கியதிலிருந்து, அமைதியிலும்,

பரவசத்திலுமாக நான் மாறிமாறி இருப்பதையும், இடையிடையே எந்தக் குணமுமற்ற பிரக்ஞையாக விளங்குவதையும் உணர்ந்தேன். சில நேரங்களில் கேள்விமேல் கேள்வி கேட்கும் சாதாரண மனமாகவும் இருந்தேன்.

ஒருநாள் மாலை, பொன்னிற மேற்கு, சாம்பல் பூத்துக் கொண்டிருந்தது. அந்தப் பொழுதும், நிறங்களின் ஜாலமும் என் சிந்தனையைத் தூண்டின. தெய்வங்களைப் பற்றி எண்ணத் தொடங்கினேன். 'தெய்வங்கள் உள்ளனரா?' முதலில் மென்மையாக வினவினேன்; மீண்டும் மீண்டும் கேட்டேன். பதில் தெரியாததால் படபடத்தேன். “தெய்வங்களே, நீங்கள் இருக்கிறீர்களா? ஆமென்றால், உங்களை எனக்குக் காட்டுங்கள். நான் இப்பொழுது உங்களுடன் பேசுவது, நீங்கள் நிச்சயம் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையோடு இல்லை. நிச்சயமற்ற நிலையில் தவித்தபடி பேசுகிறேன். நீங்கள் இருப்பது உண்மையானால், தங்கள் கதவுகளை மாற்றுக் குறையாத ஆர்வத்தோடு தட்டும் இந்த உண்மையான இதயத்துக்கு பதிலளிக்காமல் மௌனம் சாதிக்க உங்களால் முடியாது. காட்டுங்கள், உங்களை எனக்கு! இல்லா விட்டால், கவிஞரும், கனவுலகில் சஞ்சரிப்போரும் செய்த கற்பனையாக உங்களை நினைத்துக் கொள்வேன்.” கேள்வியின் வேகம் சிறிது நேரத்தில் அழுகையாக மாறியது. மாலை, அழுத்தமான இரவாக மாறும்வரை அப்படியே அமர்ந்து ஏனென்று தெரியாமல் அழுது கொண்டிருந்தேன். பதிலேதும் வரவில்லை.

அன்றிரவு, தூக்கத்திலிருந்து திடுமெனத் தெளிவாக விழித்துக் கொண்டேன். திரையரங்குபோல எனக்குள் இன்னொரு பரிமாணம் திறந்து கொண்டது. என் எதிரில் ஒரு பெண் தெய்வம் வேலைப்பாடுமிக்க பொன் இருக்கையில் அமர்ந்திருந்தாள்.

அவளுடைய கண்களின் கருமையில் கருணை ஜ்வலித்தது. என்னை நன்றாக அறிந்தவளாய் என்னைப் பார்த்து முறுவலித்தாள். அந்த அற்புதப் பேரொளியை தரிசித்த பேரானந்தத்தில், நான் ஒரே நேரத்தில் அழவும், சிரிக்கவும் செய்தேன். செக்கர் ஆடையுடனும், பூணத்தக்க ஆபரணங்களோடும் துலங்கினாள். அவள் நெற்றிப்பொட்டில் ஒளி தெறித்தது. சுமார் ஐந்து நொடிகளில் இந்தக் காட்சி மாறியது. அடுத்து ஒரு ரதம் அகன்ற அரை வட்டமாகச் சுற்றி என்னை நோக்கி வெகு வேகமாக வந்தது. அந்த ரதத்தில் ஐந்து வெண்குதிரைகள் பூட்டப் பட்டிருந்தன. கடவுளுக்கே உரித்தான கம்பீரம் கொண்ட உருவம் ஒன்று அந்த ரதத்தைச் செலுத்தி வந்தது. இந்தக் காட்சியும் சில நொடிகளே நீடித்தது. பின்னர் மீண்டும் உறங்கிவிட்டேன் என்று நினைக்கிறேன்.

மறுநாள் காலை இந்த அனுபவத்தை விரிவாக நினைவு கூர்ந்தேன். அந்தப் பெண், தெய்வம் என்று தெரிந்தது. ஆனால் யாரென்று தெரியவில்லை. அவள் எந்த ஒரு குறிப்பிட்ட அடையாளத்தாலும் அலங்கரிக்கப்படாததால், என்னால் அவளை, இன்னார் என்று அனுமானிக்க முடியவில்லை. ஆனால், ரதத்தைச் செலுத்தி வந்தவன் கண்ணபெருமான் என்றே நம்பினேன்.

அவர்கள் எனக்கு பதிலளித்து விட்டார்கள். என் புறங்கையைப் பார்ப்பது போல், நான் அவர்களைப் பார்த்து விட்டேன். இதையும் நான் சந்தேகிப்பேனாயின் வேறெதையும் நம்ப முடியாது.

**பயம் ஒரு தடை:**

ஆன்மிக நாட்டமுடையவர் என்று நான் கருதிய நபர்களையெல்லாம் டாக்டரிடம் அழைத்துச் செல்வது இப்போது கிட்டத்தட்ட என் இயல்பாகிவிட்டது. எனக்குத் தெரிந்தவர்களில் இருவர் பராசக்தி பக்தர்கள். அதில் ஒருவர் கவிஞர். இருவரும் திடீரென எனக்கு நெருங்கிய நண்பர்களானார்கள். அவர்கள் நெற்றியில் திலகமும், விழிகளில் கனலுமே, டாக்டரிடம் அவர்களைப்பற்றிப் பேசப் போதுமானதாயின. விரைவில், ஒரு தக்க சமயத்தில் அவர்களை டாக்டருக்கு அறிமுகப் படுத்தினேன். அவர்களில் ஒருவர், எடுத்த எடுப்பில் ஈடுபாடு கொள்ளாததால் ஊர் திரும்பினார். தன் நண்பன் ஆமோதிக்காததால் மற்றவரும்

முதலில் டாக்டரை ஏற்று கொள்ளவில்லை. ஆனால், சில நாட்களில், என்ன ரஸவாதமோ, அவர்கள் டாக்டரிடம் வந்தார்கள்.

அவர்களில் ஒருவர் (அவரை இனி 'B' என்று அழைப்போம்) டாக்டரைச் சந்திக்கும் போதெல்லாம் ஒன்றையேதான் திரும்பத் திரும்பச் சொல்வார்: "டாக்டர், நான் பராசக்தியைப் பார்க்கணும்". மணிக் கணக்கில் டாக்டருடன் இருப்பார். அவரையே பார்த்துக் கொண்டிருப்பார். ஆனால் பேச மாட்டார். புறப்படும் முன் தன் கோரிக்கையைச் சொல்வார், "டாக்டர், பராசக்தியைப் பார்க்கணும்". எனக்குத் தெரிந்து பலமுறை இதுபோல் நடந்திருக்கிறது. இதைக் கேட்டதும், டாக்டர், இரவைப் போல் கருமையும் மௌனமும் கொண்டவராவார். என் நண்பரின் வேண்டுகோளும் அதன் குறியீடுகளும் எனக்கு அப்பாற்பட்டவையாக இருந்தன.

ஒருநாள் காலை எட்டு மணி அளவில் இந்த நண்பர் என் வீட்டுக்கு வந்தார்.

அவர் எப்போதுமே சற்று விரைப்பாகக் காணப்படுவாராதலால் அவர் அன்று ஏதோ ஒரு தீவிரத்துடன் இருந்ததை நான் கவனிக்கவில்லை. என் அலுவல்களை நான் முடிக்கும்வரை காத்திருந்த அவர், பிறகு என்னைத் தனியே அழைத்து, "நான் உன்னை எச்சரிக்கவே வந்தேன்; டாக்டரிடம் நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்றார். “ஏன்?” என்று ஒன்றும் புரியாமல் கேட்டேன்.

டாக்டர் தன்னை, முன்தினம், திருவொற்றியூர் கடற்கரையில் அமைந்திருந்த ஒரு சிறிய கோயிலுக்கு அழைத்துச் சென்றதாகக் கூறினார். அக்கோயிலில் பராசக்தி சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. மது அருந்தியதால் போதையும், கசங்கிய அழுக்கு ஆடையுமாக அக்கோயிலில் ஒருவன் அமர்ந்திருந்தான். தன்னை அவன் டாக்டரின் சீடன் என்று கூறிக் கொண்டானாம். டாக்டரை நன்கு அறிந்தவன் போலவும் தோன்றினான். டாக்டர், அந்த விக்கிரகத்தை சரியாகப் பராமரிக்காததற்காக அவனைக் கடிந்து கொண்டார். சிறிது எண்ணெய் கொணருமாறு உத்தரவிட்டார். பின்னர் டாக்டர், அச்சிலையைச் சுத்தம் செய்து, என் நண்பர் 'B' யைச் சிலையின் முன் அமருமாறு கூறினார். சிலையின் கண்களைக் கொஞ்சம் நீர் எடுத்துத் துடைத்துவிட்டு, எதிரே தலை குனிந்து அமர்ந்திருந்த என் நண்பரிடம், “பார்க்கணும்னியேப்பா! நிமிர்ந்து பாரப்பா பராசக்தியை!” என்றார். அந்தக்கணம், தம் வாழ்க்கையிலேயே அதுவரை சந்தித்திராத ஒரு பயத்தை முதன் முறையாகத் தாம் உணர்ந்ததாக என் நண்பர் விவரித்தார். அமர்ந்திருந்த நிலமே சுழன்று விழுவதுபோல் தோன்றத் தாம் அதுவரை அறிந்திராத ஒரு புதிய

பரிமாணத்திற்குள் இழுக்கப்படுவதை உணர்ந்தார். பயம் அவரை முழுமையாக ஆட்கொண்டது. "நிமிர்ந்து பாருப்பா-நான் இருக்கேம்பா!" என்று மென்மையாக டாக்டர் வற்புறுத்தியும் கூட, அவரால் நிமிர முடியவில்லை. எப்படியாவது அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்ற உணர்வே மேலோங்கியது. பயத்தை வெல்ல அவரால் இயலவில்லை. அவர் உள்ளே பதறி நடுநடுங்கிக் கொண்டிருக்க, அங்கே மது அருந்தி விட்டு அமர்ந்திருந்தவனோ அவரைக் கேலி செய்யலானான்.

"ஒ! அவளைப் (பராசக்தியை) பார்க்கறது சுலபம்னு நினைச்சுட்டியா! கட்டையைப் போல கிடக்கணும்! முடியுமா?".அவன் நாக்குழறப் பேசிக் கொண்டே போனான். அவன் பயன்படுத்திய சொற்கள் கொச்சையாக இருந்தாலும், பேச்சில் பொருள் இருந்தது.

அச்சமும் கோபமும் என் நண்பரைச் செயலிழக்கச் செய்தன. அவரால் நிமிர முடியவில்லை. ஒரு கணம்-ஒரே கணம்தான்-நிமிர்ந்தால் அவளைப் பார்க்கலாம்-அவர் இத்தனைக் காலமாய்த் தேடிய பராசக்தியைப் பார்க்கலாம்-ஆனால், அவரால் முடியவில்லை. பயத்தால் சமைந்து போனவரிடம் ,"பாருப்பா! பாருப்பா! நான் இருக்கேம்பா, பயப்படாம பாருப்பா!" என்று சொல்லிச் சொல்லிப் பார்த்த டாக்டர், "சரி, வெளியே வேணும்னா கொஞ்சம் போயிட்டு வா....அப்புறம் வந்து உக்காரு" என்று கூறியிருக்கிறார். உடனே அங்கிருந்து எழுந்த என் நண்பர் அடுத்த வார்த்தை பேசாமல் கோயிலிருந்து வேகமாக வெளியே வந்து, அப்போது அந்த வழியாக வந்த பேருந்தில் ஏறித் 'தப்பினோம், பிழைத்தோம்' என்று வீடுபோய்ச் சேர்ந்திருக்கிறார். நடந்தவற்றை என்னிடம் சுருக்கமாக விவரித்தார் என் நண்பர். அவர் ஆடிப் போயிருந்தார் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

"உன்னை எச்சரிக்கவே நான் இங்கே வந்தேன்" என்றார். அவருக்கு நான் தந்த பதிலை வார்த்தைக்கு வார்த்தை என்னால் நினைவு கூற இயலாவிட்டாலும், நான் சொன்னதன் சாராம்சம் இதுதான். 'அம்மனிதர் பஞ்ச பூதங்களையும் தம் கட்டுப்பாட்டில் வைக்கக் கூடியவர். பராசக்தியைப் பார்க்கணும்னு கேட்டது நீதானே? பிறகு, காட்டியபோது ஏன் பார்க்கவில்லை?' என்று வினவினேன். என் நண்பர் பதிலேதும் சொல்லவில்லை.

அதன்பிறகு, அன்று நான் டாக்டரை சந்தித்தபோது, 'B' என் வீட்டுக்கு வந்த விவரத்தைத் தெரிவித்தேன். "எல்லாரும் (அப்படி அவர் குறிப்பிட்டது "வானோரை' என்று நினைக்கிறேன்) அவனுக்காக சிபாரிசு செய்தார்கள். நானும் நேற்று அவன் கேட்டதை அவனுக்குக் கொடுக்க நினைத்தேன். ஆனால், அவன் அந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டான்" என்று சொன்னார்.

அதன் பின்னர் 'B' சில மாதங்கள், டாக்டரைச் சந்திக்கவில்லை. பிறகு மீண்டும் டாக்டரைச் சந்தித்து மிகவும் நெருக்கம் கொண்டார். பிறகு, சில வருடங்கள் கழித்து மீண்டும் டாக்டரிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டும் விட்டார். அந்நண்பரது பெயரை நான் இங்கு குறிப்பிடாதிருந்தாலும், டாக்டரின் சில சீடர்களுக்கு இந்நிகழ்ச்சி தெரிந்த ஒன்று என்பதால் இது ஒரு பெரிய ரகசியம் இல்லை. அந்த நண்பர் எங்களுடன் இருக்கையில் அவர் பயந்து ஓடிய விஷயத்தை, நட்பாகக் கலாட்டா செய்து அவ்வப்போது நினைவு படுத்துவதுண்டு.

**ஸ்ரீ கிருஷ்ணன் :**

டாக்டரிடம் நான் அடிக்கடி கேட்ட ஒரு கேள்வி என் முற்பிறவி பற்றியதே. அவர் நேரிடையாக இதற்கு பதிலளித்ததேயில்லை. "தியானத்தைச் சீராகச் செய்யுங்கள். விருப்பப்பட்டால் அதைத் தெரிந்து கொள்ளலாம்" என்பதே அவரது வழக்கமான பதிலாக இருந்தது.

"நான் ஒழுங்காகத்தான் தியானம் செய்து வருகிறேன். ஆனால், ஒன்றும் தெரியவில்லையே" என்று இடைமறித்துக் கூறினேன். அவர் சிரித்தவாறே, "எவ்வளவு காலமாக நீங்கள் தியானம் செய்து வருகிறீர்கள்?" என்றார். "வருடக்கணக்கில் தவம் செய்பவர்களே தங்களை அறிந்துகொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இப்போதே தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் எப்படி?" என்றும் வினவினார். "தயவுசெய்து சொல்லுங்கள் டாக்டர்" என்று நான் வழக்கம்போல் கெஞ்ச, அவரிடமிருந்து நான் பெற்ற பதில் மௌனம் மட்டுமே.

ஒருநாள் அவர் பேச்சுவாக்கில் என்னிடம், 'நீங்கள் நன்றாகப் பாடுவீர்கள்' என்றார். ஆனால் எனக்கு உண்மையில் நன்றாகப் பாட வராது. அதை நான் அறிந்தும் இருந்தேன். அதனால் அவர் கூற்று எனக்கு வியப்பைத் தந்தது. ஆனால் வியப்பை அடக்கிக் கொண்டு, அனுபவம் காரணமாக, அவர் கூறியதை ஒதுக்காமல் என் மனத்தில் ஒரு மூலையில் அதைப் போட்டுவைத்தேன்.. பிறகு யோசித்துக் கொள்ளலாம் என்று!

ஓரிரு மாதங்கள் கழிந்தன. ஒருநாள் காலை, அழைப்பு மணிச்சத்தம் கேட்டுக் கதவைத் திறந்தேன். நண்பர் முரளி கையில் ஒரு 'பார்ஸலுடன்' நின்றிருந்தார். என் கையில் அப் 'பார்ஸலைத்' தந்து, "டாக்டர் தரச் சொன்னார்" என்றார்.

"ஒ! அந்தப்படமா?" என்று கேட்டேன். கண்ணபெருமானின் படமொன்றை எனக்குத் தருவதாக டாக்டர் ஒருசமயம் கூறியிருந்தது எனக்கு உடனே நினைவுக்கு வந்தது. ஓவியத்தைப் பிரித்துப் பார்த்தேன். கையில் வேய்ங்குழலோடு ஆயர்கோன் நின்றிருந்தான். விவரிக்க முடியாத பரவசம் மனத்தில் பொங்கி முட்டிக் கொண்டு வரக் கண்ணீர் மல்கியது. அப்படத்தை மாட்ட ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்தேன். வேறொன்றுமே செய்ய இயலாத நிலையில், அதைப் பார்த்தபடி நின்றிருந்தேன். பேசும் கருவிழிகள், உயிர்த்துடிப்பின் வேகத்தை உணர்ச்சிக் குழம்பாக்கி, குழலூதிக் 'கோல வெறி' படைக்கும் உதடுகள், தொலைந்து போன ஆன்மாவைத் தேடித் தஞ்சம் தர, இதோ சற்று நேரத்தில் வேய்ங்குழலில் நடம் புரிந்து பரிபூரணத்தின் இசைச் சிலிர்ப்பைப் பொழியவிருக்கும் வெண்டைப் பிஞ்சு விரல்கள், சாய்ந்த மயிலிறகு, மணிமகுடம், பூமாலை ,மஞ்சளாடை......

அழைப்புமணி மீண்டும் அடித்தது. முரளி சென்று விட்டிருந்தார். இப்போது வந்தவர் என் சக ஊழியர்; புகைப்படக் கலைஞர். அவரிடம், அந்த ஓவியத்தைப் புகைப்படம் எடுத்துத் தருமாறு கூறினேன் ."புகைப்படம் எதற்கு? ஓவியம் உங்களிடம் தானே இருக்கிறது!" என்று வியந்தார். "இந்த ஓவியத்தைப் போகுமிடமெல்லாம் எடுத்துச் செல்லவும் முடியாது; இதைவிட்டுச் செல்லவும் முடியாதே!" என்றேன். என் பேச்சு என் நண்பரின் மனத்தைத் தொட்டது போலும்! "இந்தக் கண்ணனை நீங்கள் இப்படிப் போற்றுவது வியப்பாக இருக்கிறது" என்றார். ஆம்! நான் அப்படி அக்கறை செலுத்தியது எனக்குக் கூட வியப்பாகத்தான் இருந்தது.

**நேசம்:**

இசைப் பிரவாகம் என்னுள்ளிருந்து ஊற்றெடுத்த அந்த இனிய வசந்த காலம் தொடங்கியது. அன்பின் வெளிப்பாடாக, இல்லையில்லை, அன்பேயாகப் பொங்கிப் பெருகிய இசை என்னைப் பரிசுத்தமாக்கியது, இளமையாக்கியது. என்னைக் கரைத்தது -- என்னை விழுங்கியது. எனக்குள்ளே எங்கோ தனிமையில் பாடிக் கொண்டிருந்த ஒருத்தி வெளியே வரத் தலைப்பட்டாள். அன்பின் பெயரால் ஓயாமல் உருகினாள். அதுவரை, கண்ணன் எனக்குக் கடவுள்களில் ஒருவன் மட்டுமே. கடவுள்களைப் பற்றியும் நான் அதிகம் சிந்தித்ததில்லை. ஆனால் இப்போது எனக்குள்ளே மூடியே இருந்த ஒரு பெருங்கதவு திறந்து கொண்டது. முரளிதரனை நான் வருடக் கணக்கில் மறந்து போயிருந்ததை நினைத்து, விழிகள் குளமாக, ஊமையானேன்.

ஒரு பெயர், ஒரு பெயர் மட்டுமே எப்படி என்னைப் பரவசத்தின் உச்சத்துக்கு இட்டுச் செல்ல முடிந்தது? ஒரு வடிவம் மட்டுமே எங்ஙனம் என் மனத்தை மௌனமாக்கி இதயத்தை அப்படியே பருகிவிட்டது? **அவன்** பெயரும், வடிவமும் அல்லவா இவற்றைச் செய்தன! இப்படியொரு அன்பு எப்படி எனக்குச் சாத்தி..மாயிற்று? அதுவும், பழமையான ஹிந்து புராணத்தின் ஒரு தெய்வத்தின் பால் இப்போது எனக்கு அன்பு எப்படி சாத்தியம்? சாத்தியம் என்றேனா? உண்மையில் இந்த அன்பைத் தவிர வேறெதுவுமே இப்போது எனக்கு சாத்தியமாய் இருக்கவில்லை. தடையற்ற பிரவாகமாகத் **தான்** வெளிப்படுவதற்கு அன்பு என்னை ஒரு கருவியாக்கியிருந்தது. நான் அன்பைச் செலுத்த முனையவில்லை. அன்புதான் என் வழியாகப் பொங்கிப் பெருகத் துணிந்தது. அது குறித்து நான் செய்வதற்கு எதுவும் இருக்கவில்லை. கருவிக்கு ஏது

தன்னிச்சையான செயல்? இறையருளுக்கு ஆட்பட்டேன். அதன் போக்கில் போவதை மட்டுமே என்னால் செய்ய முடிந்தது.

**மூச்சின் ரகசியம்:**

திருவண்ணாமலை ரமண மஹரிஷி பற்றிய ஒரு புத்தகத்தைப் படித்த பின்னர், அவரது அறிவுரையின்படி அமர்ந்து என் ஸ்வாசத்தை கவனிக்கத் தீர்மானித்தேன். உடலைத் தளர்த்திக் கொண்டேன். என் மூக்கிலிருந்து உள்ளே நுரையீரலுக்கு மூச்சு செல்வதையும்,பின் திரும்பி வருவதையும் கவனிக்கத் தொடங்கினேன். சிறிது நேரத்தில் பிரக்ஞை இழந்தேன் போலும். பிரக்ஞை மீண்டபோது, என் கவனம், நாசிக்கும் நெஞ்சுக்குமாகப் போன ஸ்வாச கதியை விடுத்து, எதேச்சையாக லயித்திருந்தது. இந்த அனுபவம் எனக்குப் புதிதாக இருந்தது. மறுநாள் எங்கோ நாபியிலிருந்து நெஞ்சுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த வேறொரு போக்குவரத்தில் டாக்டரிடம் இதுபற்றி விவரித்தேன். அவர் சிரித்தவாறே, 'அதுதான் ரகசியம்' என்றார்.

**தீக்ஷை**

குறடுமலைப் பயணத்திற்கு கிட்டதட்ட ஒரு வருடத்திற்கு பிறகு, ஜூலை 4ம் தேதி, டாக்டர் எனக்கு வாசியோகம் கற்றுத் தந்தார். அன்று என்னை வெள்ளை உடை தரித்து வருமாறு பணித்திருந்தார். அவரும் அவ்வாறே காணப்பட்டார். தனக்கு முன் என்னை அமரச் சொன்னார். கண்களை மூடியபடி, ”நீங்க என்னை இது போல் முன்பே பார்த்திருக்கிறீங்க" என்றார். 'எங்கே பார்த்தேன்? ஓ! கனவில் பார்த்தேனோ! அல்லது முற்பிறவியில் என்றாவது இதே போல தீக்ஷை வழங்கியிருப்பாரோ?'

அன்று டாக்டர் மொத்தம் மூவருக்கு வாசியோகம் கற்றுத் தந்தார். பிறகு நாங்கள் நால்வரும் ஒரே தட்டிலிருந்து இட்லி சாப்பிட்டோம். உண்ணத் தொடங்குமுன் டாக்டர் இட்லியை விண்டு எங்கள் மூவருக்கும் தந்தார். அச்செயல், இயேசுநாதர் ரொட்டியை விண்டு எல்லாருக்கும் தந்ததை எனக்கு நினைவூட்டியது.

எல்லாரும் ஒரே தட்டிலிருந்து எடுத்து உண்ட செயல், பழைமை வாதத்தை உடைத்தெறியும் செயலாக அப்போது எனக்குப் பட்டது. உடைமைகளைக் குறித்த தவறான கோட்பாடுகள் அழியும் தருவாய் வந்துவிட்டது என்பது அப்போது எனக்கு விளங்கவில்லை. “காளான் முளைப்பதுபோல் நான் வந்துபோக முடியாது" என்று டாக்டர் கூறக் கேட்டிருக்கிறேன். ஆம்! அவரால் சமூகத்தில் ஏற்படவிருக்கும் தாக்கம் நீடித்ததாக இருக்கும். மானுடத்தின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் தடைகளைத் தகர்த்தெறிந்து கடவுளின் சாம்ராஜ்யத்தை பூமியில் நிர்மாணிக்கப்போகும் தாக்கம் அது. அப்புதிய உலகத்தில், தான் வந்தது கற்பதற்கு மட்டுமே என்பதை மனிதன் உணர்வான். கிட்டுபவையெல்லாம் அனுபவ நிமித்தமே. சொந்தம் கொண்டாடுவதற்கு அல்ல; உபயோகிக்க மட்டுமே; உடமையாக்கிக்கொள்ள அல்ல. அனைவரும் உண்பது இறைவன் தட்டிலிருந்தே. எல்லாம் **இறைவனுடையவை**…ஏனென்றால் **அவன்**தான் எதையும் தருபவன்.

**கூடலும் பிரிவும் :**

தீட்சைக்குப் பிறகு என் நாட்கள் நீண்டன. அதிகாலையில் எழுந்து, யோகாசன, தியானப் பயிற்சிகளை குறிப்பிட்ட நேரத்துக்குள் செய்து முடித்தேன். பின், பிற வேலைகளை (அவை மிகக் குறைவே)

செய்து முடித்து விட்டு, டாக்டர் எனக்குத் தந்திருந்த பிரபு கிருஷ்ணனின் படத்தின் முன் அமர்ந்து கொள்வேன்.

எனக்குள்ளிருந்து, பொங்கிப் பொங்கி வந்த அன்பை ரசித்தேன். த்வைத பாவத்தில் இருப்பவர்களுக்கே உரித்தான பிரிவின் தவிப்பையும், கூடலின் பரவசத்தையும் அனுபவித்தேன்; ரசித்து நினைவில் இருத்திக் கொண்டேன். கண்ணனும் நானும் வேறு வேறென்றில்லாமல் சிலசமயம் ஒன்றேயானோம். நிச்சிந்தையெனும் அலைமேல் மிதந்து நிறைவெனும் கரையில் ஒதுங்குவோம். சில சமயம் எங்கோ போய்விடுவான் கண்ணன், தனிமையிலும் தவிப்பிலும் என்னை நடுநடுங்கவிட்டு. நான் அளப்பற்கரிய துயரத்தில் ஆழ்வேன். பிரிவின் வலி தாளாமல் நான் மயக்கமுற்று விழப்போகும் போது, மீண்டும் அன்பின் வாசத்தால் என்னைச் சூழ்ந்து தன்னோடு சேர்த்துக் கொள்வான். இப்படியே மாறி மாறிப் பிரிவும் கூடலுமாக நாட்கள் கழிந்தன. ஒன்றால் மற்றொன்றுக்குப் பொருள் வந்தது. ஒன்றிலிருந்து மற்றது தீவிரம் பெற்றது.

சிலநேரங்களில் டாக்டரும் நானும் ஒன்றாகக் கொஞ்ச தூரம் நடப்போம். அப்படி ஒரு நாள் நடந்து கொண்டிருந்த போது, மனிதர்கள், தங்கள் ஆன்மிக முன்னேற்றத்திற்குச் சிறிதும் பொருந்தாத வகையில் தங்கள் வாழ்வை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்களே என்று வருந்தினார். ”இவ்வளவு பெரிய ஊரில் எவ்வளவு பேர் தங்களை அறிந்து கொள்ள நேரத்தைச் செலவு செய்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? விரல் விட்டு எண்ணும் அளவுகூட இல்லை" என்றார். "ஒரே நாளில் ஒருவர் தன்னை முழுவதும் மாற்றிக் கொள்வதும் கஷ்டம்தான். கெட்ட குணங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிட வேண்டும்" என்றார்.

'கண்ணன் என்ற பேரெழிலில் நான் திளைத்துக் கொண்டிருந்த நேரம் அது. நான் கேட்டேன், “கிருஷ்ணர் இப்போது இருந்தால் என்ன சொல்வார், டாக்டர்?”

"இதையே தான் சொல்வார்", என்றார் டாக்டர். அப்போது அவர் என்னைப் பார்த்த பார்வையில் காலத்தின் அந்த மணித்துளி எனக்குள் உறைந்து நின்றுவிட்டது.

**ராம ஐயங்கார்:**

திரு ராம ஐயங்கார் ஒரு வயது முதிர்ந்த தீர்க்கதரிசி. கீர்த்தி மிக்கவர். எனக்குத் தெரிந்தவர்கள், தம்மைத் துன்பம் சூழ்ந்த சமயங்களில் அவரை ஆலோசனைக்காக நாடியிருக்கிறார்கள். உலகியல் விஷயங்களுக்காகத் தன்னை நாடி வருபவர்களை விட, ஆன்மிகம் சம்பந்தப்பட்ட கேள்விகளுடன் வருபவர்களையே அவர் உற்சாகத்துடன் எதிர்நோக்கியிருப்பார். என் நண்பர் 'B' (அவரைப் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்) ராம ஐயங்காரிடம் பெரும் நம்பிக்கை கொண்டவர். ராம ஐயங்காரை டாக்டர் சந்திக்க வேண்டும் என்று 'B' விரும்பினார். டாக்டரும் அதை ஏற்றுக் கொண்டார். எனக்கு ஆச்சர்யம்; ஏனென்றால், டாக்டர் இத்தகைய சந்திப்புகளைப் பொதுவாகத் தவிர்த்து விடுவார்.

அன்று கோகுலாஷ்டமி. ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த நாள். அன்று டாக்டர் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். சின்ன கண்ணனைப் பணிந்து, தெருவில் இல்லந்தோறும் பெண்கள், அவன் பிஞ்சுப் பாதங்களை மாக்கோலமாக்கி அவனை உள்ளே வருமாறு தாஜா பண்ணிக் கொண்டிருந்தார்கள். மாடியிலிருந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நானும் ஒரு பாட்டுப் பாடி அவனை அழைத்தேன்.

சென்னைக்குச் சற்று தொலைவில் சிங்கபெருமாள் கோயில் என்ற ஊரில் அமைந்திருந்த ஸ்ரீ ராம ஐயங்காரின் வீடு நோக்கி டாக்டர் உட்பட நாங்கள் சுமார் பன்னிரெண்டுபேர் பயணம் செய்தோம். அவர் வீட்டு வாசலிலும் கண்ணனின் பூம்பாதங்கள். "நல்ல நாளில்தான் நாம் இங்கே வந்திருக்கிறோம்" என்றார் டாக்டர்.

நாங்கள் எல்லாரும் ராம ஐயங்காரைச் சுற்றி அமர்ந்து கொண்டோம். டாக்டர் ஒரு மூலையில் அமர்ந்தார். தனக்கு ஏற்கனவே அறிமுகமான என் பிற நண்பர்களிடம் லோக க்ஷேமங்களை விசாரித்து விட்டு, ராம ஐயங்கார் என் பக்கம் திரும்பினார். என்னை ஊடுருவிப் பார்த்தார்.

“கையில் குழலோடு கிருஷ்ணன் உனக்குள்ளே நிற்கிறானே! நீ அதற்கு என்ன செய்கிறாய்?” என்று கேட்டார். நான் திக்கு முக்காடிப் போனேன்.

“எனக்குத் தெரியவில்லையே!” என்றேன். பதில் சொல்லத் தெரியாமல் திணறினேன். ‘எனக்குள்ளா கிருஷ்ணன்?’ நன்றிப் பெருக்கில் உருகினேன்.

“நீ அவனைக் கூப்பிட மந்திரம் ஏதும் சொல்கிறாயோ?” என்று கேட்டார்.

“இல்லை” என்று தொண்டை அடைக்கச் சொன்னேன்.

“நான் பார்ப்பது குட்டிக் கிருஷ்ணன் இல்லை...வாலிபன். அவனை விட்டு விடாதே.” என்றார். “கிருஷ்ணன் ஜகத்குரு. அவன் ஞானத்தைக் கொடுப்பவன். அவன் உன்னை விடுவிப்பான். அவனை விட்டு விடாதே!” என்று மேலும் கூறினார் சிரித்தவாறே.

அதன் பிறகு என்னுடன் வந்த மற்றவர்களுடன் அவர் பேசினார். ஒன்றனுள் ஆழ்ந்து அதை அறியும் தன் நுண்திறத்தால் ஒவ்வொருவரையும் வியப்பில் ஆழ்த்தினார். நாங்கள் எல்லாருமே டாக்டரின் சீடர்களாக இருந்ததால் எங்கள் ஆன்மிக முன்னேற்றத்தைக் குறித்தே உரையாடல் இருந்தது. ஒவ்வொருவருடனும் ராம ஐயங்கார் பேசிக்கொண்டிருக்க, நான் அடிக்கடி டாக்டரைப் பார்த்தபடி இருந்தேன். ராம ஐயங்கார் டாக்டரைப் பற்றியும் பேசுவார் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். நாங்கள் அங்கிருந்து விடைபெறும்வரை அவர் டாக்டரைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

நாங்கள் வெளியே வந்தோம். எங்களில் பலரைக் காட்டிலும் அதிக நாட்களாக டாக்டரிடம் தொடர்பு கொண்டிருந்த என் நண்பர் ஒருவர், டாக்டர் இப்படித் தன்னை சோதனைக்கு உட்படுத்திக் கொண்டது குறித்துத் தம் அதிருப்தியைத் தெரிவித்தார். ராம ஐயங்காரிடம் காண்பிக்கப்படுவதற்கு டாக்டர் ஒப்புக் கொண்டதில் அவருக்குக் கோபம். டாக்டர் சிரித்தார்.

“ராம ஐயங்காரைத் தன்னுடன் வந்து பார்க்க வேண்டும் என்று B விரும்பினான். அவனுக்காகத்தான் வந்தேன்” என்றார். ஆனால் ‘B’ யோ டாக்டரைப் பற்றி ராம ஐயங்கார் எதுவுமே சொல்லவில்லையே என்று வியந்தான். டாக்டரிடம் அவன் இது பற்றி கேட்க, “ஏனென்று ராம ஐயங்காரிடமே போய்க் கேள்” என்றார் டாக்டர்.

‘B’ அடுத்த நாள் மீண்டும் ராம ஐயங்காரைச் சந்தித்தான். ராம ஐயங்கார் ஆஞ்சனேயரின் உதவியோடு டாக்டரைக் குறித்துத் தியானம் செய்ய, ஒரு ஜோதி மட்டுமே தோற்றம் தருவதாகக் கூறினாராம்.

“

அவர் பன்னிரண்டாம் படியிலிருக்கிறார்" என்றாராம். (இப் புத்தகத்தில் 'பிரம்ம வித்தை' என்ற அத்தியாயத்தில் வாசகர் இது பற்றி அறிந்து கொள்ளலாம்).

"டாக்டர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள நினைத்தால்தான், என்னால் அவரைப்பற்றி இதற்குமேல் அறிந்து கொள்ள முடியும். அவரை என்னையும் கவனித்துக் கொள்ளுமாறு சொல்", என்றாராம். தான் நினைத்ததைப் போலவே ராம ஐயங்காரும் சொன்னதில் 'B' க்கு அளவற்ற மகிழ்ச்சி!

**ஒரு புதிய அனுபவம்**

அன்று விடுமுறை நாள். ஆகவே அன்று மெதுவாக எழுந்திருக்கலாம் என்று தீர்மானித்தேன். தூக்கம் கலைந்துவிட்டது. இருந்தாலும் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். பொழுது புலர்ந்த நேரம். திடீரென்று என் மூச்சு சன்னமாகி ஒரே கதியில் இயங்கத் தொடங்கியது.

நான் தியான நிலைக்குச் செல்வதை உணர்ந்து சவாசனத்தில் (ஹடயோகத்தில் ஓர் ஆசனம்) மல்லாந்து படுத்தேன். நான் இலேசாவதையும் உணர்ந்தேன். என் பிரக்ஞை விடுபடாமல் தொடர்ந்திருக்க, ஒரே நொடியில் என் சூழ்நிலை மட்டும் மாறியது. நான் வேறொரு இடத்திற்கு மாற்றப் பட்டேன்.

அந்தப் புதிய இடத்தில், என்னைச் சுற்றியிருந்த மேலுறை போன்ற ஏதோ ஒன்று என் அசைவைக் கட்டுப்படுத்தியது. காலுறையைக் கழற்றுவதுபோல், அந்த மேலுறையை அகற்றி விட்டு, நடக்கலானேன். புதிய அனுபவம் இனிமையாக இருந்தது. அங்கேகூட

காலடியில் புதையப் புதையப் பொன்னிற மணல்வெளி. குனிந்தேன். அந்த மணலும் நம் பூமியில் உள்ள மணல் போலத்தான் இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்தேன்.

ஆம்! அதற்கு எந்த அத்தாட்சியும் இல்லாவிட்டாலும் இந்த இடம் பூமியில் இல்லை என்றது என் உள்ளுணர்வு. பின் எங்கே? அதை அங்கு நடந்து செல்பவரிடம் கேட்க எண்ணி, ஒருவரை நோக்கி நடந்தேன் –அப்போது ஒரு சலனம்! என் வீட்டுக்கு, என் கட்டிலுக்கு, என் பழைய இடத்துக்கு நான் திருப்பித் தள்ளப்படுவேனோ என்ற அச்சம்! அந்த அச்சம் வந்த கணமே நான் மீண்டும் பூமியில், என் வீட்டில், என் கட்டிலின் மேல்!

**கலெய்டஸ்கோப்:**

அனுபவத்தின் பரிமாணங்கள் புதுப்புது வாசல்களாகி எனக்காகத் திறந்து கொண்டிருந்தன. இருந்தாலும் படிப்பதில் எனக்கிருந்த ஆர்வம் குறையவில்லை. அவ்வப்போதைய மன நிலைக்கேற்றபடி, புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படித்துக் கொண்டுதான் இருந்தேன். பிரம்மஞானம், வேத சாஸ்திரம், ஆவி உலகம், இறை அனுபவம் என்று விதவிதமான புத்தகங்கள். நான் படித்த சில புத்தகங்களைப் பார்த்துவிட்டுக் குழந்தைகளுக்கான தேவதைக் கதைகள் (‘Fairy Tales’) போல இருப்பதாக என் நண்பன் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது.

ஸ்ரீகிருஷ்ணனின் நினைவு என்னை முழுமையாக ஆக்ரமித்திருந்தது. உயிர் நண்பனை அறிவது போல் அவனை நான் அறிந்திருந்ததாக எண்ணினேன். இருப்பினும், அவனுடைய கால, சரித்திர, கலாச்சாரப் பின்னணி பற்றி நான் அறிந்திருக்கவில்லை.

இதைத் தெரிந்து கொள்ள மஹரிஷி வியாசரின் மஹாபாரதக் காவியத்தைத் தவிர வேறெதை நான் தேர்ந்தெடுக்க முடியும்? சமஸ்கிருத மொழி எனக்குப் பரிச்சயமில்லாததால் மஹாபாரதத்தின் ஒரு நல்ல மொழி பெயர்ப்பைத் தேர்ந்தெடுத்தேன்.

கதையின் இழைகளுக்குக் காரணமாகி அவற்றைப் பின்னி நெசவு செய்ய எத்தனை கதாபாத்திரங்கள்! எப்படிப்பட்ட வித்தியாசமான குணநலன்கள், தனித்தன்மைகள், சந்தர்ப்பச் சூழ்நிலைகள்! கதை, குருக்ஷேத்திரப் போரை நோக்கி நகர்வதற்கு எத்தனைக் காரணங்கள்! கதையில் மூழ்கிப் போனேன். எல்லா நிகழ்விலும், எதிர்பாராத ஒவ்வொரு திருப்பத்திலும் கண்ணனின் கைவண்ணம்! ஒரே முனைப்பில் பாரதக் கதையைப் படிக்கப் படிக்க, விவரிக்க முடியாத அமைதி, தினப்படி நடவடிக்கைகளில் நான் ஈடுபட முடியாமல் என்னைச் சிறை செய்து நீர்க்குமிழி போல் என்னைச் சூழ்ந்து மூடிக்கொண்டது. அதே சமயம் என்னை சலனமற்ற ஒரு பார்வையாளராக்கியது. இந்த நிலையில் நான் கண்டவை வியப்புக்குரியவை. என் நெருங்கிய நண்பர்களும், அறிமுகமானவர்களுமான சிலரில், மஹாபாரதக் கதாபாத்திரங்கள் சிலரின் தீர்மானமான சாயலைப் பார்த்தேன். ஒவ்வொருவராக, ஒவ்வொருவராக அடையாளங் கண்டபடி வந்த போது..அப்படியானால், டாக்டர்? அந்தக் கடைசி அடையாளம் பாதையின் திருப்பத்தில் காத்திருக்க, என் இதயம் ஒரு கணம் துடிக்க மறந்தது. எதிர்பார்ப்பில் ஸ்தம்பித்துப் போய்ப் புத்தகத்தைக் கவிழ்த்து வைத்தேன். சொல்லி வைத்தாற் போல் அப்போது டாக்டர் என்னைப் பார்க்க வந்தார். எதிரில் அமர்ந்தார். வெகு நேரம் மௌனமாக இருந்தேன். பிறகு குரலைத் தேடிக் கண்டு பிடித்து வினவினேன்.

“டாக்டர் நான் ஒரு கேள்வி கேட்கலாமா?”

“வேண்டாம்”, என்றார். அளந்து பேசுகிறார் என்பது குரலில் தெரிந்தது.

‘கலெய்டஸ்கோப்’ என்னைக் கவர்ந்த கருவி. வெவ்வேறு பொருள்களின் பகுதிகளும் துணுக்குகளும் ஒரு சில கண்ணாடிப் பட்டைகளும் சேர்ந்து எத்தனை வண்ணக் கோலங்களைச் செய்கின்றன! ஒவ்வொன்றும் வெவ்வேறு விதம். கொஞ்சம் மாற்றினாலும் வேறு வடிவம்! காரணமான பொருள்களின் எண்ணிக்கை ஒன்றே. ஆனால் அவை சமைக்கும் கோலங்கள் பலப்பல. உற்றுப் பார்த்தால்தான் ஒவ்வொரு பொருளும் தனித்தனியாகத் தெரியும். அதே பொருள்கள் மட்டுமே -- ஆனால் ஒன்றுசேரும் விதத்தால் விதவிதமான வடிவ ஜாலங்கள். அப்படித்தான் இதுவும். அன்று மஹாபாரதம் – இன்று வேறொரு கதை. அன்று வந்தவர்களேதான் இன்றும்; ஆனால் அவர்கள் இன்று தொகுக்கப்பட்ட விதம் வேறு. வேறொரு வடிவம் உருப்பெறக் காத்திருந்தேன் – அதன் மையத்தை, என் சத்குருநாதனைப் பார்த்தபடி.

**ஆழ்பிரக்ஞைக்குள் எட்டிப் பார்த்தேன்:**

குருநாதனின் அருளால் என் ஆழ்பிரக்ஞைக்குள் எட்டிப் பார்க்கும் அனுமதி எனக்குக் கிடைத்தது. அங்கே நான் பார்த்தவை, நான் சற்றும் எதிர்பாராதவை. அதிர்ச்சி! (சுகமான அதிர்ச்சிதான்) அறிவு பூர்வமாகவே இயங்கிப் பழகிவிட்ட என் மனம், உள்ளே பார்த்தவற்றுக்கு வெளியிலிருந்து ஓர் அத்தாட்சி கிடைக்குமா என்று தேடியது; ஓர் அங்கீகாரம் என்று கூடச் சொல்லலாம்.

“டாக்டர் நான் உள்ளே உணர்பவற்றுக்கு வெளியே அத்தாட்சி கிடைக்குமா” என்று கேட்டேன்.

“கிடைக்காது” என்று பதிலளித்தார்.

என் ஆன்மிக அனுபவங்களை வரைமுறையில்லாமல் வெளியே சொல்லக் கூடாது என்று டாக்டர் எனக்கு அறிவுறுத்தினார். அவர் இப்படி என்னிடம் ஒரு முறைக்கு மேல் சொல்லியும், நான் அவர் வார்த்தையை மீறி, மீண்டும் மீண்டும் என் அனுபவங்களை வெளியில் சொன்ன குற்றத்துக்கு ஆளாகி விட்டதை நான் இங்கு ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இறையுண்மைகள் எனக்குத் தெரிவிக்கப்பட்டன; தனிமையிலோ, கானகத்தின் அமைதியிலோ இல்லை; பரபரப்பான நகர வாழ்க்கையில், என் தினசரி அலுவல்களுக்கிடையில் தான். விளக்குடன், இருண்ட ஆழத்தில், குடைந்த பாறைகளுக்கிடையே தங்கக்கோடுகள் ஓடுகின்றனவா என்று தேடித் தேடிப் பார்க்கும் சுரங்கத் தொழிலாளி போல், வாழ்க்கையின் இருட்டில் உண்மையைத் தேட நான் பழக்கப்பட்டிருந்தேன். தேடிச் சேகரித்த விலை மதிப்பற்ற பொக்கிஷத்தை எடுத்தோடி வந்து என்னோடு தேடிக் கொண்டிருந்தவர்களோடு பங்கு போட்டுக் கொள்ளும் ஆர்வ மிகுதியால், அவசரப்பட்டு அவர்களிடம் அதைக் காண்பித்தேன். சிலர் நான் அவர்களுக்குக் காண்பித்தவற்றின் மதிப்பை அடையாளம் கண்டனர். வேறு சிலரோ, ‘மின்னுவதெல்லாம் பொன்னாகிவிடுமா?’ என்று நினைத்து விட்டனர்.

*********

**ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே! :**

இறைவனுடைய திருவிளையாட்டில் மனிதன் ஒரு கைப்பாவையே. இவ்வுண்மையை மனிதன் உணரும் கணமே அவ்விளையாட்டு அவனளவில் முடிவடையும். ஆம்! அப்போதிலிருந்து அவன் வெறும் ஒரு சாட்சி, ஒரு பார்வையாளன் மட்டுமே. தன் உணர்ச்சிகளையும் மன ஓட்டத்தையும், நாட்டத்தையும், செயல்களையும் ஒரு சாட்சியைப் போல் பார்த்திருப்பான். மகிழ்ச்சியான தருணங்கள் அனுபவிக்க இனிமையாகவும், சோகமானவை மனத்தை அழுத்துபவையாகவும் இருக்கத்தான் செய்யும். ஆனால் மகிழ்ச்சியும் சோகமும் பிரக்ஞை என்ற திரையில் வேகமாகத் தோன்றி மாறி மறையக்கூடிய பதிவுகள்தாம் என்பது அவனுக்குத் தெரியுமாதலால், அவற்றை அவற்றின் போக்கில் அவன் விட்டு விடுவான். அவற்றைத் தக்க வைத்துக் கொள்ளவோ, உதறித் தள்ளவோ அவன் விரும்ப மாட்டான். ஏனென்றால் இரண்டுமே சாத்தியம் இல்லை என்பதை அவன் அறிவான். அகங்காரம் பிரக்ஞையை ஒரு திரையாக்குகிறது. துளி அகங்காரம் இருந்தாலும் பிரக்ஞையின் மேல் திரை விரிகிறது. அந்தத் திரையின் மேல் பஞ்ச பூதங்களின் நாடகம். இன்ப துன்ப நாடகம் – இருமைகளின் நாடகம். அகங்காரம் கரைந்தே போனபின் நாடகத்தின் பிம்பம் தெரியத் திரையே இல்லை. நான், 'நானாக' இருக்கும் போது, அந்த நிலையைப் பற்றி, அல்லது நிலையின்மையைப் பற்றி நான் என்ன சொல்ல!

எண்ணத்திலும், சொல்லிலும் செயலிலும் நான் மிகச்சரியாகவே, மிகக் கவனமாகவே இருக்க வேண்டும் என்று நினைத்த ஒரு காலம் உண்டு. கடவுளே! எப்பேர்ப்பட்ட ஆயாசமான விஷயம் அது! என்னை மீறிய உயர்ந்ததோர் அதிகாரத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் குதிரைகளின் கடிவாளத்தை நான் பிடித்துக் கொண்டிருப்பது இயலுமா? இழுத்துப்

பிடிக்கப் பிடிக்க இன்னும் வேகமாய் என்னை இழுத்துக் கொண்டு ஓடினவே அந்தக் குதிரைகள்! நான் எச்சரிக்கையாக இருப்பதாக நினைத்துக் கொண்டு, இறைவன் சித்தப்படி இயங்கிய நீரோட்டத்தோடு செல்லாமல் எதிர்நீச்சல் அடிக்க முனைந்ததில் என் அகந்தையைத்தானே வளர்த்துக் கொண்டேன்! மீண்டும் மீண்டும் என் செயல்களைப் பரிசீலித்தபடி, என் உள்நோக்கங்களை ஆராய்ந்தபடி, அதற்கேற்ப என்னையே நான் பாராட்டிக் கொண்டும், நொந்து கொண்டும் இருந்ததில், என் அகந்தையை அன்றோ நான் வளர விட்டேன்!

சில நேரங்களில் நான் சரியென்று கருதிச் செய்தது, பின்னர் பயனற்ற செயலாக மாறியது. இது திரும்பத் திரும்ப நிகழ்ந்தபோது, தீவிர யோசனைக்குப் பிறகு செயல்படுவது, தவறு செய்யாத நிலைக்கு என்னை இட்டுச் செல்லவில்லை என்பதை உணர்ந்தேன். என் செயல்களின் விளைவுகள் எல்லா சமயங்களிலும், நான் எதிர்பார்த்ததுபோல் இருக்கவில்லை. சில விஷயங்களை நேர்செய்ய நான் எடுத்த முயற்சிகள் பெரும்பாலும் அவற்றை மேலும் சிக்கலாக்கின. மீண்டும் குழப்பம்! அப்படியானால், நான் செயலற்று இருக்க வேண்டுமா? செயலற்று இருக்க நான் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டே இருக்க வேண்டாமே! நான் எங்கே தவறு செய்கிறேன்? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். தவறே செய்யாத நிலையை நான் எப்படி எட்ட முடியும்?

‘தவறாமை’ என்பது ஒன்றுக்கொன்று தொடர்பு படுத்திப் பார்த்துக் கணிக்கும் ஓர் அளவுதான் என்றும், ஒரு நிலையை எட்டிப்பிடிக்க வேண்டும் என்பது, அகத்தின் ஒரு பிரச்னைதான் என்றும் புரிந்து கொண்டேன். தவறு என்று பிறர் சொல்லி விடுவார்களோ என பயந்து செயல்படாமலே இருப்பது கூட அகத்தால்

எழும் இன்னொரு பிரச்னைதான். இசையின் ஸ்வரங்கள் இறைவனுடையவை. புல்லாங்குழலைப் போல நானும் அவனுடைய கருவிதான். என் ஸ்ருதியில் மாற்றங்களை அவன் நிர்ணயிக்கிறான்; வேண்டாத போது மௌனத்தில் என்னைச் சுற்றி வைக்கிறான். இதை நான் உணர்ந்தேன். அதுவே நான் இருப்பதற்கு ஓர் அர்த்தத்தைக் கொடுத்தது. என்னைப் பாடாய்ப்படுத்திய அகமும் சுருங்கிச் சிறிதாயிற்று.

**எண்ணங்களும் எண்ணமின்மையும்:**

சனிக்கிழமைகளில் மாலையில் நாங்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்து வந்தோம். எங்கள் வீட்டு மொட்டை மாடியில் நண்பர்கள் கூடி இறையுணர்வூட்டும் பாடல்களைப் பாடுவோம். அப்படிப்பட்ட ஒரு சனிக்கிழமை மாலை, கறுத்து அடர்ந்த மேகங்கள் வானில் கவிய, மழை கொட்டும் அறிகுறிகள் உருவாயின. மழை பெய்தால் மொட்டை மாடியில் எப்படிப் பாடுவது, கீழே போகலாமா என்று யோசித்தோம். மேகங்களெல்லாம் ஒன்றோடொன்று கலந்து குழம்ப, காற்று சில்லென்று வீசியது. டாக்டர் அன்று எங்களோடு இருந்தார். "மழை பெய்யாதுப்பா" என்றார். கடலோடும் மீனவரோடும் நெருங்கிப் பழகியிருந்த என் நண்பன் சொன்னான், "நிச்சயம் மழை வரும் டாக்டர்! வானத்தைப் பார்த்தே மழைவரப் போவதைச் சொல்லி விடலாம்!" என்றான்.

"நில்லுன்னா நிக்கும்பா. எண்ணத்தை நிறுத்தினா, மழையை நிறுத்தலாம்" என்று டாக்டர் பதில் சொன்னார்.

அன்று மழை பெய்யவில்லை. சூல் கொண்ட மேகங்களும் இருந்த இடத்தில் இருந்தபடி அன்று எங்கள் பிரார்த்தனையில் கலந்து கொண்டன போலும். கடலும் வானும் உலகெலாம் கூட இறைவனைப்

பணிகின்றன. அடுத்த அரை மணி நேரம் என் நண்பன் எண்ணமற்ற நிலையை அனுபவித்தான். எண்ணங்கள் தள்ளிப் போய்க்காத்திருந்தன. மேகங்களும் தாம்.

**ஆறு சக்கரங்கள் :**

யோகத்தில் சொல்லப்படும் ஆறு ஆதார சக்கரங்களும் நம் உடலில் காணப்படும் நரம்பு மண்டல முடிச்சுகளோடு சம்பந்தப் பட்டவை. இச்சக்கரங்களைத் தியானம் செய்யும்போது அவை 'எஸ்கலேட்டர்' (escalator) போல் நம்மை வேறு உலகங்களுக்கு அழைத்துச் செல்கின்றன. இந்தப் பிறவுலகங்களெல்லாம், ஒரு விதைச்சொல், அதாவது, ஒரு பீஜத்துக்குத் தன்னை வெளிப்படுத்திக் கொள்பவை. சாதகன் அந்த பீஜத்தோடு தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்வதால், அவ்வுலகை அவன் எட்டுகிறான். ஓசையில் பீஜங்களாக இருக்கும் இவை, ஒளியில் நிறங்களாகின்றன; வடிவங்களாகவும் அமைகின்றன. இவ்வடிவங்களை அவற்றின் நிறத்தில் தியானம் செய்யும் போது, சாதகனால் சம்பந்தப்பட்ட உலகங்களை எட்ட முடியும்.

இந்த வடிவங்களை அட்டைகளில் வரையச் செய்து, அவற்றை தியானம் செய்யும்போது பயன்படுத்துமாறு டாக்டர் எங்களுக்குத் தந்தார். நான் சுடர் தியானம் செய்யத் தொடங்கியதும் இந்த அட்டைகளை டாக்டர் என்னிடம் தந்தார். எனக்குப் பிறகு வந்த சீடர்களும் இந்த அட்டைகளைப் பயன்படுத்தினார்கள்.

**உள்மூலத்தின் வெளிப்பாடு:**

ஒரு சதுரமான வெள்ளைத் தாளின் மையத்தில் கறுப்பு வட்டம் வரையச் செய்து அதைக் கண்ணாடிச் சட்டமிட்டு எங்களிடம்

கொடுத்தார். ஒரு முக்காலியின் மேல், அதை வைக்கச் சொன்னார். ஒரு சொட்டு எண்ணெயை அந்தக் கருப்பு வட்டத்தின் மையத்தில் விடச்செய்தார். நாங்கள் எல்லாரும் அவரைச் சூழ்ந்து கொண்டோம். பிறகு ஒரு மெழுகுவத்தியை ஏற்றி எண்ணெய்த்துளியில் அதன் ஒளி பிரதிபலிக்குமாறு, அதை அருகில் நிறுத்தினார். எங்களை ஒவ்வொருவராக அழைத்து, எண்ணெயில் பிரதிபலிக்கும் ஜோதியில் எங்கள் கவனத்தை நிறுத்தும்படிச் சொன்னார். ஒருவர் கண்ணுக்கு எண்ணெயில் ஷீர்டி சாய்பாபா தெரிந்தார். இன்னொருவருக்கு கருநீல வானமும் நட்சத்திரங்களும் தென்பட்டன. மூன்றாமவர் வட்டச் சுழல்களைக் கண்டதாகச் சொன்னார். பிறகு என் முறை....ஜோதியின் பிம்பத்தை உற்று நோக்கினேன். ஒன்றும் தெரியவில்லை. அதில் இன்னும் கொஞ்சம் ஆழ்ந்தேன். ம்ஹூம்! ஒன்றுமே தென்படவில்லை. ஏமாற்றமடைந்தேன். அப்போது எனக்கு ஏதோ நேர்ந்தது. எனக்குள்ளே, உள்ளே ஆழத்தில் ஏதோ ஒன்று எழும்பி நகர்ந்தது. அந்த ஏதோ ஒன்று வலியும் இன்பமுமாய் இருந்தது......ஆம், அது நேசம்....அன்பு....காதல்....இந்தச் சொற்கள் எதுவுமே அதைச் சொல்லப் போதுமானதாக இல்லை. அந்த அழுத்தமான அன்பில் நான் கரைந்து ....கரைந்து ......கரைந்து போய்க் கொண்டிருக்கையில் வெளியிலிருந்து டாக்டர் குரல் கேட்டது. சுதாரித்துக்கொண்டு மெல்லச் சொன்னேன்: “என் பார்வைக்கு எதுவும் தெரியலை;ஆனா I feel love (அன்பை உணர்கிறேன்)” என்றேன்.

“டாக்டர் மாதிரி ஓர் ஆளையெல்லாம் கூட வைத்துக்கொண்டு இவள் எப்படித்தான் தியானம் செய்கிறாளோ தெரியவில்லை” என்று எனக்குத் தெரிந்த ஒருவர் பேசியதாகக் கேள்விப்பட்டேன். . “தியானம் செய்யும் போது தீய அதிர்வுகளிலிருந்து விலகியன்றோ இருக்க வேண்டும்!” என்றும் சொன்னாராம்.

டாக்டரைப் பற்றி இப்படிச் சொல்வதா என்று ஒரு பக்கம் கோபமும், டாக்டருடைய ஒளிமயமான உள்மூலம், எப்படித்தான் புரியாமல் போனதோ என்று ஒரு பக்கம் வியப்புமாக ஒரு கலவையான உணர்ச்சிப் பெருக்கு என்னை ஆட்கொண்டது. “நீ என்னிடம் எதைப் பார்க்க விரும்புகிறாயோ அதைத் தான் பார்ப்பாய்- நான் ஒரு கண்ணாடியைப் போல; பிரதிபலிக்கவே செய்வேன்” என்று டாக்டர் அடிக்கடிச் சொல்வது என் நினைவுக்கு வந்தது.

***********

**நறுமணத் தென்றல் :**

டாக்டரை வந்தடைந்தவர் எல்லாரும், விரைவில், தம் நண்பர்களையும் உறவினர்களையும் அவரிடம் அழைத்து வந்தார்கள். டாக்டரின் ஆரம்ப காலச் சீடர் ஒருவருக்கு (இப்படித்தான் ஆங்கில பதிப்பில் எழுதியிருக்கிறேன். ஆரம்பம் எங்கே என்று இப்போது சந்தேகம் எழுகிறது.) மைசூரில் சில நண்பர்கள் இருந்தார்கள். டாக்டரைப் பற்றி கேள்விப்பட்ட மாத்திரத்தில் இவர்கள் கள்ளுண்டது போல் ஆனார்கள். டாக்டரை நேரில் பார்ப்பதற்கு முன்னரே அவரைப் பருகித்துய்த்துணருமாறு ஆசிர்வதிக்கப் பட்டார்கள்.

பெங்களூர் தெருக்களில் நித்யானந்தத் திவலைகளில் நனைந்தபடி அவர்கள் ஆடிச் சென்றார்கள். டாக்டரை அழைத்து அழைத்துத் தங்களைச் சூழ்ந்து அகன்ற நறுமணங்களில் அவருடைய பதிலைப் புரிந்து கொண்டு, மதுரம் மதுரம் என்று மயங்கிச் சென்றார்கள்.

இதோ ரோஜா மணம், இதோ சந்தனம், இதோ, இது என்ன வானுலகத்து வாசனையோ...இடமிருந்து வலமும், வலமிருந்து இடமும் ஒன்று அடங்குவதற்குள் இன்னொன்றுமாக வாசம் ....வாசம்...அத்தனை வாசம். அவரைப் பருகிப் பருகி... மயங்கி மயங்கி போதையில் வார்த்தைகள் குழறிப் பிதற்றியபடியே சென்றார்கள். ஒருவர் சாலையின் நடுவே அமர்ந்தே விட்டார். வாகனம் மேலே ஏறினால்தான் என்ன! எல்லாமே கைகூடி முற்றி முடிந்த பின் தொடர்ச்சி எதற்கு? அமுதை முட்ட முட்ட மாந்திய பின் இவ்வுலக வாழ்வே முடிந்தால் கூட என்ன! பேரானந்தப் பிரவாகத்தில் திக்குமுக்காடியபடி, டாக்டருக்குப் பட்டங்களும் செல்லப் பெயர்களும் இட்டு அழகு பார்த்தார்கள். அவர்கள் கற்பனை கொடிகட்டிப் பறந்தது. டாக்டர்பால் அவர்கள் கொண்ட காதலில் அவர்கள் கவிஞர்களானார்கள். தத்துவ வித்தகர்களுமானார்கள்.

**ஆழ்நிலை உறக்கம்:**

அடுத்து வந்தது தலையணைக் காலம்! எங்களில் சிலரை டாக்டர் ஆழ்நிலையில் தூங்க வைத்த காலம். எங்களுள் முரளிதான், தம்மை ஆழ்நிலைத் தூக்கத்திற்குள் டாக்டர் அழைக்கத் தொடங்கிய மாத்திரத்தில் தூங்கி விடுவார். அந்த ஆழ்ந்த உறக்கம் அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. அப்போதெல்லாம் டாக்டர் வருவதற்கு முன்பே படுக்கையைச் சரிசெய்து ஒரு தலையணையையும் தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டு அவருக்காகக் காத்திருப்பார். டாக்டர் வந்தவுடன், கையில் தலையணையும் முகத்தில் முறுவலுமாய், 'தூங்குவதற்கு நான் தயார்' என்பதுபோல் அவர் முன்னே போய் நிற்பார்.

என் இன்னொரு நண்பன் டாக்டரால் மெய்மறந்த நிலைக்குச் செலுத்தப்பட்டு இயேசுபிரானின் தரிசனத்தைப் பெறும் பாக்கியத்தை அடைந்தான். இயேசு கையில் ஜப மாலையோடு கைகளை விரித்துத் தன்னை அழைத்ததாக அந்த நண்பன் விவரித்தான்.

மனங்கவர் பாடலொன்றில் அந்த அருமையான அனுபவத்தை அந்த நண்பன் படம் பிடித்தான். இந்த நண்பனும் நானும்தான் பின்னர் ஒரு மிக இனிமையான அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டோம் – அந்த அனுபவம், தூய அன்னையையும் மனிதனின் மைந்தனையும் எனக்கு நெருக்கமாக்கியது.

**ஸ்ரீராமன்:**

ஒரு நாள் இரவு, நான் முன்பு குறிப்பிட்டிருந்த டாக்டர் கொடுத்த அந்த கிருஷ்ணன் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு கணம், ஒரே கணம், அப்படத்திலிருந்த ஸ்ரீ கிருஷ்ணன், தசரத நந்தனனாக, இக்ஷ்வாகு குலத் திலகன் ஸ்ரீராமனாகத் தோற்றம் மாறினான். ஹிந்து புராணங்களின்படி, கிருஷ்ணனும் ராமனும் மஹாவிஷ்ணுவின் இரண்டு அவதாரங்கள்தாம். என்றாலும், என்னைப் பொருத்தவரை அவ்விருவரையும் ஒருவராகப் பார்ப்பது எப்போதுமே கடினமாகத்தான் இருந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்கள் என்று எனக்குப் பட்டது. ஆங்கிலக் கவிஞர் மில்டன், ‘லல்லெக்ரோ’, ‘இல்பென்ஸரோஸோ’ என்று இரண்டு அழகிய கவிதைகளை எழுதியிருக்கிறார். ‘லல்லெக்ரோ’, இனிமையான, உல்லாசமான இளைஞனைப் பற்றியது.

‘இல்பென்ஸரோஸோ’ எதையும் ஆழ்ந்து உணரும், எளிமையான இளைஞனைப் பற்றியது. ‘லல்லெக்ரோ’வில் மில்ட்டன், ‘பக்ஸம், ப்லைத் அண்ட் டெபனேர்’ என்றார். எனக்குக் கண்ணன் தன்னம்பிக்கையின் முகட்டில் நிற்கும் கவலையற்ற உல்லாசிதான், ’ லல்லெக்ரோ’வைப் போல. ‘ஸோபர், ஸ்டெட்ஃபஸ்ட், அண்ட் டெம்யொர்’ என்றார் மில்ட்டன், ‘இல்பென்ஸரோஸோவைப்’ பற்றி. என்னைப் பொறுத்தமட்டில் ராமன் நிதானம் மிக்கவன். மாறாத உறுதி கொண்டவன். தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஆழ்ந்த அமைதியில் லயித்திருப்பவன். எப்படி ஒருவன் மற்றவன் ஆனான்? என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கலெய்டஸ்கோப் கொஞ்சம் சுழன்றது. அதற்குள்ளே போடப்பட்டிருந்த சின்ன சின்ன பொருள்களும் நிலைமாறின. வண்ணங்களின் ஒழுக்கமும் மாற்றம் கொண்டது. புதிய நிலையில் வேறு ஏற்பாடும், வேறு வடிவமும் கலெய்டஸ்கோப்பில் தோன்றியது. இந்தப் புதிய கோல வடிவத்தில் மூலக்கருவாக இருப்பவன் ஏன் கிருஷ்ணனாக இல்லாமல் ராமனானான் என்பதை உணர்ந்தேன். ஒருவன் மற்றவனான விந்தை புரிந்தது. அவன் முழுமையை உணர்த்த அவனோடு இயங்கிய ஏனைய பாத்திரங்கள் தங்கள் இயல்பு மாறாமல் இந்தப் புதிய பாத்திரங்களில் ஒளிந்து கொண்டிருப்பதும் தெளிவாயிற்று. நான் வியந்தேன். அவதாரத்தைப் பற்றியும், மறுபிறப்பைப் பற்றியும் தத்துவார்த்தமாக அறிந்து கொள்வது வேறு. அடிமனத்துக்குச் சென்று மறுபிறப்பின் முக்கியத்துவத்தை அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொள்வது வேறு. நம்ப முடியாத சம்பவங்களைக் கொண்டு அழகாக பின்னப்பட்ட கதைகளாக எனக்கு அதுவரை தோன்றிய இதிகாசங்கள், ஒரு காரணம் கருதி மண்ணுக்கு இறங்கி வந்த அதிமனிதர்கள் வாழ்வில் நடந்த பிரம்மாண்டமான உண்மைச்

சம்பவங்களின் கோவையே என்பது விளங்கியது. ஒவ்வொரு நாளும் ஏதோ ஒன்றைக் கண்டு கொண்டேன். அப்படிக் கண்டு கொண்டதில், மேலும் மௌனமானேன்.

இந்த நேரத்தில் டாக்டருடைய சீடர்களின் வட்டம் பெருகியது. கூட்டம் அதிகரித்ததால் நான் தனிப்பட்ட முறையில் டாக்டரோடு அதிக நேரம் செலவிட முடியாமல் போயிற்று.

இப்போது டாக்டரைச் சுற்றி எந்நேரமும் ஒரு கூட்டம். கூடியிருந்தவர்கள் எல்லாரும் அவரைப் பருகிப் பருகிக் கள்குடித்தவரே போல ஆனார்கள். அவர் கூடஇருந்தால் அவருடைய ஒவ்வொரு லேசான முகக்குறிப்பையும், சின்ன சின்ன அசைவையும் கூர்ந்து கவனித்தபடி வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர் உடன் இல்லையென்றாலோ, அப்போதும் வேறெதையும் பற்றிச் சிந்திக்கவோ பேசவோ முடியாதவர்களாய் மணிக்கணக்காய் உட்கார்ந்த இடத்தை விட்டுப் பெயராமல், தொண்டையடைக்க, மனமுருக அவரைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள், அல்லது பாடிக்கொண்டிருப்பார்கள். அவரால் அவர்கள் அடைந்த நிலை அற்புதம்! பரவசத்தில் திளைத்த அவர்கள் இவ்வுலகியலை நீத்தவர்களாய் இறைவனுடைய சாம்ராஜ்யத்தின் களங்கமற்ற பிரஜைகளாகவே மாற்றப் பட்டார்கள்.

இப்படி டாக்டரைப் பருகி அவரைச் சார்ந்திருந்தவர்களின் திறமைகள் அதிகரிக்கத் தொடங்கின. அவர்கள் வானுலகத் தேவர்களோடு கூட நடந்தார்கள்; ஞானிகளும் புனிதர்களும் ஸ்வாசித்த காற்றை ஸ்வாசித்தார்கள். களங்கமற்ற ஓர் அற்புத நிலையை எய்தியிருந்த நாங்கள் குழந்தைகள் போல் குறும்பு செய்தோம். நாய்க்குட்டிகள் திறந்து கிடக்கும் மேஜை ட்ராயரில் உள்ள பொருள்களைத் தள்ளிக்

கிளறிக் கிளறி அவற்றை ஆச்சரியத்துடன் பார்ப்பது போல நாங்களும் திறந்துகொண்டுவிட்ட எங்கள் ஆழ் மனங்களில் கிடந்தவற்றை அளைந்து அளைந்து பார்த்து ஆச்சரியப்பட்டோம். அறிவுக் கனியை உண்பதற்கு முன்பிருந்த ஆதாம், ஏவாளின் நிலைபோல் ஆயிற்று எங்கள் நிலை. எங்கள் ஆன்மாக்களை மூட அகங்காரமும் இல்லை; எங்கள் ஆவிகளுக்கு எந்த பயமும் இல்லை. எங்களுடையது என்று எதுவும் இருக்கவில்லை; ‘இல்லை’, என்பதும் இல்லவே இல்லை.

ஒன்றாகச் சிரித்தோம். ஒன்றாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தோம். கோப்பையில் இருந்த தேநீர், திராட்சை ரஸம் ஆயிற்று. டாக்டரின் மோட்டர்பைக் சப்தம் தேவ இசையாயிற்று. ஒருவர் கையை அடுத்தவர் பிடித்தபடி, அடுத்தவரின் ஆழ்மனத்தைப் படம் போல் பார்த்தோம். பார்த்ததை இப்படியும் இருக்குமா என்று விழிகள் விரிய, குரல் நடுங்க ரகஸியமாக ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டோம். எதையும் மறைக்கவில்லை.. எதையும் ஒளிக்கவில்லை. உணர்ந்தவற்றையெல்லாம் ஒன்று விடாமல் கொட்டி விட்டோம். பேசப் பேச, பேசப் பேச, கால தேச வர்த்தமானம் மாறியது. இப்போது நாங்கள் இருந்தது ஸ்ரீராமனுடன். ஆம்! சாட்சாத் தசரத மைந்தன் ஸ்ரீரகுராமனுடன் தான்! அயோத்தியில், பின் கானகத்தில், பின் போர்க்களத்தில்....பின் ராமராஜ்ய அரசவையில்..! எங்கள் தோற்றம் மாறியது. நாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்க மறுத்தோம். உலகியலுக்காக எங்களுள் ஒருவர் பிரிந்து செல்ல நேர்ந்தாலும் நேராக அவர் உணர்வில் பிரவேசித்துச் சீக்கிரம் திரும்பி வரும்படிப் பணித்தோம்.

இப்படிக் கொஞ்ச காலம் எங்கள் உயிர்கள் சங்கமித்திருக்க, பல பேருண்மைகள் எங்களுக்கு உணர்த்தப்பட்டன. ஆனால் அந்த நிலையும் முடிவுக்கு வந்தது. நாங்கள் மீண்டும் அவரவர் சாதாரண

மனநிலைக்குத் திரும்பினோம். வேறுபாடுகள் மீண்டன. இவ்வுலக வாழ்க்கை மீண்டும் எங்களைப் பற்றிக் கொண்டது. இந்த மாய உலகில் எங்களுக்கிருந்த முகவரி திரும்ப வந்து ஒட்டிக்கொண்டது. அகங்காரம் மீண்டும் எங்கள் நடத்தையின் கடிவாளத்தைக் கைப்பற்றியது.

எங்கள் ஒவ்வொருவருக்கும் இழுபறி அப்போதிலிருந்து தொடங்கியது — வெளி மனத்துக்கும் ஆவிக்கும் இடையிலான இழுபறி! வெளிமனம் உரத்த குரலில் பேசும் – ஆவியோ (Spirit) அடக்கமாகச் சொல்லும். வெளிமனத்தின் ஊக்க சக்தி பகுத்தறிவு. ஆவியின் ஊக்க சக்தியோ உள்ளுணர்வு. பகுத்தறிவு தர்க்க சாஸ்திரத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைகிறது. ஆனால் உள்ளூக்கமோ நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு மேன்மையடைகிறது. தர்க்கசாஸ்திரம், ஒரு வேளை இப்படி ஆகிவிட்டால் என்ன செய்வாய் என்று கேட்கும். ஆனால் நம்பிக்கையைப் பொறுத்தவரை எது எப்படியானாலும் மாற்றமில்லை.

எங்களுக்குள்ளே எழுந்த இந்த இழுபறியை நாங்களே சமாளித்துக் கொள்ளுமாறு விடப்பட்டோம். வெளியிலிருந்து அதிக உதவி கிட்டவில்லை. தர்க்கமே ஆன்மிகப் பாதையில் கூடாது என்று இப்போது சொல்வது எனக்குக் கடினமாக இல்லாவிட்டாலும், நான் கடந்து வந்த பாதையில் சந்தேகங்களையும், தர்க்கங்களையும் சந்தித்து மீடேறியே வரவேண்டியிருந்தது. சந்தேகங்களை உதாசீனப் படுத்திவிட்டு நம்பிக்கையை மட்டுமே ஊன்றி நடந்தேன்.

**உண்மை முதல்முறை கதவைத் தட்டியபோது**:

இந்த அனுபவம் நீடித்தவரை ஆண்,பெண் என்ற வேறுபாடே எனக்குத் தோன்றவில்லை. பழைமையில் ஊறிய சமூகத்தைச் சேர்ந்த நான், அவ்வளவாக நாகரிக வளர்ச்சி பெறாத மக்கள் மத்தியில் இருந்துகொண்டே, கட்டுப்பாடில்லாமல் சுதந்திரமாக, காற்றைப்போல்

விடுதலையில் திளைத்திருந்தது கண்டு சிலர் புருவத்தை உயர்த்தவே செய்தார்கள். இதை நான் உணர்ந்த போது என் சுதந்திர உணர்வும், துணிவும் என்னை விட்டு விலக, கட்டுப்பாடுகளின் கனம் என் இயற்கையான சுபாவத்தைத் திக்குமுக்காடச் செய்தது. நான் பேதமற்றிருந்த நிலையில் இருந்து இறங்கி மீண்டும் சரி, தவறு என பேதப் பட்டேன். விட்டு விடுதலையான நிலையில் மனம் அழிகிறது. மனம் மீண்டும் எழும் போது விடுதலை தொலைந்து போகிறது. மனத்தின் வசப்பட்டுக் குழம்பலானேன். என்னை நானே சரி பார்த்துக் கொள்ளாமல் போனேனே என்று நொந்து கொண்டேன்.

அறையைப் பூட்டிக் கொண்டு உள்ளே உட்கார்ந்து அழுதேன். "டாக்டர், நான் தவறு செய்து விட்டேனா? எப்படித் திருத்திக் கொள்வது? ஆன்மிகப் பாதையில் செல்பவருக்கு ஒவ்வாத வகையில் ஒரு வேளை நடந்து கொண்டு விட்டேனா? உங்களை வருந்தச்செய்து விட்டேனோ?" என்று பலவாறாக நினைத்து மனம் குமைந்தேன். அப்போது தொலைபேசி மணி அடித்தது.

கண்ணீர் வழியக் கதவைத் திறந்து வெளியே வந்து, தொலைபேசியை எடுத்தேன்.

"ஹலோ! டாக்டர் பேசறேன்" என்று கூறிவிட்டுச் சிரிக்கத் தொடங்கினார்.

"கவலைப்படாதீர்கள். எல்லாம் சரியாகிவிடும்", என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு மீண்டும் சிரித்தார்.

"நன்றி டாக்டர்" என்று கண்களில் மேலும் நீர் பொங்க பதிலளித்தேன். சிரித்துக் கொண்டே அவர் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்து விட்டார்.

இங்கொன்றும் அங்கொன்றுமாக எங்கள் குழுவினருக்கிடையில் முரண்பாடுகள் தோன்றினாலும் பொதுவாக நாங்கள் எல்லாரும் ஸ்ரீராம பிரானைக் குறித்த உணர்வில் ஒன்று பட்டுத் திளைத்திருந்தோம். அப்போது சூல்கொண்ட மேகங்கள் எனக்குள் சூழ்ந்தன. 'உண்மை' எனக்குள் துளிர்க்குமாறு விதையூன்ற அவை காத்திருந்தன. ஆனால் காற்று அதற்கு ஆதரவாக இல்லை. காற்றின் வேகத்தில், சூழ்ந்த மேகங்கள் கலைந்து போயின. உண்மை எனக்கு விளங்கவில்லை.

"உண்மை, உன் கதவை மூன்று முறை தட்டும்" என்று டாக்டர் கூறியிருக்கிறார். "முதல் முறை தட்டும்போது அதைப் புரிந்து கொள்வதும், அடையாளம் காண்பதும் எளிதாக இருக்கும். இரண்டாம் முறை அது தட்டும் போது அதை அடையாளம் காண்பது அவ்வளவு சுலபமாக இருக்காது. மூன்றாம் முறையோ மெத்தக் கடினம்" என்று கூறியிருக்கிறார்.

ஆம்! முதல் முறை 'உண்மை', என் கதவைத் தட்டிய போது சந்தர்ப்பத்தை நழுவ விட்டேன். கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போனது போன்ற ஒரு நிலையில் நான் இருந்து விட்டது எனக்கே புரிந்தது. கொஞ்சம் முயன்றிருந்தால் என் முன்னே நின்ற உண்மையை எட்டிப் பிடித்திருக்கலாம்தான். டாக்டரோடு பேச எனக்குக் கொஞ்சம் நேரம் கிடைத்த போது அவர் உதவியை நாடினேன். அவர் ஒன்றும் பேசாமல், புத்தர் பொம்மைக்கருகில், சுவரில் நான் ஒட்டியிருந்த போஸ்டரைச் சுட்டிக் காட்டினார். அந்த போஸ்டரில் "என் மௌனத்தை நீ புரிந்துகொள்ளாவிட்டால், என் சொற்களை நீ விளங்கிக் கொள்ளமாட்டாய்" என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. நான் மீண்டும் அவரைப் பார்த்தேன். "என் சொற்கள் உனக்குப் புரியாவிட்டால் என் வாக்கியங்கள் உனக்குப் புரியாமல் போகும்"

என்று சிரித்துக் கொண்டே ஆங்கிலத்தில் சொன்னார் டாக்டர். நான் அவரைப் புரிந்து கொள்ளவில்லை.

*************

**அவருடைய பூங்கொத்து:**

வித விதமான நிறங்களும் மணமுமாய் மலர்களும், மொட்டுகளும் எப்படி ஒரு பூங்கொத்தை அலங்கரிக்கின்றனவோ அப்படி டாக்டரின் சீடர்களிலும் வித விதமானவர்கள் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தன்மை; ஒரு தனிவிதமான அழகு. நிறைய பூக்கள்; ஆனால் பூஜை ஒன்றுதான். டாக்டரோடு தங்களை இணைத்துக் கொண்டபோது, சீடர்களுடைய பொலிவு மேலும் மெருகேறி மிளிர்ந்ததைப் பார்த்தேன்.

டாக்டரின் ஒரு சீடர் அதிகம் பேசாதவர். அவரை சூட்சும நிலைக்கு வெகு எளிதில் கூட்டிச் செல்ல முடியும் என்று டாக்டர் எங்களிடம் சொன்னார். எங்கள் முன்னிலையில் டாக்டர், இவரைக் கடலில் மீனாக வசித்துவரும் 'மச்சமுனி' என்ற சித்தரிடம், சூட்சும உடலில் அழைத்துச் சென்றார். மச்சமுனி பதினெண் சித்தர்களுள் ஒருவர். அதன் பிறகு சூட்சும நிலையில் வேறு யாரையேனும் தொடர்பு கொள்ள வேண்டுமென்றால், மச்ச முனியே அவர்களிடமும் அழைத்துச் செல்லலானார்.

அது ஒரு சூடான மத்தியான வேளை. அந்த அறையில் டாக்டரின் சீடர்கள் சிலர் குழுமியிருந்தோம். டாக்டரும் எப்போதும் போல் கண்களை மூடியபடி, ஓய்வாக நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். ஒருவர் பாட ஆரம்பித்தார். அந்தப் பாடல் முடிந்ததும் இன்னொருவர்; பிறகு அடுத்தவர்... பாடப்பாட அந்த

அறையே இசையால் நிரம்பி விட்டது போன்ற ஒரு ரம்யமான சூழ்நிலை. அப்போது தான் அது நடந்தது...அங்கிருந்த ஒரு சீடனின் நிலை மாறியது. அவன் தன் வசமில்லை; இருக்கையில் அமர்ந்தபடியே மெதுவாக அசைந்தாடினான். விழிகள் பாதி மூட இதழ்கள் பாதி திறக்க, அவனுடைய சுவாசம் வீசி வீசிக் கிளம்பிற்று. பாடலின் ஸ்ருதியும் கதியும் அவனை வேறொரு நிலைக்குத் தள்ளிப்போய் வேறொரு உலகத்தின் தாளத்துக்கு லயமாக்கின. உட்கார்ந்துதான் இருந்தான். ஆனால் அவன் உடல் ஒருவித நடனத்தின் வசப்பட்டது. கைகளை ஓங்கித் தூக்கி நிறுத்தினான், ஆடிக்கொண்டே! நாகம் படமெடுப்பது போல் இருந்தது அந்த நடனம். கைகளைச் சேர்த்துப் பரவசத்தில் கும்பிட்டான். நாக்கை லேசாக நீட்டி நீட்டிக் கண் மயங்கினான். அமுதம் தான் பருகி விட்டானோ! சுவாசத்தின் வீச்சு இன்னும் அதிகமாயிற்று...இன்னும்..இன்னும். டாக்டர் என்ன செய்கிறார் என்று பார்க்க அவர் பக்கம் திரும்பினேன். அவரோ நடப்பதைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர் போல் கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தார்.

என் வேண்டுகோளுக்கிணங்க, டாக்டர் இரண்டு மூன்று முறை என் கூட இருந்த சிலரின் உட்கருவை வெளிப்படுத்தியிருக்கிறார். சில சமயம் வெளிப்படையாகவும், சில சமயம் மானஸீகமாகவும் நான் டாக்டரிடம், என் நண்பர்கள் சிலர் உண்மையில் யார் என்று வினவியிருக்கிறேன். என் கேள்விக்கு டாக்டர், வெளிப்படையாக பதிலேதும் தரமாட்டார். ஆனால், நான் யாரைப் பற்றிக் கேட்டேனோ, அன்னாருடைய நடை, உடை, பாவனை திடீரென்று மாறும். அந்த மாற்றத்தில் அவர் யார் என்பது எனக்குத் தெளிவாகும். ஒரு சில நிமிடங்களே அந்த மாற்றம் நீடிக்கும். பின்னர் மீண்டும் பழையபடி, அவர் தம் சாதாரண நிலைக்கு வந்து விடுவார்.

**எதனோடும் தொடர்பில்லாமல் தனித்த நான்:**

இப்படியாக நாட்கள் நகர்ந்தன. என்னோடு உரையாடுவதை டாக்டர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு வந்தார். நான் அவர் சன்னிதியில் மௌனமாக உட்கார்ந்திருப்பேன். சில சமயங்களில் அப்படியே மணிக்கணக்கில் இருப்பேன். அவரைச் சுற்றி எப்போதுமே பிற சீடர்கள் இருந்தபடியால், எனக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. டாக்டர் எனக்கு புத்தபிரானைப் பற்றிய புத்தகம் ஒன்றைத் தந்திருந்தார். அந்தப் புத்தகத்தால் எனக்கு நேர்ந்த அனுபவத்தை இங்கே நான் சொல்ல வேண்டும்.

ஒரு ரயில் பயணத்தின்போது அப்புத்தகத்தை நான் படித்து முடித்தேன். புத்தரின் வாழ்க்கை, அவரது போராட்டம், ஒவ்வோர் உயிரும் ஏறி இறங்க வேண்டிய மேடு பள்ளங்களை நேர் செய்ய அவர் மேற்கொண்ட முயற்சி, இவை யாவும் என்னை ஆழமாக பாதித்து விட்டன. புத்தகத்தை முடித்தபின் அசையாமல் அமர்ந்துவிட்டேன் போலும். என் மகள் என்னைத் தொட்டசைத்துத் தன்கூட வருமாறு அழைத்தாள். ஏதோ எழுந்து அவளோடு போனேன். போன இடத்தில் கண்ணாடியில் பிரதிபலிப்பு என் கண்ணில் பட்டது. நிமிர்ந்தேன்; கண்ணாடியில் என் உருவம். அதைக் கண்ணுற்றதும் ஒரு வினோதமான உணர்வு என்னைப் பற்றிக் கொண்டது. என் உருவம் எனக்கு விநோதமாக இருந்தது. புத்தரைப் பற்றிய புத்தகத்தைப் படிக்கப் படிக்க என் நாம ரூபத்தைக் கடந்த நிலைக்கு என் உணர்வு சென்று விட்டது போலும். கண்ணாடியில் தெரிந்த பிம்பம் எனக்கு ரூபம் இருப்பதை நினைவுபடுத்தியதும் திடுக்கிட்டுப் போனேன். புத்தரோடு நான் மேற்கொண்ட பயணம், வெங்காயத்தை உரிப்பதுபோல் என் மனத்திரைகள் ஒவ்வொன்றிலிருந்தும் என்னைப் பின்தள்ளி, நான் என்னவாகவெல்லாம் இருக்கிறேனோ,

அதற்கெல்லாம் மையமாக, ஆதாரமாக விளங்கும் களங்கமற்ற சிதாகாசமாக, எதனோடும் தொடர்பில்லாத நானாக விளங்குமாறு பண்ணியிருந்தது.

ஒவ்வாத சூழ்நிலையும், பிரச்னைகளும் எனக்குச் சுமையாகிப் போன போதெல்லாம், கடலின் மேற்புறத்தில் தோன்றும் அலைகளைப் போலத்தான் குழப்பங்கள், என்று டாக்டர் என்னை தைரியப்படுத்துவார். கடலின் ஆழத்தில் எந்தத் தாக்கத்துக்கும் அசையாத அமைதி எப்போதும் உண்டு. மேலாகத்தானே அலைகள் இருக்கும்? அப்படித்தான் மனமும். வெளியில் ஆர்ப்பரிக்கும் சலனங்கள் இருக்கலாம். உள்ளே, ஆழத்துக்கு இறங்கிவிட்டால் எந்தச் சலனமும் நெருங்க முடியாது. இறைவனின் விளையாட்டில் பாத்திரங்களாகப் பங்கேற்கும் ஒவ்வொருவருக்கும், தொடர்ந்து நடிக்கவோ அல்லது நடிப்பிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவோ உரிமை உண்டு. தொடர்ந்து நடிப்பவர், மனத்தின் ஆழத்துக்குச் சென்று கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு, பிறகு மீண்டும் நடிக்கவும் வரலாம். இப்படி ஒரு சலுகையைத் தந்திருக்கும் இறைவனின் பெருங்கருணையை நான் உணருமாறு டாக்டர் செய்தார்.

**********

### பேரின்பத்துள் கரைதல்:

டாக்டரின் சீடர்கள் சிலர் மைசூரில் இருந்ததாலும், அவரை வரவேற்று உபசரிக்க அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்ததாலும், டாக்டர் அங்கு செல்லத் தீர்மானித்தார். முந்தைய அனுபவத்தால் நான் அடைந்த பரவச நிலை அடங்கி ஒரு வெறுமை இப்போது என்னைச் சூழ்ந்து கொண்டிருந்தது. எதிலும் ஈடுபாடில்லாத ஒரு வறண்ட உணர்வாக உலவி வந்தேன். எதிலுமே பிடிப்பில்லாமல் இருந்தேன்.

இந்த நிலையில் டாக்டரோடும், பிற நண்பர்களோடும், மைசூர் சென்று வருவதில் எனக்கு ஈடுபாடு இல்லை. என் மனமும் உணர்ச்சிகளும் எதைத் தேடினவோ,அது கிடைக்காத ஆயாசத்தில் நான் ஒடுங்கிக் கிட்டத்தட்ட ஒரு ஜடம்போல் ஆகிவிட்டேன். கடைசி நேரத்தில் மைசூர் பயணத்தில் என்னையும் டாக்டர் சேர்ந்து கொள்ளச் சொன்னதால், நானும் அவர்களோடு பயணமானேன். நாங்கள் சென்ற வாகனம் கிளம்பிய கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பழுதடைந்து நின்று போயிற்று. அப்போது இரவு மணி பதினொன்று இருக்கும். அதைச் சரி செய்வதற்கு உதிரி பாகங்கள் வாங்கச் சிலர் சென்றுவிட, டாக்டரும் நாங்கள் நான்கைந்து பேர்களும் அருகிலிருந்த ஏரிக்கரையில் அமர்ந்து கொண்டோம். எங்களோடு வந்திருந்த ஸ்ரீகண்டசாமி பாட ஆரம்பித்தார்.

**'தூ மாஜா யஜமான், ராமா!'-** 'ராமா, நீ என்னுடைய தலைவன்!'

நான் பாட்டில் லயித்தேன். தொண்டையை அடைத்தது. அந்த இரவைப் போலவே டாக்டரும் அமைதியாக அமர்ந்திருந்தார். அந்தக் கணம் நீண்டு அப்படியே நிலைத்து விடாதா என்றிருந்தது எனக்கு.

மைசூரிலிருந்து திரும்பி வரும் வழியில், நான் டாக்டரிடம் கேட்டேன்

" ஏன் ரொம்ப வெறுமையா இருக்கு டாக்டர்".

"தொடர்ந்து தியானம் பண்ணுங்க" என்றார் டாக்டர் கொஞ்சம் சூடாக.

தியானம் செய்ய வேண்டும் என்றுகூட எனக்குத் தோன்றவில்லை. ஆனால் அதை நான் டாக்டரிடம் சொல்லவில்லை.

எந்தவித முனைப்போ, குறிக்கோளோ இல்லாத நிலையில், வெற்றுக்கு இருந்தேன். எதையும் எதிர்பார்த்துக் காத்திருக்கவும் இல்லை.

சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் இரவு தூக்கத்திலிருந்து பளிச்சென்று விழித்துக் கொண்டேன். நான் மெதுவாக, மெதுவாகக் கரைந்து போய்க் கொண்டிருந்ததை உணர்ந்தேன். எது என்னை சங்கல்பித்துத் தோற்றுவித்ததோ அதில் கரைந்து கொண்டிருந்தேன். இங்கே, நான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உதாரணத்தைத் தான் திரும்பச் சொல்ல வேண்டும். வரையரை இல்லாத சர்க்கரை நீர்க்கடலில், நான் ஒரு சர்க்கரை பொம்மையைப் போல் கரைந்து கொண்டிருந்தேன். சிறிது சிறிதாக நான் கரைந்து கொண்டிருக்க, இன்னும் மிச்சமிருந்த அந்த மீதிக் கொஞ்சமான 'நானும்', அந்த முழுமையில் மொத்தமாகக் கரைந்தே விட வேண்டுமென்று ஆவலுற்றுத் தன்னால் இயன்றவரை யாசித்துப் பிரார்த்தித்தது. ஆனால் 'முழுமை' இம்மணமகளை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. இறைவனுடைய சங்கல்பம் வேறாக இருந்தது. என் தனித்துவத்துக்கு நான் திருப்பித் தள்ளப்பட்ட போது, டாக்டர் என் கூட இருப்பதை உணர்ந்தேன். பிறகு உறங்கி விட்டேன்.

************

## ஒவ்வொன்றையும் அவர் ஊடுருவிப் பார்த்தார்:

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்க்ருதப் பேராசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த திரு. சுந்தரத்திடம் நான் சமஸ்க்ருதம் பயிலத் தீர்மானித்தேன். அவரையும் டாக்டரையும் பற்றிய ஒரு சம்பவத்தை இங்கே நினைவுகூர வேண்டும்.

நானும் டாக்டரும் என் அலுவலக அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது என் அறை வாசலுக்கு வெளியே திரு. சுந்தரம் கடந்து செல்வதைப் பார்த்தேன். எழுந்து போய் அவரிடம் பேசிவிட்டு, அவர் என் சகஊழியர் ஒருவரைத் தேடி வந்திருப்பதை அறிந்து, அவர் இருக்கும் அறையைக் காண்பித்து விட்டு, என் இருக்கைக்குத் திரும்பினேன். அப்போது டாக்டர், தன்னை அவருக்கு ஏன் அறிமுகப்படுத்தவில்லை என்று என்னைக் கேட்டார். எனக்கோ வியப்பு. டாக்டர் பிறரிடமிருந்து ஒதுங்கிப் போய் விடுவதையே பார்த்துப் பழக்கப்பட்ட எனக்கு, அவரும் ஒருவரைச் சந்திக்க ஆவல் கொண்டது ஆச்சரியமாக இருந்தது. என் வியப்பை மறைத்துக் கொள்ளாமல், அவரைச் சந்திப்பதில் டாக்டருக்கு என்ன அவ்வளவு ஆர்வம் என்று வெளிப்படையாகவே கேட்டேன். ‘இப்படி ஒரு நல்ல மனிதரைச் சந்திப்பது மிகவும் கடினம். அதனால் தான்’ என்று டாக்டர் நேரிடையாக பதிலளித்தார்.

பின்னொரு நாள் டாக்டர் இப்பேராசிரியரை சந்திக்கவே செய்தார் – பேராசிரியரின் வீட்டில், ஒருவருக்கொருவர் முகமன் கூறியதைத் தவிர இருவரும் வேறெதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஒருவர் தம் மரியாதையை மௌனமாகச் செலுத்தினார். மற்றவர் அதைப்பற்றி ஏதும் அறியாதவராய் எப்போதும் போல் தம்மளவில் அமைதியாக இருந்தார்.

முன்னொரு சமயம், நான் குரு தத்தாத்ரேயர் அருளிய ‘த்ரிபுர ரகஸ்யம்’ என்ற ஸம்ஸ்க்ருத நூலின் ஆங்கில மொழியாக்கத்தைப் படித்திருந்தேன். அது எனக்கு நல்ல தெளிவைத் தந்திருந்தபடியால், அவரே எழுதிய ‘அவதூத கீதை’யில் உள்ள ஈரடிப் பாடல்களை எனக்கு விளக்குமாறு சமஸ்க்ருதப் பேராசிரியரைக் கேட்டுக் கொண்டேன். அதில் எனக்கு மிகவும் பிடித்த ஒரு பாடலை நான் மனனம் செய்தேன்.

வேண்டுமென்று செய்தேனா அல்லது என்னை அறியாமல் அப்படி ஆயிற்றா என்று தெரியவில்லை. அந்தப் பாடலை ஒரு மந்த்ரம் போல் மீண்டும் மீண்டும் எனக்குள் சொல்லிக் கொண்டே இருக்கலானேன்.

**'யேனேதம் பூரிதம் ஸர்வம் ஆத்மனைவ ஆத்மனாத்மனி**
**நிராகாரம் கதம் வந்தே ஹி அபின்னம் சிவம் அவ்யயம் '**

'அனைத்தையும் தன்னால் நிரப்பி, என் ஆத்மாவையும் தன்னால் நிரம்பியிருக்கச் செய்யும் உருவமற்றதை, மாற்றமில்லாததை, பின்னமாக்க முடியாத சிவமயத்தை நான் எப்படித் தொழுவேன்!' இந்த இரண்டு வரிகளும் என் மனத்தில் ஓடிக்கொண்டே இருந்தன. முடிய முடியத் தொடங்கி இந்த வரிகள் ஒரு சுழல்போல் என்னை ஆக்கிரமித்தன. அன்று டாக்டரைச் சந்தித்தேன். அன்று நண்பர்கள் சிலரே எங்களோடு இருந்தார்கள். எப்போதும்போல் நான் பேசாமல் இருந்தேன்; எனக்குள்ளே இந்தப் பாடல் ஓடிக் கொண்டிருந்தது. திடீரென்று டாக்டர் என் பக்கம் திரும்பினார்.

"அஹம் ப்ரம்மாஸ்மி, அஹம் ப்ரம்மாஸ்மி", என்று திரும்பத் திரும்பச் சொல்வதால் உங்களுக்கு என்ன கிடைத்துவிடப் போகிறது என்று புருவத்தைச் சுருக்கியபடி என்னைப் பார்த்துக் கேட்டார். நான் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனேன். பிறகு, சத்குரு கிடைப்பது எவ்வளவு பெரிய விஷயம் என்று நினைத்துக் கொண்டேன்.

************

**ப்ரம்ம வித்தை:**

இந்தக் காலக்கட்டத்தில்தான் டாக்டர் எங்களுக்கு 'பிரம்ம வித்தை'யைப் பயிற்றுவித்தார். சென்னைக்கருகே, திருவள்ளூர் என்ற ஊரில் இருக்கும் பழமையான சிவன் கோயில் ஒன்று அதற்கேற்ற

இடமாக அமைந்தது. சூரியன் உச்சியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த நேரமது. வறண்ட பூமி; ஆளரவம் இன்றிக் கோயில் வெறிச்சோடிக் கிடந்தது. டாக்டரோடு நாங்கள் ஆறு அல்லது ஏழு பேர் இருந்தோம். வெளிப்பிரகாரத்தில், திண்ணையொன்றில், வட்டமாக அமர்ந்து கொண்டோம். மனிதன் இறுதி நிலையாகிய பிரம்ம நிலையை அடைவதற்குக் கடந்து செல்லவேண்டிய பதினோரு படிகளைப் பற்றி டாக்டர் எங்களுக்கு விளக்கினார். மறதியெனும் சேற்றில் வீழ்ந்த உயிர் ஒவ்வொன்றும் இந்தப் படிகளில் விடாமுயற்சியுடனும் பரம்பொருளின் துணையோடும் ஏறிக் கொஞ்சங்கொஞ்சமாகத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு மேன்மேலும் நுட்பமான உணர்வு நிலைகளுக்குத் தன்னை உயர்த்திக் கொள்கிறது.

எந்தக் கட்டுக்கோப்பும் இல்லாத அகங்காரத்தில், ப்ரம்மத்தில் இருந்து வெளிப்பட்ட தூய உணர்வு சிக்கிக் கொள்கிறது. **(தூய உணர்வு என்பது pure consciousness. அதை மையமாகவும் காரணமாகவும் கொண்டு உருவாகும் தனி உயிர், அதற்கு அனுபவம் எதுவும் இன்னும் ஏற்படாததால் அறிவற்ற நிலையில் இருக்கிறது. அனுபவத்தால் கிடைப்பதே அறிவு. உயிர் என்பது, [a] எடுத்திருக்கும் உடல் -- அதாவது ஸ்தூல சரீரம், [b] முதல் முனைப்பு {basic tendency}, அனுபவத்திரட்சி, வினைத்தொகுப்பு ஆகியவை அடங்கிய ஸூக்ஷ்ம சரீரம், [C] சாட்சியாக இருக்கும் தூய ப்ரக்ஞை.).** பஞ்ச பூதங்களே இதன் அகங்காரத்தின் மேல் அடுத்தடுத்து ஆதிக்கம் செலுத்தும் அதிகாரிகள். மாறிமாறி வரும் வெவ்வேறு ஆதிக்கங்களால், ஒழுங்கற்ற எதேச்சையான போக்கில், பேதங்களின் நடுவில் இருந்துவரும் இந்த உயிர் அதன் பயணத்தில் எங்கோ ஒரு **ஸ்ருதி கலையாத ஒருமைப்பாட்டைச்** சந்தித்து அதன் தொடர்பால் அதை உணர்ந்தும் கொள்கிறது. அதன் இனிமை இந்த உயிரைத் தொற்றிக் கொண்டு

அகங்காரத்தை ஊடுருவி இதன் போக்கையும் திருத்தத் தொடங்குகிறது. கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்தப்பட்டு அகங்காரம் மேன்மை பெறப்பெற, சிறைப்பட்டிருக்கும் உயிரும் ஒவ்வொரு படியாக ஏற்றப்படுகிறது. பத்தாவது, பதினொன்றாவது படிகளை அடையும் போது, பன்னிரெண்டாம் படியின் நுழைவாயிலான **உண்மை**யெனும் பீடத்தில், ***தன் நிலையற்ற தன்மையை உணர்ந்துவிட்ட, முழுமை பெற்ற*** அகங்காரத்தைத் திருப்பிக் கொடுத்து விடத் தன்னைத் தயாராக்கிக் கொ ள்கிறது.

பத்து, பதினொன்றாம் படிகளைக் கடப்பதற்கான ஆற்றலை, இந்தத் தனி உயிரானது தவத்தால் அகங்காரத்தை எரித்து எரித்துத்தான் பெறுகிறது. அகங்காரத்தை ஆகுதியாக்கியபடி, பன்னிரண்டாம்படி வாசலில் தூய ப்ரக்ஞையாக ***அடிக்கடி*** வந்து காத்திருக்கும் ஆத்மாவை பிரம்மம், இரண்டறத் தன்னில் கரைந்துவிட அனுமதிக்கும் வரை தவம் தொடர்கிறது.

இயங்குவது அகங்காரம். அதன் மையமாக இருப்பது, இயங்காமல் சாட்சியாக தூய உணர்வாக இருக்கும் ஆத்மா. மாற்றமும் பரிணாம வளர்ச்சியும் அகங்காரத்துக்கு மட்டுமே. சாட்சியாக விளங்கும் ஆத்மாவுக்கு எந்த மாற்றமும் இல்லை. பிரம்மத்திலிருந்து ஒரு தனி உணர்வாகப் பிரிந்தது முதல், அது மீண்டும் பிரம்மத்தோடு இரண்டறக் கலப்பது வரை, ஆத்மாவுக்கு மாற்றமும் இல்லை, வளர்ச்சியும் இல்லை.

அகங்காரத்தின் இயக்கம் இரண்டு வகை. இந்த இருவகை இயக்கங்களுக்கும் முறையே, '**எதிர்செய் இயக்கம்**', '**நேர்செய் இயக்கம்**' என்று பெயரிடலாம். **எதிர்செய்** இயக்கம், தீவிரமான விருப்பு, வெறுப்புக்களால் தனித்தன்மையைச் செதுக்கி அகங்காரத்தை பலப்படுத்துகிறது. இந்தத் தனித்தன்மை உச்சத்தைத் தொட்ட பிறகு

அகங்காரத்தின் இறங்குமுகம் தொடங்குகிறது. இறங்குமுகத்திற்கு **நேர்செய்** இயக்கம் பொறுப்பேற்றுக் கொள்கிறது. நேர்செய் இயக்கம் அகங்காரத்தை அதன் ஆரம்ப நிலைக்கு மீண்டும் கொண்டுசென்று, அதன்மூலம் அகங்காரத்தின் நிலையற்ற தன்மையை அதற்குப் புரிய வைக்கிறது. நேர்செய் இயக்கம் அகங்காரத்தின் பொறுப்பைத் தன் வசம் எடுத்துக் கொண்ட கணம், அகங்காரம், பிரம்ம வித்தை விவரிக்கும் சிறப்பான பன்னிரண்டு படிகளின் கட்டத்தை அடைகிறது. முதல் பதினோரு படிகளை**யும்** முறையே அவை ஒவ்வொன்றுக்கும் பிரத்யேகமாக விளங்கும் புலமைகளை**யும்**, இறுதியாகப் புலமைகளை ஒன்றன் பின் ஒன்றாகப் புதைத்துவிட்ட நிலையில் ஆத்மாவானது ப்ரம்மத்தில் கலந்து விடும் பன்னிரண்டாம் படியை**யும்** பிரம்ம வித்தையானது விளக்குகிறது.

முதல் பதினோரு படிகளுக்கும் அந்தந்தப் படியைப் பரிபாலிக்கும் தெய்வம் உண்டு. இத்தெய்வங்கள், அந்தந்தப் படியைப் பொருத்த புலமையால் உணரக்கூடிய இறை வெளிப்பாடு. ஒரு படியை அல்லது நிலையைப் பரிபாலிக்கும் தெய்வத்தை முழுமையாக்கும் துணைகளும், உதவியாளர்களுமாக இறைத்தன்மை கொண்ட சமூகமே ஒவ்வொரு நிலையிலும் அமைந்துள்ளது. ஒவ்வொரு படியிலும், தலைமைத் தெய்வமும் அவர் சமூகமும், பரிணமித்துவரும் அகங்காரத்தின் முதல் முனைப்புக்குத் (basic tendency) தகுந்தவாறு **மூல மாதிரிகளாக** அமைகின்றனர். மூலமாதிரியே பூமியில் பிறப்பெடுப்பது தான் **அவதாரம்**. **நேர்செய்** இயக்கத்தில் பரிணமிக்கும் அகங்காரம் ஒரு படியின் மூலமாதிரியை அப்படியே பிரதிபலித்து பூமியில் பிறப்பெடுப்பதுதான் **அம்சம்**. மூலமாதிரியின் எண்ணிக்கை மாற்றமில்லாதது. ஒரு மூலமாதிரிக்கு ஒரே நேரத்தில் இரண்டு அவதாரம் இருக்காது. ஆனால் அவதாரமும் அம்சமும் ஒரே காலக்கட்டத்தில் அமையலாம்.

ஒரு குறிப்பிட்ட நிலையில் அல்லது படியில் நிற்கும் அகங்காரத்துக்கு, அந்தப் படியில் ஆட்சி செய்யும் தெய்வமே குரு. ஆகவே பிரம்மத்தோடு ஒன்று கலக்க இன்னும் மேலே போக வேண்டும், அந்தப் படியிலேயே தங்கிவிடக் கூடாது என்பதை அந்த அகங்காரத்துக்கு அறிவுறுத்தி அதை நகர்த்தி விடுவது அந்த தெய்வத்தின் கடமையாகிறது. ஒரு குறிப்பிட்ட படியில் இருந்து ஒரு குறிப்பிட்ட புலமையை முழுமையாக கிரஹித்துக் கொண்ட பின், அந்தப்படியில் சற்று இளப்பாறி, தெய்விகத்தின் ஒரு பரிமாணத்தைப் பருகச் சில காலம் அனுமதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு வசதியாக இருக்கும் அந்நிலையில் இருந்து அது நகர்த்தப்பட்டு, வேறு புலமை அல்லது திறனைத் தெளிந்து கிரஹித்துக் கொள்ளுமாறும், தெய்விகத்தின் வேறொரு பரிமாணத்தைத் துய்த்துப் பருகுமாறும் ஆற்றுப்படுத்தப்படுகிறது.

**மூலமாதிரி**யே கூடச் சில சமயம் பிரம்மத்தில் கரைந்து விடலாம்., ஆனால் காலப்போக்கில் மீண்டும் தோன்றி தன் நிலையில், தன் இயக்கத்தைத் தொடர்கிறது. இப்படியாக அமைப்பும் அதன் செயல்பாடும் மாறாமல் தொடர்கிறது.

இந்த அமைப்பை 'பிரம்ம வித்தை' போதிக்கிறது. 'பிரம்ம வித்தை'யை இடைவிடாமல் நாற்பத்தைந்து நாட்களுக்கு முறையாகப் பயிற்சி செய்பவருடன் பிரபஞ்சம் தன்னுடைய வழிமுறைகளையும் ரகசியங்களையும் பகிர்ந்து கொள்கிறது. அப்படிப்பட்டவர் தொடர்ந்து இருப்பதும், பிரம்மத்தில் கரைந்து விடுவதும் கூட அவர் விருப்பமே. அவர் பிரம்மத்தில் கலந்து விடலாம், அல்லது 'நான்' என்றொரு தனித்துவத்தைப் புனைந்து வரலாம். நான் என்றிருந்த பிரக்ஞைத் துளி ஏகமாகிய பிரம்மத்தில் முற்றிலும் கலந்த பின் கூட மீண்டும் வெளியே தள்ளப் படலாம்.

**இயேசு கிருஸ்து:**

சிறு வயதிலிருந்தே, பிற தெய்வங்களையும், புனிதர்களையும் காட்டிலும், இயேசு எனக்கு அணுக்கமானவர். வகுப்பறையில், எழுதவோ, படிக்கவோ, செவிசாய்க்கவோ வேண்டாத நேரங்களில், அங்கிருந்த இயேசுவின் படத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பேன். நான் வளர வளர, விவரம் புரியப் புரிய, அவர் பால் நான் கொண்ட அன்பும், அபிமானமும் அதிகரித்தன. இயேசுவின் 'இரண்டாம் வருகையை' நான் பார்ப்பேனா என்று என்னை நானே கேட்டுக் கொண்டதுமுண்டு. அவர் மீண்டும் இவ்வுலகுக்கு வருவாரா என்று டாக்டரைக் கேட்டேன். 'ஆம்' என்றார் டாக்டர்.

"எப்போது வருவார் டாக்டர்?" என்று ஆவலோடு கேட்டேன்.

"1996 ல்" என்று பதில் அளித்தார் டாக்டர். ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்றிலோ, எண்பத்து நான்கிலோ, இப்படி டாக்டர் எனக்கு பதில் சொன்னார்.1996 ல், இயேசுவை சந்தித்துவிடுவேன் என்று அப்போது நம்பினேன்.

தொடர்ந்து, முறையாக தியானம் செய்ய வேண்டும் என்று டாக்டர் கூறும்போதெல்லாம், 'அப்போதுதான் ஒவ்வொருவருக்குள்ளும் பரிசுத்த ஆவி இறங்கும்' என்றும் கூறுவார். எங்களுக்கு பிரம்ம வித்தை கற்றுக் கொடுக்கப்பட்ட போது, சிறிது நேரம் தியானம் செய்யுமாறு நாங்கள் பணிக்கப்பட்டோம். அப்போது இரண்டு ஒளிக் கோளங்கள் மேலிருந்து இறங்கி எங்களை அடைந்ததைப் பார்த்ததாக எங்களுள் ஒருவர் சொன்னார்.

அன்றிலிருந்து என் உணர்வில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஏனோ இயேசுவையே நினைத்துக் கொண்டிருக்கத் தொடங்கினேன்.

வேறெதையும் என்னால் எண்ண முடியவில்லை. என் இனிய கண்ணனும் பரிசுத்தமான ராமனும் விலகி வழிவிட, இயேசுபிரான் என்னை ஆட்கொண்டார். டாக்டரின் வேறு இரண்டு சீடர்களும் அவ்வண்ணமே இயேசு உணர்வில் மூழ்கி விட்டனர்.

நான் இயேசுவில் வாசம் செய்தேன். அவருடைய வேதனையில் மனித குலத்தின் அறியாமை எனக்குச் சுமையாயிற்று; அவருடைய அன்பில் மனித குலத்தின் இயலாமை எனக்கு விளங்கியது. அவருடைய தனிமையில், பிரார்த்தனையின் சக்தி புரிந்தது. அவரே போராடித் துவண்ட போது, மாயையின் வலிமையை நேருக்குநேர் பார்க்க முடிந்தது.

"பரலோகத்திலிருக்கும் எம் பிதாவே, உம் பெயர் உயர்ந்த போற்றுதலுக்குரியதாகட்டும். உமது ஆட்சி மண்ணுக்கும் வரட்டும். தங்கள் சித்தம் பரலோகத்தைப் போல் இகலோகத்திலும் நிகழட்டும். இன்று எமக்கான உணவைத் தாருங்கள்; பிறர் எமக்கிழைக்கும் தீங்கை நாங்கள் மன்னிப்பதுபோல் நீங்களும் எங்கள் தவறுகளை மன்னித்து விடுங்கள். நாங்கள் ஆசையால் அலைக்கழிக்கப்படாமல் எங்களைத் தடுத்துத் தீமையிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் – ஆமென்.'

உலகுக்கு இயேசு நாதர் கற்றுத் தந்த இந்த எளிமையான பிரார்த்தனை வெறும் வார்த்தைக் கோவையில்லை. இதுவே அவருடைய வாழ்க்கையின் சாரம். இதில் ஒவ்வொரு சொல்லும், அவருடைய கருணை பொங்கித் ததும்பும் ஒரு புனித பாத்திரம்.

இயேசுவின் வேதனையை நான் உணர்ந்த அதே சமயம் அதன் பின்னணியில் எல்லாரையும் விஞ்சி உயர்ந்து நின்ற அவருடைய தனித்துவமும் எனக்குப் புலனாயிற்று. அப்படிப்பட்டவர் சிந்திய இரத்தத்தில் ஒன்றுபட்டவர்களுக்குள்ளே கூட வேறுபாடுகளும், பிரிவினைகளுமா என்று எண்ணும்போது வலிக்கிறது.

அவர் சவுக்கடி பட்டார். துன்புறுத்தப் பட்டார். சிலுவையைச் சுமந்தார். சிலுவையில் அறையப் பட்டார் – மனிதர்கள் அப்படியும் இன்னும் படிப்பினை பெற்றாரில்லை. சமூகத்தின் அடித்தளத்திலிருந்து மீண்டும் அவர் வால்நட்சத்திரமாக எழுவார். அதை உணர்ந்து தெளிவதற்குள் மீண்டும் மறைவார். அவரோடு இருந்தவர்களும், அவருக்கு எதிராகக் கிளர்ந்தவர்களும் மீண்டும் அவர் புகழ் பாடி அவரை விளக்க முற்படுவார்கள்.

சமய நூல்களை ஒதுக்கி வைக்க இதுவே தருணம். இதய வாசலைத் திறந்து வைத்து உள்ளே அன்பால் ஒளி கூட்டுங்கள். அவர் எளிமையானவர் – கடினமானவற்றை நீங்கள் விட்டொழித்தால் அவரைக் கண்டுகொள்ள முடியும். அப்படி அவரை இனங்கண்டு கொள்வீரானால் உங்கள் புத்தி குறுக்கிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வரப்போகும் சந்ததியினருக்கு ஒரு வார்த்தை – மீண்டும் அவரைச் சுற்றி ஒரு மதத்தை வலைபோல் பின்னிவிடாதீர்கள். அவரை ஒரு மதத்துக்குள் சிறை வைக்க முடியாது. ஒரு பிரிவினர் மட்டும் அவரைச் சொந்தம் கொண்டாட முடியாது. தனியொரு மனிதன் அவரைப் புரிந்து கொள்வதே கடினம் என்னும் போது அவரை விளக்கத்தான் முடியுமா?

அவரிடம் மனம் கசிய வேண்டிக் கொள்ளுங்கள். மானுடத்தின் மைந்தனைச் சேர நிபந்தனை ஏதும் விதிக்காதீர்கள். அவர் நாமம் கேட்டதும் கண்பனித்தால், உள்ளே பரிசுத்தமானோம் என்று கொள்ளுங்கள்; விடுதலையானோம் என்று பாடுங்கள். சொன்னதைக் கேட்கும் ஆட்டுக் குட்டியாய் அவர் அரவணைப்பில் இருந்து விடுங்கள். பிரபஞ்சத்தின் தந்தை ஒருவரே –அவரே இவர். டாக்டருடைய பாடலொன்று இங்கு நினைவுக்கு வருகிறது. அப்பாடலில் ஒவ்வொரு சரணத்திலும் முத்தாய்ப்பாக வரும் வரிகள்

இவை:

**"பிஸ்மில்லா ரஹ்மான் ஹரி அல்லேலூயா ஓம் நமச்சிவாயா"**.

இயேசு உணர்வில் நான் லயித்திருந்த இந்தக் காலக் கட்டத்திலும் பல உண்மைகள் எனக்கு அறிவிக்கப்பட்டன. மனோரீதியாக இயேசு வாழ்ந்திருந்த காலத்துக்கே நான் அழைத்துச் செல்லப்பட்டேன். என் அனுபவங்களை டாக்டரின் சீடன் வேறொருவனும் பகிர்ந்து கொண்டான். ஒரே மாதிரியான மன நிலையில் நாங்கள் இருவரும் இருந்ததால் இருவரும் பெரும்பாலும் சேர்ந்தே இருப்போம். எங்கள் அனுபவங்களை என்னால் முழுமையாக விவரிக்க இயலாது.

இயேசுவின் உணர்வில் லயித்திருந்த நாங்கள் ஒரு நாள் ஒரு நண்பர் வீட்டில் சந்தித்தோம். ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில் எங்கள் மனச்சூழலில் ஒரு பெரும் மாறுதல் – அபூர்வமாக ஏதோ ஒன்று எங்களுக்குள் நிகழ்வதை நாங்கள் உடனே உணர்ந்தோம். என் நண்பன் கண்கள் அகல விரிய வெட்ட வெளியைக் கொஞ்ச நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்த்ததை நானும் பார்க்க முயன்றேன். ம்ஹூம்! முடியவில்லை. ஆனால் அந்த நிகழ்வின் கனம் என்னைத் தாக்கியதால் மௌனம் காத்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்துக்குப் பின், சிலுவையில் அறையப்பட்ட நிலையில் ரத்தம் வழிய இயேசுவின் தோற்றம் தெரிவதாகச் சொன்னான் என் நண்பன்.

"அவருடைய வலியை நானும் உணர்கிறேன்" என்று தவித்தான் என் நண்பன். நுட்பமான அதிர்வுகளை உணரும் தன்மை கொண்ட அவன் 'மனிதனின் மகன்' அனுபவித்ததை அப்படியே பிரதிபலித்தான். தன் தேகத்தில் ஆணி இறங்கியது போல் அவதியுற்றான். விலாவைத் துளைத்துச் சென்ற ஈட்டியின் கூர்மையில்

துவண்டான். முள்முடி தலையில் தைக்க, முனகினான். கண்களை மறைத்த இரத்தப் பெருக்கைக் கைகளால் துடைத்துத் துடைத்துப் பார்த்தான். அவன் 'காட்சியாகப்' பார்த்தவற்றை நான் பார்க்கவில்லை. ஆனால் என் நண்பனின் வடிவில் நான் அவரைப் பார்த்தேன். உடனே அவரைத் தெரிந்து கொண்டேன். அவர் வலியை நான் உணர்ந்தபோது நேசத்தில் நான் மீண்டும் முழுமையாக மலர்ந்தேன். அவருடைய தாகத்தில் நான் பனிக்கட்டியாக உருகினேன். அவர் தனிமையில் நான் மண்டியிட்டுக் கூடவே இருந்தேன்.

துன்பத்தைக்கூட அழகுடையதாக்க இறைவனால் மட்டுமே முடியும். அம்மம்மா! அழகிய, மிக அழகிய நாட்கள் அவை. அந்நாட்களில் வேறொருவரிடமும் எங்களைத் தொடர்பு படுத்திக் கொள்ள முடியவில்லை. எங்கள் அனுபவத்தில் நாங்கள் இருவர் மட்டுமே. எங்களுக்கு கிடைத்த அனுபூதியும் காட்சிகளும் நாட்கணக்கில், மாதக்கணக்கில் தொடர்ந்தன. எந்த வீட்டில் இந்த அனுபவம் தொடங்கியதோ அந்த வீட்டில் பின்னொரு சமயம் இயேசுவின் பழமையான இத்தாலியப் படம் ஒன்று கிடைத்தது.

இயேசுவையும், மேரியையும், ஜோஸஃபையும், பன்னிரு சீடர்களையும், யூதாஸையும், யூதர்களையும், மக்தலேனாவையும் இன்னும் பலரையும், பலவற்றையும் பற்றி நமக்கெல்லாம் தெரியும்; படித்திருக்கிறோம். ஆனால் இயேசு உணர்வில் லயித்திருந்த என் நண்பனுக்கும், எனக்கும், இயேசுவுக்கு நேர்ந்தவையெல்லாம் நேரடியாகக் காண்பிக்கப் பட்டன.

பரிசுத்தமான பிறப்பும், ஜோசஃபின் வசதிக் குறைவான குடும்பச் சூழலும், 'ராஜாதி ராஜன்' வந்து விட்டான் என்று கட்டியம் கூற யாரும் இல்லாமல் ரகசியமாக இவ்வுலகுக்கு வந்ததும், குழந்தையை மதகுருவிடம் காண்பித்து அவருக்கு குழந்தையின்

தெய்விகம் தெரிகிறதா என்று ஆவலோடு அவர் முகத்தையே பார்த்த அன்னையின் அப்பாவித்தனமும், பன்னிரண்டு வயதுப் பாலகனாக மதவாதிகளிடம் வாதம் புரிந்து வென்ற இறைவனின் திருவிளையாடலும், அவன் எகிப்தில் ஆன்மிக நெறியொன்றின் தீட்சை பெற்றதும் அடுக்கடுக்காக, எங்களுக்கு திரைப்படம் போல் காண்பிக்கப்பட்டன.

இயேசுவின் வாழ்க்கையில் வெளிப்படையாகச் சொல்லப்படாத காலகட்டங்கள் உண்டு. வெள்ளை அங்கி உடுத்து குறுந்தாடியோடு இளைஞன் இயேசு ஒரு நதிக்கரையில் பாறை ஒன்றின் மீது அமர்ந்திருந்ததைப் பார்த்தோம். அதாவது, என் நண்பன் காட்சியாக மனக்கண்ணால் பார்த்தான். அவன் தான் பார்த்ததை விளக்க விளக்க, அந்தக் காட்சியை என் மனத்தில் நிகழ்த்திப் பார்த்தேன். என் நண்பன் காட்சியைக் கண்டபோது இயேசுவோடு ஒன்றிப் போனான். இயேசு நதிக்கரையில் பாறையின் மேல் அமர்ந்திருந்த காட்சியை கண்ட நண்பன், கொஞ்சம் நிதானித்து விட்டுப் பிறகு சொன்னான்: “அம்மா! இந்த நதி, கங்கை.”

ஆம்! இயேசுவையும், மேரியையும் கங்கைக் கரையில் பார்த்தோம். சிலுவையைச் சுமக்கும் முன், இயேசு பல காலம் பாரத மண்ணில் தங்கியிருந்ததாக டாக்டர் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்.

அதன் பிறகு ஆலிவ் தோட்டத்தில் இயேசு மண்டியிட்டு, பதிலுக்காகப் பிரார்த்தித்ததைப் பார்த்தோம். மானுடத்தின் விதியை மாற்றிய பதில் அது. கோப்பையிலிருந்து பருகுவதா அல்லது புறக்கணிப்பதா என்ற கேள்விக்கான பதில் அது.

நானும் என் நண்பனும், இந்த அனுபவங்களின் போது, எப்படி இவ்வுலகிலிருந்து பிரிக்கப்பட்டு தனிமைப் பட்டிருந்தோம் என்பது உங்களுக்கு விளங்கும் என நினைக்கிறேன். நாங்கள் இருவரும்

மெய்மறந்து ஒருவித சமாதி நிலையில் இருந்தோம். அந்தக் கால கட்டத்தில். எப்படி எங்கள் அலுவலகங்களுக்கும் சென்று நாங்கள் எங்கள் கடமைகளையும் ஆற்றினோம் என்பதைக் கடவுளே அறிவார்.

இந்த அனுபவம் என் நண்பனையும் என்னையும் ஒன்றாகக் கட்டிப் போட்டது. ஒருவர்பால் மற்றவருக்குத் தனி அன்பு ஏற்பட்டது. டாக்டர் சரியான நேரத்தில் கட்டை அவிழ்த்து விட்டார். கட்டிப் போட்டிருந்தவரும் அவர்தான். சத்குருவும் சூத்ரதாரியுமான அவர், இங்கே ஒரு தட்டு, அங்கே ஒரு அடி என்று கொஞ்சம் கொஞ்சமாக எங்களை இறக்கிப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தார். எதற்கும் ஒரு முடிவு உண்டன்றோ? இயேசுவுடனும் மரியாளுடனுமான எங்கள் இனிமையான அனுபவமும் ஒரு நாள் முடிவுக்கு வந்தது. அந்த அலைவரிசையில் நாங்கள் தொடர்ந்து இயங்குவது அனுமதிக்கப்படவில்லை. ‘தெய்விக அனுபவங்கள்’ என்ற கவின்மிகு கானகத்தில் அலைந்து திரிய நாங்கள் அனுமதிக்கப்பட்டாலும் தக்க தருணத்தில் எங்களைச் சாமானிய நிலைக்குத் துரத்தி விடுவதில் டாக்டர் கவனமாக இருந்தார். வர மறுத்திருக்கிறோம் ; ஆனால் அவர் விட்டதில்லை.

ஒரு செய்தியை இங்கே சொல்ல வேண்டும். இயேசு உணர்வில் நாங்கள் லயித்துத் திளைத்திருந்த காலம் முழுவதும் என் நண்பனைப் போலவே டாக்டரும் வலியையும், வேதனையையும் அனுபவித்துக் கொண்டிருந்தாராம். இதை என் நண்பன் புரிந்து கொண்டான்.

“அம்மா! அவரும் இதையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். என்னால் அதைப் பார்க்க முடிகிறது” என்று என் நண்பன் என்னிடம் கூறினான். ஏனென்றால் அந்த நாட்களில் நான் டாக்டரை அடிக்கடி சந்திக்க முடிந்ததில்லை. ஆனால் முக்கியமான

தருணங்களில் அவர் வராமல் இருந்ததுமில்லை.

இயேசுவும் மரியாளும் எங்கள் உணர்வில் இறங்கிய அந்தப் புனிதமான நாளன்று டாக்டர் திடீரென்று அங்கு வந்து எங்களை வியப்பிலாழ்த்தினார். அன்று வரப்போவதாக அவர் எங்களிடம் சொல்லவில்லை. இரண்டாயிரம் வருடங்கள் பிற்பட்ட காலத்திற்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டு விட்ட நிலையிலும் நாங்கள் இருவரும் தனித்து விடப்படவில்லை. எங்கள் அனுபவங்களில் கலக்காமல், ஒரு சாட்சியாக மட்டும் எங்கள் நண்பன் ஒருவன் இந்த அனுபவம் முடியும்வரை உடன் இருந்தான். வேறொரு காலகட்டத்தில் பொருந்தி நாங்கள் இயங்கிக் கொண்டிருந்த விதம் அவனுக்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை. அவனுக்கு எங்கள்பால் இருந்த அன்பும் நம்பிக்கையும் அப்படி!

**இரண்டாவது அழைப்பு:**

அன்றொரு நாள்! உண்ட களைப்பு! டாக்டரைச் சுற்றிலும் அவரவர் சாய்ந்து படுத்து விட்டோம். படுத்தபடி நான் டாக்டரையே பார்த்துக் கொண்டிருந்தேன். "யாரிவர்?", என்னை நானே கேட்டுக் கொண்டேன்; 'ரொம்பத் தெரிந்தவராகவும் இருக்கிறார்; ஆனால் பெரும் புதிராகவும் உள்ளார்!' இப்படியாக அவரை, என்னை மறந்து உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தேன். பிறகு சுதாரித்துக் கொண்டேன்.

சிறிது நேரம் கழித்து. எங்களில் ஒருவன் டாக்டரின் 'ஸ்டெத்' தை எடுத்து விளையாட்டாகக் காதில் வைத்துக் கொண்டான். டாக்டர் அதை எப்படி உபயோகிக்க வேண்டும் என்று அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார். அந்தச் சமயம் பார்த்து, வேறொரு நண்பன்

வாசியோகத்தில், பிராணசக்தி சென்று திரும்பும் வழி பற்றி சந்தேகம் எழுப்ப, டாக்டர், 'ஸ்டெத்தின்' முனையைத் தன் தொண்டையில் வைத்து வாசி இழுத்தபடி, அந்தச் சீடனை ஸ்டெத்தை காதில் வைத்து வரும் ஓசையைக் கேட்கச் செய்தார். கிட்டத்தட்ட இருபத்தைந்திலிருந்து முப்பது வயதுக்குட்பட்டவராக நாங்கள் இருந்தும் தொடக்கப் பள்ளி மாணவர்களைப் போல், 'நான் கேட்கிறேன், நான் கேட்கிறேன்' என்று எல்லாரும் மாறி மாறி 'ஸ்டெத்தைக்' காதில் வைத்துக் கேட்கலானோம். "ஏதோ பெரிய அலையொன்று பாறையில் மோதித் திரும்புவதைப் போல் இருக்கிறது" என்றான் ஒருவன். நானும் 'ஸ்டெத்தைக்' காதில் வைத்துக் கேட்டேன். எனக்கும் அப்படித்தான் தோன்றியது. "இது இரண்டாவது தீக்ஷையா?" என்றான் ஒரு நண்பன்.

இந்தக் காலக் கட்டத்தில்தான் டாக்டர் எங்களுக்குப் 'பெர்ஷியன் மேஜிக்' என்ற பயிற்சியை சொல்லிக் கொடுத்தார். நள்ளிரவில் எழுந்து குளித்து விட்டு, பட்டுடுத்திச் செய்ய வேண்டிய பயிற்சி இது. நாற்பத்தைந்து நாட்கள் செய்ய வேண்டும். நான் இந்தப் பயிற்சியை செய்யத் தொடங்கியது ஆதி சங்கரரின் பிறந்த இடமான 'காலடி'யில். இங்கே நான் பார்த்த ஓர் அழகான காட்சி நினைவுக்கு வருகிறது. காலடி கோயில் சன்னிதியில் என் கணவர் ரவி அமர்ந்து தியானம் செய்துக் கொண்டிருக்கையில், ஒரு அழகான பட்டாம்பூச்சி கோயிலுக்குள் சிறகடித்து வந்து, சின்முத்திரையில் விரிந்திருந்த அவர் கையில் ஒயிலாக அமர்ந்து கொண்டது. அப்படியே வெகுநேரம் சலனமற்று இருந்தது. அந்த வண்ணத்துப் பூச்சி யாரோ? எந்தத் தேனைப் பருக அது அங்கே அமர்ந்ததோ, நான் அறியேன்.

பெர்ஷியன் மேஜிக் செய்யத் தொடங்கி இருபத்தைந்து நாட்கள் கழிந்திருக்கும். டாக்டரை நேரில் சந்திப்பது குறைந்து

விட்டது. அப்படியே சந்தித்தாலும் பேச நா எழவில்லை. அதனால் மானசீகமாக அவரோடு பேசுவது என்று தீர்மானித்தேன். தன் புறங்கையைப் பார்ப்பதுபோல் மிகத்தெளிவாக அவர் எங்கள் மனங்களைப் புரிந்து கொள்பவரே என்றாலும், நான் அவரோடு பேசுகிறேன் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுவதற்கு நான் ஏதேனும் செய்ய வேண்டியிருந்தது. ஓர் உபாயம் தோன்றியது. கண்ணாடியில் என் கண்களையே பார்த்து, அவரைப் பார்ப்பதாக பாவித்துப் பேசலானேன். அப்படிப் பேசி முடித்ததும் மனம் லேசாகவும், ஏதோ பாரம் தொலைந்தது போலவும் இருக்கும்.

ஒன்றன்பின் ஒன்றாக என்னென்னவோ ஆன்மிக அனுபவங்கள்; இருந்தாலும் எனக்குள் ஒரு முழுமை ஏற்படவில்லை. அந்த முழுமைதான் எப்படியிருக்குமென்பதை நான் அறியாத போதிலும், எனக்குள் இன்னொரு கதவு அடைபட்டுக் கிடக்கிறது என்றும், அது திறந்தால் முழுமை கிடைக்கும் என்றும் எனக்குப் புரிந்தது. அதனால் டாக்டரிடம் பேசிக் கேட்டுவிடுவது என்று முடிவு செய்தேன்; கண்ணாடிதான் இருக்கவே இருக்கிறதே! அறைக் கதவை மூடிக் கொண்டேன். கண்ணாடி முன்னால் அமர்ந்து கொண்டேன். நேரடியாக அவரைக் கேட்க நா எழாத கேள்விகளை இப்போது என் பிம்பத்தையே பார்த்துக் கேட்கலானேன். ஒன்றன் பின் ஒன்றாக கேள்விக் கணைகள்! திடீரென்று எங்கிருந்தோ ஒரு பெருங்குழப்பம் என்னைச் சூழ்ந்து கொண்டது. “மாட்டேன்,மாட்டேன் டாக்டர் திரும்பவும் என்னைக் குழப்பாதீர்கள். உள்ளதை உள்ளபடி, உண்மையின் வெளிச்சத்தில் எனக்குக் காண்பியுங்கள்” என்று மன்றாடினேன். குழப்பம் என்னை விட்டகன்றது. ஆனால் அந்தக் கடைசிக் கதவு மட்டும் திறந்த பாடில்லை. ஆனால் நான் அந்தக் கதவை விட்டு நகரவில்லை. அங்கேயே காத்திருந்தேன் –வேறேதும் செய்வதறியாமல்!

அடுத்த நாள் மாலை. வீட்டில் நான் மட்டும் தனித்திருந்தேன், கட்டிலில் படுத்தபடி. அந்தக் கதவு திறந்து தன் ரகசியங்களை எனக்குக் காண்பிக்காதா என்று நான் உருகியிருக்க, திடீரென்று என் தனிமை தவிர்ந்ததை உணர்ந்தேன். ஸ்தூல சரீரத்தில் யாரையும் பார்க்க முடியவில்லை. ஆனால் கூட யாரோ இருப்பது போல் உணர்ந்தேன். டாக்டரும், அவரோடு சற்று வயதான ஒரு பெரியவரும் சூக்ஷ்ம வடிவில் அங்கே வந்திருந்ததை என்னால் உணர முடிந்தது. அந்தப் பெரியவரை நான் மகரிஷி வசிஷ்டரென்று இனம்கண்டேன். அவர்கள் இருவரும் என்னோடு பேசினார்கள். நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொன்னார்கள். ஒவ்வொரு நிலையில் நான் பெற்றிருந்த ஒவ்வோர் ஆன்மிக அனுபவமும் மனச்சூழலும் அடுத்தடுத்து வந்து வெள்ளம் போல் என்னைச் சூழ்ந்து கொண்டன. என்னுள் அடைபட்டிருந்த அந்தக் கடைசிக் கதவும் திறந்தது. அங்கே, கருவறையில், டாக்டரின் ஒளிமயமான முழுமையான ஸ்வரூபத்தைக் கண்ணுற்றேன்.

பிரபஞ்சத்தின் தனித்தலைவனாக அவரை நான் தரிசித்தபோது நான் அடைந்த ஆனந்தத்தையும் நிம்மதியையும் சொற்களால் விவரிக்க இயலுமா! அக்கணம் எப்படியோ நான் முற்றிலுமாக அழிந்து மீண்டும் முழுவதுமாக மலர்ந்துகொள்ளவும் செய்தேன். பரிணாமம் முழுமை அடைந்தது. சற்று முன் வரை கூட்டுப் புழுவாக இருந்தது, இப்போது கூட்டிலிருந்து வெளிவந்து வண்ணத்துப் பூச்சியாய் வடிவெடுத்து விட்டது. தன் வண்ணச் சிறகுகளின் வானுலக நிறங்களைப் பார்த்து வியப்பால் விகசித்தது. “என் உலகமே வேறு!”, என்று குதூகலத்தில் சிறகசைத்தது. “எனக்கு அழிவில்லை; ஏனென்றால் நேசத்துக்கு அழிவில்லை”, என்று சிலிர்த்துக் கொண்டது.

என் நிலைப்பாடும் என் கடமையும் இப்போது எனக்குத்

தெள்ளத் தெளிவாயின. அன்பே அனைத்துக்கும் அடிப்படை என்பதை உணர்ந்தேன். டாக்டரை அறிந்ததில் என் அகம் அதற்குரிய அழகை, ஆனந்தத்தை, முழுமையை அடைந்தது. அந்த ஆனந்தத்தில் நேசம், சரணாகதி என்பவற்றின் இயல்புகள் விளங்கின.

அழுது தீர்த்தேன். டாக்டரும், மகரிஷியும் அமைதியாக அமர்ந்து நான் கூறியவற்றை செவிமடுத்தார்கள். மணி இரவு ஒன்பதாகிவிட்டது. டாக்டருக்கு நேரமாகிவிட்டதே என்று தோன்ற, அவ்விருவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு அவர்களை வழியனுப்பினேன். அவர்கள் திரும்பிப் போகும் முன், டாக்டரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். “இன்று நிகழ்ந்தவை நிஜம் என்று நாளை ஏதாவதொரு விதத்தில் எனக்கு நம்பிக்கை தருவீர்களா? நான் இன்றைய நிகழ்வுகளைச் சந்தேகிக்கவில்லை; கற்பனையென்று எண்ணி விடமாட்டேன். ஆனால் நாளை நேரில் இவற்றை நீங்கள் உறுதி செய்தால், இந்த மாலையும் அது எனக்களித்த இன்பமும் இன்னும் பன்மடங்காக அதிகரித்துவிடும்; செய்வீர்களா?”.

அவர்கள் விடைபெற்ற பிறகு வெகு நேரம் கருநீலப்பட்டு வானையும், விண் மீன்களையும் ஜன்னல் வழியாகப் பார்த்தபடிப் படுத்திருந்தேன். எண்ணங்கள் கூடக் கோவையாக இல்லாத அளவுக்கு நான் நிரம்பித் ததும்பிக் கொண்டிருந்தேன். என்னையறியாமல் தூங்கிப் போனேன். கொஞ்ச நேரம் கழித்துத் திடீரென்று விழித்துக்கொண்டேன்; விழித்ததும் நான் **இருப்பதன்** பொருள் நினைவுக்கு வந்தது. **இருப்பது** எனக்குப் பிடித்திருந்தது.

அடுத்த நாள் நான் ஏதோ மேகத்தைப்போல மிதந்துகொண்டிருந்தேன். ஓசையெல்லாம் என் செவிகளுக்கு இசையானது. விழிகளால் பார்த்ததெல்லாம் அழகானது. முதல் நாள் நிகழ்வுகளின் இனிமையில் நான் நிரம்பி வழிந்துகொண்டிருந்தேன்.

என் தோற்றமே மாறியிருந்ததை நான் உணர்ந்தேன். என் நடை கூட என்னுள்ளே வெள்ளமாய் பொங்கிக்கொண்டிருந்த ஆனந்தக் கூத்தின் அடக்கமான வெளிப்பாடாயிற்று.

காலை பத்து மணிக்கு டாக்டர் தொலைபேசி மூலம் எங்களையெல்லாம் திருவொற்றியூரிலிருந்த தம் அலுவலகத்துக்கு உடனே கிளம்பி வருமாறு அழைத்தார். என்னை அடையாளம் கண்டுபிடித்துவிடுவார்களாதலால், சாதாரணமாகப் பொது இடங்களில் தன்னைக் காண, டாக்டர் என்னை அனுமதித்ததில்லை. ஆனால் அன்றென்னவோ என்னையும் வருமாறு அழைத்தார்; நானும் வித்தியாசமாக ஏதோ ஒன்றைச் செய்வார் என்று எதிர்பார்த்திருந்தேன். நாங்கள் ஏழெட்டுப் பேர் (அந்தக் காலைப் பொழுதிலேயே அத்தனைச் சீடர்கள் குழுமி விட்டார்கள்) ஒரு சிற்றுந்தில் ஏறிக் கொண்டு திருவொற்றியூர் பயணமானோம்.

அங்கே போய்ச் சேர்ந்தவுடன், முதல் நாள் அனுபவத்துக்குப் பிறகு அவர் எதிரில் போய் நிற்பது எனக்குக் கடினமாக இருக்கப் போகிறது என்பதை உணர்ந்தேன். சமநிலையும் தைரியமும் வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு அவர் அறைக்குள் கடைசியாக நுழைந்தேன். அவர் நிமிர்ந்து என்னைப் பார்க்கவில்லை. என்னால் அவருடன் பேச முடியவில்லை. இவர் இங்கே இருக்கிறார் என்று உலகத்தாரிடம் எப்படிச் சொல்வேன் என்று நினைத்தேன்.

டாக்டர் எங்களுக்கு எள் பிஸ்கெட்டும், தேநீரும் தந்தார். மிகவும் அமைதியாக இருந்தார். அவரைக் கண்டுகொண்டேன் என்று கொஞ்சம் சங்கடமான நிலையில் இருந்ததாகக் கூட எனக்குப் பட்டது.

அருகே இருந்த பட்டினத்தார் சமாதிக்கு எங்கள் அனைவரையும் அழைத்துச் சென்றார். அங்கே சிறிது நேரம் இருந்தோம். பின்னர் அவரை மீண்டும் அலுவலகத்தில் இறக்கிவிட்டு

வீடு திரும்பினோம். அவர் இருந்த விதமே என்னுடைய முந்தைய நாள் அனுபவத்தை உறுதிப்படுத்துவதாயிற்று.

அடுத்த சில வாரங்களுக்கு நான் என் வசம் இல்லை. இவ்வுலகச் சிந்தனைகளே இல்லாமல் எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தேன். இந்நாட்களிலும் பிறகு சில மாதங்களும் நான் மௌனமானேன் . டாக்டரின் அருகில் இருக்க ஆவல். ஆனால் அப்படி இருந்து விட்டாலோ அதைத் தாங்க முடியாமல் உடைந்து போவேனோ என்று பயம். என் சந்தேகங்கள் தீர்ந்துவிட்ட நிலையில், உண்மையின் தரிசனத்தில் என் இதயம் நன்றிப் பெருக்கால் உருகி வழிந்து என் சத்குருவின் பாதங்களைச் சரணடைந்தது. அவரைப் பார்த்தபோது என் கண்களில் பட்டது அவருடைய ஸ்தூல சரீரமில்லை. பிரமிக்க வைத்த அவருடைய உள்ளொளி, மின்சாரம் போல் பாய்ந்தது . நான் அவருடைய ஸ்தூல சரீரத்துடன் பேசிப் பழகிக்கொண்டிருந்தது எனக்கு எளிதாய் இருந்தது. ஆனால் அவருடைய உன்னதமான **ஒளிமையத்**தோடு எந்தப் பரிவர்த்தனையும் செய்ய என்னால் முடியவில்லை. அவர் எதிரில், வெறுமனே இருக்கத்தான் முடிந்தது. என் இதயம் உருகுவதைப் பார்த்தபடி சும்மா இருந்தேன்.

ஒரு நாள் டாக்டரின் சீடர்கள் குழுமியிருந்த கூட்டத்துக்குக் கொஞ்சம் தாமதமாகச் சென்றேன். உள்ளே போனபோது, டாக்டர் எதிர்ப்புறம் பார்த்து அமர்ந்திருந்தார். அந்த அறையில் இடமில்லை. அவருக்கு வணக்கம் சொன்னால் உருக்கத்தில் குரலுடைந்து நாத் தழுதழுக்கும் என்று பயந்து அடுத்த அறைக்குச் சென்றேன்.ஒரு மூலையில் அமர்ந்து உருகும் என் மனத்தின் கனத்தைத் தாங்கமுடியாமல் கண்களை மூடிக்கொண்டேன். மீண்டும் **இருமை**யின் வலி. கண்கள் குளமாகிக் கேவலாக வெளிப்பட்டு விடுமோ என்ற பயம்.

“டாக்டர் முடியவில்லை, காப்பாற்றுங்கள்” என்று மானசீகமாகக் கேட்டுக்கொண்டேன்.

மெதுவாக என் சுவாசத்தின் கதி மாறலாயிற்று. உருகித் தவித்த என் உள்ளத்தின் பிடியிலிருந்து நான் உயரத் தூக்கப்பட்டேன். ‘நான்’ எனும் தூய உணர்வாக, இரண்டாவது எதுவும் தளைப்படுத்த முடியாத ஒன்றேயாக உயரப் பறந்தேன். உணர்ச்சிகளை விட்டு வெளியே வந்தேன். சென்ற நிமிடம் என் உணர்ச்சிகளின் கனத்தால் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தேன். இந்த நிமிடம் எனக்கு உணர்ச்சிகளே இல்லை. என் எண்ணங்களும் உணர்ச்சிகளும் இல்லாமற் போக, நான் எதையும் தரிக்காமல் எதனாலும் கட்டுப்படாமல் வெளிவந்து விட்டேன். இது எவ்வளவு பெரிய மாற்றம்! வெகு நேரம் அப்படியே அந்தப் பூரணமான விடுதலையில் திளைத்தபடி அமர்ந்திருந்தேன். இந்த அனுபவத்திற்குப் பிறகு அவதூத கீதையில் வரும் அந்த குறளின் பொருள் விளங்கியது.

- “யேனேதம் பூரிதம் சர்வம் ஆத்மனைவ ஆத்மனாத்மனி
- நிராகாரம் கதம் வந்தே ஹி அபின்னம் சிவம் அவ்யயம்”.

ஆம் டாக்டர், நான் உங்களை எங்ஙனம் வணங்குவேன்? நான் உங்களிலிருந்து வேறில்லை என்பதை இப்போது அறிந்துகொண்டு விட்டேனே!

என் ஆன்மிகத் தேடலில் எனக்கு வழிகாட்டுமாறு டாக்டரை முதன் முதலில் நான் கேட்டுக்கொண்டபோது, ‘உண்மையை நான் அறிய வேண்டும்’ என்ற கோரிக்கையை வைத்தேன். ‘உண்மை’ என்ற சொல்லுக்கு முழுமையான பொருள்கூட அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் படிப்படியாக வெவ்வேறு நிலைகளில் உண்மையின் பொருள் எனக்கு உணர்த்தப்பட்டது. முதலில் என்

ஆழ்மனம் ஒளித்து வைத்திருந்த பொக்கிஷம் எனக்குக் கொஞ்சம் திறந்து காட்டப்பட்டது. அதன் பிறகு **நான்** என்பதன் மையமான ஏதுமற்ற வெட்ட வெளியாக எதனோடும் தொடர்பு கொள்ளாத நிலையில் ஒடுங்கினேன். பிறகு பிரம்மத்தோடு கலப்பது என்னவென்று உணர்த்தப்பட்டேன். ஆனால் முழுவதும் கரைந்து போகும் முன் திரும்ப இழுத்துத் தள்ளப்பட்டேன். என்னைப் பற்றிய மேலும் சில உண்மைகள் எனக்கு உணர்த்தப்பட்டன. பிறகு இறைவன் சாம்ராஜ்யத்தில் என் நிலையும் பணியும் என்ன என்பதும் எனக்குக் காண்பிக்கப்பட்டன. அந்த நிலைக்கும் பணிக்கும் உகந்ததாக இருக்கும் என் இயல்பையும் கூட எரித்துவிட்டு எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்து போக, முழுமையான விடுதலையில் விளங்கும் சூட்சுமமும் எனக்குக் கற்றுத்தரப் பட்டது.

படிப்படியாக இவையெல்லாம் நடந்தேற டாக்டரைச் சந்தித்ததிலிருந்து ஆறு வருடங்களாகிவிட்டன. தன்னை அறிதலும் விடுதலையும் வெவ்வேறு என்று டாக்டர் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார். '**தன்னை அறிதல்**', என்பது இறைவன் சாம்ராஜ்யத்தில் தன் நிலையையும், பணியையும் அறிதல். **'விடுதலை'** என்பது இறைவன் சாம்ராஜ்யத்தில் தனக்குத் தரப்பட்ட நிலைக்கும் பணிக்கும் உகந்ததான தன் மூல இயல்பையும் விட்டு விடுதலையாகி, எதனாலும் தளைப்படாமல் சுத்த சைதன்யமாவது. **பன்மை** என்ற மாயையில் இருந்து விடுபடுவது **விடுதலை**யில் மட்டுமே. தன்னையறிதலும், விடுதலையும் ஓர் உயிரின் ஆன்மிகப் பயணத்தில், கடைசிக்கு முந்தைய அனுபவமும், கடைசி அனுபவமும் ஆகும். விடுதலையாகும்போது சாட்சியாக நிற்கும் தூய பிரக்ஞையானது பஞ்ச பூதங்களிடமிருந்து விடுதலையடைகிறது. இந்த தூய நிலையில்தான், பஞ்சபூதங்கள் ஆக்கித் தந்த அகங்காரத்தைத் தரிப்பதற்கு முன்னும், பிரக்ஞை இருந்திருக்கும். ஆனால் இப்போது ஒரு வித்தியாசம்.

இப்போது ஒன்றுமில்லாமல் கரைந்து போன அகங்காரத்துக்கு தன் பலமும் பலவீனமும் உணர்த்தப்பட்டுவிட்டன. தன் உபயோகமும், அதே சமயத்தில், தான் மாயையே என்பதும் அதற்கு உணர்த்தப்பட்டுவிட்டது. ***முழுமையடைந்த அகங்காரமானது, தன் சூக்ஷ்ம சரீரத்தில் ஓடும் ப்ராண சக்தியின் போக்கை முறைப்படுத்தித் தன்னைத்தானே கரைத்துக் கொள்ளத் தெரிந்த ஒன்று***.

அகங்காரம் முற்றிலுமாகக் கரைந்த கணம், சாட்சியாக இருந்த தூய உணர்வு அல்லது பிரக்ஞை பஞ்ச பூதங்களின் பிடியிலிருந்து விடுபடுகிறது. இந்நிலை சமாதி எனப்படுகிறது. இந்நிலையில் பிரக்ஞை அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியாது. ஒன்று, பஞ்ச பூதங்களின்றும் விடுபட்ட பிரக்ஞை, பிரம்மத்தில் கலக்க வேண்டும் அல்லது பஞ்ச பூதங்களின் எல்லைக்குள் இறங்கி அகங்காரத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பரம்பொருளின் சித்தம் அதுவாக இருப்பின், தூய உணர்வு அல்லது பிரக்ஞை பிரம்மத்தில் கலந்து விடும். இல்லாவிட்டால், இரண்டாவதாகச் சொல்லப்பட்டபடி அகங்காரத்தை மீண்டும் தரிக்க வேண்டியதுதான்.

இப்படியாக சமாதி நிலையிலும், பஞ்ச பூதச் சேர்க்கையினால் உண்டான அகங்காரத்தைத் (தன்னையறிந்த அகங்காரத்தைத்) தரித்த நிலையிலுமாக மாறி மாறி இருக்கத் தெரிந்த அப்பியாசி 'யோகி' எனப்படுகிறான். 'யோகி' அகங்காரத்தைப் பூண்டாலும் பிரம்ம நிலையின் அருகாமையை விட்டு அதிகம் அகல மாட்டான். அதாவது 'மாயை' என்ன என்பதைக் கணமும் மறக்க மாட்டான்.

ஒவ்வோர் உயிரும் சமாதி நிலையை, ஒரு நாள் அறிந்து உணர்வது நிச்சயம். பஞ்ச பூதங்களே அகங்காரத்தையும் சமைத்து அது

செயலாற்றுவதற்கான களத்தையும் அமைத்துத் தருகின்றன. அகங்காரம் இருக்கும் வரை – அது மிக மிக மெலிதாகவே இருந்தாலும் கூட, 'இருமை நெறி' அதாவது நன்மை-தீமை, இனியவை-இன்னாதவை, போன்றவை அந்த அகங்காரத்தைப் பாதித்துக்கொண்டுதான் இருக்கும். அகங்காரத்தின் மீதான இந்த 'இருமை நெறி' யின் ஆதிக்கம், அதன் விருப்பத்தையும், அது செல்லும் திசையையும் நிர்ணயிக்கிறது. இப்படித்தான் மிகவும் உயர்ந்தவர்கள் கூட வினைப்பயனைச் சேர்த்துக் கொள்கிறார்கள். அகங்காரம் இல்லாத நிலையில் வினைப்பயனும் இல்லை.

ஆக, வினையற்றுப் போக வேண்டுமானால், அகங்காரம் அற்றுப் போக வேண்டும் என்பது தெளிவாயிற்றென்று நினைக்கிறேன். நல்வினையோ, தீவினையோ, மீண்டும் நல்வினையையோ, தீவினையையோ பயக்கிறது. இவ்வட்டம் நிற்காமல் தொடர்கிறது – **விஷவட்டம்!**

"கர்மச் சுழல் தானாகவே ஒரு முடிவுக்கு வராதா டாக்டர்?" – நான் கேட்டிருக்கிறேன்.

"அது மிகவும் கடினம்"- டாக்டர் பதில் சொல்லியிருக்கிறார்.

அகங்காரம் தன்னைச் சுற்றிச் சுழல்சுழலாக வினைப்பயனை ஏற்படுத்துகிறது. வினையால் பயன், பயனால் வினை என்று கதை தொடர்கிறது. சுழல் அடங்க வேண்டும் என்றால் அகங்காரம் அற்றே போகவேண்டும். இல்லாவிட்டால் முதற்சுழல் அடங்குவதற்கு முன் அடுத்த சுழல் தோன்றிவிடும். பஞ்சபூதங்கள் சமைத்துத் தரும் க்ஷேத்திரத்தில் ஆட்டம் போடும் அகங்காரம் ஒரு கட்டத்தில் தன்னை நிர்வகிக்கும் கோட்பாடுகளால் சலிப்படைகிறது. இதே புத்தகத்தில் 'சத்குருவைத் தேடினேன்' என்ற அத்தியாயத்தில் இருந்து ஒரு பத்தியை இங்கே மீண்டும் குறிப்பிடுகிறேன்:

**‘ இப்படித் தோன்றும் அகங்காரம், கணக்கிடுவதற்கரிய காலம் தொடரும் தன் நீண்ட பயணத்தில், எங்கோ, எப்படியோ, புலன் சார்ந்த அனுபவங்களில் முழுமையில்லை என்பதை உணர்ந்து சலிப்படைகிறது. சலிப்பால் விரிசல் கண்டு நொறுங்கும் அகங்காரத்துக்கு பரிசுத்த சாட்சியான ஆன்மாவைச் சிறை வைத்திருப்பது கடினமாகிறது. அப்போது ஓர் உள்ளுந்துதலால் குறைவற்ற முழுமையை அந்த அகங்காரம் தேடத் தொடங்குகிறது. மேகமாக அந்த முழுமையை மறைத்திருப்பது தானே தான் என்பது அப்போது அதற்குத் தெரியாது. காலம் செல்லச் செல்ல, குறைபாடுகளின் பிடி இறுக இறுகத் தேடுதல் தீவிரமடைகிறது. வழிபுரியாமல் தோல்வியுற்ற நிலையில் அகங்காரம் வேதனை வசப்பட்டுத் தன்னை யாரேனும் மீட்பாரோ என்று கூவிக் கதறுகிறது. பிடிக்கு அகப்படாமல் நழுவும் முழுமையைத் தேடும் நிரந்தர முயற்சியாகிறது வாழ்க்கை. ஏக்கம் என்ற ஒரே ஸ்வரம் கொண்ட இசையாகித் தன் பயணத்தை அகங்காரம் தொடர்கிறது. அதன் கூக்குரல் கேட்டு இந்தத் தருணத்தில் கருணைமிகுந்த முழுமை தோன்றி, முழுமையையும் அமரத்துவத்தையும் போதிக்கும் சத்குருவாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.**’

ஆம்! அகங்காரம், செயலின் மூலகாரணமாக விளங்கும் தன் இயல்பால் சலிப்படைந்து ஆன்மிக குருவைத் தேடுகிறது. குருவும் நேரில் வந்து அந்த சலிப்படைந்த அகங்காரத்தை தன் மாணவனாகவோ, மாணவியாகவோ ஏற்றுக் கொள்கிறார். அந்த மாணவி அல்லது மாணவனின் செயற்களத்தில் தான் ஒரு **கிரியா ஊக்கி**யாக இருந்து, உலகியல் நிலையில் இருந்து ஆன்மிக நிலைக்கு அவளை அல்லது அவனை உயர்த்த ஒரு தீர்மானமான திட்டத்தை வகுக்கிறார். சத்குருநாதனைப் பார்த்துப் பெறும் ஊக்கத்தாலும், அவர் தரும் உந்துதலாலும், அகங்காரத்தின் பண்பாடு மேன்மேலும்

உயர்கிறது. **சத்குரு கூடவே இருப்பது, அகங்காரம் மேன்மையடையத் தேவையான நடத்தை நெறி பற்றிய அறிவை அதற்குத் தருகிறது. அதுவே பிராணசக்தியின் நடை.**

குருவால் உந்தி எழுப்பப்பட்ட ப்ராண சக்தியானது, அகங்காரத்தை ஆன்மிக உயரங்களுக்கு அழைத்துச் சென்று, அதன் தெய்விக நிலையையும், பணியையும் அதற்கு உணர்த்திப் பின்னர் அதை முற்றிலுமாகக் கரைத்துத் தூய சாட்சிப் பிரக்ஞையாக ஆத்மா விடுபட்டு ஒளிரச் செய்கிறது. அகங்காரம் மேன்மையடைய அதற்குத் தரப்படும் ‘பிராண ஊக்கம்’ யோகியரால் ‘தீட்சை’ என்று அழைக்கப்படுகிறது. தீட்சையின்போது பிராண சக்தியின் போக்குவரத்து நெறி, மாணவனுக்கு, மாணவிக்குச் செயல்விளக்க முறையில் கற்றுத் தரப்படுகிறது. **ஜீவசக்தி என்றும் அழைக்கப்படும் பிராண சக்தியானது மூக்கின் வழியாக இழுத்து விடப்படும் சுவாசக்காற்று இல்லை**. அன்றாட வாழ்க்கையில் அமிழ்ந்திருக்கும் மனிதர் இந்த ஜீவ சக்தியைப்பற்றி ஏதும் அறியார். இந்த ஜீவசக்தியைப் பற்றி மாணிக்கவாசகர் அருளிய ‘ஞானத்தாழிசை’ என்ற நூலின் ஆங்கில விளக்கமான ‘The Verses of Wisdom’ என்ற நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## தெய்வப்பணி

### நித்தி- ஓர்அவதாரம்:

சில சமயங்களில் டாக்டர் பழைய நினைவுகளில் ஆழ்ந்தவராய் தம் பிள்ளைப் பருவ நாட்களையும், ஆன்மிக அனுபவங்களையும், எங்களோடு பகிர்ந்து கொள்வார். சிறு வயதை அவர் கழித்தது, கர்நாடக மாநிலத்தில் கோலார் தங்க வயலில். நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் பிறந்த அவருக்கு ஆடு, மாடுகளை மேய்ப்பது தினப்படி வேலையாம். அவருக்கு ஆறு அல்லது ஏழு வயதிருக்கையில் ஒரு நாள் அருகிலிருக்கும் 'அந்தர் கங்கா' என்றழைக்கப்படும் குன்றுப் பகுதிக்கு மாடுகளை ஓட்டிச் சென்றாராம். இந்தக் குன்றில் சுனை ஒன்று உண்டு; அது ரகசியமாய் எங்கோ உற்பத்தியாகி இங்கே வெளிப்படும். பாறைகளுக்குள் இருந்து இங்குமங்குமாக வெளிப்பட்டு, இரண்டு பசுச்சிற்பங்களுக்கிடையில் சிற்றருவியாக வீழ்ந்து சலசலக்கும். குட்டிப் பையன் நித்தி ஆடு மாடுகளை இந்த இடத்தில் மேயவிட்டுத் தான் தியானத்தில் ஆழ்ந்து விடுவான். சூரியன் மேற்கே சாயும் போது ஆடு மாடுகள் நித்தியிடம் திரும்பி வரும். நித்தி தியானம் கலைந்து மாடுகளை ஓட்டிக் கொண்டு வீடு திரும்புவான்.

அப்படித்தான் ஒரு நாள் மாடுகள் மேயச் சென்றதும் அவன் சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்குத்தான் பார்ப்பதே லயிப்பதாயிற்றே. உணர்வற்றுப் போனான். உணர்வு திரும்ப மாலையாயிற்று. கண் விழித்த போது சுற்றிலும் பாம்புகளைப் பார்த்து நித்திக்கு ஆச்சர்யம். சமாதியில் லயித்து விட்ட குழந்தைக்குப் பாதுகாவலாகச் சித்தர்கள் வந்து விட்டனரோ!

சிறுவன் நித்திக்கு மரம் ஏறுவதும், யாருக்கும் தெரியாமல் பழங்களைப் பறிப்பதும் ஒரு விளையாட்டு. தன் நண்பர்களையெல்லாம் கூட சேர்த்துக் கொண்டு மாங்காய்களையும்

கொய்யாக்களையும் பறித்து வீட்டிலிருந்து கொண்டு வந்த மிளகாய்ப் பொடி, உப்புப் பொடி தூவி அவர்களோடு பகிர்ந்து உண்பதில் அவனுக்குத் தனி மகிழ்ச்சி.

ஒரு நாள் தோட்டக்காரர் கையும் களவுமாக நித்தியைப் பிடித்து விட்டார். மற்ற நண்பர்கள் தப்பி ஓடிவிட்டனர். மாட்டிக் கொண்ட விஷமக்காரப் பிள்ளையைத் தோட்டக்காரர் பிடித்து மரத்தில் கட்டிப் போட்டார். 'வீட்டில் சொல்லி வருகிறேன்' என்று கோபத்தோடு போனார். பிறகு? பிறகென்ன! வீட்டில் அப்பா இருந்தார். அவரிடம் பிள்ளையின் லீலையைச் சொன்னதும், தன் பிள்ளையாக இருக்காது என்று அடித்துச் சொல்லிவிட்டார். பின்னே! பையன் தான் சமர்த்தாக உள்ளே அமர்ந்து படித்துக் கொண்டிருக்கிறானே! "மரத்தில் கட்டிப் போட்டு விட்டு வந்திருக்கிறேன். நீங்களே மகனின் அழகைப் போய்ப் பாருங்கள்" என்று சலிப்புடன் தோட்டக்காரர் சொன்னார். அப்பா சிரித்துவிட்டு, உள்ளே திரும்பிப் பையனை அழைத்தார். படித்துக் கொண்டிருந்த நித்தி உள்ளேயிருந்து எழுந்து வந்தான். தோட்டக்காரர் விதிர்விதிர்த்துப் போனார். அன்றிலிருந்து தானே பழங்களைக் கொய்து, அந்த மாயக்கண்ணனின் வீட்டு வாசற்படியில் வைத்து விட்டுப் போகலானார். 'மாயக்கண்ணன்'-- அப்படித்தான் அவர் அவனை அன்றிலிருந்து அழைக்கலானார்.

சின்னப் பையன் நித்தி வளர்ந்து விடலைப் பருவத்தை எட்டினான். புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் அவனுக்கு நாட்டம் ஏற்பட்டது. இதே போன்ற ஈடுபாடு கொண்ட நண்பர்கள் சிலர் அவனுக்குக் கிடைத்தார்கள். இவர்கள் அனைவரும் இரவு நேரத்தில் ருத்ர பூமியைத் தேடிச் சென்று, அங்கே தியானத்தில் அமர்ந்து தங்கள் ஆன்மிக முன்னேற்றத்திற்கு உதவுமாறு மேலான அசரீரிகளை வேண்டுவார்களாம். நித்தி எப்போது இரவு வரும் என்று

காத்திருப்பான். அப்போதுதானே வீட்டில் பெரியவர்களின் கண் பார்வையிலிருந்து தப்பி வெளியேவர முடியும்! மற்ற நண்பர்களும் அவனுக்காகக் காத்திருப்பார்கள். கும்மிருட்டில் எல்லாருமாகச் சேர்ந்து மயான பூமியை நோக்கி நடப்பார்கள். அடுத்த அடி கூட எடுத்து வைக்க முடியாமல் நிசியின் கருமை கூடிவிட்டால், நித்தி அன்னை பராசக்தியை வேண்டிக் கொள்வான். எங்கிருந்தோ கொஞ்சம் ஒளி வந்து அவர்களுக்கு வழி காட்டும். ஆம்! புனித அன்னை நித்தியின் நீங்காத துணை. அவன் எங்குசென்றாலும் அவளும் உடன் செல்வாள். அவள் வகுத்துத் தந்த பாதையை அவனும் விலகி நடக்கும் பழக்கமில்லை. நித்யாவின் நண்பர்களில் ஒருவன் தன் உடலை விட்டு ஒதுங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றவன். அவன் ஊடகமாக இயங்க பல ஆன்மிகக் குருமார்கள் அவன் உடலில் இறங்கி ஆன்ம தாகத்தில் தவித்த இந்த இளைஞர்களுக்குத் தங்கள் உபதேசங்களைத் தந்து அவர்களை வழி நடத்தலானார்கள்.

வந்தவர்களில் வள்ளுவரும் ஒருவர். தான் எழுதிய குறட்பாக்களின் ஒரு பகுதி வெளிவராமல் இருப்பதாகவும் நித்தி பின்னொரு நாள் அதை உலகுக்கு அளிப்பான் என்றும் கூறிச் சென்றார். நித்தி, ஒரு கால கட்டத்தில் மக்களில் ஒரு குழுவினரை ஆன்மிகத்தில் வழி நடத்திச் செல்வான் என்ற சேதியையும் சொல்லிவிட்டுப் போனார். 1956ம் ஆண்டின் முடிவுக்குள் மேலும் பல உண்மைகள் நித்திக்கு உணர்த்தப்பட்டன. அப்போது இயேசுவின் மீது நித்தி எழுதிய பாடல் தான் 'இயேசுவின் நாமம்' (இப்பாடல் ஆனந்த் ஜோதியின் வெளியீடான ஒலி நாடாவில் உள்ளது)

வானுலகமே இந்த இளைஞர்களின் நடவடிக்கையை கவனித்து அவர்களைப் பாதுகாத்தது. அவர்களுடைய தேவைகளெல்லாம் பூர்த்தி செய்யப்பட்டன. அந்த பிள்ளைகள்

பலகாரம் வாங்கி உண்பதற்குக் காசில்லையே என்று நினைத்தால் அவர்கள் நடந்து போன பாதையில் தேவையான நாணயங்கள் சிதறிக் கிடந்தன. பிறகு? பிறகென்ன? தடுக்க முடியாதது நடந்தது. ஒரே அலைவரிசையில் கூடித் திளைத்த நண்பர்கள் அலைவரிசை மாறிப் பிரிந்து தத்தம் வழி நடந்தனர். நித்தியும் தன் வழி சென்றான். ஆனால் வானுலகம் அவனுள் மூட்டிய தீ அணையாமல் கனன்று கொண்டே இருந்தது.

தன் நண்பர்களிடமோ தன் குடும்பத்தாரிடமோ நித்தி தன் ஆற்றலின் அளவை வெளிப்படுத்திக் கொண்டதில்லை. சாதாரணமான ஒரு பிள்ளையாகவே நடந்து கொண்டான். தன் அரிய குணங்களையும் அசைக்க முடியாத மனோபலத்தையும் எப்போதேனும் மட்டுமே வெளிக்காட்டுவான். அவனுடைய சகோதரிகள் அவன் செய்த மாயாஜாலங்களை இன்னமும் நினைவு கூர்கிறார்கள். அவனுடைய ஆழ்ந்த அமைதியையும் ஆடம்பரமில்லாத நடத்தையையும் அவனுடைய தாயார் மறக்கவில்லை. அம்மாவுக்கு வெளியில் செல்லவேண்டிய வேலை வந்துவிட்டால், நித்தியே எல்லாருக்கும் சமைத்துத் தன் தம்பி தங்கையரைப் பள்ளிக்குத் தயார் செய்து அவர்களுக்கு உணவு அளித்துப் பள்ளிக்கு அனுப்பி விடுவான். பிறகு தன் பள்ளிக்குப் பரபரக்க ஓடுவான். அதோடு ஆடு, மாடு வேறு மேய்க்க வேண்டும். அவற்றைத் தேய்த்துக் குளிப்பாட்டிப் பால் கறந்து....... நித்தி கடினமாக உழைத்தான். எந்த வேலையையும் தட்டிக் கழித்ததில்லை.

சிறுவன் நித்தி வளர்ந்து இளைஞனானான். அவனுடைய உயரமும், உடல் வாகும், கால் பந்திலும், கூடைப்பந்திலும் அவனுக்கு இருந்த ஆர்வமும் அவனை நல்லதொரு விளையாட்டு வீரனாக்கின. விளையாட்டுத் திடலில் வெற்றிகரமாகத் திகழ்ந்தாலும் தேர்வுக்

குழுவின் உள் விவகாரங்களால் நித்தி மேலும் முன்னேற முடியாமல் போயிற்று. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றான். தமிழறிஞர் டாக்டர் மு. வரதராசனார்தான், நித்திக்குத் தமிழ்ப் பேராசிரியர். நித்தி ஒரு தேர்வு விடைத்தாளில் கவிதை நடையில் பதில் எழுதியிருந்ததைப் படித்துவிட்டுத் தன்னை வந்து சந்திக்கும்படி, மு.வ. அவனிடம் சொன்னார். சொன்ன முகூர்த்தம்! அவர் துணைவேந்தராகப் பதவி உயர்வு பெற்றுக் கல்லூரியை விட்டுச் சென்றுவிட்டார்.

அம்மாவின் பிரசவ வலியின் போது, பிரசவ அறைக்குள் தன்னை அனுமதிக்க மறுத்ததை, முன்பு, சிறுவன் நித்தியால் புரிந்து கொள்ள முடியவில்லை. டாக்டர்கள்தாம் உள்ளே போகமுடியும் என்று சொல்லி விட்டார்கள். சிறுவன் நித்தி சங்கல்பம் செய்து கொண்டான், தானும் டாக்டர் ஆக வேண்டும் என்று. இளங்கலைப் பட்டம் பெற்றதும் மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்தார். (இனியும் ஒருமையில் எழுதுவது நெருடுகிறது) நேர்முகத் தேர்வில் நடந்தவற்றை பின்னர் எங்களிடம் சிரித்தபடி சொல்லியிருக்கிறார். ஒரு தேர்வாளர் வினா எழுப்ப, அதற்கு நித்தி பதில் சொல்வதற்குமுன் இன்னொரு தேர்வாளர் முந்திக்கொண்டு சரியான பதிலைச்சொல்லி விட்டாராம். அடுத்த கேள்வியை இன்னொருவர் கேட்க அதற்கு மூன்றாமவர் சரியான பதிலைச் சொல்ல, இப்படியே நேர்முகம் முழுவதும் இனிதே நிறைவுற்றது. நித்திக்கு மருத்துவக் கல்லூரியில் இடமும் கிடைத்தது. நித்தி சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவரானார்.

நித்தி தம் தனித்துவத்தைத் தம் நண்பர்களிடம் வெளிக்காட்டிக் கொண்டதில்லை. என்றாலும் அவருடைய விவரிக்க இயலாத கவர்ச்சியையும் ஈர்ப்புச் சக்தியையும் அவர்கள் கவனிக்காமலும் இல்லை. அவருடன் படித்த சில மாணவர்கள் அவருடைய நட்பும்,

அருகாமையும் தங்களுக்குப் பிடித்திருந்ததாகவும், தங்களை முழுமையாக்கியதாகவும் சொல்கிறார்கள்.

இந்தச்சமயத்தில்தான் நித்தி 'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்தில் தேர்ச்சி பெற்றுப் பல போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளை வென்றார். பள்ளிப் பருவத்திலிருந்தே கோப்பைகளும், கேடயங்களுமாக வாங்கிக் குவித்திருந்தாரே! மருத்துவம் முடிக்கும் முன்பே திருமணமாயிற்று. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்று வெளியே வந்ததும் மகப்பேற்றில் டிப்ளமா பெற்றார். இனிமேல் அவர் பிரசவ அறைக்குள் செல்ல யார் அனுமதியும் தேவையில்லை!

'கோஷா ஆஸ்பத்திரி' என்று எல்லாராலும் அழைக்கப்படும் சென்னை கஸ்தூரிபா காந்தி நினைவு மருத்துவ மனையில் மகப்பேறு மருத்துவராகப் பணியில் சேர்ந்தார். இப்போது அவரைச் சுற்றிலும் எப்போதும் பெண் மருத்துவர்கள். மகப்பேறு மருத்துவம் பயின்ற ஆண்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். பிரசவம் பார்ப்பதிலும் அறுவை சிகிச்சையிலும் மிகவும் லாவகமாகச் செயல்பட்டார். தன் சகமருத்துவர்கள் வியக்கும் வண்ணம், குழந்தை பிறக்கப் போகும் நேரத்தை முன்கூட்டியே சரியாகச் சொல்வார். அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியில் எடுக்க வேண்டியிருக்குமோ என்று நினக்கும்படியான பிரசவங்களில் கூட, இவர் அருகே வந்தால் அடுத்தடுத்து வலி வந்து சுகப்பிரசவமாகிவிடும்.

இச்சமயத்தில் மீண்டும் ஆன்மிக நாட்டம் மற்ற ஈடுபாடுகளை ஒதுக்கித் தள்ளலாயிற்று. நிறையப் படித்தார். அவர் வாங்கிக் குவித்த அரிய ஆன்மிகப் புத்தகங்களும் சித்தர் இலக்கியங்களும் எண்ணிலடங்கா. பெங்களூரில் ஒரு ஸ்வாமிஜியிடம் நெருக்கமானார். பிறகு சில கருத்து வேறுபாடுகளால் விலகினார். தூய அன்னை

மீண்டும் தொடர்பு கொண்டார். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை தியானம் செய்வதில் நித்திக்கு அலாதியான ஆன்மிகச் சிலிர்ப்பு கிடைத்தது. இச்சமயத்தில் ஜோதி வடிவில் ஓர் ஒளி அவரைச் சில நாட்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தது. "என்ன சுற்றிச் சுற்றி வருகிறாய்? உள்ளே வா!" என்று அதைத் தமக்குள் அழைத்துக் கொண்டார். உடனே உணர்வை இழந்தார். மஹாவிஷ்ணுவின் வாகனமான கருடன் தன்முன் தோன்றித் தன்னை ஏற்றிக்கொண்டு விஷ்ணுவிடம் அழைத்துச் சென்றதும், அங்கே விஷ்ணு, நித்தியும் தன் அவதாரமானதால், தன்னுடைய இன்னோர் அவதாரமான ஸ்ரீராமனை வழிபடுவதை நிறுத்திவிட்டு சிவபெருமானை வணங்குமாறு கூறியதும், உணர்வு திரும்பிய பின் நித்திக்கு நினைவுக்கு வந்தன. சிவபெருமானுக்கும் மஹாவிஷ்ணுவுக்கும் ஒருவர் மேல் மற்றவருக்கு இருக்கும் அபிமானம் நாம் அறிந்ததுதான்.

பிறந்ததிலிருந்தே, அவதாரங்களுக்குத் தாங்கள் யார் என்பது தெரிந்திருக்குமா என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படும் ஒன்று. தெரியும், ஆனாலும் தெரியாது, அவர்களுடைய வாழ்க்கையின் ஒரு கட்டம் வரை, என்பதே பதில். மேல்மனம் என்பது மொத்த மனத்தின் ஒரு மிகச்சிறிய பகுதி. இந்த மேல்மனத்துக்கு இன்ன காரியத்துக்காக பூமிக்கு வந்திருக்கும் தான், ஓர் அவதாரம் என்பது சில காலம் தெரியாமல் இருக்கலாம். மேல்மனம் அதை அறிந்தாலும் அறியாவிட்டாலும், அந்த அவதாரம் அந்தப் பிறப்புக்குத் தகுந்த வகையிலேயே நடந்து கொள்வார். ஆழ்மனம் அவரை நடத்திச் செல்லும்.

வானுலகத்தை இருக்கச் செய்வதே அன்புதான். மாபெரும் தெய்வ சக்திகள் கட்டுண்டு இருப்பது கட்டாயத்தின் பேரிலோ, தேவையினாலோ, அப்படித்தான் இருக்க வேண்டும் என்று பழகிப்

போனதாலோ இல்லை. அன்பு என்ற ஈர்ப்பின் விளைவாகவே தெய்வ சக்திகள் கட்டுண்டு இருக்கிறார்கள். கட்டாயமும், தேவையும், பழக்கமும் பந்தத்தை விளைவிப்பவை. பந்தம் இம்மாய உலகத்தில் உள்ளது. ஆனால் இறைவனின் சாம்ராஜ்யத்தில் தேவ சக்திகள் தூய அன்பில் இருந்துகொண்டு தூய அன்பினால் செயல்படுகிறார்கள். இரண்டாவதே இல்லாத ஒன்று, அனுபவமாக முடியாது. அனுபவிக்கப்படாத ஒன்றால் பயனில்லை. அதனால்தான் 'ஒன்று', 'பல'வானது. ஒன்றேயான தூய ஒளி, பிரிந்து பல நிறங்களாகிப் பல குணங்களாகிப் படைப்பெனும் வானவில்லாயிற்று. ஒரு நிறம் விலகி நின்றதால் வேறொன்றை முழுமையாக்கியது. ஒன்றையொன்று முழுமையாக்கிக் கொண்டதில் அனுபவம் ஏற்பட்டது. அனுபவம், அடையாளத்தைத் தந்தது.

அன்புதான் அமுதம். உண்மையின் அறுதியான அனுபவமும் வெளிப்பாடும் அன்புதான். முழுமையான சரணாகதியில்தான் அநாதியான ஒன்றைக் கிட்டத்தட்ட அதன் முழுப்பிரகாசத்தில் அடையாளம் காணவும் விளங்கிக் கொள்ளவும் முடியும். **சரணாகதியும் தூய அன்பும் ஒன்றாக உதிக்கும் இரட்டைக் குழந்தைகள்.** படைப்பின் காரணமே அனாதியான ஒன்றை அடையாளம் கண்டு, விளங்கிக் கொண்டு அனுபவிக்க வேண்டும் என்பதுதான். இந்த அநாதியான சுத்த சைதன்யத்தை அனுபவிப்பதா அல்லது அதனோடு இரண்டறக் கலந்துவிடுவதா என்று முடிவெடுக்க வேண்டிய நிலை ஒவ்வோர் உயிருக்கும், ஏதோ ஒரு கட்டத்தில் வரும். 'இருப்பதா? இல்லாமற் போவதா?' – அதுதான் கேள்வி.

திருவொற்றியூரில் சமாதியடைந்திருக்கும் சித்தர் 'பட்டினத்தடிகள்' டாக்டரோடு அணுக்கமான தொடர்பில் இருந்தார். டாக்டரும் அவருடைய சமாதிக்கு அடிக்கடிச் சென்று வருவார். 1992ம்

ஆண்டிலிருந்து 'வெளியே வந்து விடுமாறு' டாக்டரைப் பட்டினத்தார் வற்புறுத்தி வந்தாராம். "இன்னும் எதற்காகக் காத்திருக்கிறாய்?" என்று கேட்டாராம். ஆனால் வெளியே வருவதற்கான அவசரமான காரணம் இருப்பதாக அப்போது டாக்டர் நினைக்கவில்லை. "வெளியே வருவது" என்பதற்கு என்ன பொருள் என்பது 1996ல் தெரியும்.

டாக்டரோடு பழகிய பதினான்கு வருடங்களில் அடிப்படையில் அவர் எளிமையானவர், யாருக்கும் பிடித்துப் போகும் சுபாவம் கொண்டவர் என்பதைப் புரிந்து கொண்டேன். அவருடைய நுட்பமான அறிவுத்திறன் பிறரிடமிருந்து அவரைப் பிரித்துக் காட்டியது . பட்டை தீட்டிய வைரம் போல் அவருக்குப் பல பரிமாணங்கள்! யாரேனும் ஒருவர் கூட அவற்றையெல்லாம் முற்றிலுமாகப் பார்த்திருப்பார்களா என்பது சந்தேகமே! அவர் ஒரு பயிற்சி பெற்ற விளையாட்டு வீரராகவும் இயற்கைச் சூழலில் இருப்பதை விரும்புபவராகவும் இருந்தாலும், நான்கு சுவர்களுக்குள் நாட்கணக்கில் சௌகரியமாக இருந்து விடவும் அவரால் முடியும்.

ஒருநாள் நாங்கள் சில நண்பர்களாகச் சீட்டாடிக் கொண்டிருந்தபோது, டாக்டர் உள்ளே நுழைந்தார். எனக்குப் பின்னால் அமர்ந்து கொண்டு என் ஆட்டத்தை மேற்பார்வை செய்து, இதைப் போடு, அதைப் போடு என்று சேர்ந்திருந்த வரிசைகளை கலைத்து, ஜெயிப்பதற்கு இருந்த என்னைத் தோற்க வைத்தார். அவர் எதைச் சொன்னாலும் கேட்பது என்றுதான் ஏற்கனவே முடிவெடுத்து விட்டேனே! ஆட்டம் முடிந்ததும் ஏன் என்னைத் தோற்க வைத்தார் என்று அவரிடம் கேட்டேன். 'தோற்கவும் கற்க வேண்டும்' என்று பதிலளித்தார்.

சாதாரணமான மனிதர்களுக்கு டாக்டர் சாதாரணமானவராகத் தோன்றினார். ஆனால் ஆன்மிக விழிப்பு கொண்டவர்களுக்கு

அவருடைய 'அசாதாரணத் தன்மை' புலப்பட்டது. 'பிராண சக்தி' மேலே எழும்பிய போது அவர் யார் என்பதில் ஐயம் எழாது. ஆனால் 'பிராண சக்தி' கீழே இருக்கும்போது அவரை யார் என்று தெரிந்து கொள்ள வழியேயில்லை. உண்மை வழியில் அவரிடம் தீட்சை பெற்றுக் கொண்ட பாக்கியசாலிகளுக்கு, 'பிராண சக்தி'யை மேலே வைத்திருப்பது என்றால் என்னவென்று தெரியும். அவர்களுக்கே கூட, அவர்களுடைய சிந்தனையின் பால் அதிக கவனம் செலுத்திய நேரங்களில் அது கடினமாயிற்று. அதனால் தான் டாக்டர் தன் சீடர்களிடம், புத்தியைப் புதைத்து விடுமாறு அறிவுறுத்தினார்.

ஆரம்பத்தில் டாக்டர் அலோபதி மருத்துவத்தை மட்டுமே பின்பற்றி வந்தார். நாங்கள் வேறு மருத்துவ முறைகளைப் பின்பற்றி மருந்து உட்கொள்வதை அவர் ஆதரிக்கவில்லை. பிற மருத்துவ முறைகளப் பின்பற்றுவதானால் நாங்கள் வேறு மருத்துவரிடம் செல்ல வேண்டியிருக்கும். அது டாக்டருக்கு அவ்வளவாக பிடிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். எப்படியும் அவர் நினைத்தால் எந்தக் கோளாறும் உடனே குணமாகிவிடும் – இல்லை, அவர் எடுத்த முடிவின்படி சில காலம் அதை அனுபவிக்க வேண்டியிருக்கும். அதனால் சீடர்களாகிய எங்களுக்கு வேறு மருத்துவ முறையை நாடுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை!

1990ம் ஆண்டு டாக்டர் 'அக்கூபங்சர்' மருத்துவ முறையைப் பின்பற்றத் தொடங்கினார். தானே அதற்கான கல்வித் தகுதியைப் பெற்றார். 1993ம் ஆண்டுக்குள் 'ஹோமியோபதி' முறையைப் பின்பற்றி, நோய்களுக்கு மருந்தளிக்கத் தொடங்கினார். 1994ல், சென்னை ஜவஹர்லால் தேரு விளையாட்டரங்கின் விளையாட்டு மருத்துவப் பிரிவுத் தலைவரும் தமிழ்நாடு விளையாட்டு மருத்துவக் கவுன்சிலின் தலைவரும் ஆனார்

குரு என்ற முறையில் எந்தக் கெடுபிடியும் இல்லாமல் சுலபமாக அணுகக் கூடியவராக டாக்டர் இருந்தார். 'மரியாதை' என்ற பெயரில் நாங்கள் அவரிடமிருந்து விலகியிருப்பதெல்லாம் அவருக்குப் பிடிக்காது. டாக்டர் எங்களோடு இல்லாத போது அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நிறையக் கேள்விகள் வைத்திருப்போம். ஆனால், அவருடைய அருகாமையில், கேள்விகள் எல்லாம் மாயமாக மறைந்துவிட, மறந்துவிட்ட கேள்விகளைப் பற்றிச் சட்டை செய்யாமல் மனமும் மௌனத்தில் இருந்துவிடும். "ஏதாவது கேள்வி இருக்காப்பா?" என்று டாக்டர் கேட்பார். எல்லாம் கிடைத்து விட்ட நித்சலனமான நிலையில் 'இல்லை' என்று நாங்கள் ஒருமித்துச் சொல்வோம். அவர் கிளம்பிப் போனவுடன் ஒவ்வொரு கேள்வியாக மேலெழும்பும். கேள்வியும் அவரே! பதிலும் அவரே!

சீடர்கள் பலர் ஒன்றாகச் சேர்ந்து, அவரும் எங்களைச் சந்திக்க வரும்போது, அருளாளர்களைப் பற்றிய புத்தகங்களைக் கொடுத்து யாராவது ஒருவரை உரக்கப் படிக்கச் சொல்வார். ஆங்காங்கே இடைமறித்து விளக்கங்கள் தருவார். புனிதர்கள் எழுதிச் சென்றவற்றைப் படிக்கும்போது எங்காவது ஜீரணிக்க முடியாத பகுதிகள் வருமானால் அவற்றை 'இடைச்செருகல்' என்று கூறித் தவிர்த்துவிடச் சொல்வார்.

பிறரைப் பற்றி நாங்கள் தவறாகப் பேசுவதை டாக்டர் ஒரு போதும் அனுமதித்ததில்லை. ஒருமுறை 'கும்பமேளா'வைப் பற்றிய செய்திப் படம் ஒன்றை நாங்கள் டாக்டரோடு சேர்ந்து பார்த்தோம். அந்தப் படத்தின் பெரும் பகுதி காவி தரித்தவர்களைப் பற்றியதாகவே இருந்தது. அதில் ஒரு சன்னியாசி, என்ன காரணத்தாலோ, ஒரு கையை பல காலமாக உயர்த்தியே வைத்திருந்ததனால் அந்தக்கை போதிய இரத்த ஓட்டமில்லாமல், வளர்ச்சியற்று சூம்பிப் போயிருந்தது. படம்

எடுத்தவர்கள் அந்தக் கையை மிக அருகில் படமெடுத்திருந்தார்கள். அதைப் பார்த்த எங்களில் ஒருவர், “பணம் பறிக்க என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்!” என்று அந்த சன்னியாசியைப் பற்றிக் குறைவாகப் பேசினார்.

அதைக் கேட்டதும் டாக்டர் அம்பைப் போல் விருட்டென்று எழுந்து அறையை விட்டு வெளியேறினார். எல்லாரும் செய்திப் படத்தில் ஆழ்ந்திருந்ததனால் அதை கவனிக்கவில்லை. ஆனால் நான் டாக்டரிடம் ஏற்பட்ட மாற்றத்தைப் பார்த்துவிட்டேன். நானும் எழுந்து டாக்டர் பின்னால் போனேன். நான் அவரைத் தொடர்ந்த போதிலும், அவர் அணுகவே முடியாதவராக மாறியிருந்ததை உணர்ந்தேன். வாசல் வராந்தாவுக்கு வந்திருந்த அவர் குறுக்கும் நெடுக்குமாகக் கோபத்துடன் நடந்து கொண்டிருந்தார். அவர் விழிகள் நெருப்பாய்ச் சிவந்திருந்தன; அவர் முகம் நடுநிசியாய் இறுகியிருந்தது. அவர் நடையில் ரௌத்திரம் இருந்தது. வாசமிகு தென்றல் இப்போது புயலாகிக் கொண்டிருந்தது.

“என்ன ஆச்சு டாக்டர்?” மெல்லக் கேட்டேன்.

“அவர் கையை தூக்கியே வச்சு, ‘atrophy’ ஆகிவிட்டிருக்கு. (*Atrophy = உபயோகமற்றதால், ரத்த ஓட்டம் குறைந்து சுருங்கி வடிவமிழத்தல்.*) பணத்துக்காக ஏமாத்தறதா சொல்றான் இவன்!” டாக்டர் குமுறினார். தவத்தைக் குறைத்துப் பேசியதை யாகங்களுக்கு அதிபதியானவரால் தாங்க முடியவில்லை. நான் மௌனமாக நின்றேன். ஆனால் எல்லாம் ஒருநிமிடம்தான். சுழன்று கிளம்பிய புயல் மீண்டும் மெல்லிய தென்றல் காற்றானது –‘Mars and Venus’ (செவ்வாயும் சுக்ரனும்!); டாக்டர் இப்படித்தான் அதற்கு விளக்கம் சொல்வார். ஒருகணம் யாவற்றுக்கும் அதிகாரியாகச் செவ்வாயின் குணம் கொள்வார், மறுகணம் அன்பில் உருண்டு வந்து சுக்ரனின் அரவணைப்பாவார்.

ஆம்! டாக்டர், அரசர்க்கரசன். ஆனால் எல்லாம்வல்ல இந்தச் சக்கரவர்த்தி, அன்பின் முன்னே நிராயுதபாணி. அன்பின் சன்னிதியில் தம் முடியையும் செங்கோலையும் துறந்து தலைவணங்கி நிற்பவர். உண்மையான அன்போடு யார் எதைத் தந்தாலும், அதைத் தட்டாமல் ஏற்றுக் கொள்பவர். சம்பந்தம் என்று ஒரு சீடர். இவர் ஆலந்தூர் ரயில் நிலையத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருந்த டாக்டரின் மருத்துவமனைக்கு அவரை சைக்கிளில் பின்னால் உட்கார வைத்து அழைத்துச் செல்வார். கார்களையும், மோட்டர் பைக்குகளையும் காட்டிலும் டாக்டர் விரும்பியது இந்த சைக்கிளையே. 'சைக்கிளுக்கு ஓட்டுனர் வைத்திருப்பவர் இவர் ஒருவர்தான்!' என்று எங்களில் ஒருவர் இதைக் கிண்டல் செய்வது உண்டு.

ஜோசியம், கைரேகை சாஸ்திரம், எண்கணிதம் ஆகியவை அறிவியலை அடிப்படையாகக் கொண்டவைதாம் என்றும், பலன்கள் சரியாகச் சொல்லப்படாதபோது அது சொல்பவரின் குறைபாடு எனக் கொள்ள வேண்டுமே தவிர அந்த சாஸ்திரங்களைக் குறைத்து மதிப்பிடலாகாது என்றும் டாக்டர் எங்களிடம் சொல்லியிருக்கிறார். டாக்டருடைய சீடர்களின் எதிர்காலத்தைக் கணிப்பதில், திறமையான ஜோசியர்கள் கூடத் தடுமாறியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்ல வேண்டும்.

டாக்டரிடம் சரணடைந்தவருடைய எதிர்காலத்தை நிர்ணயித்தது விதியில்லை, டாக்டர் தான்! இங்கே அவருடைய பாத அரவிந்தங்களின் சிறப்பைச் சொல்ல வேண்டும்.

அவருக்குக் கால்வலி என்று அவர் கால்களைப் பிடித்துவிட்ட பாக்கியம் எங்களில் பலருக்கு உண்டு. அவருக்கு வலி என்றுதான் முதலில் அதைத் தொடங்கினோம். ஆனால் பிடிக்கப் பிடிக்க விவரிக்க முடியாத இன்பமும் ஆசுவாசமும் எங்களைச் சூழ்ந்துகொள்ளும்.

அமைதியையும் சரணாகதியையும் உணர்ந்து கொள்வது எங்களுக்கு எளிதாக இருந்தது.

வேதங்களெல்லாம் தேவனுடைய பாதாரவிந்தங்களின் தனித்துவத்தையும், மகத்துவத்தையும் புகழ்ந்து பாடுகின்றன.

‘ அந்த ஊரில் வசித்த ஒரு பெண் அவர் காலடியில் விழுந்து தன் கண்ணீரால் அவர் பாதங்களைக் கழுவி, தன் கூந்தலால் துடைத்துவிட்டுப் பின்னர் அவற்றுக்கு முத்தமிட்டு, வாசனைத் திரவியத்தைப் பூசி விட்டாள். இயேசு சொன்னார் “அவள் செய்த அதிக பாவங்கள் மன்னிக்கப்பட்டன – ஏனென்றால் அவள் அதிக அன்பு செலுத்தினாள்; கொஞ்சமே மன்னிக்கப் பட்டவர்கள் செலுத்திய அன்பும் கொஞ்சம்தான்”.’

-புனித லூக்

நாடிலும் நின்னடியே நாடுவன் நாள்தொறும்
பாடிலும் நின் புகழே பாடுவன் – சூடிலும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவோற்கு
என்னாகில் என்னே எனக்கு

எனப் பாடினார் பொய்கை ஆழ்வார். இறையடியார்கள், இறைவைனுடைய திருப்பாதங்களைப் பற்றிய வண்ணம் மீள முடியாத துன்பங்களிலிருந்தும் மீண்டு வந்திருக்கிறார்கள்.

**பிறந்தது ஆனந்த்ஜோதி**.

1987ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு நாள், டாக்டரும்

அவருடைய சீடர்கள் பதினைந்து பேரும் குறடுமலை சென்றனர். என்னால் அவர்களோடு செல்லமுடியாமல் போயிற்று. அப்போது, அங்கே குறடுமலையில்தான் தம் பெயரால் உண்மையை உலகோருக்குப் பரப்பப் போகும் அமைப்புக்கு, 'ஆனந்த்ஜோதி' என்ற பெயரை டாக்டர் வைத்தார்.

விநாயகர் கோவிலுக்குப் பின்புறம் இருந்த ஒரு குன்றின் மேல், தம் சீடர்களுடன் டாக்டர் ஏறினார். ஓரிடத்தில் அந்தக் குன்று ஒரு பெரிய குகையாகத் திறந்து கொண்டது. மிகப்பெரிய குகை. செதுக்கிவிட்டது போன்ற கூரைப் பகுதி. சில இடங்களில் உட்கார மட்டுமே முடியும் என்ற அளவில் இருந்தது அதன் உயரம். அங்கே அனைவரும் அமர்ந்தனர். டாக்டரின் தலைமையில் ஏற்படவிருக்கும் அமைப்புக்கு என்ன பெயர் சூட்டலாம் என்று யோசித்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொன்னார்கள். இறுதியில் டாக்டர் 'ஆனந்த்ஜோதி' என்றார். அவர் பெயரிட்டு முடித்ததும் கனமான மேகங்கள் வானத்தின் மூலைகளிலிருந்து பஞ்சுப் பஞ்சாக மிதந்து வந்து கைக்கெட்டுவது போல் வானை நிரப்பி நின்றனவாம். சில கணங்களில் இயற்கையின் தோற்றத்தில் மாற்றம். காத்திருப்பதைப் போல் இயற்கையில் ஒரு மொத்த அமைதி. பிறகு சில்லென்று மெல்லிய காற்று; தூவானம். வானுலகம் கவனித்துக் கொண்டிருந்தது – ஒரு முக்கியமான நிகழ்ச்சிக்குத் தாங்கள் சாட்சியானதைச் சீடர்களால் உணர முடிந்தது.

அன்று பிற்பகல் உணவருந்தும்போது (ஒரு மரத்தடி என்று நினைக்கிறேன்) ஒரு சீடர், 'எல்லாருக்குமே முக்தி கிடைக்குமா டாக்டர் ?' என்று கேட்க, டாக்டர் அதற்கு "ஆம்! அதோ அந்தப் பெண்ணுக்குக் கூட!", என்று அங்கே தள்ளி நின்று, நடப்பதை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த கிராமத்துச் சிறுமியைச் சுட்டிக்

காட்டினாராம். வானுலகம் தன் பொக்கிஷத்தைத் திறந்து வாரி வழங்கும்போது சூதுவாது அறியாதவர்களுக்கும் அப்பாவிகளுக்கும் மட்டுமே அங்கே அனுமதி.

ஆனந்த்ஜோதியின் சின்னம் மிகப்பழமை வாய்ந்தது. கலைகளுக்கு அதிதேவதையான சரஸ்வதி தேவி, அதை அகஸ்திய முனிவருக்கு அளிக்க, அகஸ்தியர் அதை டாக்டரிடம் வழங்கினார். இந்தச் சின்னம் சிறு மாறுதல்களுடன் சென்னையில் புனித தோமையார் மலையில் இருக்கும் மரியன்னையின் ஓவியத்தில் இடம் பெற்றிருப்பது ஒரு சிறப்புச் செய்தி. இந்த ஓவியத்தை, புனித தோமையார் வரைந்ததாகச் சொல்லப்படுகிறது. டாக்டரின் ஒவ்வொரு சீடரும், இந்தச் சின்னத்தின் வாழும் உதாரணமாகத் திகழவேண்டும் என்பது புனித அன்னையின் அன்புக் கட்டளை!

மேலிருந்து மனிதத்தலையைப் பார்ப்பதாக இந்தச் சின்னம் அமைந்துள்ளது. இது மூன்று பகுதிகள் கொண்டது. இரண்டு சுழிகள் இரு கண்களைக் குறிக்கின்றன. கண்களுக்குப் பின்புறம் எண் 8 -இன் அடிப்பாகம் போல் காட்சி தருவது ஞான ஆகாசத்தைக் குறிக்கிறது. இவை இரண்டுக்கும் நடுவில் இருக்கும் இரண்டு நேர்க்கோடுகள் பிராணசக்தியின் பாதையைக் குறிக்கின்றன.இரண்டு கோடுகள் இடகலை, பிங்கலை என்ற இரு நாடிகளையும் இவற்றுக்கு இடையில் இருக்கும் வெற்றிடம் சுழுமுனையையும் குறிக்கின்றன. இரண்டு கண்களிலிலும் இருந்து உள்முகமாக நீளும் கோடுகள் ஒன்றுசேரும் இடத்திலும், ஞான ஆகாசத்தின் வாசலிலும், இந்தச் சுழுமுனை நாடி முட்டி முடிகிறது.

ஞான ஆகாசத்திலிருந்து கீழிறங்கும் போது தூய உணர்வு, இடகலை, பிங்கலை வழியாக உடலென்றும், மனமென்றும் சலனம் கொண்டு அகங்காரம் என்ற மாயையாகிறது. இடையிலிருக்கும்

சுழுமுனையில் தூய உணர்வு, நிலை மாறாமல் சாட்சியாக நிற்கிறது. இடகலை, பிங்கலை நாடிகளின் சலனம் ஓய்ந்தால்தான் அகங்காரம் என்ற மாயை அழியும். பிறகு மாயையிலிருந்து விடுபட்ட தூய உணர்வு அல்லது 'சுத்த சைதன்யம்', ஞான ஆகாசத்தின் வாசலில், பிரம்மத்தோடு ஒன்றாவதற்குக் காத்திருக்கிறது. இதைக் குறித்து மேலும் அறிய வேண்டுமானால், பிராண சக்தியின் போக்குவரத்தைப் பற்றி குருமுகமாக உணரவேண்டும்.

இவ்வாறு ஆனந்த்ஜோதியின் சின்னம் பிறவிச் சுழலை அறுத்து வெளியேறுவதற்கு உரிய முறையைக் குறிப்பால் விளக்குகிறது.

ஒருவரின் கவனம் வெளிமுகமாக, அதாவது வெளியுலகில் நடப்பனவற்றின் மேல் இருந்தால், விதியின் பிடியிலிருந்து அவரால் தப்பமுடியாது. எட்டு என்ற எண் விதியைக் குறிக்கும் எண். இந்த எண்ணில் இரண்டு வட்டங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக உள்ளன. கீழிருக்கும் வட்டம், நம் உள்ளிருக்கும் ஞான ஆகாசத்தைக் குறிக்கிறது. மேலிருக்கும் வட்டம் உடையாத விதி வட்டம். வெளிமுகக்கவனம், உள்முகமாகத் திருப்பப்பட்டால், விதிவட்டம் உடைந்துவிடுகிறது. ப்ராணசக்தி எனப்படும் ஆதாரசக்தி நம் உடலில் ஓடும் சூட்சுமத்தை நாம் குருமுகமாக உணரும்போது இந்த விதிவட்டம் உடைகிறது.

**தெய்வப்பணியில் என் பங்கு:**

எனக்கு முக்கியமானவை என்று நான் என் மனத்தில் வைத்திருந்த பட்டியலில் இப்போது பெரிய மாற்றம். இறைவனின் சாம்ராஜ்யத்தில் எனக்குத் தரப்பட்டிருந்த இடத்துக்குத் தக்கபடி நான் என் கடமையைச் செய்யவேண்டியவளானேன். நான் எப்போதும் தனியாக இல்லை என்பதையும், என் செய்கைகள் யாவும்

சரிபார்க்கப்படுகின்றன என்பதையும் தெரிந்துகொண்டேன். இவ்வுலகில், இப்பிறவியில் நான் பெற்றிருந்த ரூப அடையாளங்களின் ஆதிக்கம் அடங்கி இருந்தால்தான், எனக்கு இறைவனால் தரப்பட்ட அடையாளம் பிரசன்னமாகும் என்பதும் எனக்கு விளங்கியது. நான் செல்லவேண்டிய திசையும் என் இலக்கும் எனக்குப் புரிந்தது. அதனால் என்னால் செயல்பாட்டைத் துறக்கமுடியாது என்பதும் வெளிச்சமாயிற்று. இறைவனின் பணியைச் செய்து முடிக்க வேண்டும்; ஆனால் அது சுலபமில்லை என்பதும் தெரிந்தது. நான், அற்பமான, இந்தச் சின்ன -'நான்'- எல்லாம் அறிந்தவளல்ல. ஆனால் என்னை இயக்கும் இறையருள், காரண, காரியம் கருதியே அனைத்தையும் செய்கிறது. கடவுளின் சக்தி இந்தச் சின்ன வடிவின் மூலமும் இயங்கும். வகை தொகைகளின் தொகுப்பான இந்தச் சின்ன மனத்தின் மூலம்

வரையறுக்க முடியாத பேருண்மை தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். எனக்கே என்மூலம் நடக்கும் சில காரியங்கள் விளங்காமல் போகலாம். அப்படித்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே; அதனால் என்ன!

எனக்குத் தீர்த்துக் கொள்ள இன்னும் ஒரு பிரச்னை இருந்தது. ஒன்றைச் செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றினால் அது என்னுடைய அதீத உற்சாகத்தினாலா அல்லது இறையுந்துதலாலா என்பதை எப்படி நான் கண்டுகொள்வது?

எங்களுக்கு டாக்டர் ஸ்வாச விஞ்ஞானத்தை போதித்திருந்தார். அவர் சொல்லும் வரை நாம் அனைவரும் பெரும்பாலும் ஏதாவது ஒரு நாசித் துவாரத்தின் வழியாகத்தான் ஸ்வாசிக்கிறோம் என்பதே எனக்குத் தெரியாது. ஸ்வாசம் சொல்லும் செய்தியைப் புரிந்து கொள்ளும் முறையைக் கற்ற பின், என் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் முன் என் ஸ்வாசம்

சில சமயங்களில் சுவாச விஞ்ஞானத்தைப் பயன்படுத்தாமல் சில காரியங்களில் இறங்கிப் பிரச்னைகளில் சிக்கியிருக்கிறேன் என்பதையும் இங்கே ஒப்புக்கொள்ள வேண்டும்.

அடுத்து ஆறு மாதங்களுக்கு என் பேச்சுக் குறைந்தது. என்னுடன் இறையருள் பகிர்ந்து கொண்டிருந்த பேருண்மையின் வெளிச்சத்தில், டாக்டரை இன்னும் கூர்ந்து கவனிக்கலானேன். அவருடைய சீடர்களைப் பார்க்கையில் அறியாமையால் அவர்களுடைய தரம் மறைக்கப் பட்டிருந்தது புரிந்தது. நுட்பமாகப் பட்டை தீட்டப்பட்ட வைரம் சகதியில் விழுந்து கிடந்தால் களிமண்கட்டி போல்தான் தெரியும். அவர்களெல்லாம் உள்ளே மிக அழகானவர்கள் என்று அவர்களிடம் சொல்ல நினைத்தேன். ஆனால் அவர்களுடைய அழகு டாக்டரோடு முழுமையாக சம்பந்தப்படும் போதுதான் வெளிப்படும். மற்றபடி வெளிப்படாது. பல இசைக்கருவிகளின் ஸ்வரக் கோவை இனிது கலக்க பிரதம ஸ்ருதியாக இருப்பவரும் இவரே; இயக்குநரும் இவரே.

நீண்ட ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு நான் உணர்ந்தவற்றை டாக்டரின் மற்றொரு சீடருக்கு உணர்த்தலாம் என்று முடிவு செய்தேன். மெய் பல சமயங்களில் பொய் போலத் தோன்றும் என்பதால் நான் மிகக் கவனமாகச் செயல்பட வேண்டும் என்று அறிந்திருந்தேன். ஒரு நாள் காலை இந்தச் சீடர் என் வீட்டுக்கு வந்தார். எனக்கு வீட்டு வேலையில் உதவி செய்யும் பெண்மணியும் அன்று வேலைக்கு வரவில்லை. ஆதலால் நாங்கள் தனியாக விடப்பட்டோம். சூழ்நிலையும் தக்கபடி அமைந்ததால் அதைச் சாதகமான குறியாகக் கருதி, விஷயத்தை நம்பிச் சொல்லாம் என்று முடிவு செய்தேன்.

ஒரு வட்டமான மேஜையின் முன், எதிரெதிராக நானும் என் நண்பனும் அமர்ந்தோம். “என்ன ஆயிற்று? ஏன் இப்படியொரு

மௌனம்?” என்று என் நண்பன் வினவினான். நேரடியாக என்னால் பதில் சொல்ல முடியவில்லை. யாவர்க்கும் யாவும் தரும் பரம் பொருளிடம், எடுத்த காரியத்தை முடிக்க வழிகேட்டு வேண்டிக் கொண்டேன். பிறகு நண்பனிடம் கண்களை மூடச் சொன்னேன். மூடிக் கொண்டான். ஏதேனும் காட்சி தெரிந்ததா என்று கேட்டேன். கண்களை மூடியபடி அவன் அகக் கண்ணில் அப்போது விரிந்திருந்த காட்சியை விவரித்தான். மஹாவிஷ்ணு ஆதிசேஷனின் மேல் சயனித்திருக்க அவருடைய தேவியர் இருவர் அவர் காலடியில் அமர்ந்திருந்தனர். மேலே வானமே கூரையாயிற்று. கீழே கடல் பம்மித் தணிய அதற்கு ஏற்றாற் போல் பாம்பாய்க் கிடந்த உடையவரும் எழுந்தெழுந்து மிதந்தவாறு இருந்தார். இந்தக் காட்சியை எனக்கு விவரித்துக் கொண்டிருந்த என் நண்பன் திடீரென்று நிமிர்ந்து கொண்டான். அதுவரை அரிதுயிலில் ஆழ்ந்திருந்த மாயவன் இப்போது கண்மலர்ந்து என் நண்பனைப் பார்த்தான், சிரித்தான். பிறகு ஒரு கணம்தான் அவன் காணாமல் போனான். ஆழியிருந்தது. அரவமிருந்தது. அன்னையர் இருந்தனர். ஆனால் அவனைக் காணவில்லை. ஆனால் அடுத்த கணமே, பாம்புப் படுக்கையில் மீண்டும் ‘கிடந்த திருக்கோலம்’. என் நண்பன் அதைச் சொல்லிக் கொண்டிருந்த போதே மீண்டும் ‘அந்தர்த்யானம்’. ஏதோ அவசர வேலை போலும்! ஆனால் உடனே மீண்டு, மீண்டும் படுக்கை! அவன் நாபியிலிருந்து எழுந்த அழகிய கமலத்தில் நான்முகன் வீற்றிருந்தான். (தென்சென்னையில் ஒரு வீட்டின் மூலையில் அமர்ந்த படித் திருப்பாற்கடலை நானும் என் நண்பனும் அனுபவித்துக் கொண்டிருந்தோம்.)

“விஷ்ணு நாபியில் இருந்து எழும் தாமரை, ஏனோ என்னை மிகவும் ஈர்க்கிறது” என்றான் என் நண்பன். திருமாலின் தலைக்குமேல் கூடாரமாகக் கவிழ்ந்திருந்த வானில் மேலே மேலே எழும்புமாறு அவன்

உள்ளிருந்து பணிக்கப்பட்டான். அவன் மேலே எழ, எழ, பிரம்ம தேவனைத் தாங்கியிருந்த தாமரையின் தண்டும் நீண்டு உயர்ந்து கொண்டே வந்தது. தாமரையோடு நான்முகனும் என் நண்பனோடு கூடவே மேலே மேலே எழும்பினான்.

அவனுடைய அகக்கண்ணில் விரிந்த காட்சிகளைக் கண்டவாறே எனக்கும் அவற்றை விவரித்துக் கொண்டிருந்தான் என் நண்பன். அவனுக்குள்ளே விதானமாக விரிந்த வானில் அவன் உயர உயரச் சென்றான். சிறிது தொலைவுக்குமேல் பிரம்மதேவன் உடன் வரவில்லை. தனியாக வானில் ஏகிச் சென்ற போது ஓரிடத்தில் ஒரு மேகத்தின் மேல் நீண்ட தாடியுடன் மூவர் அமர்ந்திருந்ததைக் கண்டான். அவர்கள் சித்தர்களைப் போல் காட்சியளித்ததாகச் சொன்னான். அவர்கள் என் நண்பனை மேலே போகவிடாமல் தடுத்தனர். அவன் அவர்களிடம் முறையிட்டுப் பார்த்தும் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. வேறு வழி தெரியாமல் கீழே குனிந்து அரவின் மேல் படுத்திருந்த ஆராவமுதனைப் பார்க்க, அவனும் இவனைப் பார்த்தான். அவ்வளவே! பார்த்த மாத்திரத்தில் புதிய வேகமும் ஆற்றலும் பெற்றவனாய், காற்றடைத்த பலூனைப்போல எழும்பி தாடியோடிருந்த அம்மூவரையும் கடந்து, மேலே மேலே போகலானான்.

மேலே மேலே போனான். அங்கே கூம்பைப் போன்ற இரண்டு இருப்பதைப் பார்த்துவிட்டு ‘காலமும், வெளியும்’ என்று ஆச்சரியப்பட்டான். இது எனக்குப் புரியவில்லை. ஏனென்றால் இது என்னுடைய நேரிடையான அனுபவம் இல்லையே!

இப்படியாக நாங்கள் இருவரும் மாலை ஆறு மணி வரை பேசிக் கொண்டும், பார்த்தவற்றை அலசி ஆராய்ந்து கொண்டும், வீட்டில் தனியாகத்தான் இருந்தோம். அன்று என் குழந்தைகள் கூடப்

பள்ளியில் இருந்து வருவதற்குத் தாமதமாயிற்று. அந்த நீண்ட உரையாடல் முடிவுக்கு வரும் தருவாயில், நான் வெளிப்படையாகப் பேசலானேன். என் சொற்களையும் அவன் அசைவுகளையும் அளந்தவாறு; கடைசியாக எனக்கு உணர்த்தப் பட்ட உண்மையை அவனிடம் சொன்னேன். டாக்டர் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்பதை. நான் சொன்னது உள்ளே இறங்கியதும் அவன் அசைவற்றுப் போனான். சற்று நேரம் அப்படியே அமர்ந்திருந்தான். பிறகு இருக்கையில் இருந்து எழுந்து அவ்வப்போது தன் வியப்பை வெளிப்படுத்தியவாறு மேலும் கீழுமாக நடக்கலானான். எனக்கு ‘அப்பாடா’, என்றிருந்தது. ‘என் வேலை முடிந்தது’, என்று நினைத்துக் கொண்டேன்.

அடுத்த நாள், அதே நண்பனின் வீட்டில் நான் டாக்டரைச் சந்தித்தேன். டாக்டர் அன்று ஆழ்ந்த யோசனையில் இருந்தார். அப்போது யாரோ தரையில் நீரைக் கொட்டி விட்டார். அதை இன்னொருவர் துடைத்துச் சுத்தம் செய்ததும், டாக்டர் அவரிடம் ‘நல்லா பண்ணேப்பா’ என்றார். அவர் அதைச் சொன்னது எனக்குத்தான் என்று எனக்கு விளங்கிற்று. இருந்தாலும், ஒட்டாமல், விலகி நின்று அவர் அதைச் சொன்னார். அக்கணமே நானும் யோசனையில் ஆழ்ந்து போனேன். ஆம்! நன்றாகச் செய்தேன் – ஆனால் அதை நான் செய்தது நல்லதா?

இந்த அனுபவத்திற்குப் பின், உடனே என் நண்பன் மஹாவிஷ்ணுவையும், எழும்பி, எழும்பி அடங்கும் அவர் படுக்கையையும், விநோதமான கடலையும், விதானமற்ற வானையும் வர்ணித்துப் பாட்டொன்றை எழுதினான்.

உண்மையை யாருக்கும் புகட்ட முடியாது என்பதை நான் கொஞ்ச காலத்திற்குப் பிறகே உணர்ந்தேன். நீரில் மூழ்கும்போது

காற்றுக்காகத் தவித்துப் போராடுவது போல், உண்மைக்காகத் தவித்தபின், தானே அதைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்போதுதான் அதன் அருமை தெரியும். அப்போதுதான் அதைப் போற்றிக் காப்பாற்றமுடியும்; வேறு வழி இல்லை. எவன் ஒருவனும் இறைவனுக்கு முன்னால் எல்லாவற்றையும் களைந்து நின்றால் தான் வானுலகம் தரும் ஆடையைப் பணிவாகப் பெற முடியும்; பெற்ற ஆடை பொருத்தமாகவும் இருக்கும்.

என் அகத்தின் பரிணாமத்தை முடித்துக் கொடுத்தார் என் குருநாதர். மகிழ்ச்சியில்லாமல், எல்லாவற்றிலும் நம்பிக்கை இழந்த நிலையில் இருந்த என்னை, அமைதியான, ஆனால், முழுமையான மனிதராக்கி விட்டார். அவரோடு நான் கொண்ட தொடர்பு, எதையும் நுணுக்கமாகப் புரிந்து கொள்ளவும், அடுத்தவர் மனநிலையை என் மன நிலையாய் கிரஹித்துக் கொள்ளவும், எதையும் தாக்குப் பிடிக்கவும் கற்றுத் தந்தது.

'சரிசெய்ய முடியாததைத் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான்' என்கிறது ஓர் ஆங்கிலப் பழமொழி. ஆனால், டாக்டரோ, தன் சித்தத்தால் ஒரு நொடியில் சரி செய்திருக்கக் கூடியவற்றைச் சாதாரண மனிதனைப் போல் பொறுமையாகத் தாங்கிக் கொண்டார். இந்த விதமாகத் தம் சீடர்களுக்கு, விட்டுக் கொடுக்காமல் தாக்குப் பிடிப்பது எப்படி என்று காண்பித்தார். அடி வாங்கினாலும் பொறுமையாக இருக்கக் கற்றுக் கொடுத்தார். நெருப்பே சுட்டாலும் உண்மையைப் பேசவைத்தார். ஏனென்றால், நெருப்பிலும் அவர் கைவிடாமல் அருகிலிருப்பேன் என்று வாக்குக் கொடுத்திருந்தார்.

டாக்டருக்கும் எனக்கும் நடந்த பரிவர்த்தனை இரண்டு நிலைகளில் நிகழ்ந்தது. எனக்கு வெளியே ஒரு டாக்டர். எனக்கு உள்ளேயும் ஒரு டாக்டர். இந்த இரண்டு டாக்டருக்கும் இடையில்

சிக்கிக் கொண்டு விட்டதால் நான் தேடிய தெளிவைப் பெறாமல் போக வாய்ப்பு இருக்கவில்லை. அவரிடம் சேர்ந்துவிட்டால் தப்பிக்கவே முடியாது. சீடன் அவரிடம் பாராமுகமாக இருக்க முயற்சி செய்யலாம். டாக்டரின் விவரிக்க முடியாத வழிகளாலும், யுக்திகளாலும் களைப்படைந்து, சுய கௌரவம் காயப்பட்டவனாய், அவரிடமிருந்து சப்தமில்லாமல் தப்பியோட முயலலாம். ம்ஹூம்! ஆனால், பாச்சா பலிக்காது. அந்தத் 'தேவ லோகத்து வேட்டை நாய்' (ஆங்கிலக் கவி Francis Thompson எழுதிய The Hound of Heaven என்ற கவிதையில் இறைவனை அப்படித்தான் குறிப்பிடுகிறார்), அண்டசராசரத்தின் அதி மூலைக்குத் தப்பி ஓடினாலும் அங்கேயும் தேடி வந்து பிடித்துக் கொள்ளும். தொலைந்த ஆட்டைத் தேடி மீட்காமல் மேய்ப்பன் ஓயமாட்டான். டாக்டரிடம் இருந்து தப்பிக்க முடியாது!

**ஆண்டாளும் பெரியாழ்வாரும்**

டாக்டரின் நிழலில் நான் இருக்கத் தொடங்கியதில் இருந்து இறவா நிலைக்குப் பொருத்தம் இல்லாதவற்றில் என் நாட்டம் குறைந்தது. நானும் என் நண்பர்களும் ஈடுபட்ட உரையாடல்களில் ஆர்வமற்றவர்கள் என்னைத் தவிர்த்தார்கள். நாங்கள் தனித்து விடப்பட்டோம்.

அப்படி ஒரு நாள், என் நண்பனும் நானும் ஓர் அறையில் அமர்ந்து எப்போதும் போல் டாக்டரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். என் நண்பன் சட்டென்று நிமிர்ந்தவன், என் முகத்தைப் பார்த்தபடி உறைந்து போனான். என்னைப் பதினைந்து அல்லது பதினாறு வயதுப் பெண்ணாகப் பார்ப்பதாக மெல்லிய குரலில் சொன்னான். அந்தப் பெண் காதுகளில் பெரிய தங்கத் தொங்கட்டான்களை அணிந்திருந்தாள். கூந்தலை ஒரு புறமாகத் தலைக்கு மேல் அள்ளிச் செருகிப் பூச்சூடியிருந்தாள். மான்விழிகளில்

அஞ்சனமும், புருவ மத்தியிலிருந்து இறுமாந்து எழுந்த ஸ்ரீசூர்ணமும் – என் நண்பனின் வர்ணனை, ரங்கன் மேல் ஆறாக் காதல் கொண்டு அவனோடு இரண்டறக் கலந்த ஏழாம் நூற்றாண்டின் கவித்திருவான கோதை நாச்சியாரை என் மனக்கண் முன் நிறுத்தியது. 'ஆண்டாளையா பார்க்கிறாய்?' என் நண்பனிடம் கேட்டேன். அவன் "ஆம்!" என்றான்.

அவன் என்னோடு பேசப்பேச அவனும் கொஞ்சம் கொஞ்சமாக மாறலானான். தன் வயதை மீறிய முதிர்ந்த உருவத்தை உடையவனாக மாறிக் கொண்டிருந்தான். அவன் உடல் ஏனோ தளர்ந்தது. கண்பார்வை மங்கியவனைப் போல் கண்களை இடுக்கிக் கொண்டு என்னைப் பார்த்தான். தனக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றம் அவனுக்கும் புரிந்தது. அவன் எழுந்து நின்றபோது தள்ளாமை தெரிந்தது.

'பெரியாழ்வார்', என்று மெல்லிய குரலில் என் வியப்பை வெளிப்படுத்தினேன்.

ஸ்வர்ணக் கொழுந்தாகக் குழந்தைக் கோதையைக் கண்டெடுத்து ரங்கனின் பரிசாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து, தக்க தருணத்தில் அவனுக்கே அந்தச் செல்வப் பூங்கொடியை தாரை வார்த்துத் தனிமையில் தவித்துப் போன தகப்பனல்லவா அவர். ஆம்! வைணவப் பெரியார், பெரியாழ்வார் - நாச்சியாரின் வளர்ப்புத் தந்தை. அதோ, தந்தையும் அவருடைய செல்வ மகளும் பிரபுவைப் பற்றி நாங்கள் மேலும் அறிய இறங்கி வந்து விட்டார்கள். அடுத்த ஒரு மாத காலம் அவர்கள் எங்களுக்குள்ளும், நாங்கள் பிரபுவிற்குள்ளும் உறைவிடம் கொண்டோம்.

அவர்களும் ரத்தமும் சதையுமான மனிதப் பிறவிகளே என்பதை இந்த அனுபவம் எங்களுக்கு விளங்க வைத்தது.

அருளாளர்களை ஒரு பீடத்தில் அமர்த்தி, மானுடத் தவிப்பும், கவலையும் சந்தேகமும் தொடமுடியாத ஓர் உயரத்தில் அவர்கள் இருப்பதாக நினைத்து விடுகிறோம். நாம் நடக்கும் அதே பாதையில்தான் அவர்களும் நடந்தார்கள் என்பதையும், நம்மைப் போலவே எதிலும் நிச்சயமற்ற நிலை அவர்களுக்கும் இருந்தது என்பதையும் உணர வைத்தார்கள். கோதை, பிரபுவோடு ஒன்றிக் கலந்தபின், தந்தை அவளைப் பிரிந்து பட்ட பாட்டை நாங்கள் முழுமையாக உணர்ந்து நெகிழ்ந்தோம்: ஒப்பற்ற மணாளனிடம் ஒப்படைத்து விட்டாலும் அவனோடு சென்று விட்டவளை இனி இவ்வுலகில் எப்படிக் காண்பார்? அவள் சிரிப்பும் கொலுசுச் சப்தமுமாகக் கலகலவென்று இருந்த வீடு, அவர் தனியாகத் திரும்பி வரும்போது பாலைவனமாக வெறிச்சோடிக் கிடக்கிறது.

இந்த அனுபவம் தொடர்ந்தவரை என் நண்பனுக்கு என்னை விட்டு விலகியிருப்பது கடினமாயிருந்தது. நாங்கள் அளவளாவிய மொழியில் பழமை தொனித்தது. வைணவ மணம் கமழ்ந்த சொற்கள்! இந்தக் காலகட்டத்தில் என் நண்பன் இரு சக்கர வாகனத்தில் ஏறிப் போவதைப் பார்க்கப் பாவமாக இருக்கும். உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்; பெரியாழ்வார் அவனை ஒதுக்கி விட்டு அவன் உடலில் முழுவதுமாக இறங்கி விட்டார். ஆனால் ஓர் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த என் நண்பன் எப்போதும் போல் சாதாரணமாக நடந்து கொள்ளவும் வேண்டியிருந்தது. வயதான தந்தையைச் சந்தடி மிகுந்த சாலையில், மொபெட்டில் அனுப்பிவிட்டோமே என்று ஒரு மகளைப் போல் நான் கவலைப் பட்டுக் கொண்டிருப்பேன்.

**தொலைந்த குறட்பாக்களின் மீட்சி:**

'தர்மத்தை நிலை நாட்ட 2000 பேர் இவ்வுலகிற்கு இப்போது

வந்திருக்கிறார்கள். அவர்கள் தர்மத்தின் தூண்கள்' என்று டாக்டர் என்னிடம் நெடுநாட்களுக்கு முன்பு கூறியிருந்தார். அவர்கள் இவ்வுலகுக்குத் தீங்கு நேர அனுமதிக்க மாட்டார்கள் என்றும் சொல்லியிருந்தார். அப்படியானால் இன்னும் சில வருடங்களில் ஆன்மிகப் புரட்சி ஏற்படும் என்று தெரிகிறது. தொன்மையான தமிழர்கள், வாழ்க்கையின் அவசியமான ஈடுபாட்டுக்கென நான்கு முக்கியமான களங்களை வகுத்திருந்தார்கள். அவை, அறம், பொருள், இன்பம், வீடு என்பன. வள்ளுவரின் திருக்குறள் இந்த நான்கில் முதல் மூன்றைப் பற்றிப் பேசுகிறது. நான்காவதான வீடு பேறு, காணப்படவில்லை. இவ்வுலகை விட்டுப் போவதற்கு முன் தான் செய்ய வேண்டியவை என்னென்ன என்பதைப் பற்றி டாக்டர் பேசிய போது, வள்ளுவரின் குறட்பாக்களில் ஒரு பகுதி இன்னும் வெளி வரவில்லை என்றும் அதை வெளியே கொண்டு வர வேண்டும் என்றும் கூறினார். 1983ஆம் ஆண்டு இதை என்னிடம் சொன்னார். எங்கோ புதைந்து கிடந்த குறட்பாக்கள் அடங்கிய ஓலைச் சுவடிகளை இவர் தேடி எடுக்கப் போகிறார் என்று நினைத்தேன். ஆனால் அவர் தேர்ந்தெடுத்த வழிமுறையில் ஒரு புதுமையான வித்தியாசம்.

ஐந்தாறு வருடங்களுக்குப் பிறகு டாக்டர் கேட்டுக் கொண்டதன் பேரில் சீடர் ஒருவர் (அந்த சீடரே ஓர் உயர்ந்த கவிஞர்தான்) தன்னை மீடியமாக்கிக் கொண்டு மனக்கண்ணால் அக்குறட்பாக்கள் மூவாயிரத்தையும் படித்து அவற்றை அப்படியே எழுதினார். இக்குறட்பாக்கள் வீடு பேற்றைப்பற்றி மட்டுமே பேசின. இவை இன்னும் வெளியிடப்படவில்லை. (1996ல் வெளியிடப்பட்டுவிட்டது. ) இக்குறட்பாக்களை எழுத எடுத்துக் கொள்ளப்பட்ட சில மாதங்கள் திருவள்ளுவர் அருவமாக அச்சீடருடனேயே இருந்தார். எழுத்துக்கள் ஒளி வடிவமாக அகக்கண்ணில் தெரிய அச்சீடர் அதைப் படித்துப் படியெடுத்தார்.

எடுத்தெழுதும் போது பிழை நேர்ந்தால் அச்சீடரின் கவனத்துக்கு அது கொண்டு வரப்பட்டுச் சரிசெய்யப்பட்டது என்பதையும் அவரே சொன்னார். அவருடைய மனக்கண்ணில் தவறான சொல் அடிக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சரியான சொல் நுழைக்கப்பட்டதாம்.

இக்குறட்பாக்கள் எழுதி முடிக்கப்பட்ட அன்று டாக்டர் கற்பூரமேற்றி, வந்த வேலையை முடித்துக் கிளம்பிய திருவள்ளுவருக்கு விடைகொடுத்தார். இவ்விலக்கியப் படைப்புக்குப் பல பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன; ஆனால் இறுதியில் டாக்டர் ‘அருட்குறள்’ என்று பெயர் சூட்டினார். இறைவன் அருளால் அன்றோ மனிதனின் கைக்கு அது வந்து சேர்ந்தது!

இக்காலக் கட்டத்தில் இப்பாக்களை எடுத்து எழுதிய சீடருக்கு அம்மை நோய் கண்டது. எனக்குத் தெரிந்தவரை வேறு யாருக்கும் அந்நோய் அப்போது இருக்கவில்லை. அச்சீடருடன் தினமும் கூட அமர்ந்தும், உணவருந்தியும் வந்த எங்கள் யாருக்கும் அந்நோய் தொற்றவும் இல்லை. ஒவ்வொரு அதிகாரம் எழுதி முடிக்கப்பட்ட பிறகும் நாங்கள் எல்லாரும் ஒன்றாக அமர்ந்து அதைக் கேட்போம். எங்களில் சிலர் அக்குறட்பாக்களை மனனமே செய்துவிடும் அளவுக்கு அதில் ஆழ்ந்திருந்தார்கள். அச்சீடரும், உடல் முழுவதும் கொப்புளங்களும், அரையில் ஒரு மெல்லிய துணியுமாக, அமர்ந்து, உடல் உபாதையின் சுவடே தெரியாத தெள்ளிய குரலில், குறட்பாக்களைப் படிப்பார். அருகே அமர்ந்து பிற சீடர்களும் மனமே செவியாக அவர் படிப்பதைக் கேட்பார்கள். அவர் தம் நோயைப் பொருட்படுத்த வில்லை. பிறருக்கோ அதைப் பற்றிய சிந்தையே இருக்கவில்லை. டாக்டரிடம் அவர் சீடர்களுக்கு இருந்த நம்பிக்கை அப்படி. இங்கே இன்னொன்றையும் கூற வேண்டும். இந்த ஒவ்வொரு

நாளும் டாக்டரும் எங்களுடன் அமர்ந்து குறட்பாக்களைப் படிக்கக் கேட்டார். இடையிடையில் நிறுத்திக் கடினமான பகுதிகளுக்கு விளக்கமும் தந்தார்.

**வானோர் இறங்கிப் பேசிய புனித நிகழ்வுகள்:**

தொடர்ச்சியாகக் கிட்டத்தட்ட ஒரு வாரம் நான் தியானம் செய்யும் போது, சப்த ரிஷிகளுடனும், துருவனுடனும் இருப்பது போல் உணர்ந்தேன். ஹிந்து புராணங்களின்படி இவர்கள் அனைவரும் பால்வெளியில் நட்சத்திரங்களாகப் பதவி வகிப்பவர்கள். மனித சமுதாயத்தின் வரலாற்றுக்கும் காரணமானவர்கள் இந்த சப்த ரிஷிகளே.

இந்தச் சமயத்தில் நான் டாக்டரை சந்திக்க முடியாத சூழ்நிலை நிலவியபடியால், டாக்டரின் சீடரான என் நண்பர் மூலம் இதைத் தெரியப்படுத்தினேன்.

“அப்படியானால் நீங்கள் இருவரும் அவர்களை அழைத்துப் பேசுங்கள்” என்று டாக்டர் என் நண்பரிடம் கூறினார். அவர்கள் வந்து இறங்கிப் பேச, என் நண்பர் ஒரு மீடியமாக, அதாவது ஒரு ஊடகராக இருப்பார் என்றும் சொன்னார்.

நாங்கள் அவ்வாறே செய்தோம். மாலை ஆறு மணி இருக்கும். என் நண்பர் மரப் பலகையில் வெள்ளைத் துணிவிரித்து அதில் அமர்ந்தார். நாங்கள் இருவரும் சற்று நேரம் பிரார்த்தனை செய்தோம். பிறகு சப்தரிஷிகளில் முதல்வரான அத்ரி மகரிஷியை என் நண்பரின் உடலுக்குள் இறங்குமாறு கேட்டுக் கொண்டேன். இதற்குள் என் நண்பர் தியான நிலைக்குச் சென்றுவிட்டார். அவர் உடலுக்குள் இறங்கிய அத்ரி மஹரிஷி, தாம் அழைக்கப்பட்டது ஏன் என்று வினவினார். ஏதோ சில கேள்விகளைக் கேட்டேன். அதில் ஒன்றுதான்

இப்போது நினைவில் இருக்கிறது.

“டாக்டர் ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்?”, என்றேன்.

“தாங்குவதற்கு வல்லார் பிறர் வரும் வரை அவர்தான் சுமக்க வேண்டும்” என்று மஹரிஷி பதில் சொன்னார்.

ஆன்மிகப் பெருந்தகையார் இறங்கிப் பேசிய புனித நிகழ்வுகளின் வரிசையில் இதுவே முதலாவது. கிட்டத் தட்ட ஒரு வருட காலம் இத்தகைய நிகழ்வுகள் நீடித்தன.(இவற்றைப் புனித நிகழ்வுகள் என்றே இனி அழைக்கலாம்.) ஆரம்பத்தில் நிகழ்ந்த சில நிகழ்வுகள் மட்டும் ஒலிப்பதிவு செய்யப்படவில்லை. அத்ரி முனிவர் தொடங்கி, பல ரிஷிகளும், ஆன்மிகப் பெரியார்களும் ஒருவர் பின் ஒருவராக ஊடகர் மூலம் அழைக்கப்பட்டார்கள். இரண்டாம் நாளிலிருந்து டாக்டரின் சீடர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்தோடு கூட்டமாக வந்து, இப்படி இறங்கிய ஆன்மிகப் பெரியவர்களுடன் அளவளாவி மகிழ்ந்தார்கள். தங்கள் ஆன்மிக தாகத்தைத் தணித்துக் கொண்டார்கள்.

வானில் பறக்கும் பறவை யாவற்றையும் மேலிருந்து பார்ப்பதைப் போல், நாங்களும் எல்லா மதங்களையும் மேலிருந்து பார்க்குமாறு, எங்களை ஓர் ஆன்மிக உயரத்துக்கு டாக்டர் அழைத்துச் சென்றிருந்தார். இப்பேரண்டத்தின் பாதுகாவலரான இறைவனையும், அவருடைய அமைச்சர்களையும் வெவ்வேறு மதம், வெவ்வேறு பெயரிட்டு அழைப்பதை, அந்த உயரத்திலிருந்து நாங்கள் புரிந்து கொண்டோம். மதத்துக்கு மதம் பெயர்தான் வெவ்வேறு. ஆனால் வந்துபோன புனித ஆவிகள் அதே கூட்டத்தினர்தான். ஒரு பிறவியில் ஹிந்து அருட்செல்வர், மற்றொன்றில் யூத அல்லது கிருஸ்தவ அல்லது இஸ்லாமிய அல்லது புத்த, ஜைன அருளாளர் என இறைவனின் அமைச்சர்கள் வெவ்வேறு பெயர்களில் திரும்பத் திரும்ப வந்திருந்தார்கள், வருகிறார்கள்.

பிறந்த இடமும் சார்ந்த மதமும் எதுவானாலும், அவர்கள் வெவ்வேறு மொழிகளில் பேசியது ஒரு கடவுளைப் பற்றியே; ஒரே உண்மையைப் பற்றியே. வெவ்வேறு மொழிகளில் புனிதர்கள் 'பிறர்' என்று பேசியது ஈனரும் அறியாதாரும் கூறுவது போல் பிற மதங்களைச் சேர்ந்தவர்களைக் குறிக்கவில்லை; உண்மை வழியிலிருந்து மாறிப் போன கொடியவர்களையே பிறர் என்று குறிப்பிட்டனர். படைப்பைத் தாங்கி நிற்கும் கூர்முனை அந்த ஒரே இறைவனே; ஞானிகள் அனைவரும் அவனுடைய அமைச்சர்கள்.

இப்படி ஊடகரின் மூலம் வந்து பேசும்படி இறைவனுடைய சாம்ராஜ்யத்தின் பேரறிவாளர்கள் அழைக்கப்பட்டார்கள். டாக்டருடைய சீடர்கள் சந்திக்க வேண்டும் என்று சொன்னவர்களை அழைத்து வந்து அருகிருந்து அருள் புரிந்தது அன்னை பராசக்தியே என்று ஊடகர் கூறினார். என்ன காரணத்தாலோ, இந்த நிகழ்வுகளின் போது பராசக்தி, ஊடகருக்குத் தூய மரியாளாகக் காட்சி தந்தாள். தன்னுடைய மாசற்ற மைந்தன் மீண்டும் வருகிறான் என்பதை உணர்த்தவே அவ்வாறு வந்தாள் போலும். இதன் விளைவாக சீடர்களுக்கெல்லாம் புனித மரியாளிடம் வாஞ்சையும் பிடிப்பும் ஏற்பட்டது. மரியன்னையின் அமைதியான அழகை வெளிக்கொணர்ந்த ஒரு குறிப்பிட்ட படத்தை எல்லாரும் வாங்கி வைத்துக் கொண்டார்கள். இறைதூதர் முகமது நபி, இயேசுவுக்கு ஞானஸ்நானம் செய்து வைத்த யோவான், ஸ்ரீ ராமானுஜர், சித்தர் பூண்டி சாமியார், மதிப்புக்குரிய ஸூஃபி ஹஸ்ரத் இனாயத்கான், இன்னும் பலர் டாக்டரின் சீடர்களைச் சந்திக்க இறங்கி வந்தார்கள்.

ஒவ்வொரு மாலையும் பலாமர வீட்டில் இந்த 'நிகழ்வுகள்' கிட்டதட்ட இரண்டு மணி நேரம் நடந்தன. சில சமயம், இன்னும் சில ஆன்மிகப் பெரியார் சீடர்களை அன்றைய தினமே சந்திக்கக்

காத்திருக்கிறார்கள் என்று புனித அன்னை ஊடகரிடம் தெரிவித்தால், சிறிய இடைவேளைக்குப் பிறகு முன்னிரவில் மீண்டும் சீடர்கள் ஒன்று கூடுவார்கள். இத்தகைய நிகழ்வுகள் பல சமயங்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. அப்படி ஒலிப்பதிவு செய்யப்பட்டவற்றில் ஒரு பகுதி ஆனந்த்ஜோதியின் புத்தக வெளியீடுகளாயின. ஹோலி ஜெம்ஸ், ஹோலி பாஸெஜ், ஹோலி வாய்ஸ், அன்னையின் அருள் வழி, ஆத்ம தரிசனம் ஆகியவையே அவை.

இந்த நிகழ்வுகளின் போது சீடர்களின் வாழ்க்கை குறுகிய காலத்தில் உயர்கல்வி பயில முற்படும் மாணவர்களின் வாழ்க்கைபோல் ஆயிற்று. அவர்களுடைய அன்றாட நடவடிக்கைகள் கூட மெய்ஞானிகளையும் சித்தர்களையும் ஊடகர் மூலம் சந்தித்த அந்த நிகழ்வுகளையே சுற்றி வந்தன. அந்த நேரமும் இடமுமே அவர்களுக்கு வகுப்பாயிற்று. அவர்கள் எல்லாருடைய குடும்பத்திலும் புனித அன்னை ஓர் அங்கத்தினர் ஆனார். ஆன்மிகப் பாதையில் பயணம் செய்வோருக்கு என்னவெல்லாம் கேள்விகள் எழுமோ அவையெல்லாம் கேட்கப்பட்டன. மாமுனிவர்களும், உண்மையை தரிசித்தவர்களும் அவற்றுக்கு பதிலளித்தார்கள். இந்த நிகழ்வுகளின் போது, சிலுவையும், பிறையும், ஸ்ரீசூர்ணமும், விபூதியும், நடுவழியும், பத்துக் கட்டளைகளும், இன்னும் உலக மஹாமதங்களில் ஒன்றிய சன்மார்க்கங்களும், அந்த மதங்களின் பிரதான பிரிவுகளும் ‘உண்மை’ என்ற ஒற்றைத் தலைமையின் கீழ் சங்கமித்தன.

‘உண்மையே அழகு, அழகே உண்மை’ என்றிருக்க யாரே அழகின் சன்னிதியை விட்டு விலகுவர்? நிகழ்வுகளில் சீடர்களின் பங்கேற்பு நாளுக்குநாள் அதிகரித்தது. சில சமயம் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்வுகளைப் பற்றிய சந்தேகங்களும் முளைத்தன. ஆன்மிகப் பெரியார் இறங்கிப் பேசுவது நிஜம்தானா அல்லது

ஊடகராக இருப்பவர் அப்படி நடிக்கிறாரா என்பது போன்ற சந்தேகங்களே அவை. சமையல் சரியாகச் செய்யப்பட்டதா என்பதற்கு அதன் ருசியே தீர்ப்பு. எங்கள் வட்டிலில் இட்ட அமுதில் வான்சுவை! ஊடகராக இருந்தவரும் சரி, நிகழ்வுகளில் பங்கேற்றவர்களும் சரி, இறைவன் மீண்டும் இவ்வுலகத்தார்க்கு ஞான அமுது படைக்கப் பயன்படுத்திய கருவிகளே. தங்கள் வேலையைச் செவ்வனே செய்து முடித்த கருவிகளுக்குத் தக்க சன்மானமும் வழங்கப்பட்டது.

**ஆனந்தத்தில் கரைந்தேன்**

ஓரிரவு, கனவில் டாக்டர், மிகவும் அழகாகவும், துறுதுறுவென்றும் இருந்த ஓர் எட்டு வயதுப் பையனோடு தோன்றினார். ஒரு குன்றின் மேல் தெளிந்த நீரூற்றின் அருகில் நாங்கள் மூவரும் நின்றிருந்தோம். டாக்டர் என் தலையைத் தொட நான் சொல்ல முடியாத பேரானந்தத்தில் திளைக்கலானேன். நானே பேரானந்தம், நான் கரைந்து கொண்டிருந்த பெருங்கடலும் பேரானந்தம். நான் கரையக் கரைய மயக்கத்தில் கீழே சரியலானேன். சிறுவன் நீரூற்றிலிருந்து தண்ணீரை எடுத்து வர, டாக்டர் அதை என் மீது தெளித்தார். மயக்கத்தில் இருந்து மீண்ட நான் அச்சிறுவனையும் டாக்டரையும் பற்றிக் கொண்டேன். படைப்பின் ஆதாரமான ஆனந்தத்தில் மேலும் திளைக்கலானேன்.

கனவில் எனக்குக் கொடுத்த அனுபவத்திற்கு, டாக்டருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று தோன்றியது. அடுத்த நாள், என்னால் அவரைச் சந்திக்க முடியவில்லை. டாக்டருக்கு அவருடைய மருத்துவ மனையில் தினமும் உதவி செய்து வந்த ஒரு சீடரின் உள்ளங்கையில் ‘நன்றி’ என ஆங்கிலத்தில் பெரிதாக எழுதி அனுப்பினேன். டாக்டர் அதைப் பார்த்துவிட்டுச் சிரித்தாராம்.

**மாயை என்ற திரை**

டாக்டரின் பரிச்சயத்துக்குப் பிறகு உண்மையான பிரார்த்தனையே துன்பத்தைத் துடைப்பதற்கு உற்ற வழி என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டேன். என்னைச் சுற்றியிருந்தோர், அதிலும் தியான மார்க்கத்தில் இல்லாதவர்கள் பட்ட துன்பம் என்னை பாதித்தது. மௌனத்தில் நான் செய்த பிரார்த்தனைகளுக்கு இறைவன் செவி சாய்த்தான். எப்போது, எங்கே, யாருக்காக நான் இறைவனிடம் இறைஞ்சினேன் என்பது என் மனத்தில் புதைந்தே கிடக்கும். புதைந்த இடத்தில் கோடிக்கோடி நன்றி மலர்கள் பூத்திருக்கின்றன. அவை அலுங்காமலும் வாடாமலும் இருக்க நான் இறைவனிடம் எனக்கு அடக்கத்தை வேண்டுகிறேன்.

1990ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினொன்றாம் நாள், டாக்டரின் சீடர்களுக்கு ஒரு புதிய அத்யாயத்தின் ஆரம்பம். பாலுவையும், மணியையும், என்னையும் வரவழைத்து, ரவியின் முன்னிலையில் ஓர் இறைப்பணிக்கு டாக்டர் எங்களை ஆட்படுத்தினார். பாலுவும் நானும் மேலிருப்பவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டோம் என்றும், (இதற்கு மேல் என்னால் விளக்க முடியாது. அவர் சொன்னதே இவ்வளவுதான்!) மணியைத் தானே தேர்ந்தெடுத்ததாகவும் தெரிவித்தார். தனக்கிருபக்கங்களிலும் எங்களை அமரச் செய்து எங்கள் உச்சந்தலையில் தன் உள்ளங்கைகளை வைத்து லேசாக அழுத்தினார். அவருடைய மெல்லிய தேகத்தினுள் அவருடைய தெய்வநிலை இறங்கிப் பிரசன்னமான போது நான் மிகவும் சின்னதாகி விட்டது போல் உணர்ந்தேன். எனக்கு தீட்சை தந்த போது பிரமிப்பில் இறுகிப் போனேன். தேவர்களின் தலைவன் என் இதயத்துக்குள் வந்தான்.

எங்கள் மூவருக்கும் எந்தப் பணிக்காக தீட்சை தரப்பட்டது என்பதைச் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை.

பட்டை தீட்டப்பட்ட வைரத்தைப் போல், டாக்டருக்குப் பலப்பல முகங்கள் இருப்பதை, அன்றிலிருந்து டாக்டரின் சீடர்கள் மெதுவாக, ஆனால் படிப்படியாகப் புரிந்து கொள்ளத் தொடங்கினார்கள். பல சீடர்களுக்குக் குழப்பம். தங்களுக்குத் தெரிந்த சட்ட திட்டங்களுக்குள் இந்தப் புதிய டாக்டரை அடக்க முடியவில்லை. ஒவ்வொரு சீடரும், ஒரு புனிதமான நபர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கற்பித்துக் கொண்டு அந்தக் கற்பனைக்குள் டாக்டரை அடைத்து வைக்க முயன்றார். ஆனால் இந்த நாயகனோ எந்தக் கற்பனையும் கட்டுப்படுத்தாத தனித்துவம் வாய்ந்தவனாக இருந்தான். டாக்டருடைய உண்மையான உயரம் தெரியாத சில சீடர்கள் அவரை அடக்கி வைக்க முயன்றார்கள். எந்தக் கருத்தீடும் உண்மையை வரையறுக்க முடியாது. எந்த மானுட தர்க்கமும் உண்மையின் பரிமாணங்களுக்கு நிபந்தனை விதிக்க முடியாது. தங்கள் கருத்தீடு தகர்ந்து போய், அதனால் நம்பிக்கை கேள்விக்குறியானதால், டாக்டரின் சீடர்கள் பலர் சந்தேகமும் நிச்சயமற்ற போக்குமாக அலைக்கழிக்கப் பட்டார்கள்: ‘தங்களுக்குத் தெரியும் என்று நினைத்த டாக்டர்தானா இவர்?’ஆனால் அவர்களுக்குள்ளும், அடக்கத்துடன் டாக்டரை அணுகித் தங்கள் மனப்பாங்கும் விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் சரியானபடி இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் வாழ்த்தப்பட்டவர்களே. கதைக்களம் வலுத்தது. நாயகன் சரியானதென்று நினைத்ததைச் செய்தான், பேசினான். எல்லாச் சீடர்களுமே குழம்பினார்கள். குழப்பத்தின் அளவுதான் ஒருவருக்கொருவர் மாறுபட்டது. அடக்கமும் ஆழ்ந்த அறிவும் பெற்றவர்கள் அமைதியாக, அதிகம் பேசாமல், நடப்பவற்றைக் கூர்ந்து கவனித்தார்கள். ஆனால் ஏற்கனவே ஒருவித முடிவுக்கு வந்து விட்டவர்களோ அதிகம் பேசித் தங்கள் அதிருப்தியைப் பறைசாற்றினார்கள். ஒரு புறம் அதிருப்தியாளர்களுக்காக என் மனம்

பரிதவித்தது. ஏனென்றால் அவர்களைப் பொறுத்தவரை வாழ்வாதாரமாக அவர்கள் நினைத்த அடிப்படைக் கருத்துக்களின் ஆணிவேரையே டாக்டர் அசைத்துக் கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரிந்தது. ஆனால் மறுபுறம் அமைதியாக இருந்த மற்ற சில சீடர்களின் தன்மையையும் அடக்கத்தையும் கண்டு வியந்தேன். உள்முகமாக அவர்களை வணங்கினேன்.

எல்லாருக்குமே சந்தேகங்களும் குழப்பங்களும் ஒரே விதம்தான். டாக்டரிடம் இருந்து வாங்கிய அடியும் ஒன்றே போல்தான். அவருடைய பிற பரிமாணங்களை அவர்கள் அதுவரை கண்டிருக்கவில்லை. இல்லையில்லை, அப்படியும் சொல்ல முடியாது. ஏனென்றால் உள்ளூக்கம் மிகுந்த தருணங்களில் அவர்கள், டாக்டர் யார் என்பதைக் கண்டு கொண்டவர்களே. யாரென்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்வது வேறு; அதை ஏற்றுக் கொண்டு அவரிடம் சரணடைவது வேறு. நம்மில் எத்தனை பேர் ஸ்ரீராமனிடமும், ஸ்ரீகிருஷ்ணனிடமும், இயேசுவிடமும், புத்தரிடமும் நம்மைத் தத்தம் செய்திருப்போம் என்று யோசித்துப் பாருங்கள் –அதே காலத்தில் அவர்களோடு நாமும் இருந்திருந்தால்? ஒரு செல்வந்தன் புத்தரிடம் சென்று தன்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டான். “உன் செல்வத்தையெல்லாம் தானம் செய்து விட்டு வா” என்றார் புத்தர். போனவன் திரும்பி வரவேயில்லை. தன் குருநாதரை அவன் கண்டு கொண்டான். ஆனால் அவரிடம் அவன் சரண் புகவில்லை. ஒரு சீடர் இயேசுவிடம், தன் தந்தையின் சடலத்தைப் புதைத்துவிட்டு வர அனுமதி கேட்டார். “இறந்தவர்களே தங்கள் இறந்தாரைப் புதைக்கட்டும்” என்று இயேசு அனுமதி மறுத்தார். ஒவ்வொரு முறை அவதாரங்கள் இம்மண்ணுலகில் கால் பதித்த போதும் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே அவர்களிடம் முழுமையாகச் சரண்புகுந்தார்கள். சரணாகதி என்பது பற்றிப் பேசுவது எளிது.

ஆனால் கடைப்பிடிப்பது கடினம். எல்லா வேதங்களும், எல்லா மதங்களும் சரணாகதியைப் பற்றிப் பேசுகின்றன. ஆனால் அச்சொல் சோதனையான வேளைகளில்தான் பொருள் கொள்கிறது.

சரணாகதி இயலாத போது, புரட்சி கதியில் இயங்கிய சீடர்கள் டாக்டர் யார் என்பதையே கேள்வி கேட்கத் தொடங்கினார்கள். அடுத்தபடியாக உள்ளூக்க நிலையில் ஏற்கனவே டாக்டரை வியந்தும் வாழ்த்தியும் பாடிய பாடல் வரிகளைக் கற்பனை என்று ஒதுக்கினார்கள். மேலோர் இறங்கிப் பேசிய 'நிகழ்வுகளுக்கு' மிமிக்ரி என்று பட்டம் சூட்டினார்கள்.

அவர்களுடைய பிறழ்வைக் குறித்து நான் விவரிப்பது அவர்களை வெளிப்படுத்துவதற்காக அன்று. பரிணாமத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களும் சில சமயம் பிறழலாம் எனக் கண்டேன். இதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். அவ்வளவே!

எப்பேர்ப்பட்டவரும் தவறு செய்யலாம். ஏனென்றால் டாக்டரிடமிருந்து விலகிச் சென்றவர்கள் கூட உயர்ந்த மனிதர்கள்தாம்; முற்பிறவிகளில் பிரபுவிடம் சரண்புகுந்து மாறாத மனத்தவராய், அவரிடம் நீங்காத நம்பிக்கை உடையவராய் வாழ்க்கை நடத்தியவர்தாம். ஆனால் இந்த முறை கலெய்டஸ்கோப் கொஞ்சம் சுழன்றது. அவர்கள் சந்தித்த சோதனைகள் வேறுபட்டன. பிரபுவின் சித்தம் அப்படி. கதைதான் ஏற்கனவே எழுதப்பட்டு விட்டதே! இல்லாவிட்டால் பெரியோர் இறங்கிப் பேசிய நிகழ்வுகளின் போது இப்படி நடக்கும் என்று ஆருடம் கூறியிருக்க மாட்டார்கள். டாக்டரும், தனக்கு எதிராகப் பலவிதமாக பேசப்படும் என்றும், அவற்றை நம்ப வேண்டாம் என்றும் எங்களை எச்சரித்திருக்க மாட்டார். இறைவனுடைய நாடகத்தில் நடிக்கும் போது நல்லவனாக ஒரு நாடகத்தில் நடித்தவன், அடுத்த நாடகத்தில் அதற்கு முரணான பாத்திரத்தில் நடிக்க வேண்டியிருக்கும். அதனால் பண்பட்ட யாருமே, 'நான் தவறே செய்ய மாட்டேன்' என்று தன்

அகங்காரத்துக்குத் தீனி போட முடியாது.

'நித்தியைக் கேள்', 'நித்தியை விட்டு விடாதே', 'நித்தி சொல்வதைச் செய்' என்று, 'நிகழ்வுகளின்' போது குழுமியிருந்த சீடர்களிடம் தூய அன்னை கூறுவார். ஆம், 'நித்தி'- இப்படித்தான் தூய அன்னை வாஞ்சையோடு டாக்டரைக் குறிப்பிடுவார். ஆனால் அச்சீடர்களே 'நித்தி'யை விட்டுச் சென்றார்கள்; 'நித்தி'யின் சொற்படிச் செய்யவில்லை. ஆம், 1991இல் டாக்டரின் பல சீடர்கள் டாக்டரிடமிருந்து விலகினார்கள். இப்படி நடக்கும் என்றும் 'நிகழ்வுகளின்' போது எச்சரிக்கப்பட்டது. அப்படி எச்சரிக்கப்பட்ட போது ஒவ்வொரு சீடரும், 'இது தனக்கில்லை, வேறு யாருக்கோ தான்' என்று அசட்டையாக இருந்தார். ஆனால் அது நிஜமாகவே நடந்த போது, விரல் விட்டு எண்ணக்கூடிய சீடர்கள்தாம் டாக்டரிடம் மீதம் இருந்தார்கள். இந்தக் கால கட்டத்தில் டாக்டருடைய நம்பகத் தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டது. அவரைப் பற்றி இழிவாகப் பேசப்பட்டது. இவற்றையெல்லாம் டாக்டர் அமைதியாகச் சகித்துக் கொண்டார். எதற்கும் விளக்கம் தந்து தன்னை நிறுவிக் கொள்ள முனையவில்லை.

இதையும் டாக்டர், தாமே காரணமாக நின்று நடத்தினார். நான் இப்புத்தகத்தில் முன்னம் எழுதியதை இங்கு மீண்டும் எடுத்து எழுதுகிறேன்:

'டாக்டர் விளைவுகளை ஏற்படுத்தினார். கூரிய வளைவுகளும், குறுக்கு நெடுக்கான திருப்பங்களையும் கொண்டிருந்த தம் சீடர்களின் வாழ்க்கைப் பாதையில்,அவர்களை மிகுந்த எச்சரிக்கையாகவும் நேர்த்தியுடனும் வழிநடத்தி,வழியில் வாய்பிளந்து காத்திருந்த கோர விதியின் வசமிருந்து அவர்களை மீட்டுத் திசைதிருப்புவதற்குக் காரணங்களை அவர் ஏற்படுத்தினார். சீடர்களில் பெரும்பாலானோருக்குத் தாங்கள் எவற்றில்

இருந்தெல்லாம் தப்பினோம், எவ்வாறு காப்பாற்றப் பட்டோம் என்று கூடத் தெரியாது. ஏனெனில், என் பிரபுவும் குருவுமாகிய 'மனிதனின் மகன்' அவர்களுக்கு பதிலாகத் தானே அத்துன்பங்களை அனுபவித்துத் தன் கருணையினால்,தான் பட்ட கஷ்டங்களையும் மௌனத்தில் புதைத்தார்.'

அவர்கள் நித்தியை விட்டுச் சென்றார்கள். ஏனென்றால் அவருடைய சில நடவடிக்கைகளை அவர்களால் புரிந்து கொள்ளவோ, ஜீரணித்துக் கொள்ளவோ முடியவில்லை. முழுமையான அன்பின் வெளிப்பாட்டுக்கும், ஞானத்தின் பிரசன்னத்துக்கும் இப்பூவுலகில் முன்னோடிகள் அபூர்வமாக இருப்பதால், அவை நிகழ்ந்த போது, அவர்கள் புரியாமல் சலனமுற்றார்கள். அவர்களில் ஓரிருவர் செய்தது போல் அமைதி மாறாமல், நோக்கில் தெளிவை வேண்டி அவரைக் கூர்ந்து கவனித்திருக்கலாம். ஆனால் அது எளிதே அன்று. அதற்கு உயர்ந்த மன ஒழுக்கம் தேவை.

‘உங்களில் யாராக இருந்தாலும் சரி, உங்களிடம் இருப்பவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு வராதவன் என் சீடனாக இருக்க முடியாது’. – புனித லூக்கா

குழப்பங்களுக்கு அங்கேயே, அப்போதே டாக்டர் முத்தாய்ப்பு வைத்திருந்தால் அவரைப் பற்றிச் சொல்ல நீளமான கதைகள் இல்லாமல் போயிருக்கும். ஆம், அவர் வந்தார், பார்த்தார், வென்றார்! ஆனால் பாதி நேரம் கண்களை மூடிக்கொண்டு இருந்து விடுவார். அதனால் பார்ப்பதற்கு நேரம் எடுத்துக் கொண்டார் போலும்! கதை இன்னும் நீள வேண்டுமே! அவர் கண்கள் அறிதுயிலில் மூடியிருக்க, உப நடிகர்களான நாங்கள், நாடகத்தில் எங்கள் பாகம் கூட என்னவென்று தெரியாத நிலையில், நீளமான வசனங்களைப் பேசிக்கொண்டும், சலிப்புத் தட்டும் முகபாவங்களைப் பூண்டவாறும்

இருந்தோம். நாடகம் நடந்தாக வேண்டுமே!. “எனக்குப் பேசப் பிடிக்காது, செயலில் இறங்குவது தான் பிடிக்கும்” என்பார் என் குருநாதர். ஆம், செயல்வீரர் செயலில் இறங்கத் தலைப்படும் வரை, ‘அப்படி இப்படி’ யென்று நீளமான வசனங்களைப் பேசிக்கொண்டும், உணர்ச்சிக் கொப்பளிக்க நடந்து கொண்டும் நாங்கள் அவரைச் சிரிக்க வைத்துக் கொண்டிருப்போம். நேரம் போக வேண்டுமே! எங்கள் அகங்காரம் நடிப்பில் செலவழிந்து போன பிறகு அன்பின் சன்னிதியில் பேச்சிழந்து நாங்கள் நிற்போம். அப்போது அவன் வேய்ங்குழலிலிருந்து எழும்பி வரும் ஸ்வரங்கள் காதில் விழ அவன் இசைக்கு எல்லாரும் ஒன்றாகி ஆடுவோம்.

‘ஹோலி ஜெம்ஸ்’, ‘ஹோலி பாஸெஜ்’ என்ற இரு புத்தகங்களும் பிரிவினைக்கு முன்னர் அச்சிடப்பட்டன. ‘ஹோலி வாய்ஸ்’ பிரிவினைக்குப் பிறகு அச்சிடப்பட்டது. இப்புத்தக வெளியீட்டு விழாவில் பத்துப் பன்னிரண்டுப் பேர்கள்தான் கலந்து கொண்டார்கள். புத்தகமோ மிக நன்றாக அமைந்தது. அடுத்த புத்ததகமான ‘அன்னையின் அருள்வழி’ வெளிவருவதற்குள் டாக்டருடைய சீடர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. அதற்கும் அடுத்த புத்தகமான ‘ஆத்ம தரிசனம்’ வெளியீட்டு விழாவுக்குமுன் வியக்கத்தக்க அளவுக்கு மீண்டும் புதிய சீடர்களின் எண்ணிக்கை வளர்ந்துவிட்டது.

**நம் துன்பங்களை அவர் அனுபவித்தார்.**

1981ஆம் ஆண்டு, நான் முதன்முதலில் டாக்டரைச் சந்தித்த போது அவர் 70 அல்லது 72 கிலோ எடையும் நல்ல உடற்கட்டுமாக ஆரோக்கியமாக இருந்தார். ‘நான் விரைவில் எடை குறைந்து விடுவேன்’ என்று எங்களிடம் அப்போது அவர் சொன்னது

நினைவிருக்கிறது.

ஆம். அப்போதிருந்து சீராக எடை குறைந்து வருகிறார். இப்போது 58 கிலோ எடை; சில சமயம் அது 55க்கு இறங்கி விடுகிறது. இப்போது அவருடைய மண்ணீரல், வீக்கம் கண்டிருக்கிறது. வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை சில வேளைகளில் அஞ்சத்தக்க அளவுக்குப் பெருகி விடுகிறது. சர்க்கரை நோய் வேறு. வலது கண்ணில் ரத்தக்கசிவு ஏற்பட்டுப் பார்வை போய்விட்டது. ரத்தத்தில் வெள்ளை அணுக்கள் அதிகம் இருப்பதால் லேசர் சிகிச்சை செய்து கொள்ளவும் மருத்துவத் தகுதி இல்லை. ஒரு நாள் வெள்ளை அணுக்களின் அளவு பயப்படும் அளவுக்கு மிக அதிகமாக இருக்கிறது. ஒரு வாரம் கழித்துப் பார்த்தால் வியக்கும் வகையில் சாதாரணமாக இருக்கிறது. மருத்துவத்துறைக்கு ஒரு சவாலாகி விட்டார். எதனால் இப்படித் துன்பம் அனுபவிக்கிறார்? எங்களுக்காகச் சீடர்களுக்காகத் துன்பப்படுகிறார். அவருடைய பாதுகாப்பில் எங்களை வைத்துக் கொண்டிருப்பதால், எங்கள் பளுவையும் அவர் தாங்குகிறார்.

“எங்கள் கஷ்டங்களையெல்லாம் நீங்கள் வாங்கிக் கொள்வீர்களா டாக்டர்?” என்று அவரிடமே கேட்டேன்.

“இல்லை; எல்லாவற்றையும் வாங்கிக் கொள்வதில்லை. உங்களால் தாங்க முடிந்தவரை விட்டு விடுவேன். முடியாததை நான் வாங்கிக் கொள்வேன்” என்று பதில் தந்தார். நான் நெகிழ்ந்து போனேன்.

“உங்கள் சுமையில் எனக்கும் கொஞ்சம் கொடுங்கள் டாக்டர்” என்றேன்.

சிரித்தார். “உன்னால் முடியாது. உன்னால் தாங்க முடியாது. அதற்குத்தான் நான் இருக்கிறேனே” என்றார்.

"கொஞ்சம் கொடுங்கள். ஒரு 25 % கொடுங்கள். உங்களுக்காக நான் அதை எடுத்துக் கொள்கிறேன்" என்று விடாமல் கேட்டேன்.

டாக்டர், முடியாது என்று பலமாகத் தலையாட்டினார். "ஒரு சதவிகிதம் கூட உன்னால் தாங்க முடியாது. எனக்குப் பரவாயில்லை. அது பழக்கமாகி விட்டது. எடுத்துக் கொண்டால் மூன்று மணி நேரத்தில் அதை அனுபவித்து முடித்து விடுவேன்', என்றார்.

"எனக்கும் அதை எப்படிச் செய்வது என்று சொல்லிக் கொடுங்கள் டாக்டர்" என்று கெஞ்சினேன். சிரித்தபடி முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டார். "மிகவும் களைப்பாகி விடும்" என்றார். அதனால் தான் தன் வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை அவ்வப்போது பெருகிவிடுவதாகப் பின்னொரு நாள் என்னிடம் சொன்னார். எந்த நோயையும் எதிர்த்துப் போராடுவதற்கென மண்ணீரல் உற்பத்தி செய்யும் படைவீரர்களே இந்த வெள்ளை அணுக்கள்.

தம் சீடர்களால் தாங்க முடியாதவற்றை டாக்டர் தாம் ஏற்றுக் கொண்டு அனுபவித்தார். உடல்ரீதியான துன்பத்தை உடலால் அனுபவித்துத் தம் பலவீனமான உடலை மேலும் வருத்தி, ஏற்கனவே அதிக வேலை செய்து கொண்டிருந்த மண்ணீரலுக்கு இன்னும் வேலை கொடுத்தார். உணர்ச்சிபூர்வமான கஷ்டங்களையும் வாங்கிக் கொண்டு அவற்றையும் அனுபவித்தார். ஆம்! அவருக்கும் உணர்ச்சிகள் இருந்தன. ஆனால் அவற்றை அவர் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. யாவற்றுக்கும் தலைவனாக இருந்தும், தன்னைப் பிறர் சிறுமைப்படுத்தவும் அனுமதித்தார். இம்மனிதர் அதிகமாக அவமதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார் என்பதை எப்படியோ நான் உணர்ந்தேன்.

எப்பேர்ப்பட்ட அவமதிப்புகளை அவர் தாங்குகிறார் என்பதை நான் ஒருமுறை அனுபவித்துப் பார்க்க விரும்பினேன். ஒரு நாள் முழுவதும் அவர் படும் அவமானங்களை நான் ஏற்று அனுபவித்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டேன். அந்த நாள் என் வாழ்வில் என்னால் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு சுமையாகிப் போயிற்று. அந்த நாள் முடிவதற்குள் நான் உணர்ச்சிப் புயலில் சிக்குண்டு உடைந்தே போனேன். அன்றைக்கு முழுவதும், சாதாரணமாக அன்பாக இருப்பவர்கள் கூட என்னிடம் குற்றம் கண்டுபிடித்து, மனிதத் தன்மையே இல்லாதவர்கள் போல் என்னைப் புண்படுத்தினார்கள். ஊசியாகத் தைத்த ஏச்சும் பேச்சும் முடிவின்றித் தொடர்ந்தது. இரவு வந்தது. எனக்கு அதற்கு மேலும் தாங்கிக் கொள்ளத் தெம்பில்லை. இதயம் கனக்க மீண்டும் பிரார்த்தனை செய்தேன் -- 'காலையில் நான் வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அனுபவத்தை என்னிடமிருந்து எடுத்துக் கொண்டு விடு. .உணர்ச்சிகளின் அழுத்தத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை' என்று. இன்னும் ஒன்று கேட்டேன்; "இதைத்தான் டாக்டர் தினந்தோறும் அனுபவிக்கிறார் என்றால், அவருடைய பிரச்னைகளுக்கு நான் ஒருபோதும் காரணமாகி விடக்கூடாது."

டாக்டர் இதை வேறுவிதமாகப் பார்க்கிறார். அவரை இழிவு படுத்தியவர்களிடம் இருந்தன்றோ அவர் பொறுமையைக் கற்றார் என்பது அவர் நிலைப்பாடு!

**அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறார்:**

சத்குருவானவர் ஒரு சீடரை ஏற்றுக்கொள்ளும் போது, அவனை அல்லது அவளை பிறப்பு, இறப்பு என்று மாறிமாறி வரும் பிறவிச் சுழலிலிருந்து விடுவிக்கும் பணியை ஏற்கிறார். அதை எந்த விதத்திலேனும் செய்தே தீருவேன் என்று சொல்லும் விதமாய், 'I will do

it by hook or crook', என்று சொன்னார் டாக்டர். (Crook என்பதற்குச் சிலுவை என்று பொருள்).

சீடர்களுக்கு அவர் என்னதான் செய்தாலும் சரி, சீடர்கள் என்ன செய்வதற்கு அவர் அனுமதித்தாலும் சரி, அச்சீடர்களுடைய செயல்களினாலும், அவர்களுக்கு நடுவிலான பரிமாற்றங்களாலும் இடைப்பட்ட காலத்தில் என்ன நேர்ந்தாலும் சரி, டாக்டரின் நடவடிக்கைகள் சீடர்களின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும். தம் சீடரைச் சுற்றியிருப்பவர்களைக் கூடத் தமக்கே உரித்தான விதத்தில் தமது செயல் களத்துக்குள் இழுத்துத் தம் சீடரின் ஆன்மிக முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தப் பலவாறான சாத்தியக் கூறுகள் கொண்ட சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கும் அவருடைய சாதுர்யத்தைக் கண்டு, 'காத்து ரட்சிப்பதே இவருக்கு வழக்கம் போலும்' என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். கணக்கான முதல்நகர்த்தல், தக்க எதிர்நகர்த்தல், எதிர்பார்த்த இடத்திலிருந்து எதிர்பார்த்த பதில் செய்கைகளை தூண்டிவிடும்படியான அளவான செயல்கள், எதிலும் பட்டுக்கொள்ளாதது போன்ற அணுகுமுறை, ஆனால் அதன் பின்னணியில் அவரால் மறைக்க முடியாத அவருடைய அன்பு, எவ்வுயிரின் தன்மையையும் பார்த்த மாத்திரத்தில் அடையாளம் காண்பது இவையெல்லாம் அவர் ஏற்றுக்கொண்டிருக்கும் பணியில் அவருடைய திறனுக்கும், அனுபவத்துக்கும், தேர்ச்சிக்கும் சான்றாக அமைகின்றன.

செயல்-எதிர்ச்செயல் சங்கிலித்தொடர் ஒன்றை டாக்டர் முடுக்கி விடும்போது, அதன் உடனடி விளைவு ஓர் அனுபவமற்ற பார்வையாளனுக்கு, சீடனின் ஆன்மிக வளர்ச்சிக்கு பாதகமாத் தோன்றக்கூடும். ஆனால் முடிவில், மிகக் குறைந்த நேரம், குறைந்த பொருட்செலவில் டாக்டர் தம் குறிக்கோளை அடைந்தே தீருவார்

என்பதை நான் அறிவேன்.

டாக்டருடன் ட்ராட்ஸ் (game of draughts) என்ற விளையாட்டை விளையாடித் தோற்றவள் என்ற முறையில் நான் இதைச் சொல்ல முடியும் -- டாக்டர் அவருடைய காய் ஒன்றை வெட்டுக் கொடுத்தார் என்றால், கவனமாக இருங்கள். எங்கிருந்தோ வெளிவந்து உங்கள் காய்களில் மூன்றைத் தாவித் தாவிக் கணத்தில் வெட்டி விடுவார்; ஆட்டத்தையும் வென்று விடுவார். அவரை வெல்லவே முடியாது. என்ன முயன்றாலும் தோற்றுத்தான் போவீர்கள். அவர் உங்களைத் தம் சீடராக ஏற்றுக்கொண்டிருந்தால் நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டலும், இறுதியில் தோற்றுத்தான் போவீர்கள். தோல்வி- உங்களுக்கு நேரக்கூடிய மிக அழகான ஒரு விஷயம். ஏனென்றால் அவரிடம் தோற்பதுதான் உங்கள் வெற்றியே!

நான் முன்னர் குறிப்பிட்ட 'அருட்குறளில்' சத்குரு தம் சீடரை பந்தத்தில் இருந்து விடுவிக்க மேற்கொள்ளும் வழிமுறையைத் தொகுத்துரைக்கும் அழகிய ஈரடிப் பாடல் ஒன்று உள்ளது.

'கட்டுமரத்தே கயிறொழுக்கம் கட்டுவதால்

கட்டுக் கழலுமெனக் காண்'.

பல மரக்கட்டைகளை ஒன்றாகச் சேர்த்துக்கட்டிச் செய்யும் மிதவைக்குப் பெயர் கட்டுமரம் என்பதை நாம் அறிவோம். தென்னிந்தியாவில் கடலோரத்தில் இத்தகைய கட்டுமரங்களை மீன் பிடிப்பதற்காகப் பயன்படுத்துகிறார்கள். தனித்தனிக் கட்டைகளைக் கயிற்றால் இறுகக்கட்டி அவை எல்லாம் ஒன்றாக நீரில் மிதக்கும்படியாக இணைத்திருப்பார்கள். மீன் பிடித்துவிட்டுக் கரைக்குத் திரும்பிய பிறகு கயிறுகளை அவிழ்த்துக் கட்டைகளைத் தனித்தனியே பிரித்துப் போட்டு விடுவார்கள்.

கடலில் செல்லும்போது பத்திரமாக இருப்பதற்காக அவிழ்ந்து போகாதபடி கயிறுகளை இறுக்கமாகக் கட்ட வேண்டும். நீரில் நனையும்போது முடிச்சு இன்னும் இறுகிவிடும். வழி வழியாக வந்த அனுபவத்தால் இறுகிய முடிச்சை எளிதில் அவிழ்க்கும் யுக்தியை மீனவர்கள் கற்று வைத்திருக்கிறார்கள். மீனவர் முடிச்சை அவிழ்க்கக் கையாளும் எளிய முறை இது தான். இன்னொரு கயிற்றை எடுத்து ஏற்கனவே உள்ள கட்டின் அருகே இறுகச் சுற்றிப் பிடிக்கிறார். இந்தப் புதிய கட்டின் இறுக்கத்தில் பழைய கட்டுத் தளர்கிறது. அதனால் முடிச்சை எளிதாக அவிழ்த்து விடுகிறார். ஆம். ஒரு கட்டு இன்னொரு கட்டை அவிழ்க்கிறது.

நான் கடந்த பதின்மூன்று வருடங்களாக டாக்டரைக் கூர்ந்து கவனித்து வருகிறேன். பந்தங்களையும் அவற்றின் விளைவுகளையும் ஆன்மிக நோக்கில் பார்க்கப் பயிற்றுவிக்கப் படாதவர்கள் டாக்டருடைய செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியாது; குழப்பமாக இருக்கும். சிலருக்குக் குறுக்கே வருவதாகவும், நெருங்கிய நண்பர்களுக்கிடையில் மனவேற்றுமை ஏற்படுத்துவதாகவும், நிறைவாகவும் சௌகர்யமாகவும் இருப்பவர்களை எதையோ திரித்துச் சொல்லி நொறுங்க வைப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். கீழிருந்து 'பிரமிட்' ஆகத் தெரிவது மேலிருந்து கூம்புக்குழாயாகத் (funnel )தெரியும்.

வண்ணமயமாக, நம்பத்தகுந்ததாக, கதகதப்பாக, நன்றாக, வசதியாக இங்கே இருக்கும் எதுவும் பிறப்பு இறப்பு என்ற சுழலிலிருந்து மனிதன் தப்பிக்க முடியாதபடி அவனைப் பிடித்து வைத்திருக்கும் 'பொறி'. விரக்தியடைந்தவனே ஆன்மிகப் பாதையில் சீடனாகும் முழுமையான தகுதியைப் பெறுகிறான். சத்குரு வகுத்தளிக்கும் நெறிமுறைகளை வழுவாமல் பின்பற்றக் கூடிய

கட்டுப்பாடு அப்படிப் பட்டவனுக்கே வாய்க்கும். அதனால் தன் சீடனை முழுவதுமாக விரக்தியடையச் செய்வதே ஒரு சத்குருவின் தலையாய கடமையாகி விடுகிறது. ஒருவனை வலுக்கட்டாயமாக ஏன் விரக்தியடையச் செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். சந்தோஷமாக இருந்துவிட்டுத்தான் போகட்டுமே என்று நீங்கள் வாதிடலாம். சத்குருவைப் பொருத்தவரை சீடர்கள் இருவகைப் படுவர். ஏற்கனவே பக்குவ நிலையை அடைந்து, பரம்பொருளின் திருவருளால் குறிப்பிட்ட தெய்விகக் காரண காரியங்களுக்காக இம்மண்ணில் பிறவி எடுத்திருக்கும் சீடர்கள் ஒருவகை.

இவ்வகைச் சீடர்களைக் கையாள்வது மிகவும் கடினம். இவர்கள் அறிவில் குறைந்தவர்களாக இருக்க மாட்டார்கள் என்பதால், இவர்களுக்கு ஞானம் உதயமாகும் வரை, இவர்கள் தாங்கள் யார் என்பதை அறியும் வரை, தாங்கள் பிறவி எடுத்ததற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளும் வரை, சத்குருநாதரின் செயல்பாட்டோடு தங்களை இணைத்துக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் இவர்களுடைய அறிவு குறுக்கே நிற்கும். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்துவமாக ஏதோ ஒன்றில் புலமையும் தெய்விக சக்திகளும் நிச்சயமாக இருக்கும் என்றாலும், உள்ளொளி பெற்றவர்களாய் மாயையிலிருந்து அவர்கள் விழித்துக்கொள்ளும் போதுதான் அவர்களுடைய புலமையும் தெய்விக சக்திகளும் வெளிப்பட்டு அவர்கள் இறங்கி வந்த வேலைக்குப் பயன்படும். அதனால்தான் சத்குருவானவர், சாத்தியமான எல்லா முறைகளையும் பயன்படுத்தி அவர்களை ஆன்மிக விழிப்புணர்வுக்கு அடித்துத் திருப்புகிறார்.

இந்தச் சீடர்கள் மாயை விரித்துத் தரும் பஞ்சு மெத்தையில் புரண்டு கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் எழுந்து சீக்கிரம் களத்துக்கு வரவேண்டும். உலகம் அவர்களுக்காகக் காத்துக்

கொண்டிருக்கிறது. ஆனால் இதில் வேதனை என்னவென்றால் இத்தகைய பெண்களும் ஆண்களும் ஏற்கனவே பண்பட்டவர்களாகவும், உயர்ந்த குணமுடையவர்களாகவும் பழக இனிமையானவர்களாகவும் இருந்து விடுவதால் நல்வினைகளை சுலபத்தில் சேகரித்துக்கொண்டு வாழ்க்கையில் நன்றாக இருப்பார்கள். அவர்கள் வேண்டுவதெல்லாம் கிடைத்துவிடுகிறது. சத்குரு இங்கே தலையிட வேண்டியிருக்கிறது. இருப்பதை சந்தோஷமாக அனுபவித்துக் கொண்டு அவர்கள் இருந்து விடுவதை அவர் அனுமதிக்க முடியாது. வலுக்கட்டாயமாக மாயையிலிருந்து அவர்களை விலக்க வேண்டும். உண்மை உறைக்கும்படி அவர்களை உலுக்கி விட்டு விழிப்படையச் செய்தால்தான் அவர்கள் வந்த வேலையை முடிக்க முடியும்.

இதைச் செய்து முடிப்பது சத்குருவுக்கு மிகவும் ஆயாசமான வேலை. இந்த வேலையை அவர் செய்வதற்குள் நிறைய வசைமொழிகளையும் பழிச் சொற்களையும் கூடக் கேட்க வேண்டியிருக்கும். ஆம்! சிலருக்குக் குறுக்கே வருவதாகவும், நெருங்கிய நண்பர்களுக்கிடையில் மனவேற்றுமை ஏற்படுத்துவதாகவும், நிறைவாகவும் சௌகரியமாகவும் இருப்பவர்களை எதையோ திரித்துச் சொல்லி நொறுங்க வைப்பதாகவும் கூடக் குற்றம் சாட்டப்படலாம். மனிதனின் இதயம் நொறுங்கித்தான் போகட்டுமே, இல்லாவிட்டால் இதயத்தோடு அன்றோ பிணைக்கப்படுவான்? மிதிபட்டுக் கிடக்கும் மனித சமுதாயம் பார்த்து உயரும் விதமாக இறைவனின் ஒளிவிளக்கை உயரப் பிடித்து அவன் வெளிவர வேண்டுமே.அப்படியானால் உலகை நடத்த வரும் உயர்ந்த மனிதன் இதயமற்றவனா? அப்படியில்லை. அந்த உயர்ந்த மனிதனுக்கு இதயம் உண்டு. அவனுடைய இதயம் இருக்கும் இடம் அவன் புருவ மத்தி. அங்கே இறைவன் உருவம் எடுக்காத நிலையில் வாசம் செய்கிறார்.

இந்த விதமாக முதல் வகைச் சீடர்கள் கையாளப்படுகிறார்கள். அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வேலைகளை அவர்கள் முடிக்க வேண்டும்; 'போனால் போகட்டும்' என்று அவர்களை விட்டுவைக்க முடியாது. ஓரிருவர் சத்குருவின் வழிக்கு வராவிட்டால் இறைப்பணியில் அவர்களுடைய பங்கு செய்யப்படாமல் நின்று போகும். அல்லது அப்பொறுப்பு சத்குருவின் மீதோ, அல்லது இசைந்து நடக்கும் வேறொரு சீடன் மீதோ கூடுதல் வேலையாக விழும். இப்படி மந்தையிலிருந்து பிரிந்து போகும் ஆடுகள் திரும்பக் கூட்டத்தில் சேர நெடுங்காலம் பிடிக்கலாம். வழிமாறிப் பல பிறப்புகள் கூட எடுக்க நேரிடலாம். மாயையின் களத்தில் செயல்படும்போது பண்பட்டுப் பக்குவ நிலையை அடைந்த ஆண்களும் பெண்களும் கூட இத்தகைய அபாயத்தைச் சந்திக்குமாறு நேரிடும்.

இரண்டாவது வகைச் சீடர்கள், படிப்படியாகப் பக்குவநிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பவர்கள். இவர்களைக் குறைத்து மதிப்பிட முடியாது. அவர்கள் தங்கள் அனுபவமின்மையை இரண்டு விஷயங்களால் நேர் செய்யலாம். ஒன்று, மறு கேள்வியின்றி சத்குருவைக் கீழ்ப்படிவது. இன்னொன்று, அவரிடம் அசைக்க முடியாத நம்பிக்கை. அப்படி இந்த இரண்டும் அவர்களிடம் இருக்குமானால், ஏற்கனவே உயர்ந்த நிலையில் இருக்கும் சீடர்களையும் கடந்து சென்று ஞானத்தின் சிகரத்தைத் தொடமுடியும். ஏனென்றால், எளிமையானவர்களின் இதயமும் இறைவனின் இருப்பிடம்தான். அதனால் அவர்களிடம் இல்லாததை அவர் கொடுப்பார்.

இப்படியாகப் பலவாறு நடந்து கொண்டிருந்த போதும் டாக்டர் போதித்த ஆன்மிக ஒழுக்கத்தில் ஒருசிறிதும் அடக்குமுறை

இருக்கவில்லை. பெரும்பாலும் யாராவது ஒரு சீடர் பரவச நிலையில் இருப்பார். அது மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளும். வேலை மட்டும் தான், விளையாட்டே இல்லை என்றில்லாமல், டாக்டரின் அட்டவணையில் ஒவ்வொன்றுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

டாக்டரிடம் நல்ல பரிச்சயம் இல்லாதவர்களுக்கு இப்புத்தகத்தைப் படிக்கும்போது

குழந்தைகளுக்குச் சொல்லும் தேவதைக் கதைகள் போல் தெரியலாம் ஆனால், நான் எழுதும்போது 'சத்தியம்', தன் அருமை மைந்தனைக் குறித்துத் தெளிவில்லாமலோ, கவித்துவம் காரணமாக மிகைப்படுத்தியோ, அல்லது சரியானபடி மொழியைப் பயன்படுத்தத் தெரியாமல், குறைத்தோ எழுதிவிடுகிறேனா என்று நான் எழுதும்போது என் தோளுக்கு மேலிருந்து எட்டிப்பார்த்தபடி உன்னிப்பாகக் கண்காணிக்கிறாள். மூளையைப் பயன்படுத்தாமல் இதயத்திலிருந்து எழுத வைக்கிறாள். அதனால் இங்கே எழுதப்படும் சொற்கள் அவளுடைய தூய்மையை ஏந்தி வருகின்றன. அந்தத் தூய்மையைப் படிப்பவர்கள் புறக்கணிக்க முடியாது. உண்மையின் த்வனி, நான் இதுகாறும் சொன்னவற்றுக்குச் சாட்சியம் கூறும். எங்கெல்லாம் மேலே எழுத முடியாமல் நெகிழ்ந்து நின்றேனோ, அங்கே நீங்களும் சற்று நிதானித்து வற்றாத ஊற்றான அமுதத்தைப் பருகுவீர்கள். 'ஹோஸனா' என்று உணர்ச்சிமிகுந்து குரல் எழுப்புவீர்கள். நான் ஒரு ஆன்மிகப் பிரசங்கி இல்லை. நான் மதவாதியும் இல்லை; கோட்பாடுகளில் அழுந்திச் சரி - தவறு என்று கடிவாளம் போட்டுக்கொண்டு கண்டிப்பான வாழ்க்கையை நடத்துபவளும் இல்லை. இப்போது நான் என் சத்குரு என்னை ஆக்கியது போல் இருக்கிறேன். என் தேடல் முடிந்தது. என் தாகம் தணிந்தது. நான் நிறைவு பெற்றேன்.

“நான் ஒரு குடையைப் போல” என்கிறார் டாக்டர். “என்னுடைய பாதுகாப்பில் நீங்கள் எங்கே வேண்டுமானாலும் நிற்கலாம். ஆன்மிக இயக்கம் ஒவ்வொன்றும் ஒரு கூடாரத்தைப் போன்றது; உங்களுக்குப் பாதுகாப்புத் தரக்கூடியது. ஆனால் அவை எதுவுமே உங்களோடு கூட நடந்து வராது. களைப்பு மேலோங்கும் போது ஒரு கூடாரத்துக்குள் தலை சாய்த்து நீங்கள் இளைப்பாறலாம். தொடர்ந்து மேலே நடந்து கொண்டே இருக்க விரும்பினால் என்னோடு வாருங்கள். நான்தான் இப்போது இங்கு இருக்கிறேனே. என்னுடைய பாதுகாப்பில், நீங்கள் சேரவேண்டிய இடத்தை அடைவீர்கள்” என்று கூறுகிறார்.

பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர், என்னை வழி நடத்த ஒரு சத்குரு வரவேண்டும் என்று நான் மிகத் தீவிரமாகப் பிரார்த்தனை செய்த போது, ஒரு சத்தியமும் செய்து கொடுத்தேன். “எனக்கு நீ வழிகாட்டினால் அதற்கு பதிலாக என்னைப்போல் தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு வழிகாட்ட என்னால் என்னவெல்லாம் முடியுமோ அவற்றைச் செய்கிறேன்” என்ற அந்த சத்தியத்தை, என் குருநாதரின் கருணையால் இதோ நிறைவேற்றுகிறேன். இதோ இவரே வழியும், உண்மையும், ஜீவனுமாயிருக்கிறார். இவர் மூலமாக அன்றிப் பரம்பொருளை மனிதன் அடைய முடியாது.

ஒவ்வொரு முறை அவர் இப்புவிக்கு வந்தபோதும் இப்படித்தான் இருந்திருக்கிறது. வறட்டும் தாகத்தில் வெடித்த உதடுகளும், குழி விழுந்த கண்களுமாய் அவருக்காக ‘எப்போது, எப்போது?’ என்று காத்திருந்தவர்களை அவருடைய குடையின் கீழ் ஒன்று திரட்டுவார். ஏனென்றால் தாகத்தை சர்வேஸ்வரனான **தந்தை**யால் மட்டுமே தணிக்க முடியும். சத்குரு வழிகாட்டுவார். அந்தத் **தந்தை**யே கூட சில சமயம் சத்குருவாய் வந்து தன்னை வெளிப்படுத்திக்

கொள்வார்.

"நாங்கள் உங்களைப் பற்றி நிறையச் சொல்கிறோம், டாக்டர். உங்களை நீங்களே எப்படி விவரித்துக் கொள்வீர்கள்?".ஆட்டோ ரிக்ஷாவில் டாக்டரோடு ஒருநாள் போகும்போது குரலை உயர்த்தி இப்படிக் கேட்டேன், ஒரு துடுக்கான பத்திரிகை நிருபரைப் போல!

"எல்லாருக்கும் என்னைப் பற்றிய எல்லாவற்றையும் நான் சொல்ல முடியாது", என் மனோபாவத்தை ஒத்தாற்போலவே டாக்டரும் நறுக்கென்று பதிலளித்தார். "அது நடைமுறையில் சாத்தியமில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் என்னை வெளிக்காட்டிக் கொள்ள முடியும்; அதுவும் ஒரு சிலரிடம் ; அதற்குத் தயாராக இருப்பவர்களிடம் மட்டும்", என்று பதில் சொன்னார்.

"இப்போது நான் இப்புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இவ்வுலகில் இருக்கும் வரை சரி; ஆனால் நமக்குப் பிறகு இப்புத்தகத்தால் இவ்வுலகுக்கு என்ன பயன்?" என்று கேட்டேன்.

"நாம் மீண்டும் வருவோம். திரும்பவும் இப்படி நடக்கும். இப்படி என்றால் இதே மாதிரியாக இல்லை. கிட்டத்தட்ட இப்படி. நாம் இப்போது இங்கே விடுத்துச் செல்பவர்களை அழைத்துப் போக மீண்டும் வருவோம். அப்போது இப்புத்தகம் உதவிகரமாக இருக்கும்" என்றார் டாக்டர்.

"இன்னொரு கேள்வி, டாக்டர். உங்களுடைய சீடர்களில் சிலர், நீங்கள் இனிமேல் அவர்களுக்கு குரு இல்லையென்று சொல்லிச் சென்று விட்டார்கள். அவர்களுக்கு என்ன ஆகும்?" "உடம்பில் ஏதாவது ஒரு பாகத்துக்கு ஒரு ரத்தநாளத்தின் மூலம் ரத்தம் செல்வது தடைப்பட்டால் வேறொரு ரத்தநாளத்தின் மூலம் ரத்தம்

அங்கே செல்ல வழி ஏற்படுகிறது. ஒருவனுக்கு உரித்தான கடவுள் அருள் அவனுக்கு எப்படியாவது கிடைக்கும். ஒரு வழி அடைபட்டால் இன்னொரு வழி திறந்து கொள்ளும். இரண்டாவது வழியின் மூலம் கிடைக்கும் ரத்தம் குறைவாக இருக்கலாம். ஏனென்றால் அது ஒரு மாற்று ஏற்பாடுதானே! சில அரிய சந்தர்ப்பங்களில் ரத்தநாளம் அடைபட்டால் அப்பகுதிக்கு ரத்த ஓட்டம் முற்றிலுமாக இல்லாமல் போகலாம். அப்போது உணவில்லாமல் அப்பகுதியில் உள்ள திசுக்கள் அழிந்து விடும். இதேபோல் குருவை விட்டுப்போகும் ஒரு சீடன் இன்னொரு குருவோடு, அதாவது இன்னொரு இறையருள் ஆதாரத்தோடு தன்னை இணைத்துக் கொள்ளாவிட்டால் அவனுடைய ஆன்மிக நாட்டம் போஷிக்கப்படாமல் வாடி மடிந்து விடும். ஆன்மிகத்தில் பின்னொரு நாளில் அவன் மீண்டும் தொடக்கத்திலிருந்து வரவேண்டியிருக்கும்.

**இறந்தவரை உயிர்ப்பித்தார்**:

டாக்டர், இறந்து போன ஒருவரை உயிர்ப்பித்து அவருடைய வாழ்நாளை அதிகரித்துக் கொடுத்தார். அவருக்கு மரணம் சம்பவிக்க இருந்த மிகச்சரியான தருணத்தில் நோயாளியாக டாக்டரிடம் சிகிச்சைக்கு வந்திருந்தபடியால் அவருக்கு இப்பேறு கிடைத்தது. இந்த அற்புதம் நிகழ்ந்த போது டாக்டரின் ஐந்து அல்லது ஆறு சீடர்கள் உடன் இருந்தார்கள். இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை அவர்களில் யாரேனும் அறிந்திருந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. ஏதோ ஒரு நோய்க்காக அன்று மாலை அவர் டாக்டரிடம் சிகிச்சைக்காக வந்திருந்தார். டாக்டர் அவருக்கு ஊசி போட்டார். வந்தவர் அந்த நேரத்தில் திடீரென்று மயங்கி விழுந்தார். உயிரும் போயிற்று. டாக்டர் தம் சீடர்களை விட்டு நோயாளியின்

உள்ளங்கையையும் பாதத்தையும் அழுத்தித் தேய்க்குமாறு பணித்தார். ஓரிரு நிமிடங்களில் அவரை உயிர்ப்பித்தார். டாக்டர் போட்ட ஊசியின் எதிர்விளைவாக அந்த நோயாளி பேச்சுமூச்சற்றுப் போனார் என்பது இந்நிகழ்ச்சியின் வெளித்தோற்றம்.

டாக்டர் அடுத்த நாள் என்னிடம் இதைப்பற்றிப் பேசியபோதும் இந்த ரீதியில்தான் விவரித்தார்.

நோயாளி வீழ்ந்த போது டாக்டர் அவரைத் தன் சீடர்களின் மேற்பார்வையில் விட்டு விட்டு தியானத்தில் ஆழ்ந்தார். அந்நோயாளி மீண்ட பின்னரே டாக்டரும் தியானத்திலிருந்து மீண்டார். "தம் உடலை விட்டுப் போய்க் கொண்டிருந்தார். பிடித்து இழுத்து வர வேண்டியதாகி விட்டது. மனைவியும் குழந்தைகளும் இருக்கிறார்களே! யார் அவர்களைப் பார்த்துக் கொள்வார்கள்?" என்று தம் சீடர்களிடம் பிறகு கூறியிருக்கிறார்.

**அவருடைய விளையாட்டை அவரே அறிவார்.**

1995ம் ஆண்டு குறடுமலையிலிருக்கும் வினாயகர் கோயிலுக்கு டாக்டரின் சீடர்கள் நால்வரும் நானுமாக மீண்டும் சென்றோம். நீண்ட பயணம் கருதி போவதில் உற்சாகம் இல்லாமல் இருந்தேன். ஆனால் டாக்டர் எங்களைப் போகச் சொன்னார். குறடுமலையில் ஊடகர் மூலம் அகஸ்திய மகரிஷி வருகை புரிந்ததால் ஆசீர்வதிக்கப்பட்டோம். குறடுமலைக்கு எங்கள் வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அகஸ்தியர் குறிப்பிட்டார்.

அடுத்த நாள் ஜூன் 16. அன்று டாக்டரின் சீடர்களில் ஒருவரான ஹரியின் பிறந்த நாள். டாக்டர் உட்பட எல்லாரும் ஹரி வீட்டில் குழுமினோம். டாக்டர் எதுவும் பேசாதவராய் யோசனையில்

ஆழ்ந்திருந்தார். சிறிது காலமாய் எதுவும் பேசாமல் யோசனையில் ஆழ்ந்தவராய்த்தான் டாக்டர் இருந்தார். நான் எப்போதெல்லாம் அவரை அப்படிப் பார்த்தேனோ அப்போதெல்லாம் சங்கடமான ஒரு வலி என் உணர்வை ஊடுருவி வியாபித்தது.

ஜூன் 26ம் தேதி இடது கண்பார்வையும் மங்குவதாக டாக்டர் என்னிடம் சொன்னார்.

ஜூன் 29ம் தேதி காலை தம் இருசக்கர வாகனத்தில் போக்குவரத்து சிக்னலுக்காக அவர் காத்துக் கொண்டிருக்கையில் ஓர் ஆம்னி வேன் பின்புறமிருந்து அவர் மீது மோதி, சிறிது தூரம் இழுத்துச் சென்று, தலையைக் காயப்படுத்தி அவரை நினைவிழுக்கச் செய்தது. அவருக்கு முதலுதவி தரப்பட்டது. பின்னர் சென்னைப் பொதுமருத்துவமனையில் அன்று மாலை சேர்க்கப்பட்டார்.

அன்று பிற்பகல் அவருக்கு நினைவு திரும்பியதாகக் கூறப்பட்டது. பார்வை முழுவதுமாகப் போயிருந்தது. கன்னத்தில் பட்ட அடியால் அவரால் பேச முடியவில்லை. குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று சைகை செய்ததாகக் கூறப்பட்டது. அருகிலிருந்த மருத்துவர்களும், பிறரும் அன்றிரவு அறுவை சிகிச்சை செய்து, மூளையில் ரத்தம் கசிந்து உறைந்திருப்பதை அகற்ற வேண்டும் என்று பேசிக்கொண்டபோது அவர் முனகி,வேண்டாமென்று என்று சைகை காட்டியதாகவும் சொல்லப்பட்டது. பின்னர் அவர் நினைவிழந்தார்.

அன்றிரவு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மருத்துவரீதியாக வெற்றிகரமாக முடிந்தது. டாக்டரின் சீடர்களான நாங்கள் அவர் அடிபட்டு மருத்துவ மனையில் இருக்கிறார் என்பதை அன்று மாலைதான் அறிந்தோம். ஆனந்த்ஜோதியைச் சேர்ந்தவர்கள் என்று வெளிப்படையாகத் தெரியாத சிலர் மட்டும் மருத்துவமனைக்கு விரைந்தார்கள். ஆனந்த்ஜோதி என்ற அமைப்பு எங்களைச் சுற்றி

இருந்த சிலரைப் போலவே, டாக்டரின் குடும்பத்துக்கும் பிடிக்காத ஒன்றாக இருந்தது.

**எனது பெயரைக் கருதியே நீவிர்**

**எல்லா மனிதராலும் வெறுக்கப் பெறுவீர்**

-தூய மேத்யூ.

பல வருடங்களுக்கு முன், டாக்டரை சந்திப்பதற்கு முன்னர், நான் அனுபவித்த இயலாமை இப்போது மீண்டும் என்னை ஆட்கொண்டது. பயம் என்னை கவ்விக் கொண்டது; சரியானபடி யோசிக்க முடியவில்லை. தியானத்தில் ஆழ்ந்து வெளிவரும் போது டாக்டர் உடல் நிலை சரியாகிவிடும் என்ற நம்பிக்கை பிறக்கும். ஆனால் மருத்துவமனையிலிருந்து வந்த செய்திகளோ அதற்கு நேர்மாறாக இருந்தன. ஜூன் 30ம் தேதி இரவு கிருமித்தொற்று காரணமாக வலிப்பு வந்து அவதிப்பட்டார். ஜூலை 1ம் தேதி அவருடைய சீடர்களான நாங்கள் எல்லாரும் நம்பிக்கை இழந்த நிலையில் எப்படியாவது மீண்டும் எங்களிடம் வந்து விட மாட்டாரா என்று மனம் அலைபாயப் பிரார்த்தனை செய்தோம். டாக்டரிடம் அதிக பக்தி கொண்டிருந்த சீடரான திருமதி சாந்தா சுப்ரமணியத்துக்கு ஒரு வினோதமான அனுபவம் கிட்டியது. டாக்டர் படுத்திருந்த தீவிர சிகிச்சைப் பிரிவுக்குள் அவர் நுழைந்த போது, முதல் படுக்கையில் டாக்டர் சிரித்தபடி அமர்ந்திருந்ததைப் பார்த்திருக்கிறார். “டாக்டர், நன்றாகி விட்டீர்களா?” என்று அவரிடம் துள்ளிச் சென்றார். ஆனால் அடுத்த கணம் டாக்டர் அங்கில்லை; வேறு யாரோ ஒரு நோயாளிதான் இருந்தார். ஏமாற்றமடைந்து திரும்பிய சாந்தம்மா மூன்றாவது படுக்கையில் டாக்டர் கடுமையான நோயுற்றவராய்த் தலையில் கட்டுகளோடு, நினைவிழந்த நிலையில் கிடக்கக் கண்டார்.

எங்கள் ஜுரவேகப் பிரார்த்தனைகள் தொடர்ந்தன. அன்று மாலை 6.30 மணிக்கு நான் தியான நிலைக்கு இழுக்கப்பட்டேன். மீண்டு விழித்த போது மிகவும் இலேசாகவும் சந்தோஷமாகவும் இருப்பதை உணர்ந்தேன். ‘டாக்டர் எப்படியும் திரும்பி வருவார்’ என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். சில நிமிடங்களில் தொலைபேசி ஒலித்தது. நண்பன் ஹரி தில்லியிலிருந்து அழைத்தான். டாக்டரின் சீடரான ஜமுனா சூக்கும நிலையில் டாக்டருடன் தொடர்பு கொண்டதாகவும், செவ்வாய்க்கிழமை (04-07-1995) உடல் சரியாகி மீண்டும் எங்களோடு இருப்பார் என்று உறுதி கூறியதாகவும் தெரிவித்தான். ஊடகர் மூலம் ஷீரடிபாபாவைத் தொடர்பு கொண்ட போது ‘அவர் லீலையை அவர் மட்டுமே அறிவார்’ என்று கூறினாராம். தூய அன்னையுடன் தொடர்பு கொண்ட போது அவர் எந்த வாக்குறுதியும் தரவில்லை. “அவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். திரும்ப வருவது அவர் சித்தம்” என்று கூறி விட்டார். எப்படியோ, டாக்டர் ‘வருவேன்’ என்று தந்த உறுதிமொழி என் ஆற்றாமையைத் துடைத்து கனத்துப் போயிருந்த என் இதயத்துக்கு ஆசுவாசம் தந்தது. இந்தச் செய்தியை, மருத்துவமனையிலிருந்து தொலைபேசி மூலம் அழைத்த சாந்தம்மாவிடம் தெரிவித்தேன். அவரும் நிம்மதியுற்றார். பத்து நிமிடங்களாகத் தானும் ஏதோ ஒரு நிம்மதியை உணர்வதாகத் தெரிவித்தார். மற்ற சீடர்களும் கிட்டத்தட்ட இதே நேரத்தில் மனத்தில் நம்பிக்கை பிறந்ததை உணர்ந்தார்களாம்.

ஜூலை இரண்டாம் தேதி ஞாயிற்றுக்கிழமை டாக்டர் குணமாகி வருவார் என்ற உறுதி தரப்பட்டுவிட்டதால் அதிகமாக யாரும் மருத்துவமனைக்குச் சென்று டாக்டரைப் பார்க்கவில்லை. அன்று மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை ஆனபடியால்,ஆனந்த்ஜோதியின் மாதாந்திர சத்சங்கம் அன்று மாலை நடைபெற்றது. தில்லியில் ஹரியிடம் டாக்டர், இன்னும் இரண்டு

அல்லது மூன்று தினங்களில் திரும்பி வந்துவிடுவதாக எல்லாரிடமும் கூறும்படிச் சொல்லியிருந்தார். ஏதோ முக்கியமான வேலை இருந்ததாகவும் அதை முடித்துவிட்டுத் தம் உடலுக்குத் திரும்பிவிடுவதாகவும் தெரிவித்திருந்தார். இதை குழுமியிருந்த எல்லா சீடர்களுக்கும் தெரிவித்தேன். அதுகாறும் வெளிறிப் போயிருந்த அந்த நூறு முகங்களும் மலர்ந்தன. பிறகு 'சாம்ராட்' ( டாக்டரின் சீடர், கர்நாடக இசை வல்லுநர்) டாக்டர் பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன் எழுதிய தமிழ்ப் பாடலைப் பாடினார். இந்த சத்சங்கத்தில் இப்பாடலைப் பாடுமாறு டாக்டர் சாம்ராட்டிடம் சொல்லியிருந்தார்.

குழலூதும் கண்ணனுக்கு நான்
என்ன சொந்தமோ என்ன பந்தமோ - அவன்
நிழலாகி என்னுடன் நின்று விட்டான்
கண்ணன் நின்று விட்டான்
அலையாகி நான் அலைந்தபோது
கரையாகி என்னைத் தழுவிக் கொண்டான்
கண்ணன் தழுவிக் கொண்டான்
நிலையென்ன கலையென்ன
என்னைக் கரைத்துவிட்டான்
கண்ணன் கரைத்து விட்டான்
விலையில்லா அன்பிலே என்னை அடைத்து விட்டான்
நிலையான நிலுவையில் நிறுத்து விட்டான்
நிஜம் என்னுள் ஆடுகின்றான்

ஆனந்தமாய் ஆடுகின்றான்

நித்யானந்தமாய் பாடுகின்றான்

. பாட்டைப் பாடும் முன் சாம்ராட் உடைந்து போனார். நாங்கள் எல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல் திக்கற்றவர்களாக அமர்ந்திருந்தோம்.

அவர் பாடப் பாட, டாக்டர் அப்பாடலை எழுதிய அந்த நாள் என் நினைவுக்கு வந்தது. அதற்கு அடுத்த நாள், டாக்டர் என்னோடு காரில் வரும்போது இப்பாடலைப் பற்றிச் சொன்னார். பாடிக் காண்பிக்கும்படிக் கேட்டேன். வேகமாகச் செல்லும் காரில் பாடுவது கடினம் என்று உணர்ந்து, அதைக் கவிதையாகவாவது சொல்லுமாறு கேட்டுக்கொண்டேன். சொன்னார். ஒவ்வொரு சொல்லையும் உணர்ந்து ரசித்துச் சொன்னார். முடிப்பதற்குள் அவர் கண்கள் குளமாகியிருந்தன. நான் குழம்பிப் போனேன். "நான் எழுதவேண்டிய பாட்டை நீங்கள் ஏன் எழுதியிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "நான் நீயானால், நீ நானாவாய்" என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னார். அவர் என்ன சொன்னார் என்று எனக்குப் புரியவில்லை. அவர், பரவச நிலையில் இருந்ததால் மேன்மேலும் கேள்வி கேட்டு அவரைத் தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை. ஒரு கேள்வி என் மனத்தில் மேலோங்கி நின்றது. அவருடைய ஒவ்வொரு பாடலும் ஏதோ முக்கியமான ஒன்று நடப்பதற்கான முன்னோடியாக இருக்கும். இந்தப் பாடல் எதற்கு முன்னோடி? இந்தக் கேள்வியைப் பிறகு கேட்டுக் கொள்ளலாம் என்றிருந்தேன். ஆனால் எனக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லை.

சாம்ராட் பாடி முடித்தார். 'இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு, டாக்டர் முழுவதுமாக குணமடையும் வரை அவரைப் பார்க்க முடியாது' - என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

1981இல் அவரைச் சந்தித்த நாள் முதல், அத்தனை அதிகமான நாட்கள் நான் அவரைப் பார்க்காமல் இருந்ததில்லை. 'நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்' இருந்த அவரை இன்னும் சில மாதங்களுக்குப் பார்க்க முடியாது. "குணமடையுங்கள் டாக்டர்; சீக்கிரம் குணமடையுங்கள்". என் இதயக்குரல் எழுப்பி அவரிடம் மன்றாடினேன்.

இந்த மாய உலகில் உண்மையில் உறுதியாகக் காலூன்றி நின்ற என் ஒரே தோழர் அவர்தான். அவரை வைத்துத்தான் என் புற வாழ்க்கையை நான் நிலைநிறுத்திக் கொண்டிருந்தேன். நடைமுறைப் பிரச்னைகளில் இருந்து விலகியிருக்க நானொன்றும் திரிகால ஞானியில்லை. அவர்தான் என் மாலுமி. நான் அவருடைய கப்பலில் என் அறையில் பாதுகாப்பாக இருந்தேன். காற்று எப்படி வீசினாலும், பாய்மரத்தை அவர் பார்த்துக் கொண்டார்.

அடுத்த நாள் காலை, 1995 ஜூலை மூன்றாம் தேதி திங்கட்கிழமை மிகவும் கனத்த இதயத்துடன் துயிலெழுந்தேன். உடனே, அப்போதே டாக்டரைப் பார்க்கவேண்டும் போல இருந்தது. ஆனால் அது முடியாத காரியமாயிற்று. எட்டு முப்பதுக்கு டாக்டருடைய உயிர் பிரிந்து கொண்டிருப்பதாகவும், 8.40க்கு அவர் 'காலமானார்', என்றும் தொலைபேசியில் செய்தி வந்தது.

இறவாமையெனும் கோட்டையின் கதவுகளை எனக்குத் திறந்து விட்ட மனிதரை இறந்துவிட்டதாக ஊர்ஜிதம் செய்து சவக்கிடங்கில் கொஞ்ச நேரம் வைத்திருந்தார்கள். வழக்கம் போல் பிரேதப் பரிசோதனையும் செய்யப்பட்டது. பிறகு உடல் அவருடைய வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுச் சடங்குகளுக்குப் பிறகு, ஓட்டேரி மாநகராட்சி மயானத்தில் ஜூலை 4ஆம் தேதி செவ்வாய்க் கிழமையன்று அவரது குலவழக்கப்படி அடக்கம் செய்யப்பட்டது.

ஜுலை 6ம் தேதியன்று நான் மயானத்துக்குச் சென்று உணர்ச்சிகள் மொத்தமும் தீர்ந்தவளாய் அவரது சமாதிக்கு முன்னால் நின்றேன். என் மனம் எதுவுமே எழுதப்படாத வெள்ளைத்தாளாக வெறுமையாக இருந்தது.

'எந்தத் தடயத்தையும் விட்டுச் செல்ல மாட்டேன்' என்று அவர் அடிக்கடிக் கூறுவது என் செவிகளில் ஒலித்தது. சோர்வும், தோற்றுப்போன உணர்வும் என்னை ஒருசேர அழுத்தின. பதினான்கு வருடங்களின் அழுத்தமான நினைவுகள் என் மனத்தில் வெள்ளமாகப் பெருக்கெடுத்தன. சொல்லிக்கொள்ளும்படியாக ஒன்றும் இல்லாமற்போன அவரது மறைவும், பத்தோடு பதினொன்றாக இருந்த அவரது சமாதியும் நெடுங்காலமாக நான் போற்றி வைத்திருந்த என் விருப்பத்தைப் பார்த்து எள்ளி நகையாடின. அந்த என் விருப்பம், விலை மதிக்க முடியாத என் சத்குருநாதரை இவ்வுலகுக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்பதுதான்.

'நீ அசௌகர்யமாக இருக்கும் போது நான் சௌகர்யமாக இருக்கிறேன்' என்று டாக்டர் அடிக்கடி சொல்வார். இதோ குன்றிப்போய் வழி தெரியாதவளாய் நான்!

'நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்' என்று சாலை விபத்தில் அடிபடுவதற்கு முதல் நாள், அதாவது புதன்கிழமையன்று என்னிடம் டாக்டர் சொன்னார். அன்றுதான் நான் அவரைக் கடைசியாகச் சந்தித்தேன்.

"நான் அதை வெளியிட விரும்பவில்லை. அது நடந்தேறட்டும். மற்றவர்களை முழுவதும் சார்ந்திருக்கும் நிலை எனக்கு வந்தால் நான் யார் கண்ணிலும் படாமல் மறைந்து விடுவேன் (disappear). கவலைப்படாதே. உன்னையும் அப்படி விட்டுவிட மாட்டேன்" என்று

மேலும் கூறினார்.

இந்த வார்த்தைகளை அவர் சொன்ன போது அதன் பின்னணியில் அவசரம் இருப்பதாக நான் உணரவில்லை. அவர் முக்கியமான ஒன்றைச் சொல்கிறார் என்பதைக்கூடச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

'29ம் தேதி,ஒரு முக்கியமான தேதி' என்று மேலும் மெதுவாகச் சொன்னார்.

அவர் இப்படியெல்லாம் பேசியது ஏன் என்று அப்போது எனக்கு சிந்திக்கத் தோன்றவில்லை. என்னை ஒருவித மாயையில் கட்டிவைத்து விட்டாரோ என்று இப்போது நினைக்கிறேன். அவரை S.I.A.A. கிளப்பில் இறக்கிவிட்ட போது "உடனே கிளம்பி விடுவீர்களா?"' என்று சாதாரணமாகக் கேட்டேன். "கொஞ்ச நேரம் இருந்துவிட்டுக் கிளம்பி விடுவேன்" என்று விரக்தியாகக் கூறிவிட்டு நடந்து சென்று கூட்டத்தில் மறைந்து விட்டார்; ஆம்! மறைந்து விட்டார்.

ஈரமான அந்த சமாதியையும், அதன் மேல் நாங்கள் வைத்திருந்த பூக்களையும் வெறித்துப் பார்த்தேன். என்னால் புரிந்துகொள்ள முடியாத ஏதோ ஒருவிதமான வெறுமையை அந்த இடத்தில் உணர்ந்தேன். அங்கைகளை ஒன்று சேர்த்து, அவர் கற்றுத்தந்த முறையில் அம்மாமனிதருக்கு மரியாதை செலுத்தினேன்.

"நன்றி டாக்டர், நீங்கள் எனக்குத் தந்தவற்றுக்கெல்லாம் நன்றி" என்று முணுமுணுத்தேன், என் வாழ்வின் மிக அழகிய தருணங்களெல்லாம் அவர் சம்பந்தப்பட்டது என்பதால். பதினான்கு வருடங்களுக்கு முன்னர் வாழ்வின் நாற்சந்தியில் அவர் என்னைச் சந்தித்தார், என்னை முழுமையாக்குவதற்காக. புயலிலும், தீயிலும்,

கானகத்திலும், கனிந்த தோட்டங்களிலும் அவர் என் கூடவே நடந்தார். ஒரு சமயம் நிழலாவார்; ஒரு சமயம் வலிமையூட்டுவார்; முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொண்டால் கண்டிப்பார். ஆனால் வேகமும் அனுபவமும் போதாமல் நான் எடுத்துவைத்த அடிகளுக்கு ஈடாக அவரும் தம் அடிகளை அளந்து வைத்தார். நான் நோயுற்றால் அவரை அழைத்தேன். பிரச்னை வந்த போது அவர் உதவியை நாடினேன். ரகசியம் இருந்தால் அவரிடம் சொன்னேன். தப்புச் செய்தால் அவரிடம் மனம்திறந்தேன். சந்தேகம் வந்தால் அவரிடம் கேட்டுத் தெளிந்தேன். எதையேனும் கண்டுபிடித்தால் அவரோடு பகிர்ந்து கொண்டேன். முடிவெடுக்க வேண்டுமென்றால் அவரை ஆலோசனை கேட்டேன்.

இந்தப் பதினான்கு வருடங்களும், நான் எது செய்தாலும் சந்தேகம் இல்லாமல் செய்தேன். ஏனென்றால் என் சத்குரு என் கூட நின்றார். அவருடைய வலிமையையும், அழகான மன உறுதியையும் எல்லாக் காரியங்களிலும் பிரதிபலித்தேன். இதோ, எப்படி என் வாழ்வில் நுழைந்தாரோ அதே போல் முன்னறிவிப்பின்றி விடைபெற்றுக் கொண்டுவிட்டார். மீண்டும் தனிமையை உணர்கிறேன். ஆம், உணர்ச்சிகள் எட்டமுடியாத உயரத்துக்கு எழும்பிச் செல்லும் தந்திரத்தை எனக்குக் கற்றுத் தந்திருந்தார். இதயத்தை அடங்கச் செய்து அதை இல்லாமல் செய்துவிடுமாறு என்னைப் பழக்கியிருந்தார். எதுவுமே ஒரு பொருட்டில்லாத, நிலையான தூய பிரக்ஞையென்ற அரியணையில் ஏற்றிவிட்டிருந்தார் . என்னைச் சுற்றிலும் தாறுமாறான சூழ்நிலை இருந்தும் அவர் ஏன் இதைச் செய்தார்? தயை ததும்பிய அவருடைய தூய இதயத்தால் அன்றோ! அப்படியானால் என் இதயத்தை அழித்து அதன் மூலம் அவர் இதயத்தை மறுக்க மாட்டேன். நான் இருப்பேன்; என் இதயத்தையும் வைத்திருப்பேன். அவரே அத்தாமரையில் வசித்திருப்பார். அவர் இருக்கிறார். அதனால் நானும் இருக்கிறேன்.

**உன் அரசு மலரட்டும்.**

டாக்டர் எங்களிடம் இருந்து மறைந்து போவதற்கு ஒரு வாரம் முன்னர் என் உறவினர் ஒருவர் உடல்நலம் குன்றியதால் டாக்டரை அவசரமாகத் தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால் முடியவில்லை. வழக்கமான தொலைபேசிகளில் அவர் கிடைக்கவில்லை.பிறகு அவரைப் பிரார்த்தித்துக்கொண்டு நானே எப்படியோ நிலைமையைச் சமாளித்தேன்.

மறுநாள் காலை அவரைச் சந்தித்த போது, “ஒரு பேஜர் (அப்போது செல்பேசி வந்திருக்கவில்லை)வைத்துக் கொள்ளுங்கள் டாக்டர். தேவைப்பட்டால் உடனே உங்களைத் தொடர்பு கொள்ள முடியும்” என்றேன். அதற்கு அவர், “என்னைத் தொலைபேசியில் பிடிக்க முடியவில்லை என்றால் உட்கார்ந்து தியானம் செய்” என்றார். “நீங்கள் கூடவே இருக்கும்போது அதெல்லாம் எதற்கு?” என்றேன். அதற்கு அவர் பதிலேதும் சொல்லவில்லை. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஒரு முறைதான் அவரைச் சந்தித்தேன். அன்று வார்த்தைகளால் விவரிக்க முடியாதவாறு மிகவும் தளர்ந்து மோசமாகக் காணப்பட்டார். “மற்றவர்களை முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டிய நிலைவந்தால் நான் மறைந்து விடுவேன் (disappear என்ற ஆங்கிலச் சொல்லை உபயோகித்தார்)” என்று என்னிடம் கூறியது அன்றைய தினம் தான்.

டாக்டர் எங்களிடமிருந்து மறைந்து ஒரு வாரம் ஆகி இருக்கும். பதில் வேண்டி எனக்குள் மூழ்கினேன். இருட்டும், அமைதியுமான மாலைப்பொழுது அது. யாருமற்று நீண்டு கிடந்த சாலையை வெறித்துப் பார்த்தபடி செய்வதறியாது உட்கார்ந்திருந்தேன். அழுகை வந்தது. “எங்கே போய்விட்டீர்கள் டாக்டர்? அழகிய காவியமான நீங்கள் இப்படி முடிய வாய்ப்பில்லையே. என்னவெல்லாமோ நடந்தேறினவே. இப்படி

நீங்கள் விடை பெறுவதென்றால் அவ்வாறான அனுபவங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டியதில்லையே. நீங்கள் சென்றது ஒரு முத்தாய்ப்பாக இருக்க முடியாது. ஏனென்றால் அதில் காவிய தர்மம் இல்லை. கதை முடிந்தது என்பதை என் உள்ளுணர்வு ஒப்புக்கொள்ள மறுக்கிறது. நீங்கள் ஏன் இப்படிக் காயை நகர்த்தியிருக்கிறீர்கள் என்பதை எனக்கு விளங்கச் செய்யுங்கள் டாக்டர்....தயவு செய்து என்னிடம் பேசுங்கள்". தனியாக அமர்ந்து அழுதேன்.

நிசப்தத்தின் மொழியில் அவர் மீண்டும் என்னோடு பேசினார். "உன்னோடு பேசுவதற்கு நான் முயன்று கொண்டுதான் இருக்கிறேன். நீதான் அதைக் கேட்க முடியாதபடி சலனப்பட்டு இருக்கிறாய். நான் எங்கும் போகவில்லை. உடல் குணமாகி எழுந்து விட்டேன். விரைவில் திரும்பி வருவேன். எனக்காகக் காத்திரு."

டாக்டர் இப்படிக் கூறியது, உடனே என்னைத் தேற்றி எனக்கு ஆறுதல் அளித்தது. ஒரு நொடியில் என் துக்கமும் குழப்பமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின. ஓராயிரம் தேவதைகள் என்னைச் சுற்றி மிதந்த வண்ணம் 'அல்லெலூயா' என்று பாடியது போலிருந்தது.

"உலகத்தின் ஜோதி உதித்துவிட்டான்

உண்மைக் கதிர்களைத் தந்துவிட்டான்

கண்ணின் மணியில் அவன் கலந்துவிட்டான்

காணுங்கள் கர்த்தர் வந்துவிட்டார்"

பரவசம் பொங்க 'இயேசுவின் நாமம்...'என்று தொடங்கும் டாக்டரின் பாடலை நான் பாடலானேன். இந்தப் பாடலை டாக்டர் 1956ஆம் ஆண்டு எழுதினாராம்.

‘1996 இல் தான் நான் வெளியே வருவேன்’ என்று டாக்டர் கூறியிருந்தார்.

“எல்லாப் புத்தகத்திலும் ‘க்ளைமாக்ஸ்’ ஒன்று வரும். இந்தப் புத்தகத்துக்கு (THE CATALYST) ‘க்ளைமாக்ஸ்’ எப்போது வரும் டாக்டர்?” என்று அவரிடம் முன்பு கேட்டிருந்தேன்.1996 இல்’ என்று பதில் சொல்லியிருந்தார். இந்தப் புத்தகத்தின் நாயகனே டாக்டர்தான். அப்படியிருக்க, அவரில்லாமல் இப்புத்தகத்தின் ‘க்ளைமாக்ஸ்’ எப்படி நிகழ முடியும்?.

‘இவ்வுடலை விட்டுப் போய் விடுகிறேனே’ என்று ஒருமுறை அவரிடம் நான் சொன்னபோது, “எனக்கு நீ இங்கே இருக்க வேண்டும். நீ ‘Show-down’ஐப் பார்க்க வேண்டும்” என்று தமது கண்களில் ஒளிதெறிக்கத் தீர்மானமாகச் சொன்னார். பொதுவாக அச்சொற்றொடர் எதைக் குறிக்கிறது என்பது தெரிந்திருந்தாலும் வெப்ஸ்டர் நிகண்டில் என்ன பொருள் தந்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். ‘ஓர் உடன்படிக்கைக்கு முன்னதாக நிகழும் தகராறின் கடைசிக் கட்டம்’ என்றும், ‘சீட்டுக் கட்டுகளைத் தெரியும் விதமாகத் திருப்பிப் போடல்’ என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவையும் கதையின் உச்சநிலையையே குறிக்கின்றன. கதையின் உச்சகட்டம் 1996ல் நிகழும். ஆனால், டாக்டரோ 1995ல் ஒரு சாதாரண மனிதனைப்போல் துன்பப்பட்டு மறைந்து போனார்.

ஆனால் அவர் சாதாரண மனிதர் இல்லை. அதை நான் சந்தேகத்துக்கு இடமின்றி அறிவேன். ஏனென்றால் என் சத்குரு தம்மை எனக்குக் காட்டியிருந்தார். பஞ்சபூதங்களும் அவருக்குப் பணிந்திருந்தன, சத்தியத்தை நிலை நிறுத்துவதற்காக அவர் பணிசெய்ததால்; அவர் முன்னே செல்ல, இயற்கை அவரைப் பின் தொடர்ந்தது, சற்றும் மனந்தளராமல் தர்மத்தின் வழியில் அவர்

நடந்ததால்; மரணம் எட்ட முடியாத உயரத்தில் அவர் இருந்தார், உடலைத் துறந்து பின் மீண்டும் அதை ஏற்றுக் கொள்ளும் வலிமை பெற்றவராகையால்; அவர் அமரத்துவத்தில் வசித்திருந்தார். எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் தலைவனாகவே விளங்கினார், ப்ராணசக்தி அவருடைய ஆளுமையில் இருந்ததால்; உலகத்தின் துன்பத்தைத் தாம் வாங்கிக் கொண்டு, தம் ஆனந்தத்தை உலகுக்குத் தந்தார். இவ்வுலகில் அவர் சம்பவித்தார், எல்லாரும் கேட்டுக் கொண்டதால்.

'நான் காளானைப் போல் வந்து போய்க்கொண்டிருக்க முடியாது' என்று சொல்லியிருந்தார். வந்த வேலையை முடிக்காமல் அவர் சென்று விட முடியாது. அரியணையிலிருந்து கீழே தள்ளி நாடு கடத்தப்பட்டு விட்ட தர்மத்தை மீண்டும் ஸ்தாபித்து முடிசூட்டவே அவர் இங்கே வந்திருக்கிறார். அவரால் மட்டுமே அது முடியும் என்பதை நான் அறிவேன். இதை இங்கு சொல்லாவிட்டால் நான் மனச்சாட்சியை மறந்தவளாவேன். அதனால்தான் இவ்வுலகம் மீண்டும் மீண்டும் அவரை நாடுகிறது. பொய்மையின் பிடியிலிருந்து தம்மைக் காக்குமாறு ஒவ்வொரு மனிதரும் தத்தம் மொழியிலும், உலகில் ஒவ்வொரு பகுதியினரும் தங்களுக்குத் தெரிந்த அவருடைய பெயர்களில் ஒன்றாலும் அவரை அழைக்கிறார்கள்.

டாக்டர் எங்களுடனான தொடர்பைத் துண்டித்து விடவில்லை. அவரிடமிருந்து செய்திகளைப் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறோம். எங்கள் அனுபவங்களில் சில நிச்சயமாகப் பெரிய விளைவுகளைத் தோற்றுவிக்கும். வானுலகம் கூட செல்பேசிகளையும், எங்கிருந்தாலும் தேடித் தொடர்பு கொள்ளும் வசதிகளையும் கொண்டிருக்கிறது. தனக்கென தபால்காரர்களையும் பிரத்யேக விமான சேவைகளையும் வைத்துள்ளது. இவற்றையெல்லாம் கதையின் உச்சகட்டம் நடந்து முடிந்ததும் இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதியில்

விவரிக்கிறேன். அதுவரை மௌனம் சாதிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளேன்.

டாக்டர் தொடர்பு கொண்டு தெரிவித்ததைத் தவிர வேறு பல அரிதான ஆன்மிக அனுபவங்கள் எங்களில் சிலருக்கு நேர்ந்துள்ளன. இப்புத்தகத்தில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளவற்றுக்குப் பொருந்தும் விதமாகவே இந்த அனுபவங்கள் இருந்தன. அப்படிப்பட்ட இரண்டு அனுபவங்களை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

சித்த புருஷர் சமாதி நிலையை எட்டும்போது உடலை இயக்கமற்ற நிலையில் இருத்திவைப்பார். அதே நிலையில் நெடுங்காலம் இருக்க முடிவு செய்தார் என்றால் தம் பக்தரையோ சீடரையோ தம் உடலைப் புதைத்துவிடுமாறு பணிப்பார். இப்படி அடக்கம் செய்துவிட்ட பிறகு, வேறு இடத்திற்கும் சூழ்நிலைக்கும் மாறிவிட அவர் முடிவு செய்தால் தம் உடலை பூமியிலிருந்து வேறு இடத்துக்கு அப்புறப்படுத்தி மீண்டும் எடுத்துப் பூண்டுகொள்வார். ‘குழந்தையானந்த ஸ்வாமிகள்’ என்ற மஹான் இத்தகையவர்களில் ஒருவர். மூன்று வெவ்வேறு இடங்களில் மூன்று முறை புதைக்கப்பட்டவர்.

‘கோடி ஸ்வாமி’ என்ற ஒரு மஹான் சில வருடங்களுக்கு முன் சமாதியடைந்தார். அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவருக்கு பக்தர்கள் ஏராளம். டாக்டரின் சீடர்களான சாந்தம்மாவும் எஞ்ஜினியர் சுப்பிரமணியமும், டாக்டரிடம் வருவதற்கு முன் கோடி ஸ்வாமியிடம் இருந்தவர்கள். சுப்பிரமணியம் 1991ல் சென்னைக்கு மாற்றலாகி வந்தார். ஒரு சத்குருவின் ஆறுதலான அரவணைப்பில் இருந்து பழக்கப்பட்டவர்களாதலால் சென்னையில் ஒரு குருவைத் தீவிரமாகத் தேடினார்கள். என்ன நடக்க வேண்டுமோ அது நடந்தேறியது. அவர்கள் டாக்டரின் சீடர்களானார்கள். கிட்டத்தட்ட

இரண்டு வருடங்கள், ஒரு நாள் தவறாமல் அவர்கள் டாக்டரைப் பார்த்து வந்தார்கள். டாக்டரின் கண்பார்வை மங்கத் தொடங்கியதால் அவரது க்ளினிக்கில் சாந்தம்மா அக்யுபங்க்சர் சிகிச்சையில் டாக்டருக்கு உதவி வந்தார். டாக்டர் எங்களிடமிருந்து மறைந்த பிறகு ஒரு வெறுமையை உணர்ந்தார். அவருக்கு இது இரண்டாவது பிரிவு. முதலில் கோடி ஸ்வாமி; இப்போது டாக்டர். டாக்டருக்காக அர்ப்பணித்திருந்த தம் மாலைப் பொழுதுகளை இப்போது அவரால் வேறெப்படியும் கழிக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட மனநிலையில் அவர் இருக்கையில், ஒருநாள் அதிகாலை, கோடி ஸ்வாமியின் சூட்சுமக்காட்சி அவருக்குக் கிட்டியது. கோடி ஸ்வாமி நீண்ட வாழைப்பட்டையின் மேல் படுத்திருந்தாராம். ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அவரை வட இந்திய ஆண்களும் பெண்களும் சூழ்ந்திருந்தார்களாம். அவர் சாந்தம்மாவின் தலையை அன்புடன் வருட, சாந்தம்மா அவரிடம், ”நமஸ்காரம் டாக்டர்” என்று கூறினார். உடனே ‘சாமி’ என்று அழைப்பதற்கு பதிலாக ‘டாக்டர்’ என்று சொல்லிவிட்டதை உணர்ந்தார். கோடி ஸ்வாமி புன்முறுவல் பூத்தாலும், கூட இருந்தவர்கள் துணுக்குற்றனர். உடனே சாந்தம்மா தவறைத் திருத்திக்கொள்ளக் கருதி அவரை மீண்டும் வணங்கினார். இந்த முறை ‘நமஸ்காரம் அம்மா’ என்றாராம். படுத்திருந்த கோடி ஸ்வாமி எழுந்திருந்து சாந்தம்மாவை அணைத்துக் கொண்டாராம். “உங்களை மறந்து விட்டேனா சாமி?” என்று சாந்தம்மா வினவ, “நான் உனக்குள் இருக்கும்போது நீ எப்படி என்னை மறக்க முடியும்?”என்று சொன்னார். “உங்களை ‘டாக்டர்’ என்று அழைத்தது தப்பா?” என்று சாந்தம்மா கேட்டிருக்கிறார். அவர் மீண்டும் புன்முறுவல் பூத்து முதுகைத் தடவிக் கொடுத்தார். சாந்தம்மா புறப்படும் நேரம் வர கோடி ஸ்வாமியிடம் விடை பெற்றுக் கொண்டார். ஆனால் மீண்டும் “போய் வருகிறேன் டாக்டர்” என்று

சொல்லிவிட்டாராம். . உடனே மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். ஆனால் கோடி ஸ்வாமியோ பரவச நிலைக்குச் சென்று விட்டார்.

"மன்னியுங்கள் என்று சொல்லாதே. கடைசி வரை டாக்டர் என்றே சொல். டாக்டர் மட்டும் தான் உனக்கு முக்தியளிக்க முடியும். அவர் யாரென்று நினைத்தாய்? வேறெந்த நாமமும் தேவையில்லை. 'டாக்டர்' என்ற நாமமே போதும். கடைசிவரை 'டாக்டர்' என்றே சொல். என்னை 'சாமி' என்று கூப்பிடத் தேவையில்லை. டாக்டர் என்றே கூப்பிடு".

அத்துடன் அக்காட்சி முடிவுற்றது. சில வாரங்களுக்குப் பிறகு சாந்தம்மாவிற்கு இன்னொரு அகக்காட்சி. இந்த முறை இயேசு கிறிஸ்து சிலுவையில் துன்புறும் காட்சி தெரிந்தது. அவரை 'டாக்டர்' என்று அழைத்தாராம் சாந்தம்மா.

மாசிலாமணிக்கு எழுபது வயதுக்கு மேல் இருக்கும். 1995 அக்டோபர் மாதம் டாக்டர் எங்களிடம் இருந்து மறைந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு டாக்டர் வழியில் தீட்சை பெற்றார்.

ஆனால் இந்தச் சீடர் முக்தியை நாடவில்லை. மீண்டும் மீண்டும் பிறந்து வந்து மீண்டும் மீண்டும் பிரபுவின் புகழ் பாடவே விழைந்தார். இப்படிப்பட்ட பக்தர்கள் எதனாலும் கட்டுப்படுவதில்லை. ஏனெனில் பிரபுவின் மீது அவர்கள் கொண்டிருக்கும் மாற்றுக் குறையாத பிரேமை வேறெதையுமே கூட வளரவிடாத பூண்டைப் போன்றது. பிரபுவின் மீது அவர்கள் செலுத்தும் அன்பும், அந்த அன்புக்குப் பரிசாய்ப் பிரபு அவர்களிடம் நடந்து கொள்ளும் விதமுமே அவர்களுக்குப் போதுமானது. ஈடு இணையற்ற இந்த அற்புத அனுபவம் அவர்களை உலகியலில் வீழாமல் தடுத்துக் காக்கிறது. உலகியலில் ஈடுபாடு கொண்டால் பிரபுவிடமிருந்து விலக வேண்டியிருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். அது அவர்களுக்குப் பெரிய பயம்..

பிரபுவின் மேல் கொண்ட காதல் தங்களைப் பொய்மையின் வலையிலிருந்து பாதுகாக்கும் என்பதை அவர்கள் அறிந்து வைத்திருப்பதால், அவர்களுக்குத் தாங்கள் இருப்பதே ஓர் அழகான அனுபவம். சாவைப் பற்றிய பயமில்லை. நோய்பற்றியோ, ஏழ்மை பற்றியோ, இகழ்ச்சி பற்றியோ கூட எந்த அச்சமும் இல்லை. அவர்களுக்கு இருப்பது ஒரே ஒரு வேண்டுகோள். 'பிரபுவை மறக்கவே கூடாது' என்பதுதான் அது. இவ்வுலகம் அவர்களைப் பித்தர் என்று சொல்லலாம்; 'ஆம், நாங்கள் எல்லாம் அவர்மேல் பித்துப் பிடித்தவர்களே', என்று பறைசாற்றிக் கொள்வார்கள். பசிக்கு உணவில்லாமல் ஏழ்மையான நிலையில் அவர்கள் இருக்கலாம்; 'எங்கள் பிரபு அதிமதுரமான அமுதம். அவர் எங்களை நிறைத்து விட்டார்; திருப்தியானோம்' என்று பாட்டிசைப்பார்கள். அவர்கள் இதயங்களில் குடியிருக்கும் பிரபுவானவர் செல்வந்தர்களுள் செல்வந்தர். அதனால் அவர்களுக்கு எதிலும் குறைவில்லை.

அவர்களுடைய ஒவ்வொரு பிறவியும் தங்கள் பிரபுவாகிய ஆண்டவனுக்கு அவர்கள் செலுத்தும் காணிக்கை. அவர்கள் வலியறிய மாட்டார்கள். அவர்களுடைய அன்புக்குரியவர் ஆதியந்தமில்லாதவர் அல்லவா. அதனால் எப்போதும் அவருள் லயித்துப் பரவசத்தில் ஆழ்ந்திருப்பார்கள். ஒருபிறவி முடிந்து விட்டால் என்ன? மீண்டும் பிறந்து மீண்டும் அவன் புகழைப் பாடுவார்கள். இறைவனை ருசித்து அனுபவித்து விட்ட ஆவி வேறெதனாலும் திருப்தி அடையாது; முக்தி கூடத் தேவையில்லை. இப்படிப்பட்ட உண்மையான பக்தர்கள் உலகியல் விஷயங்களில் குறுக்கிட மாட்டார்கள். அதற்கெல்லாம் அவர்களுக்கு நேரம் கிடையாது. ஒவ்வொரு பிறவியிலும் ஆண்டவன் மீது காதல் கொண்ட தருணத்திலிருந்து சந்தோஷமாக அவனுடைய அடிமைகளாகி விடுவார்கள். இறைவனும் தன் அரங்கத்தை இவர்களை வைத்து அழகுபடுத்திக் கொள்கிறான்.

இப்படியாக மாசிலாமணியும் முக்தி நிலையை நாடவில்லை. பிரபுவை நினைத்துப் பாடிப் பாடிக் கழித்த போதுகளே அவருக்கு நிறைவைத் தந்து விட்டன. டாக்டர் எங்களை விட்டுப் போவதற்கு முன் ஒரே ஒரு முறைதான் அவரைச் சந்தித்திருந்தார். பிறகு டாக்டருடைய ஒரு புகைப்பட்த்தைப் பார்த்து, அந்த வசீகரச் சிரிப்பில் மயங்கி, டாக்டரின் வழியில் தனக்கு தீட்சை வேண்டுமென்று கேட்டு வாங்கிக் கொண்டார்.

ஒரு மாதம் கழிந்தது. 1995ம் வருடம் நவம்பர் மாதம் டாக்டரின் சீடர்கள் சுமார் 60 பேர், ஷோளிங்கரில் இருந்த டாக்டரின் பெற்றோரைச் சந்திக்கச் சென்றோம். மாசிலாமணியும் எங்களுடன் வந்தார். டாக்டர் 96 இல் டாக்டர் திரும்பி வந்து விடுவார் என டாக்டருடைய பெற்றோரை நாங்கள் சமாதானப்படுத்திக் கொண்டிருந்த போது, மாசிலாமணி திடீரென்று பரவசத்தில் ஆழ்ந்தார். ஆம், டாக்டர், இத்தத் தகுதி வாய்ந்த சீடருக்குத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார். தம் பெற்றோரை பார்க்கப் போகும் போதெல்லாம் டாக்டர் எந்த அறையில் தங்குவாரோ அந்த அறையின் வாயிலில் நின்று, உள்ளே பார்த்தவாறு தன்னை மறந்து ஆண்டாளின் அமுதூறும் பாசுரம் ஒன்றைப் பாடலானார்.

‘அம்பரம் ஊடுறத் தோங்கி உலகளந்த

உம்பர் கோமானே! உறங்காதெழுந்திராய்

செம்பொற்கழலடிச் செல்வா! பலதேவா!

உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்’

அவர் பாடியதை மெய்மறந்து கேட்டிருந்தோம்; கண்ணீர் வழிந்தது. எதை அறிந்து கொள்ள எங்களுக்கு வருடக் கணக்கில் ஆயிற்றோ அதை இந்த பக்தரின் இதயம் உடனே கிரஹித்துக்

கொண்டு விட்டது. கூர்மையான அறிவு கொண்ட பலருக்கு விளங்காத இந்த உண்மை எந்த வெளிவேஷமும் பூணாத இம்மனிதருக்கு வசப்பட்டது.

'டாக்டர் தான் மஹாவிஷ்ணு'- பயமில்லாமல் பறைசாற்றினார். 'இவர்கள் எல்லாம் அவருடய பரிவாரங்கள்' என்று டாக்டரின் சீடர்களைக் காட்டிச் சொன்னார். 'டாக்டர் அரங்கநாதனாக அதோ சயனத்தில் இருக்கிறார்' என்று அந்த அறையைச் சுட்டினார். 'உத்தமர் கோனை உன் வயிற்றில் சுமந்தாயே அம்மா! என்ன பாக்கியம் செய்தாய்!' என டாக்டரின் அன்னையின் முன் உருகி நின்றார். டாக்டரின் பெற்றோருக்குத் தம் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டு மீண்டும் பாடலானார்.

' அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ் செயும்

எம்பெருமானே நந்தகோபாலா எழுந்திராய்.

கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே

எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்'

இறைவனருள் பெற்ற இம்மனிதருக்குச் சற்றுக் காது கேட்காது. அதனால் அவரோடு உரையாடுவது கடினம். ஆனால் அவரைக் காணும்போதெல்லாம் டாக்டர் அடிக்கடிக் கூறுவது நினைவுக்கு வருகிறது. 'ஆன்மிகத்தில் முன்னேற வேண்டுமானால் புத்தியைப் புதைத்து விடுங்கள்'. ஆம், இந்த மேன்மை பொருந்திய சீடர் டாக்டரை அறிந்து கொள்ளத் தம் அறிவைப் பயன்படுத்தவில்லை. அவரிடம் இதயம் மட்டுமே இருந்தது. அந்த இதயம் தனக்குள் வாசம் செய்பவனைஅடையாளம் கண்டு கொண்டது.

"பின்னால் வரப் போகும் சீடர்கள் மாயையை எளிதில் வென்று விடுவார்கள்" என்று டாக்டர் கூறியிருக்கிறார். மாசிலாமணியும்

அப்படிப்பட்ட சீடர் போலும்.

‘முதலில் வரும் பலர் கடைசியிலிருப்பர்

கடைசியில் வருபவர் முதலில் இருப்பார்’

-தூய மார்க்.

‘இன்னும் சிறிது காலம்; பிறகு நீங்கள் என்னைக் காண

மாட்டீர்கள்; மீண்டும் சிறிது காலம்;

பிறகு என்னைக் காண்பீர்கள்; ஏனெனில்

நான் இறைவனிடம் செல்கிறேன்’

- தூய யோவான்

வானுலகம் ‘நம்பிக்கை’ என்ற மொழியில் தான் தன் ஏடுகளைப் பொறிக்கிறது. என் சத்குருநாதனுக்காக நான் காத்திருக்கிறேன். அவர் குறிப்பிட்ட ‘Show-down’ வருவதற்காகக் காத்திருக்கிறேன். ஏனெனில் உயிர்ப்பவரும், உயிரும் அவரே. கிரியா ஊக்கம் நடந்து முடிந்ததும் கிரியா ஊக்கி மீண்டும் தன் முழுமையை அடைய வேண்டும். ரஸாயன சாஸ்த்ரம், கிரியா ஊக்கியை ‘ரஸாயன மாற்றத்தை ஊக்குவிக்கும் பொருள்’ என்று விளக்குகிறது. கீழானவற்றை உயர்ந்தவையாக மாற்றி ரஸவாதம் செய்த டாக்டர் தானே கிரியா ஊக்கியாக எங்களுடன் இருந்து எங்களை உயர்த்தினார். தானே காரணமாக இருந்து ‘செயல்-விளைவு’ என்ற சுழலை உருவாக்கி எங்களை அதில் புடம் போட்டார். கிரியா ஊக்கி இருந்தால் ரஸாயன மாற்றம் நிகழக் குறைந்த அளவு சக்தியே போதும். ஆம்! எதை நிறைவேற்றச் சீடர்களாகிய நாங்கள் குறைந்தது சில பிறவிகளாவது எடுத்திருக்க வேண்டுமோ அதை அவர் பத்து வருடங்களுக்குக் குறைவான காலத்தில் செய்து முடித்தார். எங்களுக்கு அவர் தந்தது குறுகிய காலத் தீவிரப் பயிற்சி. ஆனால்

நாங்கள் அனுபவித்திருக்க வேண்டிய துன்பத்தைச் சில நூறு வருடங்களாவது குறைத்திருப்பார்.

ரஸாயன மாற்றத்தின் போது சமநிலை திரும்ப எடுத்துக் கொள்ளப்படும் கால அளவை, கிரியா ஊக்கி குறைக்கிறது. எங்களுக்கு இந்தப் பத்துப் பதினைந்து ஆண்டுகளும், சிலருக்கு இன்னும் குறைவான காலமும், ஏதோ சுழற்றியடித்துச் சூறாவளிக் காற்றில் சிக்கிக் கொண்டாற்போல் இருந்தது. எங்களுடைய குணாதிசயங்களின் கூரிய முனைகளைத் தேய்த்துக் கடைந்து எங்கள் உள்ளமைப்புக்கு ஏற்ப எங்களை முறைசெய்தார். அவரை கிரியா ஊக்கியாகக் கொண்டு நடந்த பரிவர்த்தனைகளால் நாங்கள் எங்களுடைய பழைய பிணைப்புக்களில் இருந்து விடுபட்டு விட்டோம். புதியவற்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். புதியவை அமர வாழ்வோடு தொடர்புடையவை.

“ஈட்டியாய்த் தைக்கிறது

தளைகளை அறுத்து நான் ஜயமென்று வான் நோக்க

வாய்ப்பே இல்லாதது

ஈட்டியாய்த் தைக்கிறது”

என்று பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் எழுதினேன்.

கட்டுகளை அவிழ்த்து விட்டேன் என்று இப்போது நான் எழுதுகிறேன் என்றால் அந்த கிரியா ஊக்கி அருகிருந்து அதை நிறைவேற்றிக் கொடுத்ததால் மட்டுமே இது சாத்தியமானது. எதில் யாரும் பங்கெடுத்துக் கொள்ள மாட்டார்களோ அதை அவர் என்னிடமிருந்து எடுத்துக் கொண்டார். எதை எனக்குத் தரும் அளவுக்கு வேறு யாரும் செல்வந்தர் இல்லையோ அதை எனக்குத் தந்தார். அதனால்தான் இது சாத்தியமானது.

ரஸாயனத்தில் கிரியா ஊக்கத்தின் போது எதிர்விளைவாகத் தோன்றும் பொருள்கள் கிரியா ஊக்கியால் கிரஹிக்கப்பட்டு அதன்மேல் படிந்து விடும். அங்கே அவற்றின் பழைய கூட்டமைப்பு உடைக்கப்பட்டுப் புதிய கூட்டமைப்பு உருவாகும். பிறகு கிரியா ஊக்கியின் மேலிருந்து அவை கழன்று போகும். கிரியா ஊக்கியும் பழைய நிலைக்குத் திரும்பும். தம் சீடர்களால் தாங்கிக்கொள்ள முடியாதவற்றை டாக்டர் தாமே ஏற்றுக் கொண்டார். ஏற்றுக் கொண்டவை மாறிக் கழன்று போனதும் கிரியா ஊக்கியாக இருந்த டாக்டர் பழைய நிலைக்கு வருவார். ஏனென்றால் எந்தவொரு எதிர்விளைவினாலும் 'கிரியா ஊக்கி' இல்லாமற் போவதில்லை. இது இயற்கை விதி.

ஆம்! டாக்டர் மீண்டும் வருவார்; கதாநாயகனாகக் கதையின் உச்சகட்டத்தில் மீண்டும் தோன்றுவார். வினைப்பயன் கொடியோரையும், நம்பிக்கை அற்றவர்களையும் தாக்கும். பூமிக்கு இறங்கி வந்த வானோர் மேடையேறும் நாடகம் இது.

தர்மத்தை நிலைநிறுத்துவதும், மனிதன் மேலோரால் நிர்வகிக்கப்படுகிறான் என்பதை இவ்வுலகுக்கு நினைவு படுத்துவதும் இந்நாடகத்தின் நோக்கம். இப்புவியின் நிகழ்வுகள் எல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாதவையும் அல்ல; எதேச்சையான சந்தர்ப்பங்களால் தூண்டப் பட்டவையும் அல்ல. மனிதர்களின் மொத்த வினைப் பயன், அதாவது கடந்த கால, நிகழ் கால வினைகளின் பயன் என்ற மொத்த சுமையின் தாக்கமே இங்கு நிகழ்பவற்றுக்குக் காரணம். இந்த மொத்த வினைப்பயனின் தாக்கம், தனி நபருடைய வினைப்பயனையும் பட்டுவாடா செய்கிறது.

டாக்டர் ஒரு நிரந்தரமான கிரியா ஊக்கி. அதனால் அவருடைய வேலை முடிந்தது என்று எப்போதுமே சொல்ல முடியாது. எல்லாச்

சீடர்களும் டாக்டருக்குத் துன்பம் கொடுக்காமல் சொன்னதைக் கடைபிடித்திருந்தால்,அவர்களுடைய செயல்களும் செயலின்மையும் டாக்டருக்குச் சுமைகளாகியிருக்க முடியாது.

'மற்றவர்களை முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டிய கட்டத்தை அடைந்தால் நான் காணாமல் போய் விடுவேன்' என்று டாக்டர் சொல்லியிருந்தார். ஆம்! அப்படிப்பட்ட நிலையை அடைந்தார்; எங்களிடமிருந்து மறைந்து போனார். ஆனால் அவர் மீண்டும் தோன்றுவார். தனிமையில், பிறரிடமிருந்து வாங்கிக் கொண்ட சுமைகளையெல்லாம் சுமந்து தீர்த்துவிட்டு அவர் மீண்டும் தோன்றுவார்.

"என்னைத் தொட்டுப் பார்த்தால்தான் நம்புவீர்களா?" என்று சாந்தம்மாவை டாக்டர் ஒருநாள் கேட்டார். "இயேசு உயிர்த்து மறுபடி வந்தபோது தாமஸ் அப்படித்தான் கேட்டார். நீங்களும் அப்படிக் கேட்பீர்களா?" என்று கேட்டார்.

இப்படிப் பேசினார் என்று அறிந்ததும், உடலைத் துறக்கும் திட்டம் ஏதும் அவருக்கு இருக்கிறதா என்று அவரிடம் கண்ணீர் மல்கக் கேட்டேன். அவர் எனக்கு பதில் சொல்லவில்லை. என்னை ஆழமாகப் பார்த்தார். அவர் எங்கள் பார்வையிலிருந்து மறைந்த பிறகுதான் அவர் பேசியவற்றின் உட்பொருள் எனக்கு விளங்கியது.

"1996இல் நீங்கள் இப்படி என்னோடு சேர்ந்து அமர்ந்திருந்தது உண்மையா என்று ஆச்சரியப்படுவீர்கள்" என்று 1980 களிலேயே டாக்டர் கூறியிருக்கிறார்.

நூற்றுக்கணக்கான வருடங்களாகத் தூயவர்களும் நல்லவர்களும் எந்த அற்புத நிகழ்வுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்களோ அந்த நிகழ்வின் தலைவாயிலில் உலகம்

இப்போது நிற்கிறது. இயேசு மீண்டு வந்த போது உலகை உலுக்கி எழுப்பும் அளவுக்குத் தகவல் தொடர்புச் சாதனங்கள் அப்போது இல்லை. அவருடைய போதனை உலகெங்கும் ஊடுருவப் பலகாலம் பிடித்தது. ஆனால் இந்த முறை அப்படி இருக்காது.

பிரபுவின் பட்டாபிஷேகத்தை இவ்வுலகம் முழுவதும் காண்பதாகுக!

'தங்கள் ராஜ்யம் வருவதாகுக!

பர லோகத்தில் இருப்பதைப் போல

இக லோகத்திலும் தங்கள் சித்தம் நிறைவேறுவதாகுக.'

1996, ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டு. வானுலகம் தன் கைச்சீட்டுகளை விரித்துக் காண்பிப்பதை பார்க்கப் போகிறவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மத வெறியர்களுக்கு துக்கம்; ஏனென்றால் ஒவ்வொரு சமயத்தையும் சார்ந்த நன்னெறியாளர்கள் உலகின் எல்லா மதங்களுக்கும் ஊற்றுக் கண்ணானவன் ஒரே இறைவனே என்று உணர்ந்து கொள்வார்கள்.

**'பிஸ்மில்லா ரஹ்மான் ஹரி அல்லேலுயா ஓம் நமசிவாயா'**

இந்தப் பூமியில் ஒவ்வொரு மார்க்கமும், பிரபுவாலோ அல்லது அவரது சீடர்களாலோ நிறுவப்பட்டதுதான். கடந்த காலத்தில் அரும்பெரும் ஆன்மிகக் கோட்பாடுகளும் வேதங்களும் விவரிக்காத எதுவும் இப்புத்தகத்தில் இல்லை.

உண்மை பழமையினும் மிகப்பழையது. உள்ளூக்கத்துக்கும் அதன் விளைவான பரவச நிலைக்குமாக மாறிமாறிச் செல்லும் மற்றொரு நபர் நான்! அவ்வளவே. உள்ளூக்கம் எனக்கு இறக்கை தந்து இறைவனின் சன்னிதிக்கு அனுப்புகிறது. அங்கே அமுதம் பருகிக்

கிறங்குகிறேன். அந்தக் கிறக்கத்தை நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது இறைவனின் சித்தம்.

புத்தகத்தின் பக்கம் புரட்டப்படும் போது காட்சி மாறி டாக்டர் மீண்டும் தோன்றுவார் என்று சொல்லுமாறு அவர் என்னை ஊக்குவிக்கிறார்.

1996 வரை நான் என் பெட்டகத்தைத் திறக்க மாட்டேன்' என்று டாக்டர் சொல்லி யிருக்கிறார் . ஆகவே நான் காத்திருக்கிறேன். கிரியா ஊக்கிக்காகக் காத்திருக்கிறேன். புதிய வடிவமைப்பு வெளிப்படக் காத்திருக்கிறேன்.


'ஆகவே நீங்கள் துக்கமாயிருக்கிறீர்கள். ஆனால் மீண்டும் உங்களைக் காண்பேன்.

(அதனால்) உங்கள் இதயம் களிப்படையும். உங்கள் மகிழ்ச்சியை எந்த மனிதரும் உங்களிடமிருந்து எடுக்க முடியாது'

-தூய யோவான்








Doctor's parents - Mr. Appadurai & Mrs. Jayalakshmi




Receiving a prize



The figure in the middle of this photograph was given by Goddess Saraswathi to Sage Agasthiar and he passed it on to Doctor. This became the emblem of Anand Jothi.

















Doctor in his early twenties

- யாவற்றையும் தன்னுள் அடக்கிய, புனிதமும் தூய்மையுமான முழுமுதற் சக்தி ஒன்று உள்ளது. இதை வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றன.

- மதங்கள் அனைத்தும் ஒரே இலக்கை நோக்கிச் செல்கின்றன. எனவே எல்லா மதங்களும் சமமான மரியாதைக்குறியவை.

- இடையில் எந்த வேடத்தைப் பூண்ட போதிலும் ஒவ்வொரு ஆன்மாவும், முதலிலும், முடிவிலும் பரிசுத்தமானதே.

- எங்கும் நிறைந்த பரம்பொருளை உணர்ந்துகொள்ள மனிதன் மேற்கொள்ளும் பயணத்தில் அவனைத் துரிதப்படுத்துவதற்கான வழிமுறைகள் உள்ளன. இந்தப் பாதையில் நேர்மையுடன் முயற்சி செய்பவனுக்கு தெய்வப் பாதுகாப்பும் உதவியும் உண்டு.

ஆனந்த் ஜோதி